

# காற்று வாங்கப் போனேன்

கவிஞர், வழக்கறிஞர்,
வானவில் **கே.ரவி**யின்
தமிழ்ப் படைப்புகள்

# காற்று வாங்கப் போனேன்

கவிஞர், வழக்கறிஞர்

வானவில் **கே. ரவி**

புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை,
விருகம்பாக்கம், சென்னை 600 092.
89393 87276 / 89393 87296
**email : nivethithapathippagam1999@gmail.com**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **காற்று வாங்கப் போனேன்** |
| ஆசிரியர் | : | **கவிஞர், வழக்கறிஞர் வானவில் கே. ரவி** |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பொருள் | : | கட்டுரை |
| முதற் பதிப்பு | : | 2019 |
| அளவு | : | டெம்மி |
| தயாரிப்பு | : | **நிவேதிதா பதிப்பகம்**<br>10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம்,<br>சென்னை 600 092.<br>கைபேசி : 89393 87276 / 96 |
| ஒளியச்சு | : | வி. தனலட்சுமி |
| அட்டைப் படம் | : | ஸ்டீபன் |
| அச்சாக்கம் | : | உதயம் ஆப்செட்,<br>சென்னை - 2. |
| பக்கங்கள் | : | 288 |
| விலை | : | **ரூ. 280** |

| | | |
|---|---|---|
| Title | : | **Katru Vanga Ponen** |
| Author | : | **Kavignar Advocate<br>Vanavil K. Ravi ©** |
| Subject | : | Essays |
| First Edition | : | 2019 |
| Size | : | Demmy |
| Published by | : | **Nivethitha Pathippagam,**<br>10/3, Venkatesh Nagar Main Road,<br>Virugambakkam, Chennai - 600 092.<br>Mobile No : 89393 87276 / 96 |
| Typeset by | : | V. Dhanalakshmi |
| Wrapper Desings | : | Stephen |
| Printed at | : | Udhayam Offset, Chennai - 02. |
| Pages | : | 288 |
| Price | : | **Rs. 280** |

# முன்னுரை

*வல்லமை.காம் என்ற மின்னிதழில் நான் ஏதாவது எழுத வேண்டும் என்று சகோதரி பவளசங்கரி கேட்டுக் கொண்டதும், எழுதத் தொடங்கிய இத்தொடர் என் சுயசரிதையாக, என் கவிதைப் பயண அனுபவத் தொடராக வளரும் என்று நானே நினைக்கவில்லை 06.06.2014 முதல் 10.11.2014 வரை மேற்சொன்ன மின்னிதழில் 53 பகுதிகளாக வெளிவந்த தொடர், இது. எழுதியவுடனேயே, ஒவ்வொரு பகுதியையும் படித்துச் சரிபார்த்து உதவிய ஷோபனாவுக்கும், இது வளர, வளரப் படித்து எனக்கு ஊக்கம் அளித்த சு.ரவி போன்ற நண்பர்களுக்கும் நன்றி.*

**வானவில் கே. ரவி**

# காற்று வாங்கப் போனேன்

# 1

உலகம் இனிது. காற்று, மழை, வெயில், எல்லாமே இனியவை. ஆனால், இப்பொழுது, புழுக்கம் தாங்கவில்லை, உஸ் அப்பா! தோட்டத்தில் சென்று அமர்கிறேன். ஜில்லென்று ஒரு காற்று என்னைத் தீண்டியது. இல்லை, சீண்டியது. 'என்ன ஓய், கவிதை வேணுமா?'

ஏனோ தெரியவில்லை, கவிதையிடம் எனக்கு அப்படியோர் ஈடுபாடு! வெறி! ஆங்கிலத்தில் சொன்னால், 'an obsession'. ஏன்? காரணம் புலப்படவில்லை. விட்ட குறை தொட்ட குறையோ!

சிந்தித்துப் பார்த்தால் கவிதையால் பெரிய சமூகப் பயன் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவே கவிதை பெரும்பாலும் பயன்படுவதுபோல் தோன்றுகிறது.

இன்னும் சற்று அணுகிப் பார்த்தால் மனத்துக்கு ஓர் ஆறுதல் அளிப்பதாக, அல்லது, மனத்தைப் பண்படுத்துவதாக, இப்படி வேறு சில பயனுள்ள பணிகளைச் செய்யும் சாதனாமாக அது தெரியலாம். இதெல்லாம் என் கவிதைப் பித்துக்குக் காரணமாக இருக்க முடியாது.

கவிதை எனக்குப் பயன்படுகிறது என்பதை விட, அதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்பதை விட, ஒரு கருவியாகக் கவிதை என்னைப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கவிதையை ஒரு சாதனமாகவோ, வாகனமாகவோ என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. என்னை ஆட்கொண்ட ப்ரபஞ்ச சக்தி அது என்றே நம்புகிறேன். "நம்புவதே வழி என்ற மறைதனை நாமின்று நம்பி விட்டோம்" என்பது பாரதி வேதம்.

மீண்டும் அறிவு குறுக்கிடுகிறது. அது சொல்கிறது: 'இதெல்லாம் ஒருவித மாயா வாதம். ஆங்கிலத்தில் delusion என்பார்களே அதை போன்ற ஒரு மனநோய்.'

அறிவு ஆயிரம் சொல்லும். அதனால்தான் அதைச் சிற்றறிவு என்கிறோம். அதைக் கடந்து போனால்தான் பேறறிவாகிய அருட்கடலில் நீந்த முடியும். கவிதை அந்தப் பேரறிவோடு சம்பந்தப்பட்டது. இதுவும் என் நம்பிக்கை!

எப்படியாவது தன் உணர்வுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பே கவிதை எழுதத் தூண்டுகோல் ஆகிறது. அருகிலோ, எதிரிலோ இருக்கும் நபரிடம் தன் வியப்பையோ, சோகத்தையோ, சினத்தையோ, விரக்தியையோ ஒருவன் மிக எளிதாகப் பேசும் மொழியிலேயே பகிர்ந்து கொண்டுவிட முடிகிறது. அருகில், அல்லது, எதிரில் இல்லாத நபர்களுடனும் அதைப் பகிர்ந்து கொள்ள அவன் ஆசைப்பட்டால் அதைப் பிறகு படித்துப் பார்க்கக் கூடிய வகையில் எழுதி வைக்க நேரிடுகிறது. அச்சுத் தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப் படாதபோது, எழுதி வைப்பவற்றைத் தக்க முறையில் பாதுகாக்க வசதிகள் இல்லாத போது, தான் சொல்வதைக் கேட்பவர் மனப்பாடம் செய்து அப்படியே பிறருக்குச் சொல்லக் கூடியவாறு சொல்லும் வழக்கம் உண்டாயிற்று. அதற்குச் செய்யுள் நடையே உதவியது.

பேசும் மொழிகளாகவே இருந்துவிட்ட பல மொழிகளின் நடுவே, செய்யுள் மொழியாக உருவெடுத்ததால்தான், நன்றாகச் செய்யப்பட்டது என்ற பெயர் சம்ஸ்க்ருதத்துக்கு ஏற்பட்டதோ? பேச்சே செய்யுள் நடையில் அமைந்த மொழியாக வளர்ந்ததுதான் தமிழோ?

அந்த விசாரணையை விட்டுவிடுவோம். மேலே சொன்னது ஓரளவு செய்யுள் தோன்றிய வரலாற்றின் அடிப்படையாக இருக்கக் கூடும். ஆனால், கவிதை . . . ! அதன் கதை வேறு!

இந்தக் கணத்தில், என் மனத்தின் அடித்தளத்தில், "மனிதன் என்பவன் தெய்வமாகலாம்", என்ற பழைய திரைப்பாடல் மெட்டில், "செய்யுள் என்பதும் கவிதை ஆகலாம்" என்று தொடங்கும் ஒரு முழுப்பாட்டு ஒலிக்கிறது. ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

"சொல்லும் சொல்லும் சேரும் போது கானமாகலாம்
சொல்கடந்து செல்லும் போது மோனமாகலாம்
சொல்மலர்ந்து சுடரெழுந்து ஞானமாகலாம்
செய்யுள் என்பதும் கவிதை ஆகலாம்"

"செய்யுள் என்பதும்" என்பதில் உள்ள அந்த உம்மைக்கு

*எத்தனை உம்மா வேண்டுமானாலும் கொடுக்கலாம். என்ன அழுத்தம்!!*

*கவிதை பற்றிச் சிந்தித்து ஒரு கட்டுரை எழுதும்போது இதென்ன குறுக்கீடு? அந்தப் பாட்டையே முணுமுணுக்கும் மனத்தை அடக்க முயல்கிறேன். அட, மனத்தின் ஒரு மூலையில் எங்கோ ஒரு கேலிச் சிரிப்பொலி வேறு கேட்கிறதே!*

*மன்னித்துக் கொள்ளுங்கள், இந்த அறிவு ரீதியான முயற்சியின் நடுவே ஒரு பாடல் குறுக்கிட்டது போல், வேடிக்கையான காட்சி ஒன்று, மனத்திரையில்தான், இப்பொழுது குறுக்கிடுகிறது.*

*உடல் பிரிந்து வெறும் ஆவியாகவே (அப்படித்தானே நாம் சொல்லாக்கம் செய்து கொண்டிருக்கிறோம்!), திரிந்து கொண்டிருக்கும் ஒருயிர், வான்விளிம்பில் தோன்றும் வர்ணஜாலங்களில் தன் நெஞ்சம் பறிகொடுத்து ( ஆவிக்கு நெஞ்சம் உண்டோ?), எப்படியாவது தன் வியப்பையும் பரவசத்தையும் வெளிப்படுத்தத் துடிக்கிறது. அது ஆவியா ஏதாவது தேவதையா? கந்தர்வக் கன்னியா? (எப்படி நான் அதைப் பெண்பால் என்று தீர்மானித்தேன்? என் பெண்ணீர்ப்புச் சக்தியின் தன்முனைப்பே காரணமோ!!!). அதே கணத்தில், பூமியில், நான் வானத்தின் அழகை ரசித்தபடி அதில் மனம் பறிகொடுத்து, மெய்மறந்த நிலையில் இருக்கிறேன். என் துடிப்பும், அந்தத் தேவதையின் துடிப்பும் ஓரளவு ஒரே அதிர்வு நிலையில் ஸ்ருதி சேர்கின்றன. என்ன ஆச்சர்யம்! பாடலொன்று ( அடடா, மீண்டும் பாடலா?) குபீரென்று என் உட்செவியில் ஒலிக்கிறது. அதை உருவாக்கியது அந்தத் தேவதையா, நானா, வானா? யார் இதைத் தீர்மானிப்பது? பாடல் முண்டியடித்துக் கொண்டு வருகிறது:*

"நானும் அந்த வானும் இங்கே நந்த வனத்துத்
தோழிகள் நாளும் இரவும் ஒளியும் நிழலும்
**நாங்கள் உருட்டும் சோழிகள்**"

*யாரோடு யாரைப் பகிர்ந்து கொள்ள, யார் பாடும் பாடலிது?*

*அறிவைக் கொண்டு சொற்கள் தேடி அடுக்கிச் செய்யும் செய்யுள்கள் வேறு, கவிதை வேறு. உருவாக்கும் ஆற்றல் அறிவுக்குக் கிடையாது. கற்பனையின் தனிப்பட்ட சக்தி அது. அறிவு, ஆக்கும் கருவி இல்லை; காக்கும் கருவி. "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்பதே வள்ளுவர் வாக்கு. "அறிவினால் ஆகுவதுண்டோ?" என்பதும் வள்ளுவர் கேள்வி. எனவே அறிவு ஆக்கும் கருவி இல்லை. அதனால்தான் அதைச் சிற்றறிவு என்கிறோம். பேரறிவு என்ன என்றால் . . . ., அட, காற்று நின்று விட்டதே! மரம், செடி,*

*கொடிகள் ஆடாமல் அசையாமல் மௌனத்தை அடைகாக்கின்றன. காற்று மீண்டும் வரக்கூடும், வரும். காத்திருக்கிறேன்; வரட்டும், மேலும் எழுதுகிறேன், வந்தால்!*

கரவொலிகள் ஓய்ந்துவிடும் ராக்கா லத்தில்
காதருகே வந்துசில கவிதை சொல்லிப்
பறந்துவிடும் தென்றலைநீ பார்த்த துண்டா
பாவனையாய் அதுசொன்ன மந்தி ரத்தை
மறந்துவிட முடியாது என்றைக் கேனும்
மனத்துக்குள் இடிமுழக்கம் செய்யும் அன்று
கரவொலிகள் ஓய்ந்துவிடும் கண்ணீர் சூழும்
கடலுக்கு நடுவிலொரு தீ உண்டாகும் - கண்ணீர்க்
கடலுக்கு நடுவிலொரு தீவுண் டாகும்

கவிதையொரு மனோதர்மம் கலைந்த கூந்தல்
கற்பனைகள் சிறகடித்துப் பறக்கக் கண்டும்
புவியெல்லாம் புதுமெருகு தோன்றக் கண்டும்
புலப்படாது திடீரென்று நடுங்கும் நெஞ்சில்
தவிக்கின்ற உணர்வுகளில் தனிமை யூற்றில்
தாகத்தால் மனம்வறண்டு தளரும் போதில்
சுருக்கென்று முள்குத்திச் சிரித்துக் கொள்ளும்
சுவடுகளே தெரியாமல் விரைந்து செல்லும் - வந்த
சுவடுகளே தெரியாமல் விரைந்து செல்லும்

நேருக்குநேர் அதையும் பார்ப்ப தற்கு
நிச்சயித்த விழிகளுடன் காத்தி ருந்தேன்
கார்மேகம் நகர்கிறது கனவு காட்டிக்
கள்ளநிலா மறைகிறது சாரல் வேறு
யார்யாரோ வருகின்றார் ஓடு கின்றார்
அதைமட்டும் காணவில்லை அந்த நேரம்
இதயத்தைத் தூளாக்கும் சிரிப்புச் சத்தம்
இருள்கிழிக்க வந்ததொரு வெட்டு மின்னல்
உதிரத்தைச் சூடேற்றி என்னை நானே
உறிஞ்சுகிற ஆவேசம் அதற்குப் பேர்தான்
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை

ஓசைகளின் விளிம்பினிலே ஊஞ்ச லாடும்
உற்சாகம் உள்மனத்தின் இயக்க மெல்லாம்

ஆசைகளாய்ப் பரிணமிக்கும் அர்த்த ஜாமம்
அனுபவங்கள் மலர்கின்ற உதய காலம்
புரியாத நுணுக்கங்கள் புலனா கின்ற
புதுப்பார்வை உலகாளும் புலமை யோகம்
தரிசனக் கடலாடி விட்டு வார்த்தைத்
தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை

# 2

*போன பகுதியை எங்கே நிறுத்தினேன்? நான் நிறுத்தவில்லையே! காற்று நின்றது, கட்டுரையும் நின்றது. காற்றுக்கும் கவிதைக்கும் என்னய்யா சம்மந்தம்? பாடலாகவே வந்தது பதில்:*

“மனமலரைத் தென்றல் வருடிவிடும் - ஒளி மகரந் தங்கள்
சிதறிவிழும் தினமிது போல்சில கவித்துளிகள் - எட்டுத் திசைகளி
லும்விழும் சுடர்ப்பொறிகள்”
(மனமலரை)

கனவிலி ருந்தொரு துளிவிழலாம் - பல காட்சிக ளும்அதில்
பதிந்திடலாம் ஒவ்வொரு துளியும் ஒருவிதை யாய்ச்சில உள்ளங்க
ளில்சென்று விழுந்திடலாம் - பே(ர்) அண்டங்க ளாயவை
மலர்ந்திடலாம்
(மனமலரை)

வண்ணமும் வாசமும் போலல்ல வோநம் எண்ணமும்
கற்பனையும் வண்டுக ளாய்ப்பல வார்த்தைக ளைமன வாசலில்
கொண்டுவரும் - தேன் கவிதைகள் மொண்டுதரும்
(மனமலரை)

அடிப்படை யில்நாம் ஒருயிரே - வெளி அதிர்வுக ளில்பல
வடிவங்களே என்குரல் உந்தன் உயிர்த்துடிப்பே எதிரொலித்
தாலதில் தோய்ந்துவிடு - உன்னை ஏந்திக்கொண் டாலதில்
சாய்ந்துவிடு
(மனமலரை)

# 3

*மீண்டும் காற்று வீசுகிறது. சாதாரணக் காற்று இல்லை. சண்டமாருதம் என்று சொல்லப்படும் சூறைக்காற்று. ஒரு நிமிடம் என்னோடு வாருங்கள்; காலப்பரப்பில், அல்லது, காலப் பரபரப்பில், சற்றுப் பின்னோக்கி வாருங்கள். பல நூற்றாண்டுகள் இல்லை. சில ஆண்டுகள். அவ்வளவுதான்!*

*நாள்: 1990, கோடை விடுமுறை. நேரம்: பிற்பகல் சுமார் 2 மணி. இடம் வாணியம்பாடி அருகில் உள்ள ஏலகிரி மலை. அங்கே, 'சாந்தாமணி லாட்ஜ்' என்றொரு விடுதியில் ஒரு பெரிய பட்டாளத்தோடு நான் தங்கியிருந்தேன். நான், ஷோபனா, என் வளர்ப்புத் தந்தை, என்னிரு பெண்மக்கள், அவர்களுடைய தோழர்கள், தோழிகள் சுமார் எட்டுப் பேர், இவர்களோடு என் நண்பனும், அவன் மனைவியும். அப்பா! இப்பொழுது நினைத்தாலும், அப்பொழுது எப்படி இப்படியொரு பெரும்படையோடு ஏலகிரி, கோடைக்கானல் என்று ஆண்டுதோறும் சென்று கொண்டிருந்தேனோ என்று பிரமிப்பாக இருக்கிறது!*

*அன்று பிற்பகல், லாட்ஜுக்குள் மின்சாரம் இல்லை. ஒரே புழுக்கம். லாட்ஜின் பின்புறம் இருந்த பெரிய தோட்டத்துக்குப் போயமர்ந்தேன். வெளியிலும் காற்றில்லை. வானத்தில் ஒரே மேக மூட்டம். சற்று இருண்டிருந்தது. அப்பொழுது ஷோபனாவும், என் நண்பனும் அங்கே வந்து நான் ஏன் தனியாக அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் என்று கேட்கவும், 'காற்று வாங்க வந்தேன், ஆனால் காற்றே இல்லை' என்று சொல்லிவிட்டுத் திடீரென்று*

*பாடத் தொடங்குகிறேன். பாடல் ப்ருந்தாவனி ராகத்தில், வட இந்திய க்ராமிய வயல்வெளிப் பாடல்களின் சாயலில், மடமடவென்று வருகிறது.*

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்றுதாளம்
போடணும் நான் பாடணும்

*நான் பாடிக்கொண்டே இருக்கிறேன், திடீரென்று பாட்டுக்குப் பின்னணி இசைபோல் ஊய்ய்ய் என்றொரு சத்த்த்தம்! காற்று! சூறைக்காற்றில் புழுதி கிளம்பி எங்கள் கண்களை மறைக்க, மரங்கள் தலைவிரித்தாட, இலைகள் பறக்கப் பாட்டு மட்டும் நிற்காமல் தொடர...ஒரே அமளிதான்!*

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்றுதாளம்
போடணும் நான் பாடணும்

பித்தெடுத்துக் காதலுடன் இத்தரையத் தொட்டுத்தொட்டு
அத்தன மரங்களுமே ஆடணும்
சத்தங்கள வுட்டுப்புட்டு சந்தத்துலக் கட்டுப்பட்டுச்
சிட்டுக்குரு விக்கூட்டம் கூடணும்
நான் பாடணும்

மேகத்துலத் தோகவிரிச் சாடுகிற வானமயில்
ராகத்துல சிக்கித்தடு மாறணும் - என்
ராகத்துல சிக்கித்தடு மாறணும்
மோகவலை போலவொரு தாளஅலை பின்னிப்பின்னி
மூச்சுத்தெண றும்படி யாகணும்
நான் பாடணும்

பாட்டுக்கொரு போதையுண்டு போதைக்கொரு பாதையுண்டு
பாத்துநடந் தால்பறந் தோடலாம்
பாத்துநடந் தால்பறந் தோடலாம்
கூட்டுக்குள்ள நீயிருந்து வாடுறது ந்யாயமில்ல
கூடவந்து களியாட்டம் போடலாம் - என்
கூடவந்து களியாட்டம் போடலாம்

**பாடலாம் நாம் பாடலாம் - அதக்**
**கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்றுதாளம்**
**போடலாம் நாம் பாடலாம்**

*பாட்டு முடிந்து பத்து நிமிடங்கள், காற்றுச் சுழன்று சுழன்று அடித்துவிட்டுக் களைத்துப்போய் மெல்ல விசையிழக்கும் வரை, நாங்கள் எதுவும் பேசிக்கொண்டதாக நினைவில்லை. நான், ஷோபனா, அந்த நண்பன், ஒரு கனத்த மௌனம்!*

*அந்த நண்பன் ஒரு நல்ல கவிஞன். நல்ல குரல்வளத்தோடு கணீரென்று பாடும் கவிஞன். கிருஷ்ண பக்தியில் தோய்ந்த கவிஞன். மராட்டிய அபங் பாடல்களை அவன் பாடிக் கேட்க வேண்டும். இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழன் எக்ஸ்பிரஸ் என்ற இதழின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து, சில ஆண்டுகளுக்கு முன் காலமாம் சூறைக் காற்றால் அடித்துச் செல்லப்பட்ட அந்த நல்ல நண்பன், அமரன் சிவகுமாரை நினைத்துக் கொள்கிறேன்.*

*மீண்டும், இல்லை, மீண்டும் மீண்டும் காற்று வரும், வந்து கொண்டே இருக்கும். சந்திப்போம்.*

# 4

*மேலே சொன்ன சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னால், அதே ஏலகிரி, அதே சாந்தாமணி லாட்ஜ். அதே நபர்கள். ஆம், ஷோபனா, சிவகுமார், நான். லாட்ஜ் அறையில் அமர்ந்திருந்தோம். அப்பொழுதுதான் ஒரு பாடல் உதயமாகியிருந்தது. வழக்கத்துக்கு மாறாக அதை உடனே எழுதியும் வைத்திருந்தேன். மற்ற இருவருக்கும் நான் பாடிக் காட்டுகிறேன்.*

*என் குரல், ஸ்ருதியோடு போராடும் இழுபறியைப் பொருட்படுத்தாமல் என் நண்பர்கள் என்னைப் பாடச் சொல்லி, மன்னிக்கவும், பாடவிட்டுக் கேட்டிருந்ததெல்லாம் நட்புக் கருதியும், எனக்குள் இருந்து வரும் கவிதையூற்றின் மேல் உள்ள மதிப்பினாலும்.*

*திணறித் திணறிப் பாடுகிறேன், சிவரஞ்சனி ராகத்தில் (இந்த ராகத்துக்கு 'சங்கரந்தனப்ரியா' என்று இன்னொரு பெயரும் உண்டாமே!):*

**நினைத்துக் கொள்ள நிமிடம் போதும் - உன்னை**
**நினைத்துக் கொள்ள நிமிடம் போதும் - அதை**
**நிலைக்க வைக்கும் கவிதை யோகம்**
**உனக்கும் எனக்கும் உள்ள பந்தம்**
**ஒன்று மட்டும் என்றும் சொந்தம்**
**இறைவனே இறைவனே - என்னை**
**எழுதிடும் கவிதையே**

**மனைவி மக்கள் என்பதெல்லாம்**
**மரணம் வரையிலே**

மனையும் பொருளும் தேகத்தைநான்
மறக்கும் வரையிலே - நீ
. . . . .

இந்த இடத்தில் ஏனோ என் தொண்டையடைத்துக் கொண்டுவிட்டது. மேலும் பாட வரவில்லை. நான் திணறுவதைப் பார்த்த சிவகுமார் உடனே என்னிடமிருந்து கவிதைத்தாளை எடுத்துத் தொடர்ந்து வந்த வரிகளைப் பாடியதும் மெய்மறந்து போனேன். அடுத்த சரணத்தை நானே சுதாரித்துக் கொண்டு பாடி முடித்தேன்.

நினைத்துக் கொள்ள நிமிடம் போதும் நிலைக்க வைக்கும் கவிதை யோகம் உனக்கும் எனக்கும் உள்ள பந்தம் ஒன்று மட்டும் என்றும் சொந்தம் இறைவனே இறைவனே – என்னை எழுதிடும் கவிதையே

மனைவி மக்கள் என்ப தெல்லாம்
மரணம் வரையிலே
மனையும் பொருளும் தேகத் தைநான்
மறக்கும் வரையிலே - நீ
ஏற்றி வைத்த தீபம் மட்டும்
அணைவ தில்லையே - எந்தக்
காற்று வந்து மோதி னாலும்
கலைவ தில்லையே
இறைவனே இறைவனே - என்னை
எழுதிடும் கவிதையே

உன்னைப் பாடும் எண்ணம் என்னுள்
யார் விதைத்தது - அந்தப்
பாட லுக்குள் பரவ சத்தை
யார் வளர்த்தது
பாடப் பாடத் திரைய றுந்து
நான் விழுந்தது
பாடல் உந்தன் பேர்ம றந்து
தேன் பொழிந்தது

உன்னை
நினைத்துக் கொள்ள நிமிடம் போதும்
நிலைக்க வைக்கும் கவிதை யோகம்
உனக்கும் எனக்கும் உள்ள பந்தம்

ஒன்று மட்டும் என்றும் சொந்தம்
இறைவனே இறைவனே - என்னை
எழுதிடும் கவிதையே

*'எந்தக் காற்று வந்து மோதினாலும் அணைவதில்லையே' என்று சிவகுமார் பாடிய மெட்டு வெகு அலாதியாக என்னை ஈர்த்தது. நானே அந்த வரியைப் பாடியிருந்தால் அவ்வளவு அழகாக மெட்டு அமைந்திருக்க வாய்ப்பில்லை. என் மனத்தில் எழுந்த இசைக் காற்றைச் சற்றே திசைத்திருப்பி, மலையமாருதமாய் வளையவரச் செய்த சிவகுமாரை மறக்க முடியுமா?*

*இப்படியாக என் வாழ்வில் காற்றும் கவிதையும் எத்தனைமுறை உறவாடியிருக்கின்றன!*

*முன்பொருநாள், இசைக்கவி ரமணனும் நானும் .....*

*(தொடரும்)*

# 5

*ரமணனும் நானும், ஓ, அந்த உறவை எப்படி வர்ணிப்பது! நட்பா, ரசனையா, ப்ரமிப்பா, எல்லாம் சேர்ந்த கலவையா? தெரியவில்லை. வள்ளுவரின் முதிர்ச்சி, கம்பனின் கற்பனை வளம், பாரதியின் உணர்ச்சி, கண்ணதாசனின் எளிமை எல்லாம் அங்கங்கே பளிச்சிடும் அவன் கவித்துவம் மட்டுமே இந்த ஈர்ப்புக்குக் காரணம் என்றும் சொல்ல முடியாது. சில விஷயங்கள் சொல்லுக்கு அப்பாற்பட்டவை. விட்டுவிடுகிறேன்.*

*சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் ரமணன் ஒருநாள் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு என்னைக் காண வந்திருந்தான். என் பணியிடம் அதுதானே.*

*அங்கே முதல் மாடியில் ஒரு முற்றம்* (quadrangle) *உண்டு. காற்றாட நின்றுகொண்டு பேசலாம் என்று அங்கே போனால், காற்றே வரவில்லை. சலித்துக் கொண்டேன். உடனே ரமணன் பாடினான்:*

**காற்றே வா கவிதை தா**
**ஆற்றாமை அதைநீ மாற்றாமல்**
**தாகம் என்ற யாகம் பெருகத்**
**தண்ணீர் ஊற்றிவிடு**
**காற்றே வா கவிதை தா**

*பாடி முடிக்கும் முன் வந்ததே காற்று!*

*இந்தப் பாடலில் ஓர் அழகான முரண்பாடு, தன்னைக் கவனிக்கச் சொல்லி முரண்டு பிடிக்கிறதே! தாகத்தைத் தணிக்கவும், யாகத்தை அணைக்கவும் தண்ணீர் ஊற்றுவதுதான் வழக்கம்.*

ஆனால் தாகம் என்ற யாகம் பெருகத் தண்ணீர் ஊற்றச் சொல்கிறானே! அதுவும் காற்றை! கவிஞன் சொன்னால் என்ன வேண்டுமானாலும் நடக்குமோ, இயற்கையில்!

காற்று மட்டும் இல்லை, நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களும் கவிதைக்குக் கட்டுப்பட்டவை. இதையும் அருட்குறள் மூவாயிரத்தில் ரமணனே சொல்கிறான்:

**தீயென்றால் காடெரியத் தேனென்றால் பூமகிழ**
**வாய்நின்ற பேரருளே வாக்கு**

காலத்தில் இன்னும் சற்றுப் பின் நோக்கிப் போவோமே. 1977ஆம் ஆண்டு, கார்த்திகைத் திருநாள். மந்தைவெளி நார்ட்டன் லேன் வீட்டில், முன் வராண்டாவில் ஈஸி சேரில் உட்கார்ந்திருந்தேன். இருபதாவது பிறந்தநாள் பரிசாகத் தன் மகனுக்குச் சாய்வு நாற்காலி (அதற்கு நாலு கால் இருந்ததோ?), வாங்கித் தந்த ஒரே தந்தை என் வளர்ப்புத் தந்தையாகத்தான் இருக்க முடியும்! அந்த சாய்வுச் இருக்கையில் சாய்ந்து கொண்டு, வெறுமை சூழ்ந்த மனத்தோடு வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன், குறிப்பாக எதையும் பார்க்காமல்.

**வெற்று மனத்துடனோ - ஆழம்**
**மேவிய சிந்தை ஒருமையில் மூழ்கியோ**
**சற்று விழிகுவித்து - நானும்**
**சாய்ந்திருக் கின்ற பலசம யங்களில்**
**கொத்து மலர்க் கூட்டம் - அழகு**
**குலுங்கக் குலுங்கவென் உள்விழியில் - மின்னல்**
**இட்டு மறைந்துவிடும் - அடடா**
**இதுவே இதுவே தனிமையின் பேரின்பம்**

(For oft, when on my couch I lie

In vacant or in pensive mood

They flash upon that inward eye

Which is the bliss of solitude)

ஆங்கில மாக்கவிஞன் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்தின் அமர வரிகளை அப்போது நினைத்துக் கொண்டேனோ இல்லையோ, இப்போது நினைத்துக் கொள்கிறேன்.

அப்படி நான் சாய்ந்திருந்த அந்தச் சாய்ங்கால நேரத்திலே, சற்று நேரத்துக்கெல்லாம், வெறுமை சூழ்ந்த என் மனத்தில் ஒரு

பேரொளி எழுந்து சுடர் விட்டுச் சிரித்தது. அதுவும் வரிசை, வரிசையாக ஒளிச்சுடர்கள். மனத்திலா? அதோ, தெருவெல்லாம், எல்லா வீட்டு வாசல்களிலும்! ஓ, கார்த்திகையாயிற்றே! வீடுதோறும் அகல்விளக்குகள், நிரல்நிரலாக! அந்தக் காட்சியிலிருந்து என் கையைப் பிடித்து வேறொரு ப்ரும்மாண்டமான காட்சிக்கு அழைத்துச் சென்றது காற்று.

ஒரு சராசரி மனிதனின் பார்வையில் சாதாரண, அன்றாட நிகழ்வாகத் தெரியும் ஒரு காட்சி, சில நேரங்களில் ஒரு கவிஞனை ப்ரம்மிக்க வைக்கும் ப்ரும்மாண்டத்துக்கு அழைத்துச் செல்லக் கூடும்.

மாலை மயங்கி இரவாக மாறப் போகும் அந்தி நேரம். கிழக்கு வானில் நிலா உதயம். இது தினமும் நடப்பதுதானே! அன்றும், அதாவது, சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பும் நடந்தது. அதை ஒரு புலவர் பார்த்துவிட்டாரே! போதாதா? பாட்டு வந்தது பாருங்கள், அதுதான்யா பாட்டு!

**கானெலாம் மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன**
**வானெலாம் வயங்கு தாரை நிறைநிறை அடர்ந்து தோன்ற**
**வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்ப மென்ன**
**தூநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற் றம்மா**

காடு முழுக்க மலர்ந்த முல்லைப்பூக்கள் குபீரென்று, தாங்கள் மலர்ந்த செடிகொடிகளை விட்டுப் பிரிந்து, மேலெழுந்து பறந்துபோய் வானத்தை நிறைத்து விட்டனவாம்! அப்படி வானம் முழுக்க நட்சத்திரக் கூட்டம் கொட்டிக் கிடந்தது என்கிறார், புலவர். அவற்றுக்கு மத்தியில் நிலா எப்படி வந்து உட்கார்ந்து கொண்டதாம்? மன்மதனுக்கு விழா, அதாவது காமன் திருவிழா, அதில் வெள்ளிக் கும்பம் வைக்கப் பட்டிருக்குமே, அப்படியாம்! நிலா எனப்படும் மதியொளியின் கம்பீரத்தையும், குளுமையையும் அப்படியே படம்பிடித்துக் காட்டும் கவிதையிது. வில்லிபுத்தூர் ஆழ்வார் அருளிய பாரத காவியத்தில் உள்ளது இந்த மகோன்னதமான கவிதை.

மீண்டும் 1977– மந்தைவெளி, நார்ட்டன் லேனுக்கு வருவோம். அன்று வீடுதோறும் ஏற்றப்பட்ட கார்த்திகை அகல்விளக்குகளின் பேரணியை என்நெஞ்சில் அகலாமல் இடம்பெறச் செய்த அந்தக் கவிதை இதோ:

**காற்றுப் பல்லக்கிலே - செல்லும்**
**கார்த்திகைத் தீபங்களே - உங்கள்**

காதல் வனப்புகள் ஆடிக் களித்திட
ராகங்கள் நான்தருவேன் - இனிய
ராகங்கள் நான்தருவேன்

நேற்று நினைவுகளில் - துள்ளும்
நெஞ்சத் துடிப்புகளே - நீங்கள்
நேர்வந்தென் கண்முன் நின்று சிலிர்த்திடத்
தேகங்கள் நான்தருவேன் - புதிய
தேகங்கள் நான்தருவேன்
(காற்றுப் பல்லக்கிலே)

முதிராத மகரந்தப் புதிரோடு தவம்செய்யும்
மொட்டுக்களுக்(கு) ஒரு பாட்டிசைப்பேன் - அந்த
மௌனத்தின் வாசலை மோதித் திறக்கும் - பனி
முத்துக்களுக்(கு) ஒரு பாட்டிசைப்பேன்
(காற்றுப் பல்லக்கிலே)

புரியாத கதியோடு சுகமான ஜதியோடு
நதியாக வந்தாலும் நான்பாடுவேன் - இன்னும்
புலராத பொழுதுக்குப் புகைபோடும் மார்கழிப்
பனியாக வந்தாலும் பாட்டிசைப்பேன்
(காற்றுப் பல்லக்கிலே)
முடியாத பாட்டுக்கு முதலாக என்னுயிரை
முழுதாக நான்தந்து விளையாடுவேன் - அந்தப்
பாட்டுக்குக் கருவாகிப் பண்ணென்ற உருவாகிப்
பாரெங்கும் காற்றாகப் பறந்தோடுவேன்
(காற்றுப் பல்லக்கிலே)

*காற்றையே பல்லக்காக்கி அதிலேறி அமர்ந்துகொண்டு, மயிலைக் கபாலி கோயில் திருவிழாவில் சப்பரங்களில் போகும் அறுபத்து மூவரைப்போல் தீபங்கள் போகும் அந்த அதியற்புதக் காட்சி, இல்லை, தரிசனம், இன்று நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.*

*முதன்முதலில் இந்தப் பாட்டை நண்பர் வ.வே.சு.வுக்குப் பாடிக் காட்டினேன். என்ன ராகம் என்று கேட்டார். 'சுபபந்துவராளியில் ஒரு ஸ்வரம் மட்டும் நீங்கல்' என்று பதில் சொன்னது நினைவில் இன்னும் பசுமையாக உள்ளது. அவ்வளவுதான் சாமி நம்ம ராகஞானம்! ஏதோ, காதிருக்கிறது, காற்றடிக்கிறது, வாயசைகிறது, பாடல் வருகிறது, அம்புடுதேன், ஆனால், அம்புட்டும் தேன்!*

*பருகலாம், உருகலாம், களி பெருகலாம்.*

# 6

நேற்று மாலை எனக்கும் அவனுக்கும் நடந்த உரையாடலை அப்படியே தருகிறேன். அவன் பெயர் என்ன? தெரியவில்லயே! சரி, புத்தி சிகாமணி என்று வைத்துக் கொள்வோமே! சுருக்கமாக 'சிகா'.

சிகா: என்ன கவிஞா, ரொம்பத்தான் அளந்து கொட்டுகிறாய் போலிருக்கு!

கவி: அப்படியெல்லாம் இல்லை, எல்லாம் அளவாகத்தான் இருக்கிறது.

சிகா: ஏம்பா, காற்று வந்து உன் கையைப் பிடித்துக் கூட்டிப் போகிறது என்றாயே, காது குத்துகிறாயா?

கவி: ஏன், அதிலென்ன தப்பு? நடந்ததைத் தானே சொன்னேன்!

சிகா: அது சரி, காற்றுக்குக் கையுண்டு என்று கதையா அளக்கிறாய்?

கவி: ஏன் இருக்கக் கூடாது? உனக்கு ஒன்று சொல்கிறேன். நேற்று ஒரு பெரும்புலவரைப் பற்றிச் சொன்னேனே.

சிகா: ஆமாம். ஆண்டாள் ஊர்க்காரர்.

கவி. ரொம்ப சரி. வில்லிபுத்தூர் ஆழ்வார். அவருடைய காவியத்தில் உள்ள இன்னொரு பாடலைச் சொல்கிறேன் கேள். கதை கேட்பதென்றால் உனக்குக் கொள்ளைப் பிரியமாயிற்றே. பாரதப் போர் தொடங்கும் முன்பு எப்படியாவது கண்ணனை, அதாம்பா, ஶ்ரீ க்ருஷ்ண பகவானைத் தங்கள் பக்கம் வரச்செய்துவிட வேண்டும் என்று பாண்டவர்களும், கௌரவர்களும் ஆகிய இரு

*தரப்பினரும் விரும்பினார்கள். ஊம் சொல்லு, அப்போதுதான் கதை சொல்வேன்.*

*சிகா: ஊம்.*

*கவி: கண்ணனை இதுபற்றிச் சந்தித்துப் பேச, துரியோதனன் மதுராபுரிக்குச் செல்கிறான். மதுராபுரியை அவன் நெருங்கியதும், அந்நகரின் கோட்டை மதில்களின் மேல் பறந்து கொண்டிருக்கும் கொடிகள் என்ன செய்தன தெரியுமா? இப்போதெல்லாம் தெருவுக்குத் தெரு கட்சிக் கொடிகள் பறந்து கொண்டிருப்பதைப் போல் அப்போது அந்தந்த நாட்டுக் கொடிகள் அந்தந்த நாட்டுக் கோட்டைச் சுவர்களில் எல்லாம் பறந்து கொண்டிருக்கும். மதுராபுரியின் கொடிகள் துரியோதனனைப் பார்த்து, " அப்பா, நீ இங்கே வந்து என்ன முயற்சி செய்தாலும் மேக வண்ணனாகிய எங்கள் மன்னன், கண்ணன் பாண்டவர்களுக்குத்தான் துணைபோவான், நீயேன் வருகிறாய், வேலை மெனக்கெட்டு? போ போ" என்று சொல்வதுபோல் ...*

*சிகா: என்ன செய்தனவாம்?*

*கவி: பாட்டையே சொல்கிறேனே:*

**ஈண்டுநீ வரினும் எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்**
**பாண்டவர் தங்கட் கல்லால் படைத்துணை யாக மாட்டான்**
**மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதிற் குடுமி தோறும்**
**காண்தகு பதாகை யாடை கைகளால் தடுப்ப போன்ற**

*புரிகிறதா? கொடிகள் துரியோதனனைக் கைகளால் தடுத்தன என்று புலவர் பாடுகிறாரப்பா!*

*சிகா: ஆஹா, பிரமாதம்.*

*கவி: பார்த்தாயா, கொடிகளுக்குக் கையுண்டு என்கிறாரே. அது போகட்டும், நிலாவை ஒருகவளச் சோறு என்று நினைத்து யானை வழிமறித்த அழகை, "அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்" என்று குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் பாடுவது ஒருபுறம் இருக்கட்டும். முத்தொள்ளாயிரம் என்ற கவிதை நூலில் ஒரு பாடல் கேளு:*

**அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ**
**வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇப் - புள்ளினம்தம்**
**கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ**
**நச்சிலைவேல் கோக்கோதை நாடு**

*அரக்கு நிற ஆம்பல் பூக்கள் அடர்த்தியாகக் குளத்தில் மலர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, ஓ, வெள்ளமே தீப்பிடித்து எரிகிறதோ என்று பயந்துபோய் பறவைகள் எல்லாம் தங்கள் குஞ்சுகளைக் கைச்சிறகால் அணைத்துக் கொள்ளச் சிறடிக்கும் ஆரவாரம் மிகுந்த நாடு என்கிறார் அந்தப் புலவர். பறவைகளுக்கும் கையுண்டே. அதனால்தான், திருவள்ளுவரும் சொன்னார், எவனொருவன் கொலைத்தொழிலை வெறுத்துப் புலால் உண்ண மறுக்கிறானோ அவனை எல்லா உயிரும் கைகூப்பித் தொழுமாம்.*

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

*சிகா: அப்பா, ஒப்புக் கொள்கிறேன், காற்றுக்குக் கையுண்டு. ஆளை விடப்பா!*

*(புத்தி சிகாமணி ஓடி மறைகிறான். நான் மட்டும் தனியே, ஒரு மாமாங்கத்துக்கு முன் எழுதிய என் பழைய பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி நடக்கிறேன்.)*

காற்றுவந்து கைப்பிடித்துக் கூட்டிச்செல்வ தெவ்விடம்
காதல் கவிதை பாடல் நெஞ்சில் கண்சிமிட்டும் ஓவியம்
தோற்றம் என்பதா - ஒரு
தொடர்கதையாய் வளர்கிறதா

நேற்றும் இன்றும் நாளை யென்றும் மாற்றமின்றி ஒருசுழல்
நினைவு கனவு மலரு முற(வு) அனைத்திலும் அதேநிழல்
தோற்றம் என்பதா - ஒரு
தொடர்கதையாய் வளர்கிறதா

நிலாமுகில் தொடாதது தொலைவில் உள்ளது - என்
றாலும் போர்வை நாட கம்கண் வளைவில் உள்ளது
தோற்றம் என்பதா - ஒரு
தொடர்கதையாய் வளர்கிறதா

மீட்டு கின்ற வீணை யின்வி ளிம்பி லேஇசைப்பொறி
காட்டு கின்ற பாதை யெங்கும் கற்பனைத் திரள்
கேட்ட றிந்த பாட லுக்குள் கோடிக் கோடி நெளிவுகள்
தேடித் தேடிச் செல்லு கின்ற தேவதைக் குரல் - அந்தக்
காற்றுவந்து கைப்பிடித்துக் கூட்டிச்செல்வ தெவ்விடம்
காதல் கவிதை பாடல் நெஞ்சில் கண்சிமிட்டும் ஓவியம்

**தோற்றம் என்பதா - ஒரு**
**தொடர்கதையாய் வளர்கிறதா**

*புத்தி சிகாமணி கேட்கிறான்: என்னப்பா இது மாயாஜாலம்! கவிதையும் காற்றும் ஒன்றா?*

*இந்தக் கேள்விக்குப் பாட்டாலேயே பதில்சொல்கிறேன், அடுத்தமுறை.*

# 7

*புத்தி சிகாமணி கேட்டானே, "காற்றும் கவிதையும் ஒன்றா?" என்று, அந்தக் கேள்விக்கு நான் பாட்டாலேயே பதில் சொல்வதற்குள் அவன் எங்கோ காற்று வாக்கில் பறந்து போய்விட்டான். பரவாயில்லை. அது என்ன பதில் என்று நாமும் கேட்டு வைப்போமே.*

*பழைய பாட்டு சாமி, 1988–ல் வந்தது. சுத்தமான சுபந்துவராளி ராகத்தில்தான் வந்தது. ஆனால், அமரர், கவிமாமணி தேவநாராயணன் வீட்டில் நடந்த பாரதி கலைக் கழகக் கவியரங்கத்தில் என்னால் கொஞ்சம் அப்படி இப்படியாகப் பாடப் பட்டது. மிஸ்ர நடை வேறு. பாவம், பாரதி கலைக் கழக உறுப்பினர்கள் ரொம்பப் பொறுமைசாலிகள். இதோ பாட்டு:*

*காற்று வேறு கவிதை வேறு*

**இரண்டும் ஒன்றாய் இணையும் போது**
**பாடல் உருவாகும் - அதில்**
**பார்வை தெளிவாகும்**

**நேற்றும் இன்றும் நாளை யென்றும்**
**மாற்ற மின்றி மலர்ந்தி ருக்கும்**
**தோற்றம் உருவாகும் - உயிர்**
**தோயும் ஒளியாகும்**

**வெண்ணி லாவில் அமுதம் அள்ளிக்**
**கொண்டு வந்த தென்றலும்**
**சொற்க ளுக்குள் சொக்கி வீழும்**

சொர்க்கம் எங்கள் பாடலே
மின்னிமின்னித் தார கைகள்
கண்சி மிட்டும் தாளத்தில்
மெல்ல மெல்லச் சொல்லெ டுத்து
மீட்டும் எங்கள் பாடலே
(காற்று வேறு)

தூண்டி லுக்குள் துவளும் மீனின்
தோல்வி எங்கள் பாடலே
காண்டி பத்தில் இடிமு ழக்கும்
வெற்றி எங்கள் பாடலே
மலரில் வண்டு துயிலு கின்ற
மர்மம் எங்கள் பாடலே
தனிமை யுள்ளும் தர்க்கம் செய்யும்
தர்மம் எங்கள் பாடலே
(காற்று வேறு)

*நாம் காற்றைத் தேடுவதுபோல், காற்றும் கவிதை தேடுகிறதோ என்று சகோதரி கீதா மதிவாணன் இன்று காலை வல்லமை மின்னிதழில் ஒரு குறிப்பு எழுதி என்னை வியக்க வைத்து விட்டார்.*

*"கவிதைப் புத்தகத்தின் வெற்றுப் பக்கங்களைப் படபடப்போடு புரட்டிக் கொண்டிருந்தது காற்று". இப்படித்தான் கீதா எழுதியிருந்தார்.*

*பக்கங்களைப் படபடப்போடு புரட்டுவது என்றதும் அந்த ஹிட்லர் மீசைக்காரர்தான் நினைவுக்கு வருகிறார். அவர் பாடல் ஒன்று நினைவுத் திரையில் நிழலாடுகிறது.*

*அவன் ஏதோ மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கிறானாம். அவனையே வைத்தகண் வாங்காமல் அவள் பார்த்துக் கொண்டிருக்கிறாளாம். இல்லை, ஓடையிலே பூத்திருக்கும் குளிர்ந்த மலர்ப் பார்வையினால் அவனை அருந்திக் கொண்டிருக்கிறாளாம். அப்போது சட்டென்று அவன் நிமிர்ந்து பார்க்க, அவன் பார்வையில் அவள் பார்வை பட்டுத் தெறிக்க. . . .! அடடா, பார்வை தெறித்துச் சிதறும் சத்தம் கண்ணாடி உடைவது போல் கேட்கிறதா? அந்தவொரு கணச் சிதறலில், தன் ஆடைவிலகிப் போய்த் தான் நிர்வாணப் பட்டது போல் அவளுக்கு ஒரு நாணம் விளைய, சரியாகவே இருக்கும் ஆடையை அவள் சரிசெய்து கொள்கிறாளாம்! அவனோ, " ஐய்யய்யோ, நான் பார்க்கவே இல்லை அம்மாடீ!" என்பதுபோல் குனிந்து கொண்டு புத்தகத்தின்*

பக்கங்களைப் படபடவென்று புரட்டுகிறானாம். ஆயிரம் ஏடு திருப்புகிறான் என்று முடிக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்:

**கூடத்தி லேமனப் பாடத்தி லேவிழிக்**
**கூடிக் கிடந்திட்ட ஆணழகை**
**ஓடைக் குளிர்மலர்ப் பார்வையி னாலவள்**
**உண்ணத் தலைப்படும் நேரத்திலே**
**பாடம் படித்து நிமிர்ந்த விழிதனில்**
**பட்டுத் தெறித்தது மானின்விழி**
**ஆடை திருத்திநின் றாளவள் தானவன்**
**ஆயிரம் ஏடு திருப்புகிறான்**

விழிகள் பட்டுத் தெறிக்கும் ஓசையும், ஒருசில பக்கங்களையே ஆயிரம் பக்கங்கள்போல் சரசரவென்று அவன் புரட்டிக்கொண்டே இருக்கும் ஓசையும் கேட்க வைக்கும் நல்ல கவிதையிது. ஆங்கிலத்தில் onomatopoeic என்பார்களே, அப்படிப்பட்ட த்வனிச் சிறப்போடு இது விளங்குகிறது.

கவிதையில் சொல்லப்படும் அறிவு சார்ந்த கருத்துகள் படிப்பவன் அறிவு வரை மட்டுமே செல்லும். ஆனால் அதன் த்வனியாகிய ஒலியின்பமே அறிவைக் கடந்து மனத்தளத்தின் ஆழத்தில் போய் அதிர்வுகளை ஏற்படுத்த வல்லது. அதுவே ஆகாயத்தை அளாவி நிரந்தரமான, அட்சரம் என்ற அழிவற்ற நிலையில் பரவியிருக்கக் கூடியது.

“என்ன ஓய், உபன்யாசமெல்லாம் பலமா இருக்கு?”

கலகலவென்று சிரித்துக் கொண்டே கேட்டது நான்; கேள்விக்குப் பதில்சொல்ல முடியாமல் துவண்டு போனது, வேறு யாருமில்லை, ஓடிப்போய்விட்டு நடுவில் சடாரென்று திரும்பி வந்து எனக்குள் புகுந்து கொண்டு வசனம் பேசிய நம்ம பழைய பிரஹஸ்பதி, சாட்சாத் புத்தி சிகாமணிதான்.

புத்தி சிகாமணிக்கு ஒரு மனைவியுண்டு. எனக்குத் தெரிந்தவரை ஒரே மனைவி. அவள் பெயர் . . . .ம்! என்ன பெயர் வைக்கலாம்?

# 8

புத்தி சிகாமணிக்கு ஒரு மனைவி உண்டு என்று சொன்னேன் இல்லையா? அவள் பெயர் மனோன்மணி என்று வைத்துக் கொள்ளலாமே. அவள் ஒரு கற்பனைப் பாத்திரம் என்று எண்ணிவிட வேண்டாம். அவள்தான் கற்பனை, கற்பனைதான் அவள்.

மனோன்மணி இல்லாமல் சிகாமணி தனியே இருக்கும் போது அவன் சொல்வதெல்லாம் வெற்று வேதாந்தமாக (எவ்வளவு உயர்ந்த சொல்லை நாம் எப்படிப் பயன்படுத்தப் பழகிவிட்டோம்!), விறுவிறுப்பில்லாத, ஸ்வாரஸ்யமில்லாத வறட்டுப் பேச்சாக இருக்கும். ஆனால், மனோன்மணியோடு சேர்ந்து விட்டாலோ சிகாமணிக்கு ரொம்ப குஷி வந்துவிடும். குதூகலமாகப் பேசுவான். அவன் சொல்லும் கதையெல்லாம் விறுவிறுப்பாகப் பழைய விட்டலாச்சார்யாவின் மாயாஜாலப் படங்கள் பாணியில் அமோகக் காட்சிகளாக ஜொலிக்கும். காந்தாராவ், ஜெயமாலினி எல்லாரும் வருவார்களா என்று கேட்டு விடாதீர்கள். சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன்.

எனக்கென்னமோ இந்த புத்தி சிகாமணியும், மனோன்மணியும் எப்படியோ பாரதியின் படைப்பிலும் இடம்பிடித்து விட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஆம், இரண்டு கயிற்றுத் துண்டுகளுக்குக் கந்தன், வள்ளி என்று பெயரிட்டு அவன் எழுதிய மிக உயர்ந்த, உன்னதமான காதல் காவியத்தின் நாயக, நாயகியர் இவர்களே என்று எண்ணுகிறேன். அவர்களுடைய ஊடலையும், கூடலையும் எவ்வளவு அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறான் பாரதி!

ஆனால், சில நேரங்களில் மனோன்மணி மட்டும் சிகாமணி இல்லாமல் ஏதேதோ பேசத் தொடங்கி வகையாக மாட்டிக்

கொள்வாள். ஒரு சம்பவம் சொல்கிறேன். அதைச் சொல்வதற்கு முன் ஒரு சிறு வரலாற்றைச் சொல்ல வேண்டும். பீடிகை பீதாம்பரம் என்று எனக்குப் பட்டம் கொடுத்தாலும் பரவாயில்லை, நான் அதைச் சொல்லியே ஆக வேண்டும்.

இன்று மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கும் என் இனிய நண்பன் சுகி சிவம், பள்ளி,கல்லூரி நாட்களில், அதாவது சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கவிதைகளும் எழுதியிருக்கிறான். உலகம் போற்றும் பேச்சாளனாகவும், சிந்தனையாளனாகவும் வளர்ந்துவிட்ட அவனை இப்பொழுது ஒருமையில் அழைக்கவே கூச்சமாக உள்ளது. ஆனால் மரியாதை நிமித்தம் அவர், இவர் என்று போட நெருக்கம் இடம்தர மறுக்கிறது.

அவன் எழுதிய கவிதைகள் தரமானவை, சுவையானவை. அதுவும் வேற்காடு கருமாரியம்மன் மீது அவன் எழுதி, நாங்கள் கூட்டுப் பிரார்த்தனையில் வாரம்தோறும் பாடிய பாடல்கள் எங்கள் குழுவில் மிகவும் பிரசித்தி பெற்ற பாடல்கள்.

**அண்ட முட்டையினை விண்டு கண்டிடினும்**
**அன்னை சக்திவரு வாளடா - அவள்**
**தீமை வெட்டுமொரு வாளடா**
**. . .. . .**
**. . . . . .  . . . . .**
**கொத்து வேப்பிலைக் கைத்த லத்திடை**
**வைத்த நற்குங்கு மச்சிலை - தொழ**
**வாடும் உன்மன்ம தக்கலை**

**இப்படிப்பட்ட பக்திமணம் கமழும் வரிகள் கொண்ட பாடல்களை அவன் படைத்திருந்தான்;**

**கொடியோர்கள் கண்டஞ்சும் தாரார்புஜம் - கொண்ட**
**கொடிநின்னை அல்லாமல் வேறார்நிஜம்**
**விடியாத படிசெய்த மாபாதகம் - தீர்க்கக்**
**குடிலுக்குள் குடிகொண்ட கோமேதகம்**

இப்படிப்பட்ட வைர வரிகள் விரவி வந்தன அவன் பாடல்களில்!

இவையெல்லாம் அவனுடைய சொல்லாளுமைக்கும், கற்பனை வளமிக்க கவிதையுள்ளத்துக்கும் சில சான்றுகள்.

ஒருநாள்...! இப்பொழுது நான் சொல்வது ஒரு பரம ரகசியம்.  உஷ்! அதாவது, சிவத்துக்குத் திருமணம் ஆவதற்குப்

*பல ஆண்டுகளுக்கு முன் அவன் கனவில் ஒரு பேரழகியைப் பார்த்ததாகச் சற்று படபடப்போடு என்னிடம் சொன்னான். பேரழகிகளைக் கனவில்தான் பார்க்க முடியும் என்று யாரோ பெருமூச்சு விடும் ஓசை கேட்கிறதே! உஷ்! "நீ என்ன செய்தாய்" என்று சிவத்திடம் கேட்டேன். பளிச்சென்று கவிதையிலேயே பதில் சொன்னான், அசந்து விட்டேன்.*

**"கண்ணளந்து நின்றிருந்தாள் கதலித்தேன்**
**கையளைந்து நானவளைக் காதலித்தேன்"**

*கையளந்து இல்லையப்பா, கையளைந்து! "சிறுகை அளாவிய கூழ்" நினைவுக்கு வருகிறதோ!*

*எவ்வளவு சுவையான வரிகள். கதலித்தேன் நீண்டு காதலித்தேன் என்று ஆன சுவையைத் தாண்டிப் போக முடியவில்லையே!*

*சிவமும் நானும் எங்கள் கல்லூரி நாட்களில் ரசித்துப் படித்துக் கொண்டிருந்த கவிஞர்களில் உவமைக் கவிஞர் சுரதாவுக்கே முதலிடம். அதற்குக் காரணமாக இருந்தவர் திரு.ஔவை நடராஜன்.*

*சுரதா, அப்போது தொடர்ந்து ஆனந்த விகடனில் அன்றாடச் செய்திகளையெல்லாம் செய்யுள் நடையில் எழுதி வந்தார். திருமதி கே.ஆர்.விஜயாவுக்குக் குழந்தை பிறந்த செய்தியை "கேயார் விஜயா தாயார் ஆனார்" என்று அவர் எழுதியது மிகவும் பிரபலமானது.*

*அவருடைய இந்த முயற்சிகளைக் கேலி செய்து 'கம்பாசிடர் கவிதைகள்' என்று திரு.சோ அவருக்கே உரிய பாணியில் விமர்சனம் செய்து விட்டார்.*

*அந்த விமர்சனத்துக்கு ஓர் அருமையான கவிதை மூலம் சுரதாவே விடை சொல்லியிருந்தார். அந்தக் கவிதையின் நிறைவு வரிகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப் படவேண்டிய வரிகள்:*

**"மாடுமுட்டிக் கோபுரங்கள் சாய்வதில்லை**
**மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை"**

*தீவிர சுரதா ரசனையின் பிடியிலிருந்த சிவமும், சோவின் விமர்சனத்துக்கு ஒரு நல்ல பதில் கவிதை எழுதி அதுவும் பிரசுரமானது. ஆனால் ஆனந்த விகடனில் இல்லை. பின் எந்தப் பத்திரிகையில்? அது ஒரு பெரிய கதை!*

*எங்கோ போய்விட்டோம். மீண்டும் சிகாமணி, மனோன்மணி விவகாரத்துக்கு, (விவாகரத்துக்கு என்று மாற்றிப் படித்துவிட வேண்டாம்) வருவோம். கொஞ்சம் மூச்சு விட்டுக் கொள்வோமே.*

# 9

நான் ஒரு பெரிய மனிதன் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. சுரதா, ஔவை நடராஜன், சுகி சிவம், இசைக்கவி ரமணன், வ.வே.சு. போன்ற பெரிய மனிதர்களோடு என் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பின்னியிருப்பதால், சுயசரிதை எழுதும் அளவுக்கு நானும் ஒரு பெரிய மனிதன்தான் என்ற நம்பிக்கையோடு இத்தொடரைத் தொடர்கிறேன்.

சோவுக்கு பதில் சொல்வதாக அமைந்த சுரதாவின் கவிதையை ஒட்டியும் ஆமோதித்தும் சுகி சிவம் ஒரு கவிதை எழுதினான் என்று சொன்னேன் இல்லையா? அதில் சுரதாவைப் புகழும் போக்கில் மிக அழகாக இரண்டு வரிகள் போட்டிருந்தான்.

'ஆடியடங்கும் வாழ்க்கையடா' என்று சுரதா எழுதிய ஒரு பழைய திரைப்பாடலில் வரும் இரண்டு வரிகள் தெரிந்தால்தான் சிவத்தின் கவிதையை ரசிக்க முடியும்.

> **முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா - கண் மூடினால்**
> **காலில்லாக் கட்டிலடா**

இவை சுரதாவின் கவிதை வரிகள். இந்த வரிகளைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டிச் சிவம் எழுதியிருந்தான்:

> **காலில்லாக் கட்டிலெனக் கவிதை சொன்னீர் எட்டுக்கால்**
> **கட்டிலென எதிர்த்துச் சொல்வேன்**

"சோ" செய்திருந்த விமர்சனத்துக்கு, சுரதா எழுதிய பதில் கவிதையின் நிறைவு வரிகளை மீண்டும் பார்ப்போம்:

> **மாடுமுட்டிக் கோபுரங்கள் சாய்வதில்லை**
> மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை

அதை அடியொட்டி, சிவம் தன் கவிதையை இப்படி முடித்திருந்தான்:

**எலிதாக்கிப் புலியிங்கே வீழ்வதில்லை**
**எருக்கம்பூ தாமரையாய் ஆவ தில்லை**

சிவத்தின் கவிதை வெளியான தமிழ் இதழின் பெயர், "மாணவரிஸம்". நான் தான் அதன் ஆசிரியர். அதன் கதையைப் பிறகு அளக்கிறேன். மீண்டும் சிவம் எழுதிய கவிதைக்கே வருவோம்.

அந்தக் கவிதையை நான் பாராட்டினேன். படித்தவர்கள் அனைவரும் பாராட்டினார்கள். ஔவை நடராஜனும் முதலில் பாராட்டினார். பிறகு சிவத்தையும், என்னையும் தனியே அழைத்துச் சொன்னார்:

'ராஜா, கோபுர மதிற்சுவரை மாடு முட்டுவது இயற்கையாக, அன்றாடம் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. இப்படி இயல்பான ஒரு நிகழ்வைச் சுட்டிக்காட்டிவிட்டு, மாடு முட்டும் ஆனாலும் கோபுரம் சாய்வதில்லை என்கிறார் சுரதா. அது போல், கூழாங்கல் மாணிக்கம் ஆவது இயற்கையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. ஆனால் மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை என்கிறார் சுரதா. இப்பப் பாரு ராஜா, எலி போய்ப் புலியைத் தாக்கும் நிகழ்ச்சி எங்கேயாவது நடக்குமா? இல்லை எருக்கம்பூ தாமரையாவோ, தாமரை எருக்கம்பூவாவோ ஆவதுண்டா? யோசிச்சுப் பாருங்க, அப்பத்தான் சுரதாவின் உவமைகள் எவ்வளவு யதார்த்தமானவை என்பதும், அர்த்தம் பொதிந்தவை என்பதும் புரியும்' என்று அவர் அருமையாகப் பாடம் எடுத்த லாவகம் எங்கள் மனத்தில் அப்படியே பதிந்து விட்டது.

மெல்ல, மெல்லப் புரியத் தொடங்கியது, சிகாமணி இல்லாமல் மனோன்மணி மட்டும் பிரயோசனமில்லை என்று. சிகா–மனோ உறவில்தான் கவிதை மலர வாய்ப்புண்டாகிறது என்ற மர்ம முடிச்சு அவிழத் தொடங்கியது.

அந்த உறவை அற்புதமாகப் பிரதிபலிக்கும் இன்னொரு கவிதை எழுந்த வரலாற்றை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. அந்த வரலாற்று நாயகரும் ஔவை நடராஜன்தான்.

எங்கள் கல்லூரி நாட்களில், சிவமும் நானும் ஔவையுடன் அதிக நேரம் உடனிருப்போம். பெரும்பாலும் அப்போதெல்லாம் அவரோடு எங்கள் இருவரையும் ஒன்றாகப் பார்க்கலாம். அவர் "சங்ககாலப் பெண்பாற் புலவர்கள்" என்று முனைவர் பட்டத்துக்காக ஆய்வில் ஈடுபட்டிருந்த போது அதற்கு ஓரளவு உறுதுணையாக

இருந்த பெருமைக்கு நாங்கள் இருவரும் உரியவர்கள் ஆனோம். ஒரு சிலர் நாங்கள் ஔவையோடு சுற்றிக் கொண்டிருந்ததைக் கடுமையாக விமர்சனம் செய்யுமளவுக்கு நாங்கள் நெருக்கமாகக் காணப்பட்டோம்.

சிறிது காலத்துக்குப் பிறகு, எங்கள் படிப்பு, குடும்பம் என்ற பணிகள் காரணமாகவோ என்னவோ சிவமும், நானும் ஔவையை அடிக்கடி சந்திக்க முடியாமற் போய் விட்டது. பல மாத இடைவெளிக்குப் பிறகு ஒரு கூட்டத்தில் ஔவை மேடையில் வீற்றிருந்தார். நான் பார்வையாளனாக அரங்கில் சென்றமர்ந்தேன். அப்போது அவர் என்னைப் பார்த்துவிட்டு ஒரு துண்டுக் காகிதத்தில் ஏதோ எழுதி அனுப்பினார். பிரித்தேன், படித்தேன், நெகிழ்ந்தேன். அந்தத் துண்டுக் காகிதத்தில் நாலு வரிகள், அமர வரிகள், எழுதப் பட்டிருந்தன:

**ஊரார் அலர் உரைக்கக் கேட்டு - நீ**
**உள்ளம் வெதுப்புறலாமா**
**ஆரார் எதுசொன்ன போதும்**
**யாழா முழவோடு மோதும்"**

சற்று நேரம் சிலையாகி விட்டேன். யாழும் முழவும் மோதிக் கொள்ளலாமா? ஸ்ருதியும், லயமும் இணைந்தால்தானே சங்கீதம்! எவ்வளவு பொருத்தமான ஓர் உருவகத்தை எவ்வளவு எளிமையாகச் சொல்லி விட்டார்! அதுவரை அவர் எழுதியதாக எந்தக் கவிதையையும் அவர் எங்களிடம் படித்ததில்லை, காட்டியதில்லை. ஏதாவது கவிதை அதற்குமுன் எழுதினாரா என்றே தெரியவில்லை. அதற்குப் பிறகும் அவர் கவிதை எழுதியதாகத் தெரியவில்லை. ஒரே பாடலால் காலம் கடந்து வாழும் காக்கைப் பாடினியார், செம்புலப் பெயல்நீரார் போன்ற மிக உயர்ந்த புலவர்கள் வரிசையில் இந்த 'யாழ்முழவார்' சேர்ந்து விட்டார் என்றே தோன்றுகிறது.

சிகா–மனோ சரியான அளவில் கூடிய கவிதைக்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டு என்பதால் சொன்னேன்.

ஆனால், சிகா–மனோ உறவு போகப் போக மேலும் தெளிவுபடலாயிற்று. அப்போதுதான் முதல் பகுதியில் சொன்னேனே, சிற்றறிவு, பேரறிவு என்று, அந்த பாகுபாடும் புரியத் தொடங்கியது; சிகாமணியின் விஸ்வரூபம் கொஞ்சம் கொஞ்சமாக எனக்குத் தரிசனமாகத் தொடங்கியது.

# 10

தந்தையினும் களிகூரத் தழுவி, சிவத்தையும் என்னையும் தமிழிலக்கியத்தின்பால் ஆற்றுப்படுத்திய டாக்டர் ஔவை நடராஜன் போலவே எங்கள் இருவரிடமும் பாசத்தோடு பழகிய இன்னுமோர் இலக்கிய அன்பர், தீபம் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த நா.பார்த்தசாரதி.

1960–70 களில், ஓரளவு தமிழ் இலக்கிய ஈடுபாடும், லட்சிய தாகமும் கொண்ட இளைஞர்களிடம் நா.பா.வைப் போலத் தாக்கம் ஏற்படுத்திய எழுத்தாளர் வேறு எவரும் இருந்திருக்க முடியாது. யதார்த்தத்தின் பக்கம் ஈர்க்கப்பட்ட இளைஞர்களுக்கு ஜெயகாந்தன் என்றால், இலட்சியத்தின் பக்கம் ஈர்க்கப்பட்ட இளைஞர்களுக்கு நா.பா.! அவருடைய குறிஞ்சி மலர், பொன்விலங்கு, மணிபல்லவம் ஆகிய நாவல்களால் பாதிக்கப் படாத இளைஞர்கள் அப்போது வெகு குறைவு.

சிவமும், நானும் நா.பா.விடம் நெருக்கமாகப் பழகித் தமிழ் இலக்கியத்தின் பல நுட்பங்களை அவரிடமிருந்து தெரிந்து கொண்டோம் என்பது மறுக்க முடியாத உண்மை. பல பட்டிமன்ற மேடைகளில் அவரோடு கலந்து கொண்டு வாதாடியிருக்கிறோம்.

1971–ல் என்று நினைக்கிறேன், நா.பா. அவர்களுடன் பூனேவுக்கு, (அப்போதைய 'பூனா'வுக்கு), ஓர் இலக்கியக் கூட்டத்தில் உரையாற்ற சிவமும், நானும் சென்றிருந்தோம். பாரதி இளைஞர் சங்கத் தலைவர், பாரதி காவலர் கே.ராமமூர்த்திதான் ஏற்பாடு செய்து எங்களை அனுப்பியிருந்தார். அந்தக் கூட்டத்தில் நா.பா.அவர்கள் ஆற்றிய உரை எங்களுக்கு ஒரு பிரமிப்பை ஏற்படுத்தியதுடன், கவிதை ரசனையின் புதிய கோணம் ஒன்றைக் கற்றுத் தந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்தக் கூட்டத்தில் பாரதியின் கவிச்சொல்லாளுமை பற்றிக் குறிப்பிட்ட

நா.பா., பாரதியின் கவிச்சொற்கள் முப்பரிமாணச் சொற்கள் என்று சொல்லி விளக்கினார். 'வெள்ளிப் பனிமலை', 'சுட்டும் விழிச்சுடர்','சோலை மலரொளி', இப்படிப் பல எடுத்துக்காட்டுகளை அடுக்கி வைத்தார். மலை, பனிமலை, வெள்ளிப்பனிமலை, என்று மூன்று அடுக்குகளாகக் காட்சி விரியும் அழகை அவர் விளக்கிய விதம் இன்னும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

நா.பா.விடம் நல்ல கவிதை ரசனையும் இருந்தது, கவியூக்கமும் இருந்தது. அது என்ன கவியூக்கம்?

உரைநடையில் ஏதாவது எழுதிக் கொண்டே வரும்போது, திடீரென்று ஓர் உந்து சக்தியால் ஊக்கம் வரப் பெற்றுச் சிந்தனையின் முயற்சி இல்லாமலேயே சொற்கள் ஜிவ்வென்று சிறகடித்துப் பறக்கத் தொடங்கிவிடும். ஆங்கிலத்தில் இதை 'flight' என்றே குறிப்பிடுவார்கள்.

உரைநடையில் நான் அதிகம் எழுதியிராத போது, 1980-ல் என்று நினைக்கிறேன், சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாவதற்காக பாரதியைப் பற்றி, 'கானப் பறவை' என்ற தலைப்பில் ஓர் ஒலி-ஒளிச் சித்திரம் எழுதினேன். உரைநடையாக எழுதிக் கொண்டே வந்த போது, என்னையறியாமல் பல இடங்களில் மேற்சொன்னவாறு சொற்கள் சிறகடித்துப் பறந்ததை நான் அனுபவித்தேன். அதைப் படித்துப் பாராட்டித் தேர்வு செய்த தொலைக்காட்சி அதிகாரி, திரு எம்.எஸ்.பெருமாள் (நம்ம சுகி சிவத்தின் மூத்த சகோதரர்), தம் பரிந்துரையில் பல இடங்களைக் குறிப்பிட்டிருந்தார். அதில் ஓரிடத்தில் நான் எழுதியிருந்த ஒரு வாசகத்தை அவர் மிகவும் பாராட்டியிருந்தார். அந்த வாசகம் இதுதான்: "கவிதை வெறும் ஆற்றல் இல்லை, அதுவோர் ஆற்றாமை".

நா.பா.வின் புதினங்களில் இப்படிப்பட்ட இடங்கள் விரவியிருக்கும். "தின்பதற்காக மட்டுமன்றித் தின்னப் படுவதற்காகவே அமைந்த பற்கள்" போலப் பல உதாரணங்கள் சொல்லலாம். அதையும் தாண்டி, அவருடைய உரைநடைப் புதினத்தில் திடீரென்று செய்யுள் நடையில் ஓரிரண்டு வரிக் கவிதைகளே வந்து விழுவதும் உண்டு. "முத்துநகை பூத்த முகம்" என்ற ஈற்றடியோடு மணிபல்லவத்தில் கனஜோராக வந்து குந்தியிருக்கும் வெண்பாவைச் சொல்வேனா? இல்லை, "செல்லரித்த பழமையெல்லாம் சீர்திருத்த முன்வந்தான், புல்லரித்து மனம்வாடிப் போகின்றான் போகின்றான்" என்று பொன்விலங்கில் இடம்பெற்ற உணர்ச்சி வரிகளைச் சொல்வேனா? இல்லை, "நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்துக் குறு முறுவல் பதித்த முகம்; தரளம் மிடைந்து

ஒளி தவழக் குடைந்து இரு பவளம் பதித்த இதழ்" என்று குறிஞ்சி மலரில் சந்தம் மிடைந்து சுவை யூறிக் கலந்து மணி யாகத் தெறித்த வரி வந்த அழகைச் சொல்வேனா?

கல்கி தொடங்கிய இந்த உத்தியை நா.பா. மிக அழகாகத் தம் புதினங்களில் பயன்படுத்தியிருந்தார்; புதினம் என்ற பூங்காவில் புதுவெள்ளம் போல் பொங்கிவந்த கவிதைப் பெருக்கு, வாசகர்களைத் திக்கிமுக்காடச் செய்தது.

ஆனால், புதினங்களில் இடம்பெற்ற உன்னதக் கவிதை வரிகளைத் தொடக்கமாகக் கொண்டு அவற்றையெல்லாம் நீட்டி முழுக் கவிதைகளாக்கி அவர் ஒரு கவிதைத் தொகுப்பு வெளி யிட்டார். அந்தக் கவிதை நீட்டல்களில் ஆரம்ப வரிகளின் ஜீவன் இல்லை. அந்த உணர்ச்சி வேகம் இல்லை. வெறும் சிந்தனை முயற்சியாகவே அந்தக் கவிதைகள் இருந்தன. படித்துவிட்டுச் சலித்துக் கொண்டேன்.

அவரைச் சந்தித்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், ஒருநாள் அவர் இல்லத்திலேயே நடந்த கவியரங்கத்தில் நான் கலந்து கொண்டேன். கவிஞர்கள் சொன்ன கவிதைகளை ரசித்துக் கேட்டுவிட்டு அவர் ஒரு சிற்றுரையாற்றினாரே தவிர ஏதும் கவிதை படிக்கவில்லை. கவியரங்கம் முடிந்த பிறகு மெல்ல அவர் அருகில் சென்று 'நீங்கள் ஏன் கவிதை படிக்கவில்லை' என்று கேட்டேன். அவர் சொன்ன பதிலில் அதிர்ந்து போனேன்.

'நீதான் என் கவிதைத் தொகுப்பைப் படித்துவிட்டு வெறும் சிந்தனை முயற்சி கவிதையாகுமா என்று விமர்சனம் செய்தாயே. அது என் மனத்துக்குச் சரியென்று பட்டது. இன்ஸ்பிரேஷன் வராமல் கவிதை எழுதுவது இல்லை என்று முடிவெடுத்தேன். அதற்குப் பிறகு உள்ளூக்கமே வரவில்லை, கவிதையும் எழுதவில்லை' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். நான் எப்பொழுது அந்த விமர்சனத்தை யாரிடம் சொன்னேன், அது அவர் செவிக்கு எப்படி எட்டியது என்று இன்றுவரை ஞாபகம் வரவில்லை. ஆனால், அவருடைய பெருந்தன்மையால் வாயடைத்துப் போய் அப்போது ஒன்றும் சொல்லத் தோன்றாமல் வந்து விட்டேன். அதற்குப் பிறகு அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவே இல்லை.

என்ன சிகாமணி! கவனித்தாயா, கவிதையின் கதை எங்கே போகிறது? நீ ரொம்ப அலட்டிக் கொண்டால் கவிதை வராதுங்காணும். நான் மட்டுமா சொல்கிறேன். காலேஜ் பிரின்ஸிபலே சொல்லிவிட்டார் அப்பா.

*ஆம், வ.வே.சு. மிக அழகாகக் கவிதையிலேயே இதைச் சொல்லிவிட்டார். அந்த வரிகளை நான் வேத வாக்காகவே மதிக்கிறேன்.*

**.............................. - வெறும்**
**புத்தியைக் கொண்டு புனைகின்ற கவிதைகள்**
**பூஜைக்குச் சேர்வதில்லை - கவி**
**ஒத்திகையில் கொஞ்சம் பக்தி சேராவிடில்**
**உள்ளம் தொடுவதில்லை**

*சிகா ஏதோ சொல்ல வாயெடுத்தான். நான் குறுக்கிட்டு, 'மனோன்மணி எங்கே?' என்றேன்.*

*'என்ன ஓய், விவரம் புரியாத வைதிகமாயிருக்கிறீர், எப்பப் பார்த்தாலும் நான் வேறு, மனோன்மணி வேறு என்றே நினைக்கிறீர்! என் பெயரென்ன?' என்று கேட்டான்.*

*'சிகாமணி; புத்தி சி கா ம ணி' என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் சொல்லிவிட்டு அவனை உற்றுப் பார்த்தேன். அடாடா! ஒரே கணத்தில் என் நோக்கு விரிவு பெற்றது. கண்டறியாதன கண்டேன். ஆம், சிகாவும், மனோன்மணியும் கலந்த அர்த்தநாரியாக, மாதொருபாகனாக, சிகா–மணியாக என்னெதிரே அவன் விஸ்வரூப தரிசனம் காட்டி மறைந்தான். தரிசனத்துக்குப் பிறகு உடனே எதுவும் சொல்ல வார்த்தை வருமா?*

# 11

*பகவத் கீதை என்பது மஹாபாரதத்தின் ஒரு பகுதியாக உள்ள செய்யுட் தொகுதி. கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு செய்த உபதேசம் என்று அது கருதப்படுகிறது. 18 அத்யாயங்கள் கொண்ட நீண்ட செய்யுட் தொடரைப் போர்க்களத்தின் நடுவே நின்று சொல்லியிருக்க முடியுமா என்ற விமர்சனக் கேள்வியைப் பலர் எழுப்பியுள்ளனர்.*

*உபதேசம் என்பதன் பொருள் என்ன? கதைக்குள் உபகதைகள் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அதாவது ஒரு பெரிய வெளியில், சிறிய பகுதியாக இருக்கும் வெளி அல்லது இடம் உபதேசம். பாரத தேசத்தில் தமிழ்நாடு ஓர் உப–தேசம் என்று சொல்லலாம்.*

*எனவே உபதேசம் என்பது ஒரு சீடனை அவன் குரு தன் உள்வெளிக்குள் வரவழைத்துத் தன் அனுபவத்தில் அவனைப் பங்கேற்க வைப்பது என்று புரிந்து கொள்ளலாம். அதற்கு, முதல்கட்டமாக, குரு சீடனுக்குள் நுழைய வேண்டும்; நுழைந்து, அவனுடைய உயிர்நிலையைத் தம் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும்; அதைக் கைப்பிடித்து மெல்ல உயர்நிலைக்கு, தம் அனுபவ நிலைக்கு ஏற்ற வேண்டும்.*

*இப்போது புரிகிறதா, "காற்று வந்து கைப்பிடித்துக் கூட்டிச் செல்வது எவ்விடம்" என்ற கவிதை வரியின் பொருள்! அந்தக் காற்று குருநாதனின் ப்ராண சக்தியே! குருவின் ப்ராண சக்தியானது, அவருடைய ஸ்வாஸ கதியின் அதிர்வுகளாக மாறிச் சீடனின் ஸ்வாஸ கதியுள் நுழைவதே உபதேசத்தின் முதற்கட்டம்! வானொலி நிலையத்தில் எழுப்பப்படும் ஒலியலைகள், வெட்டவெளியில் பரவியிருக்கும் மின்காந்த அலைகளின் அதிர்வுகளாக மாறி, மீண்டும் வானொலிப் பெட்டியில் ஒலியலைகளாக மாறி ஒலிக்கின்ற நிகழ்ச்சி அன்றாடம் நடப்பதுதானே?*

*அப்படியொரு நிலையில், 1988–ல் என்று நினைக்கிறேன், நான் இருந்த போது, என்னுள் இருந்து ஒருநூறு செய்யுள்கள் ஊற்றெடுத்து வந்தன. அவை, வடிவிலும் சரி, பொருளிலும் சரி, என் மற்ற கவிதைகள் போலன்றி வேறுபட்டிருந்தன. திருமூலரின் திருமந்திரம் சாயலில் இருந்ததால் அவற்றை என் கவிதைத் தொகுப்பில் "குரு மந்திரம்" என்ற தலைப்பில் சேர்த்தேன். அவற்றில் 'உபதேசம்' என்ற தலைப்பில் உள்ள ஐந்து செய்யுள்களைப் பொருத்தம் கருதி இங்கே தருகிறேன்:*

அமைதி கொடுத்துப்பே ரானந்தம் தந்து
சுமையகல வைத்துச் சுழுமுனையுள் செல்லும்
சமநிலையும் தந்துயிர் சாதிக்கப் பாதை
அமைத்துத் தருவ(து) உபதேச மாமே

தன்னுள் விரிந்த தனிவெளியில் தத்துவமாய்
இன்னொன்றை வைத்திழைத்துத் தானும் அதுவாகி
முன்சென்(று) உயிர்த்துயிர் மூலத்தை ஆட்கொள்ளும்
உண்மைப் பிணைப்பே உபதேச மாமே

வெளியே இருந்துவிளக் கேற்றிவைக் காமல்
ஒளியாகி உட்புகுந்(து) ஊடுருவிச் சென்று
வெளியையே உட்கொள்ளும் வித்தை அறிவித்(து)
ஒளியாக்கும் உண்மை உபதேச மாமே

மூச்சுக்கு மூச்சு முறையாகி உள்ளத்தின்
பேச்சுக்குப் பேச்சு பதிலாகி உள்விதியின்
ஆச்சரிய மாகி அறமாகி அத்தனைக்கும்
சாட்சி தருவது தானுப தேசமே

ஓதி உணர்விப்ப(து) ஏதுமில்லை உள்ளுக்குள்
ஊதி உலைவைத்(து) ஒருகவளம் சோறாக்கிப்
பாதிநீ பாதிநான் என்று பகிர்ந்துண்ணும்
பேதமில் லாதது ப்ரம்மோப தேசமே

*எனவே, பகவத் கீதையென்பது போருக்கு நடுவே வார்த்தைகளால் செய்யப்பட்ட வாய் உபதேசம் இல்லை; வாயு சம்பந்தத்தால் வாய்த்த உபதேசம்; மேலே சொல்லப்பட்டது போல், கண்ணபிரான் அர்ஜுனனுக்கு ஒருகணத்தில் செய்த ப்ரம்மோபதேசம். அதற்குக் காலச் செலவு தேவையில்லை. ஒரு கணம் போதும்.*

*பாரதி, தன் வாழ்நாளிலேயே வெளியிட்ட ஒரு கவிதைத் தொகுப்பைத் தன் குருவுக்குக் காணிக்கையாக ஸமர்ப்பணம் செய்திருந்தான். ஸ்வாமி விவேகானந்தரின் சீடர்களில் ஒருவராக இருந்த நிவேதிதா அம்மையார் என்ற அயர்லாந்த் நாட்டுப் பெண்மணிதான் அவனுடைய குருமணி. மிகச்சுருக்கமாக பாரதி தன் காணிக்கையைச் செலுத்துகிறான்:*

*"எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும், சொல்லாமல் உணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை ஸமர்ப்பிக்கின்றேன்."*

*ஒரு கடிகையில் நிகழ்ந்து விடக் கூடியதே உபதேசம். அது எங்கு வேண்டுமானாலும் நிகழலாம். எப்படி வேண்டுமானாலும் நிகழலாம். யார்மூலமாக வேண்டுமானாலும் நிகழலாம். யார்மூலமாக உபதேசம் கிடைத்தாலும், அதை அந்த வடிவில் வந்து தந்தது சாட்சாத் பரப்ரும்மமே. நமக்கெல்லாம் நன்கு தெரிந்த ஒரு ஸ்லோகம் இதைத்தான் சொல்கிறது.*

**"குரு ப்ரும்மா குரூர் விஷ்ணுஹு குரு தேவோ மஹேஸ்வரா குரு சாக்ஷாத் பரப்ரும்ம தஸ்மைஸ்ரீ குருவே நமஹ".**

*உபதேசம் ஒரு காட்சியாக இருக்கலாம்; ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விவேகானந்தருக்குத் தந்தது போல் ஒரு தொடுகையாக (ஸ்பரிஸமாக) இருக்கலாம்; "உலகெலாம்" என்று இறைவனே அடியெடுத்துக் கொடுத்ததும் சேக்கிழார் பெருமானின் உள்ளத் திலிருந்து திருத்தொண்டர்கள் வரலாறு கவிதைகளாக ஊற்றெடுத்து வந்ததே, அப்படியொரு சொல்லாகவும் இருக்கலாம். பாரதிக்கு நிவேதிதா தேவி செய்தது போல், ஏன், சனகாதி முனிவர்களுக்குச் சிவபெருமான் செய்ததுபோல், சொல்லாமல் உணர்த்தும் உபதேசமாகவும் இருக்கலாம்.*

*அர்ஜுனனுக்குக் கண்ணன் காட்டியது போல எனக்குக் காட்டப்பட்ட சிகா–மணி விஸ்வரூபக் காட்சி அப்படியொரு உபதேசம்தானோ!*

*பாலகுருவாக, கந்தவேள், சிவபெருமானுக்குக் காதில் உபதேச மந்திரத்தை ஓதினாரா, ஊதினாரா? பகர்ந்தார் என்று சொல்லிவிட்டார் அருணகிரியார்.*

*"சிவனார் மனம்குளிர உபதேச மந்த்ரம் இரு செவிமீதிலும் பகர்செய் குருநாதா" என்பது அருணகிரிநாதர் வாக்கு. இவர் பகர்ந்தார், அவர் மனம் குளிர்ந்தார் என்று சொல்லிவிட்டார். சரிதானே! சிவ பெருமானுடைய அகத்துக்குள் சென்று அவருடைய*

*ப்ராண சக்தியை வேறொரு குரு வந்து வழிநடத்திச் செல்ல வேண்டிய அவசியம் உண்டோ? அதனால் செவிமீது என்றார், பகர்ந்தார் என்றார். மனம் குளிர்ந்தார் என்றும் சொன்னார். தெளிவின் சிகரமான சிவபெருமானின் மனம் தெளியச் சொன்ன மந்திரமா அது? இல்லை, மனம் குளிரச் சொன்ன மந்திரம்.*

*'பகர்செய்' என்பதற்கு இரட்டை வினைத்தொகை என்று புது இலக்கணக் குறிப்புத் தரலாமோ?*

*பாரதி சொல்கிறானே: "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்". என்ன பொருள்?*

*அப்பப்பா, கொஞ்சம் விட்டால் சிகாமணி கேள்விக் கணைகள் தொடுத்துக் கொண்டே இருப்பான். பதில் உடனே கிடைக்குமா? பொறுத்திருக்க வேண்டும்!*

# 12

*'நந்திவர்மன்' நாடகம். அதில் நந்திவர்ம பல்லவனாக நான் நடிக்கிறேன். நந்திவர்மன் சகோதரன் காடவர்கோன் என்ற புலவனாக நண்பன் சுகி சிவம் நடிக்கிறான். நாடகம் அரங்கேறும் இடம், சென்னை, புனித தோமையர் தேவாலயத்துக்கு எதிரில் உள்ள சாந்தோம் உயர்நிலைப் பள்ளி வளாகம். நாடகத்துக்குத் தலைமை, அப்போதுதான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அறிஞர் அண்ணா. 1968–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி என்று நினைக்கிறேன்.*

*நாடக உருவாக்கம் எங்கள் தமிழ் ஆசிரியர் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன். மிகுந்த எதிர்பார்ப்போடு பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் கூட்டம். பின்னாளில், 'ஆயிரம் நிலவே வா' என்று எம்.ஜி,ஆரை அழைத்துத் திரைப்படத் துறையில் பிரபல பாடலாசிரியராகப் போகும் புலவர் புலமைப் பித்தன் அப்பொழுது சாந்தோம் உயர்நிலைப் பள்ளியின் தமிழ்த்துறையில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அண்ணாவின் தீவிரத் தொண்டராக அரசியலிலில் கால்பதித்திருந்த அவர் நந்திவர்மன் நாடகத்தில் தண்டமிழ்க் கொண்டல் எழுதியிருந்த அழகுதமிழ், அடுக்குமொழி வசனங்களுக்கெல்லாம் கைத்தட்டலோடு, விசிலும் அடித்துக் கொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு ஆர்வத் துடிப்பு மேலோங்க எல்லாரும் காத்திருக்கின்றனர், அண்ணாவின் வருகைக்கு.*

*சிவமும், நானும் பொழிந்து தள்ளும் அடுக்குமொழி வசனங்களுக்கெல்லாம் பலத்த கரகோஷம் காதைப் பிளக்க, அப்போது மேடையில் அவன் வருகிறான். அவன் யார்? என் இனிய நண்பன்; அன்றைய தமிழ்நாட்டு அமைச்சர்கள் பலர்*

தமிழில் தேர்ச்சி பெறக் காரணமாயிருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் அ.சிதம்பரநாதன் செட்டியாரின் சகோதரி மைந்தன்; பின்னாளில், கவிஞர் வசந்தப்பி ரியன் என்று புகழ்பெற்றுச் சமீபத்தில், அகால மரணத்தால் அமரனாகிவிட்ட அன்றைய அமிர்தலிங்கம். அவன் நந்திவர்ம பல்லவனின் அமைச்சராக அந்த நாடகத்தில் நடிக்கிறான்.

நாடகக் கதை நிறைய பேருக்குத் தெரிந்திருக்கும். நந்திவர்மனை வீழ்த்தி விட்டுத் தான் நாடாள வேண்டும் என்று அவன் தம்பி காடவர்கோன் திட்டமிடுகிறான். நந்திவர்மனோ மாவீரன். மன்னிக்க வேண்டும், இன்றுபோல் அன்று அந்தச்சொல் ஒரு கெட்ட வார்த்தையில்லை!. மாவீரன் ஆனாலும் அவன் தமிழ்ப்பித்தன். எனவே அவனைப் போர்க்களத்தில் வீழ்த்துவதைக் காட்டிலும் மிக எளிதாகத் தன் புலமையால் வீழ்த்திவிட எண்ணிக் காடவர்கோன் தன் அண்ணா நந்திவர்மன் மீது அறச்சொற்கள் விரவிவரும் வண்ணம் பாடல்கள் புனைகிறான். அப்பாடல்களைப் பாடக் கேட்டால் நந்திவர்மன் தீப்பற்றிக் கொண்டு கருகிப் போய்விடுவான். இதுதான் அவன் திட்டம். பாடல்கள் தயார், ஆனால், கடைசி நேரத்தில் சகோதர பாசம் மேலிட்டுத் தடுக்க, அந்தப் பாடலைப் பாட அவன் மறுக்கிறான். அவன் பாடத் தான் கேட்டால் எரிந்து விடுவோம் என்று தெரிந்த பின்னும், தமிழார்வத்தால் அவன் பாடியே தீர வேண்டும் என்று நந்திவர்மன் தூண்டுகிறான். காடவன் தொடர்ந்து மறுக்க, அவன் பாடத்தான் வேண்டும் என்ற அரச கட்டளையோடு, அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்து “காடவா” என்று நந்திவர்மன், நான் தான், கர்ஜிக்க வேண்டும், உடனே வேறு வழியின்றித் தழுதழுத்த குரலில், “பாடவா” என்று காடவனாக நடிக்கும் சிவம் கேட்டுவிட்டு அறம் பாட வேண்டும். இப்படித்தான் காட்சியமைக்கப் பட்டிருந்தது.

உணர்ச்சி வேகத்தில், ‘காடவா’ என்ற முழக்கத்தோடு நான் சிவத்தின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை, நிஜமாகவே, பலமான அறை, பளார் என்று அடித்துவிட, நிஜமாகவே வலிபொறுக்க முடியாமல் சிவம், ‘பாடவா’ என்று குரல் தழுதழுக்கச் சொன்னதும் எல்லாரும் பலத்த கரகோஷம் எழுப்ப, அந்தச் சத்தம் ஓயவே சற்று நேரமாகியது.

எப்படியும் தானும் கைத்தட்டல் வாங்க வேண்டும் என்ற ஆவலில், நாடக எழுத்துருவில் இல்லாத, தண்டமிழ்க் கொண்டல் எழுதாத ஒரு சுயவசனத்தைச் சொல்லிக் கைத்தட்டலும் வாங்கி விடுகிறான், அமைச்சனாக நடிக்கும் நண்பன் அமிர்தலிங்கம். எப்படி? அது என்ன வசனம்? இப்போது காட்சியைப் பார்ப்போம்.

*காடவன் அறம்பாடுகிறான்:*

**வானுறு மதியை அடைந்ததுன் வதனம்**
**வையகம் அடைந்ததுன் கீர்த்தி**
**கானுறு புலியை அடைந்ததுன் வீரம்**
**கற்பகம் அடைந்தவுன் கரங்கள்**
**தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்**
**செந்தழல் புகுந்ததுன் மேனி**
**யானுமென் கவியும் எவ்விடம் புகுவேம்**
**நந்தியே எந்தயா பரனே**

*இப்படித் தான் தண்டமிழ்க் கொண்டல் நந்திக் கலம்பகப் பாடலை எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார். பல பதிப்புகளில் வெவ்வேறு வடிவில் உள்ளது இப்பாடல். ஆனால் மேற்சொன்ன பாடமே மற்றவற்றைக் காட்டிலும் பொருத்தமாகவும், சிறப்பாகவும் உள்ளது என்பது என் பணிவான கருத்து.*

*அறச்சொற்கள் மிகுந்த பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் நந்திவர்மனாகிய என்னைச் சுற்றி எரிதழல் மூண்டெழ, நான் அத்தழலில் உயிரிழக்க, அப்போது அமைசச்சர், அதுதான் நம் அமிர்தலிங்கம் தன் சுயவசனத்தைப் பேசிக் கைத்தட்டல் வாங்குகிறான். அந்த சுயவசனம் இதுதான்: “ஆண்டாண்டுக் காலம் அழுது புரண்டாலும் மாண்ட அண்ணா மீண்டு வருவாரா” என்று நந்திவர்மனின் தம்பி காடவனிடம் அமைச்சராக நின்று அமிர்தலிங்கம் பேசுகிறான்.*

*காட்சி முடிந்து திரை விழுகிறது. அமிர்தலிங்கத்தின் கன்னத்தில் பலமாக ஓர் அறை விழுகிறது. அடிப்பவர் எங்கள் ஆசான், நாடக ஆசிரியர் தண்டமிழ்க் கொண்டல். “ஏற்கனவே அறம் பாடும் நாடகத்தில் இப்படி நீவேறு சொந்தச் சரக்காக அறம்பாடி விட்டாயே! மாண்ட அண்ணா என்று சொல்லி விட்டாயே!” என்று அவர் குமுறுகிறார். திரைவிழும் முன் ஓர் அறை விழுந்தது; திரை விழுந்ததும் ஓர் அறை விழுந்தது. முதலில் சிவத்துக்கு, அடுத்தது அமிர்தலிங்கத்துக்கு. மொத்தத்தில் அன்றைய நாடகம் இரண்டு அறைகளோடு நிறைவுபெற்றது.*

*அடுத்த ஆண்டே, அதே மாதம் அதே நாளில் அறிஞர் அண்ணா மாண்டார் என்ற செய்தி இடிபோல் செவிப்பறையில் பலத்த அறையாக விழும் என்று அப்பொழுது யார் நினைத்திருக்க முடியும்?*

*என்ன சிகா, இப்பொழுது புரிந்து கொண்டாயா, சொல்லின் வலிமையை. கவிஞன் அழைத்தால் அமாவாசையன்றும் நிலா*

*வரும். இசைக்கவி ரமணனின் அருட்குறளில் வருவது போல், தீயென்றால் காடெரியும், தேன் என்றால் பூ மகிழும். அதுதானப்பா வாய்நின்ற பேரருள் வாக்கு!*

*சிகா முணுமுணுக்கிறான்: "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்!"*

*முணுமுணுக்காதே சிகாமணி! மந்திரங்கள் முணுமுணுப்பதற்கல்ல. முழங்குவதற்கு.*

நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணுமு ணென்று சொல்லும் மந்த்ரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ

*சிவவாக்கியர் சொன்ன சட்டிக்கும், சட்டுவத்துக்கும் தெரியுமோ என்னமோ, எங்கள் வீட்டுச் சட்டுவத்துக்குத் தெரியும். நேற்றுத் தேங்காய் எண்ணையில் அவியலுக்குத் தாளித்த வாசனை இன்று உருளைக்கிழங்குக் கறியிலும் தொற்றிக் கொண்டிருக்கிறதே! சட்டுவத்தை எப்படித் தேய்த்தாலும் மூன்று நாட்களுக்கு அந்த வாசனை இருக்கிறதே! பூர்வ ஜன்ம வாசனையெல்லாம் அவ்வளவு சீக்கிரம் போகாது சாமி! சட்டுவமோ, சத்துவமோ! ராஜஸமோ, பூண்டு ரஸமோ! எதுவானால் என்ன?*

# 13

நான் மூன்று முறை கவிஞரை நெருக்கத்தில் சந்தித்திருக்கிறேன். எந்தக் கவிஞரை என்று கேட்கக் கூடாது. பாரதி என்றதும் எந்த பாரதி என்ற கேள்வி  எழாதோ, எழக் கூடாதோ, அப்படியே கவிஞர் என்றால் எந்தக் கவிஞர் என்ற கேள்வியெழ வாய்ப்பே இல்லை. கவிஞர் என்றால் கண்ணதாசனே. அவருடன் நான் நெருங்கிப் பழகாத போதும் ஏனோ அவரிடம் எனக்கு ஓர் ஈர்ப்பு; அதைவிட, அவரை நினைக்கும் போதெல்லாம் ஒரு பாச உணர்வு என் நெஞ்சில் பொங்கியெழும்.

முதல்முறை அவரை நெருக்கத்தில் சந்தித்தது சென்னை, லயோலா கல்லூரியில் நடந்த ஒரு கவிதைப் போட்டியில். 1969–ஆம் ஆண்டு, நான் விவேகானந்தா கல்லூரியில், புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரி மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் என் கல்லூரியின் சார்பில் கலந்து கொள்ள நானும் இன்னொரு மாணவரும் தேர்வு செய்யப்பட்டிருந்தோம். யாரந்த இன்னொரு மாணவர் என்று எனக்கு அப்பொழுது தெரியாது. அந்தப் போட்டியில் கலந்து கொள்ள நான் லயோலா கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்குதான் கவிஞரை முதன் முதலில் சந்தித்தேன். அவர்தான் கவிதைப் போட்டிக்கு நடுவர்.

அந்த இடத்தில் அப்போது இரண்டு பெரிய கவிஞர்களைச் சந்திப்பேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கவிஞர் ஒரு மாக்கவிஞர்; இன்னொருவர்? அந்த இன்னொருவரைச் சந்தித்து வெகுநாட்கள் வரையிலும் அந்த இன்னொருவரை ஒரு சிறந்த கவிஞர் என்று நான் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. அந்த இன்னொருவர்தான் விவேகானந்தா கல்லூரி சார்பில் அந்தக் கவிதைப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்த இன்னொரு

*மாணவர். அவர் அப்போது இளங்கலை வகுப்பு, பி.எஸ்.சி தாவரவியல், மூன்றாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன்.*

*நானும் அவரும் முதன்முதலாக லயோலா கல்லூரியில், அதுவும் அங்கிருந்த ஓய்வறையில் சந்தித்துக் கொண்ட போதுதான் ஒருவரை ஒருவர் இன்னார் என்று தெரிந்து கொண்டோம். அன்று கவிதைப் போட்டியின் தலைப்பு 'அழியா அழகு'. பல கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்ட அந்தப் போட்டியில் எந்தப் பரிசும் நாங்கள் இருவருமே பெறவில்லை. ஆனால், என் கவிதையிடையே தெறித்த சில வரிகளை, அதுவும் குறிப்பாகக் 'கலையும் கலையும்" என்றும் "மறையும் மறையும்" என்றும் முடியும் வரிகளைக் கவிஞர் ரசித்துக் கேட்டார் என்ற ஒரு பேறே போதுமென்றாலும், என் சக மாணவராய் வந்திருந்த அந்த இன்னொருவரைச் சந்தித்த பெரும் வாய்ப்புக்கு வேறெந்தப் பரிசுகளும் ஈடாகாது.*

*அந்த இன்னொருவரை அதற்குப் பிறகுச் சில ஆண்டுகள் சந்திக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மீண்டும், 1970–களில் நாங்கள் சந்தித்துக் கொண்டதும், என்னுள் இயல்பாக இருந்த இசைவேட்கைக்குத் தூண்டுகோலாக அவருடைய பாடல்கள் அமைந்ததும் ஒரு தனி வரலாறு. அவர், ரமணன், நான் ஆகிய நாங்கள் மூவரும் இன்றைய கவிதையுலகின் கவிமூவர் என்று போற்றப் படுவோமோ என்று கூட நான் நினைத்துப் பார்த்திருக்கிறேன். கர்வம் யாரை விட்டது?*

**இமை வாசலின் ஓரத்திலே - ஏனோ**
**முத்துக்கள் பனிக்கின்றன - அவை**
**வந்ததும் பூத்ததும் வீழ்ந்ததும் பின்னிழை**
**நீர்க்கரை ஆனதும் யார்புகல்வார்**

*இப்படித்தான் ஒருநாள் அமிர்தவர்ஷினி ராகத்தில் அவர் பாடினார். அப்போது அவர் ஸ்கூட்டர் ஓட்டிக் கொண்டிருந்தார். நான் பின்னால் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தேன். இடம், லஸ் அமிர்தாஞ்சன் எதிரில் விவேகானந்தா கல்லூரி போகும் சாலையில், இசையமைப்பாளர் திரு.ஆர்.சுதர்சனம் அவர்கள் வீட்டுக்கு அருகில். அப்போது ஒரு பொறிதட்டியது. அவர் ஏதோ சாதரணமான கவிஞர் இல்லை. நிச்சயம் ஒரு மிகப்பெரிய கவிஞர் என்று எனக்குள் ஒரு பட்சி சொன்னது.*

*நாளாக நாளாக எங்கள் கவிதை நட்புச் சுடர் விட்டு வளர்ந்தது. அவர், ஆம், விவேகானந்தா கல்லூரியில் என் சக மாணவர், பின்னாளில் அதே விவேகானந்தா கல்லூரியின் முதல்வராக நற்பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் தாவரயியல்*

பேராசிரியர், அவரே என் கவிதையார்வம் சரியான தடத்தில் செல்ல உதவ இருப்பவர்களில் ஒருவர் என்று அன்று அவரை அடையாளம் கண்டு கொண்டேன். அவரே வ.வே.சு. என்றும் வி.வி.எஸ். என்றும் நான் அழைக்கும் இனிய நண்பர். ஸ்கூட்டர் தேரில் அர்ஜுனன் போல் நான்...! இசையின் நெளிவு, சுளிவுகளை எனக்குப் புரியவைக்கும் கீதோபதேசக் கண்ணன் போல் ஸ்கூட்டர் ஓட்டும் வ.வே.சு.

மறுபடியும் கவிஞரிடமே வருவோம்.

கவிஞரை நான் இரண்டாவது முறை சந்தித்தது விவேகானந்தா கல்லூரியிலே. 1970–ஆம் ஆண்டு, விவேகானந்தா கல்லூரியில், கவிதைப் போட்டிக்கு அவர் நடுவராக வந்திருந்தார். நானும் போட்டியில் கலந்து கொண்டேன். போட்டித் தலைப்பு 'வாய்மையே வெல்லும்'. முதலில், அவர் கவிதையாகவே பேசும் போது சொன்னார்: 'நான் எதையும் மறைப்பதில்லை, என் குடிப்பழக்கம் உட்பட. குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக் குடிக்கின்றேன். அதனால் நான் வாய்மை தவறாதவன். வாய்மையே வெல்லும் என்ற தலைப்பில் நடக்கும் இந்தக் கவியரங்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதியுள்ளவன்'. இப்படியாக அவருடைய முன்னுரை அமைந்தது.

அன்று இளமைக்கே உள்ள துடிப்போடும், குறும்போடும் கவிதை படித்தேன்; மன்னிக்கவும், இப்பவும் உண்டுங்க. நான் எப்பவும் இளைஞன் தானுங்க. (அடாடா, இந்தப் பல்லவி நல்லா இருக்கே!).

நான் என் கவிதை படிக்கும் போது சொன்னேன்:

**குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக்**
**குடிப்பதுதான் வாய்மையெனச் சொல்லி விட்டார்**
**குடியாலே குழறுகிற நாவில் உண்மை**
**குடியிருக்க முடியாது மறந்து விட்டார்**
**பிடிவாதம் செய்யாமல் விடச்சொல் கின்றேன்**
**பிழைதிருத்த வரவில்லை விண்ணப் பம்தான்**

இப்படிப் படித்த பிறகு நமக்கெங்கே பரிசு தரப் போகிறார் என்று கவிதைப் போட்டி முடியும் வரைக்கும் காத்திருக்காமல் நான் வீட்டுக்குச் சென்று விட்டேன். அப்போது என் வீடு கல்லூரிக்குப் பக்கத்தில், மயிலை பலாத்தோப்பில் இருந்தது. இரவு 9 மணிக்கு என் வீட்டுக் கதவை யாரோ தட்டுகிறார்கள். திறக்கிறேன். என்ன ஆச்சரியம், எங்கள் கல்லூரி மாணவர் பேரவையின் தலைவர், ராஜகோபாலும், சில நண்பர்களும் என் கையைப் பற்றி இழுத்துக்

குலுக்கி “உனக்குத்தான் கவிஞர் முதல் பரிசு அறிவித்தார், ஏன் வந்து விட்டாய்” என்றதும் அசந்து போய்விட்டேன். என்ன பெருந்தன்மை. கவிஞர் முதலில் ஒரு மஹா ரசிகர் என்பதைப் புரிந்து கொண்டேன்.

கவிஞருடன் மூன்றாவது சந்திப்புப் பற்றி அடுத்த பகுதியில் சொல்கிறேன்.

# 14

கவிஞருடன் மூன்றாவது சந்திப்பு நிகழ்ந்தது 1972 இறுதியிலோ, 1973 தொடக்கத்திலோ என்று நினைக்கிறேன்.

நான் பிறந்ததிலிருந்தே என்னையும், என் மூத்த சகோதரி நந்தினியையும் என் அத்தையின் கணவர் ஆர்.கல்யாணராமனும், அவருடைய இரு மனைவியரும் வளர்த்து வந்தனர். கல்யாணராமன் திரைப்படத் தயாரிப்பாளர். சகோதரி பத்மா சுப்ரமணியம் அவர்களின் தந்தையார் கே.சுப்ரமணிய அய்யருடைய குருகுல வாசத்தில் பயின்ற திரைப்படத் தயாரிப்பாளர் அவர்.

1940–களில் திரைப்படத் துறையின் முன்னணி விநியோகஸ்தராகத் திருச்சியில் கல்யாணராமன் தம்மை நிறுவிக் கொண்டார். பிறகு, 1953–ல் நான் பிறந்த பிறகு தம் குடும்பத்தோடு சென்னைக்குக் குடிபெயர்ந்து வந்து மொழிமாற்றுத் துறையில், அதாவது வேறு மொழிப்படங்களைத் தமிழில் டப்பிங் செய்து வெளியிட்டு வெற்றி கண்டார். முதன்முதலாக, பம்பாய் (அதன் பூர்வாஸ்ரமப் பெயர்) ஹோமி வாடியாவின் ஹிந்திப் படமான, மாயா ஜாலங்கள் நிறைந்த ஹாதிம்தாய் என்ற படத்தைத் தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிட்டு நல்ல பணம் சம்பாதித்தார். அதற்கு முன் தமிழில் ஏதாவது மொழிமாற்றுப் படங்கள் வந்திருந்தனவா என்று ராண்டார்கையிடம் தான் கேட்க வேண்டும். அடுத்து ஒரு கன்னடப் படம். சரோஜாதேவி அம்மையார், ஹொன்னப்ப பாகவதர் நடித்த ‘மஹாகவி காளிதாஸ்’. அதைத்தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிட்டார். தெலுங்கில் என்.டி.ராமராவ், அஞ்சலிதேவி நடித்த வெற்றிப் படமான ரேசுகாவை மொழிமாற்றம் செய்து, “நாட்டியதாரா” என்ற பெயரில் வெளியிட்டார். எம்.ஜி.ஆர்., சிவாஜி நடித்த பெரிய படங்கள் வெளியான அதே நாளில் திரையிட்டார். அதன் வசனம்

முழுவதையும் திரு.ஆரூர்தாஸ் தான் எங்கள் அலுவலகத்திலேயே தங்கியிருந்து செய்து கொடுத்தார். பலத்த போட்டிகளுக்கு நடுவே அந்தப் படம் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றது.

இந்தச் சமயத்தில் கல்யாணராமன், [அவரை மாமா என்றுதான் நான் அழைப்பேன்], அன்றைய பிரபல திரைப்படப் பாடலாசிரியர் தஞ்சை ராமையா தாஸ் அவர்களோடு நெருங்கிப் பழகி வந்தார். மாமாவுக்குத் தமிழில் தேர்ச்சி இல்லாவிட்டாலும் எப்படியோ கவிஞர்களிடம் மிகுந்த ஈடுபாடு இருந்தது. அதனால்தான் நான் சென்னை கோஷா ஆஸ்பத்திரியில் 13–01–1953–ல் பிறந்த செய்தி திருச்சியிலிருந்த அவருக்கு மறுநாள் கிடைத்ததும், அன்று சூரிய வழிபாட்டு நாள் என்பதால் எனக்கு ‘ரவி’ என்று அவர்தான் பெயர் சூட்டினார். (மஹாகவி காளிதாஸ் டப்பிங் படம் வெளியிட்ட போது பிறந்த என் தம்பிக்குக் காளிதாஸ் என்று பெயர் சூட்டியவரும் அவரே). எனக்கு ரவி என்று அவர் பெயர் சூட்டிவிட்டுச் சொன்னாராம்: “பையன் ரவீந்திரநாத் தாகூரைப் போல் பெரிய கவியாக வருவான்”. இந்தக் கதையை எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே என் அத்தைகள் ஸ்வர்ணாம்பாளும், அலங்காரவல்லி என்ற சரஸ்வதியும் சொல்லிச் சொல்லி என்னை வளர்த்த காரணத்தினாலோ என்னவோ நான் கவிதைப் பைத்தியமாக வளர்ந்தேன். மேலும், 2000–ஆம் ஆண்டில் என் முதல் கவிதை நூல், “உன்னோடு நான்” முழுக்கப் படித்துவிட்டு, இன்று நம்மிடையே வாழும் ரசிகமணியாக இருக்கும் பாரதி சுராஜ் அவர்கள் அந்தக் கவிதை நூலை “இன்னொரு கீதாஞ்சலி” என்று எழுதிப் பாராட்டிய பேறு பெற்றேன். யார் கண்டார்கள், கவிதைக்கான நொபெல் பரிசு காத்திருக்கிறதோ என்னவோ! வரட்டுமே!

கவிஞரை மூன்றாவது முறை சந்தித்த கதைக்கு வாப்பா என்று நீங்கள் எல்லாரும் ஒருமனதாக என் மனத்துக்குள் முணுமுணுக்கும் பேரிரைச்சல் கேட்கிறது. கொஞ்சம் பொறுத்திருங்கள்.

திருச்சியில் என் சகோதரி பெயரில் ‘நந்தினி பிக்சர்ஸ்’, நான் பிறந்த பிறகு ‘ரவி பிலிம்ஸ்’ ஆகிய திரைப்பட விநியோக நிறுவனங்களை நிறுவிப் பெரும் வெற்றியடைந்த மாமா, நான் பிறந்த மூன்றாண்டுகளில் சென்னைக்குக் குடியேறி டப்பிங் படங்கள் எடுத்து வெற்றி கண்ட செய்தியைச் சொல்லி விட்டேன். சொந்தமாகப் படம் தயாரிக்க நினைத்தார் மாமா. தம் நண்பர் தஞ்சை என்.ராமையாதாஸ் பெயரின் முதலெழுத்துகளைக் கொண்டே ‘டி.என்.ஆர் புரொடக்ஷன்ஸ்’ என்ற நிறுவனம் தொடங்கி, முதல் படமாக ‘லலிதாங்கி’ என்ற திரைப்படத்தை எடுக்கத் திட்டமிட்டார். அவருடைய நெருங்கிய நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடன் பானுமதி அம்மையார், ராஜசுலோசனா அம்மையார் ஆகியோர் நடிக்கப் படம் வேகமாக வளரத் தொடங்கியது. பாதிப்

படம் தயாரித்து முடிந்து விட்டிருந்த கட்டத்தில், அரசனான கதாநாயகன், துறவறம் பூண்டு மெய்ஞான மார்க்கத்தில் ஈடுபடுவதாகக் கதை அமைந்திருந்ததால், நடராஜர் சிலைக்கு முன் கதாநாயகன் எம்.ஜி.ஆர் பாட வேண்டும் என்ற நிலை உருவானது. அப்போது கடவுள் மறுப்பு இயக்கத்தில் தீவிரமாக, அரசியல் ரீதியாக எம்.ஜி.ஆர் ஈடுபட்டிருந்தார். அவருக்காகவே ராமையாதாஸ் அருமையான பல்லவி எழுதியிருந்தார்.

"ஆண்டவனே இல்லையே!"

இந்தப் பல்லவிக்குத் தம்பிகள் எப்படி விசில் அடிப்பார்கள்! ஆனால், விசில் அடிக்கப் போகும் தம்பிகளுக்குத் தலையில் அடிப்பது போல் அடுத்த அடி எழுதியிருந்தார்.

**ஆண்டவனே இல்லையே - தில்லைத்**
**தாண்டவனே உன்போல் தாரணி மீதினிலே**
**ஆண்டவனே இல்லையே**

எம்.ஜி.ஆர் நடிக்கத் தயங்கினார். தம் அரசியல் வாழ்க்கைக்கு இந்தக் காட்சி குறுக்கீடாக அமையும் என்று அவர் கருதினார். பெரும் பொருட்செலவில் செட் போடப்பட்டு சில நாட்கள் ஆகியும் எம்.ஜி.ஆர் ஒப்புக் கொள்ளவில்லை. 'தில்லைத் தாண்டவனே' என்பதற்கு பதில் 'உதய சூரியனே' என்று பாடலாமே என்று சமரசம் பேசினாராம் எம்.ஜி.ஆர். மாமா தீவிர பக்தர். சமரசத்தை நிராகரித்தார். கவியின் வார்த்தைகளை மாற்ற நமக்கு உரிமையில்லை என்று எம்.ஜி.ஆரிடம் சொல்லி விட்டு அடுத்த நாளே நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வைத்து அந்தப் பாடல் காட்சியைப் படமாக்கி முதலில் இருந்து எம்.ஜி.ஆர் நடித்த காட்சிகளை நீக்கி விட்டு மீண்டும் சிவாஜியை வைத்து 'ராணி லலிதாங்கி' என்று மாற்றிப் படமாக்கி வெளியிட்டார். அவர் துணிச்சலைப் பின்னாளில் எம்.ஜி.ஆரே பாராட்டினார் என்பது வேறு கதை.

கொள்கைக்காக மாமா பலத்த நஷ்டத்தை ஏற்றுக் கொண்டார். அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர்–பானுமதி என்றே படங்கள் வந்து கொண்டிருந்த நிலையிலும், துணிந்து சிவாஜியுடன் நடித்துக் கொடுத்ததால், பானுமதி அம்மையாருக்கு நாடோடி மன்னன் படத்தில் இருந்து பாதியில் வெளியேற வேண்டியதாயிற்று. மாமாவால் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு, மாமாவின் ஆதரவிலேயே வசித்து வந்து, அவர் மூலம் கே.சுப்பிரமணியம் தயாரித்து வந்த 'கச்ச தேவயானை' படத்தில் நடித்து வந்த சரோஜாதேவி அம்மையாருக்கு நாடோடி மன்னனில் நுழைய வாய்ப்புக் கிட்டியது.

ராணி லலிதாங்கி நஷ்டத்தால் பாதிக்கப்பட்ட மாமா, ரஞ்சனையும், சந்தியா அம்மையாரையும் வைத்து 'மின்னல் வீரன்' என்ற படம் எடுத்தார். தலைப்புச் செய்தி, நான் அதில் குட்டி ரஞ்சனாக நடித்தேன். அதுவும் வியாபார ரீதியில் நஷ்டம் ஏற்படுத்தியது. இந்த நஷ்டங்களுக்கெல்லாம் பிறகு, 1970–ஆம் ஆண்டு, மாமா மீண்டும் படத்தயாரிப்பில் ஈடுபட்டார். டி.எம். சௌந்திரராஜன், வெண்ணிற ஆடை நிர்மலா நடிக்க அவர் 'கவிராஜ காளமேகம்' படம் எடுத்த போதுதான் கவிஞரோடு என் மூன்றாவது சந்திப்பு நேர்ந்தது.

மந்தைவெளி, மேற்கு சர்குலர் சாலையில் இருந்த அலுவலகத்தில் ஒருநாள், கவிராஜ காளமேகம் படத்துக்கான அடுத்த பாடல் காட்சி பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. திருவரங்கம் பெருமாள் கோவிலில் வைணவ பட்டராக உக்ராண அறையில் பணிசெய்து கொண்டிருந்தவனுக்கு அம்பிகை அருள் செய்ய, உடனே இம்மென்றால் எழுநூறும் அம்மென்றால் ஆயிரமும் பாடல் பொழியும் ஆசுகவி காளமேகமாக மாறிய புலவனிடம், திருவானைக்கா தாசி மோகனாங்கி காதல் வயப்பட்டது பற்றி ஊரெல்லாம் வம்பு தும்பு பேசக் கேட்டு, அதனால் அவளை வீட்டுக் காவலிலேயே வைத்து விடுகிறாள் அவள் அன்னை. அந்தச் சூழ்நிலையில், திருவானைக்கா கோவிலில் மோகனாங்கி நடனம் ஆட வேண்டிய நாள் வருகிறது. அந்த நடனத்துக்கான பாடலைக் கவிஞரிடமிருந்து எதிர்பார்த்தபடி நாங்கள் அலுவலகத்தில் காத்திருக்கிறோம். நாங்கள் என்றால், தயாரிப்பாளரான என் வளர்ப்புத் தந்தை, பட இயக்குநர் ஜி.ஆர்.நாதன், சிங்கப் பிடறி போல் நீண்ட, ஆனால், தும்பைப்பூப் போல் வெளுத்த தலைமுடியோடு அமர்ந்திருக்கும் வசனகர்த்தா ஏ.எல்.நாராயணன் ஆகியோர். வசனகர்த்தாவின் உதவியாளர் கவிஞரிடமிருந்து பாடல் பெற்று அலுவலகம் வந்து கொண்டிருந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. எல்லாரும் ஆவலோடு காத்திருக்கிறோம்.

பாடலுடன் உதவியாளர் வருகிறார். பாடலை வாங்கி, ஏ.எல். நாராயணன் உரக்கப் படிக்கிறார்.

> **கேளுங்கள் பெரியோர்களே - மனது**
> **கீழ்க்குல மாயில்லை மேற்குல மாஎன்று**
> **கேளுங்கள் பெரியோர்களே.**

அதற்கு மேல் அவர் படிப்பது என் செவியில் ஏறவில்லை. அவரும், இயக்குநரும் பாடலைப் புகழ்ந்துவிட்டு மேற்கொண்டு விவாதத்தைத் தொடர, நான் மௌனமாக அமர்ந்திருக்கிறேன். திடீரென்று, விவாதமும் நிற்கிறது. ஏ.எல்.நாராயணன் என்னைப் பார்த்துக் கேட்கிறார், "என்ன ரவி, ஒண்ணும் சொல்லலே. பாட்டு நல்லா இல்லியா?" கவிஞர் பாட்டு நன்றாக இல்லை என்று

*சொல்ல நான் யார்? மெதுவாகச் சொல்கிறேன், "நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், 'கேளுங்கள் பெரியோர்களே' என்ற பல்லவி ஏதோ ஓட்டுக் கேட்பது போல் இருக்கிறது." இப்படி நான் சொல்லி முடிக்கும் முன் எம்.ஜி.எம். சிங்கம் போல் கர்ஜனை ஒலியோடு, பிடறி சிலிர்த்துக் கொண்டு எழுகிறார் நாராயணன். என் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் சென்று காரில் ஏறச் சொல்கிறார். 'கவிதா ஹோட்டலுக்கு விடு' என்று ஓட்டுநரை விரட்டுகிறார்.*

*கவிதா ஹோட்டல், அந்த அறையில் நுழைகிறோம். கட்டிலின் மேல் மதுசூதனனாக, மப்பும் மந்தாரமுமாய்க் கவிஞர் அமர்ந்திருக்கிறார். "என்ன ஆலநா?" என்று கவிஞர் கேட்கிறார். ஏ.எல்.நாராயணனைக் கவிஞர் அப்படித்தான் அழைப்பாராம். "வெட்கம் கவிஞரே. உங்க பாட்டை இந்தச் சின்ன பையன் ஓட்டுக் கேக்கற மாதிரி இருக்குன்னு சொல்லிட்டானே!" என்று சொல்லி விட்டுப் பாட்டுத் தாளைக் கவிஞரிடம் நீட்டுகிறார். வாங்கிப் படித்துவிட்டுக் கவிஞர், "இப்ப என்ன வேணும்? ஆலநா, நீயே ஒரு பல்லவி சொல்லு" என்றதும், அந்தச் சிங்கப் பிடறி சிலிர்த்துக் கொள்கிறது. சிங்கம் சொல்கிறது: "யாராக இருந்தால் என்ன?" உடனே கவிஞர் பதிலுக்குச் சொல்ல உதவியாளர் எழுதுகிறார்: "இதில் அரசனென்ன இல்லை ஆண்டியென்ன யாராக இருந்தால் என்ன". மடமடவென்று அடுத்த வரிகளை ஆலநாவும், கவிஞரும் மாற்றி மாற்றிச் சொல்லப் பாடல் வளர்கிறது:*

**யாராக இருந்தால் என்ன**
**இதில் அரசனென்ன இல்லை ஆண்டியென்ன**
**யாராக இருந்தால் என்ன**

**சிவனுக்கு உமையென்ன அத்தை மகளா - அவன்**
**மகனுக்குத் தெய்வானை மாமன் மகளா**
**இறைவனின் வீட்டினிலும் ஜாதியில்லையே - இதை**
**எம்மிடம் கேட்க ஒரு நீதியில்லையே**

*நான் ஸ்தம்பித்துப்போய் அமர்ந்திருக்கிறேன். அந்தப் பாடல் பெற்ற ஸ்தலம், அதாவது கவிதா ஹோட்டல் அறை, இன்னும் என் மனத்திரையில் காட்சியாகப் பதிந்திருக்கிறது. ஆலநாவையும், கவிஞரையும் கவிதை சொல்ல வைத்த மூல நாவான கலைமகளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.*

*சிறுகூடற்பட்டி முத்தையாவுடன் (அதாங்க, கவிஞர்) மூன்று சந்திப்புகள் என்ற கதை முற்றுப் பெறுகிறது. வாலிபக் கவிஞர் வாலியை விட்டுவிட முடியுமா? அவரோடு என் சந்திப்புகளையும் சொல்கிறேனே!*

# 15

என் வளர்ப்புத் தந்தை கவிராஜ காளமேகம் படம் தயாரிக்கத் தொடங்கிய போது எங்கள் இல்லம் மயிலை, பலாத்தோப்பில் இருந்தது. அங்கேதான் அவரை நான் முதன்முதலாகப் பார்த்தேன். கையை மடித்து விட்டிருந்த வெள்ளை ஜிப்பா, வெள்ளை வேட்டி, நெற்றியிலே குங்குமப் பொட்டு, மீசை. இந்தத் தோற்றத்துடன் அங்கே வந்தவர் கவிஞர் வாலி.

மாமா படத்துக்குப் பாட்டெழுத ஏ.எல்.நாராயணன் அழைத்ததும் 'ஹோட்டல் எல்லாம் வேண்டாம் நான் அவர் வீட்டுக்கே வந்து விடுகிறேன், அவா நம்ம ஊர்க்காரா' என்று சொல்லி வந்து விட்டாராம்.

ஏற்கனவே இசையமைப்பாளர் எஸ்.எம்.சுப்பையா நாயுடுவும், ஏ.எல்.நாராயணனும் வந்து காத்திருந்தனர். எங்கள் வீட்டுக் கூடத்தில் ஒரே வெற்றிலை மணம், ஆர்மோனியச் சத்தம்.

ஸ்ரீரங்கம் கோவில் மடப் பள்ளியில் சமையல் செய்து கொண்டே பின்னாளில் காளமேகமாக மாற இருக்கும் கதாநாயகன் நையாண்டியாகப் பாடவேண்டிய பாடல் என்று நாராயணன் விளக்க, உடனே வாலி, நானும் அதே ஊர், ஸ்ரீரங்கம்தான் என்று சொல்லி விட்டு, 5 நிமிடங்களுக்குள் பாடலை அமர்க்களமாக எழுதிக் கொடுத்த காட்சியைக் கண்குளிரக் கண்டும், செவிகுளிரக் கேட்டும் ரசித்தேன்.

**ரெண்டு பக்கம் காவேரி எங்க ஊரு நடுவிலே**
**ரெங்க நாத சாமியோ ஆதி சேஷன் மடியிலே**

சித்திரையில் தேரோட்டம் மாசியிலே படகோட்டம்
இத்தனையும் காணவரும் எத்தனையோ ஜனக்கூட்டம்
பக்தாளுக்குத் தெரியாதோ பெருமாளின் சங்கதி
உள்ளூரில் ரெண்டிருக்க உறையூரில் இன்னொருத்தி

கைவழியே நெய்வழியும் பொங்கலுண்டு காலையிலே
சித்திரான்னம் படைப்பதுண்டு மத்தியான வேளையிலே
ஊருக்கெல்லாம் சோறூட்டும் சாமியெங்க சாமிதான்
நான்சமச்சுப் போடாட்டா நாள்முழுக்கப் பட்டினிதான்

*பாட்டு முடிவதற்குள் டி.எம்.சௌந்தரராஜனும் வந்து சேர்கிறார். எஸ்.எம்.எஸ் மெட்டுச் சொல்லி வாசிக்க, அந்தப் பாடலை டி.எம்.எஸ் பாடிக் காட்ட, அடாடா, பெருமாளே கள்ளத்துயில் நீங்கி எழுந்து வந்து சிவன் போல் தாண்டவம் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவானது.*

*என்னையும் கவிஞன் என்று ஏ.எல்.நாராயணன் வாலிக்கு அறிமுகம் செய்து வைத்ததும், "அதெல்லாம் ஒண்ணும் வேணாம்பா, ஒழுங்காப் படி" என்றார் வாலி.*

*அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கவிஞர் வாலியை நான் பல ஆண்டுகள் பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனாலும் அவருடைய பாடல் வரிகள் பல என்னை ஆட்கொண்ட வரிகள்.*

மண் குடிசை வாசல் என்றால் தென்றல் வர மறுத்திடுமா
மாலை நிலா ஏழை என்றால் வெளிச்சம் தர வெறுத்திடுமா

*எவ்வளவு அற்புதமான வரிகள்!*

இடையோ இல்லை இருந்தால் முல்லைக் கொடிபோல் மெல்ல வளையும் - சின்னக்
குடைபோல் விரியும் இமையும் விழியும் பார்த்தால் ஆசை விளையும்

*சொற்கள் எப்படி இயல்பாக ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு வருகின்றன!*

*வாலியை அடுத்தமுறை நான் பார்த்தது 1997-ல் அவருடைய இல்லத்தில். வானவில் பண்பாட்டு மையம் எடுத்த இந்திய சுதந்திரப் பொன்விழாக் கவியரங்கத்துக்கு அவரை அழைக்கச் சென்றிருந்தேன். அப்போது என்ன சொன்னார் தெரியுமா? "ஏன்யா, நான் தப்பித் தவறி ஒரு நல்ல பாட்டு எழுதிட்டாப் போச்சு, அதையும் கண்ணதாசன் பாட்டுன்னு சொல்லிடுவீங்களே". எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. அவரே விளக்கினார். நான்*

*எழுதி வெளியிட்டு, அவருக்கும் அனுப்பி வைத்த 'நமக்குத் தொழில் கவிதை' என்ற நூலில்,*

**ஒண்ணா இருக்கக் கத்துக்கணும் - இந்த**
**உண்மையச் சொன்னா ஒத்துக்கணும்**
**காக்கா கூட்டத்தப் பாருங்க - அதுக்குக்**
**கத்துக் கொடுத்தது யாருங்க**

*என்ற பாட்டின் எளிய நடையை நான் பாராட்டி விட்டு அதைக் கண்ணதாசன் பாடல் என்று குறிப்பிட்டு விட்டேனாம். சிரித்துக் கொண்டே கோபித்துக் கொண்டார். நான் மன்னிப்புக் கேட்டேன். அவர் என் நூலை முழுமையாகப் படித்திருந்தது குறித்து மகிழ்ச்சியடைந்தேன்.*

*பின்னொரு சமயம் சபரிமலைக்கு என்னுடன் யாத்திரை போய்க்கொண்டிருந்த நண்பர் குழுவின் பக்திப் பாடல்கள் அடங்கிய 'சந்தன மணம் கமழ் ஐய்யப்பன்' என்ற பாட்டு நூலை வாலியைக் கொண்டு சென்னை ஆஸ்திக சமாஜத்தில் வெளி யிட எங்கள் குருசாமி, என் மூத்த சகோதரர் ஸ்ரீதர், ஏற்பாடு செய்திருந்தார். அதை வெளியிட்டுப் பேசிய வாலி அவர்கள் அதில் இருந்த என் பாடல் ஒன்றை முழுக்கச் சொல்லிப் பாராட்டினார். அந்தப் பாடல்:*

**நெய் அபிஷேகம் ஜமாய்க்கிறே - என்னை**
**எத்தன நாளா டபாய்க்கிறே**
**பொய்யில் அமுக்கிப் புழுதியிலே என்னைப்**
**புரள விட்டு நீ ஏய்க்கிறே - விட்டுப்**
**போவானான்னு பாக்குறே**

**சங்கீதம் தெரிஞ்ச சாஸ்திரக் காரங்க**
**சந்தோஷமா ஒன்னப் பாடுறாங்க**
**சங்கோஜங் கொண்ட பேர்வழிங்க - சத்தம்**
**போடாம ஒன்னத் தேடுறாங்க**
**எல்லாரும் ஒண்ணாக் கூடுறாங்க**
**வில்லாளி வீரன்னு கூவுறாங்க**
**வாச்சாலம் நானும் பழகலே - ஒன்**
**வீராப்பும் எனக்கு வெளங்கலே**

**வெளிச்சமில்லாத சாலையிலே - ஆள்**
**அரவமில்லாத மூலயிலே - வெத்துக்**

காயிதமா நான் கெடக்குறேன் - ஓன்
கைபடத்தான் படபடக்குறேன்
பளிச்சுனு என்ன நீவிப்புட்டு - ஒரு
பாட்டெழுதிக் கைநாட்டுவை
பத்துத் தலமொறைக் கதுபோதும் - மக்கள்
பாடுவாங்க நீ கேட்டுவை
காட்டுல போயி குந்திக்குற - கண்ண
மூடிக்கிட் டேதோ சிந்திக்குற - நான்
பாட்டுக்குப் படுத்துத் தூங்கையிலே - ஒரு
பாட்டாக வந்து சந்திக்கிற

நெய் அபிஷேகம் ஜமாய்க்கிறே - என்னை
எத்தன நாளா டபாய்க்கிறே
மெய்யும் பொய்யும் கலந்துவச்சு - நான்\
மெரள மெரள நீ சதாய்க்கிறே

*மனம்திறந்து பாராட்டி விட்டுப் பேசி முடித்த பிறகு என் காதருகே வந்து ரகசியமாக மிரட்டினார்: "ராஜகோபாலா ஒங்கம்மா தோச வாத்தாளான்னு நீ சினிமாவுக்காக ஒரு ஆபாசப் பாட்டு எழுதினேன்னு மைக்குல சொல்லட்டுமா?" சிரித்துக் கொண்டேன்.*

*நானும் அவரும் சந்தித்துக் கொண்ட போதெல்லாம், ஏதாவது எடக்கு முடக்காகவோ, பொய்க்கோபத்துடனோ என்னிடம் அவர் பேசியிருந்தாலும் அவருக்கு என் மீது அன்பும், பற்றும் இருந்ததை நான் உணரத் தவறவில்லை.*

*பிறகு ஓரிரு நிகழ்ச்சிகளில் நாங்கள் சந்தித்துக் கொண்டிருந்தும் அதிகம் பேசவில்லை. அவருக்கு வானவில் பண்பாட்டு மையத்தின் பாரதி விழாவில் 'பாரதி விருது' வழங்கிய போது, சாதரணமாக விருதுகள் பெறத் தாம் சம்மதிப்பதில்லை என்ற போதிலும், பாரதி பெயரால் தரப்படும் விருது என்பதாலும், நான் அழைத்தேன் என்ற காரணத்தாலும் விருது பெற்றுக் கொள்ளத் தாம் வந்ததாகப் பேசி, என் மீது அவருக்கு இருந்த அன்பை உறுதிப் படுத்தினார்.*

*அவர் இறைவனடி சேர்வதற்கு மூன்று வாரங்களுக்கு முன் அவருடன் நான் தொலைப்பேசியில் பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. என் சகோதரி மகள் ஸ்வர்ணமால்யா, "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்" என்ற தன் நாட்டிய நாடகத்தை ஒளிப்பேழையாக , அதாவது, டி.வி.டி யாகக் கொண்டுவர இருப்பதால், அதற்கு வாலி அவர்களின் முன்னுரை பெற்றுத் தர வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டாள்.*

அது குறித்துத்தான், நான் வாலி அவர்களைத் தொலைப்பேசியில் கேட்டேன். அவர் சொன்னார்: ”ரவி, இப்போதெல்லாம் நான் போகிற வழிக்குப் புண்ணியம் தரக்கூடிய கடவுள் சம்பந்தமான விஷயங்களைத் தவிர வேறெதையும் படிப்பதில்லை. சிலப்பதிகாரமெல்லாம் இப்பொழுது படித்துப் பார்க்கும் மனநிலையில் நான் இல்லை” என்றார். நான் சொன்னேன், ”நீங்கள் இப்படிச் சொல்லலாமா? உங்களுக்குத் தெரியாததா? நானறிந்தவரை சிலப்பதிகாரம் ஒரு சிறந்த பக்தி இலக்கியம். ஆய்ச்சியர் குரவையில் எப்படியெல்லாம் திருமாலைப் போற்றியுள்ளார் இளங்கோவடிகள்!” என்று கூறிவிட்டுத் தொலைப்பேசியிலேயே, “சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே”, “நாராயணா என்னா நாவென்ன நாவே” ஆகிய வரிகளைச் சொல்லி, உங்கள் ஆழ்வார்களுக்கெல்லாம் முன்னோடி இளங்கோ சார்” என்று நான் சொன்னதும் சிறிது மௌனத்துக்குப் பிறகு அவர் சொன்னார்: ”சரி ரவி, நாளை நான் என் ஆச்சாரியன் அழகிய சிங்கர் மீது ஒரு காவியம் வெளி யிடுகிறேன், ம்யூஸிக் அகடமியில், அங்கே வந்துவிடு பேசுவோம்” என்றார்.

ஏதோ காரணம் மறுநாள் நான் அந்த விழாவுக்குப் போக முடியாமல் தடுத்து விட்டது. அதற்கு மறுநாளே அவருக்கு உடல்நிலை பாதிக்கப் பட்டதையும் இரண்டு வாரங்களில் அவர் நம்மைப் பிரிந்ததையும் இன்னும் நினைத்து வருந்துகிறேன்.

அவருடைய கள்ளம் கபடமற்ற கவிதையுள்ளம் நான் நன்கு அறிவேன். புன்னகை என்பது இதயத்தோடு தொடர்புடையது, காதலியின் கன்னமோ காதலனின் கையோடு தொடர்புடையது என்ற நுட்பத்தை மிக எளிமையாக அவர் பாடியுள்ளதை நினைவு கூர்ந்தால், திரைப்படப் பாடல்கள் இலக்கிய சம்பந்தம் அற்றவை என்ற பேச்சுக்கே இடமில்லை. பாடுவோமே:

**இந்தப் புன்னகை என்ன விலை - என்**
**இதயம் சொன்ன விலை - இவள்**
**கன்னங்கள் என்ன விலை - இந்தக்**
**கைகள் தந்த விலை**

# 16

மாமா, அதாவது என் வளர்ப்புத் தந்தை, கல்யாணராமனிடம் மேலோங்கி இருந்த குணம் விருந்தோம்பல். வருவோர்க்கெல்லாம் வீட்டில் நல்ல சாப்பாடு போட வேண்டும் என்பதில் அவர் விடாப்பிடியாக இருந்தார். 1956–57, அவர் சென்னை, ஸ்ரீராம் நகரில் திரைப்படத் தயாரிப்பு அலுவலகம் திறந்த போதே அதில் தினமும் சிற்றுண்டி, சாப்பாடு செய்து போட ஆட்கள் அமர்த்தி விட்டார். அவருடைய குருநாதர் கே.சுப்பிரமணியத்திடம் இருந்து வந்த வழக்கம் அது. வெளியே எங்கேயும் எதுவும் சாப்பிடாத எம்.ஜி.ஆர் அவர்கள் கூட, இசையமைப்பாளர் ஜி.ராமநாதன், தஞ்சை ராமையாதாஸ் ஆகிய இருவருடனும் சேர்ந்து காலைச் சிற்றுண்டி அருந்த, அப்பொழுது தினமும் எங்கள் அலுவலகத்திற்கு வந்துவிடுவார். மற்ற தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் தங்கள் படப்பாடல்களுக்கு ஜி.ராமநாதனின் இசையும், ராமையா தாஸின் வார்த்தைகளும் பெற வேண்டி அங்கேதான் வந்து சிற்றுண்டி அருந்தி விட்டுக் காத்திருப்பார்கள். நாலு வயதுச் சிறுவனான என்னைத் தம் மடியில் அமர்த்திக் கொண்டே ஜி.ராமநாதன் ஆர்மோனியத்தில் பல பாடல்களுக்கு மெட்டுப் போட்டிருக்கிறார். என் இசை ஈடுபாடு எப்படி வந்தது தெரிகிறதா? கருவில் வந்தது பாதி, ஜி.ராமநாதன் உருவில் வந்தது மீதி. பத்து விரல்களிலும் வைரக்கல் மோதிரங்கள் பளபளக்க அவர் ஆர்மோனியம் வாசித்த அழகை அருகிருந்து ரசிக்கும் பேறு எனக்குக் கிட்டியது.

ஜி.ஆர் மடியில் அமர்ந்து இசையின் ஆரம்பப் பாடத்தைச் செவிவழியே வாங்கிக் கொண்ட நான், ஏறக்குறைய பத்தாண்டுகள் கழித்துக் கல்லூரியில் காலடி எடுத்து வைத்ததும் கிடார் கற்றுக் கொள்ள ஓர் இசை மேதையிடம் சேர்ந்தேன். அவருக்கு வீடு

கிடையாது. ஒண்டிக்கட்டை. சென்னை, லஸ் முனையில் இருந்த ஒரு லாட்ஜ் மாடியில் நிரந்தர அறையொன்றை வாடகைக்கு எடுத்திருந்தார். அங்கேதான் குடியிருந்தார். மெய்யாகவே எப்போதும் குடியில் இருந்தார் என்று கூடச் சொல்லலாம். அவர் அறையில் ஒரு பியானோ இருந்தது. அது மூடியே இருக்கும். எப்பொழுதாவது அவர் அதைத் திறந்து வாசிப்பார். முதலில் எனக்கு 'ட்விங்கிள், ட்வுங்கிள் லிட்டில் ஸ்டார்', 'ஜாக் அண்ட் ஜில்' ஆகிய மழலைப் பாடல்களை கிடாரில் வாசிக்கச் சொல்லிக் கொடுத்தார். இரண்டு மாதங்கள் இந்த இரண்டு பாடல்களிலேயே கழிந்தன. எனக்குப் பொறுமை இல்லை. அத்துடன், பியானோ வாசிக்க வேண்டும் என்ற ஆசையும் எழுந்தது. ஒருநாள், என்னை 'ஜாக் அண்ட் ஜில்' வாசிக்கச் சொல்லி விட்டு, எப்பொழுதும் போல் வெளியே தனக்கு ஸ்ருதி ஏற்றிக் கொள்ள அவர் சென்ற சமயம் ப்யானோவைத் திறந்து தடவ ஆரம்பித்தேன். திடீரென்று அவர் வந்து விட்டார். 'நீ கிடார் வாசிக்கும் லட்சணத்திற்குப் ப்யானோ ஆசையா' என்று கோவமாக என்னைத் திட்டி விட்டு அனுப்பி விட்டார். அதோடு முடிந்தது என் கிடார் பயிற்சி. ஆனால், அந்த மாமேதையிடம் வந்து பல பிரபல இசையமைப்பாளர்கள் தாங்கள் மெட்டமைத்த பாடல்களுக்கான பின்னணி இசை முறைப்பாட்டை, ஆங்கிலத்தில் 'அரேஞ்மெண்ட்' என்பார்கள், எழுதிக் கொண்டு போவதைப் பார்த்திருக்கிறேன். அதை விட, அவரிடம்தான் இன்னொரு மாமேதை இசை கற்றுக் கொண்டு பின்னாளில் முன்னணி இசையமைப்பாளராக உருவானார். குருவான மாமேதை தன்ராஜ் மாஸ்டர். அவரிடம் உருவான மாமேதை இளையராஜா.

தன்ராஜ் மாஸ்டரிடம் கிடார் வகுப்புச் சடார் என்று ஒரு முடிவுக்கு வந்தும், இசையுடன் எனக்கிருந்த தொடர்பு விட்டுப் போகவில்லை. நான் இசையை விட்டாலும் அது என்னை விடுவதாகத் தெரியவில்லை.

போன பகுதிகளில் குறிப்பிட்ட கவிஞர்களுக்கெல்லாம் காலத்தாலும், நாத யோகம் பயிலும் சீலத்தாலும் முற்பட்ட ஒருவருடைய பாடல்கள் என்னை ஆட்கொண்டன. அந்தக் கிழவரோடு நேரடியாக நான் பேசிப் பழகியதில்லை. மார்கழி மாதங்களில் மயிலைக் கபாலீஸ்வரர் கோவிலைச் சுற்றி நாலு மாட வீதிகளிலும் அதிகாலைப் பொழுதில், வெடவெடக்கும் குளிரில் அவர் பஜனை செய்து கொண்டு வீதிவலம் போகும் போது நாலைந்து முறை நானும் அவர் திருக்கூட்டத்தில் ஒருவனாக, "நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான் நடுவே" என்று மணிவாசகப் பெருமான் பாடியது போல் சென்றிருக்கின்றேன். அவ்வளவுதான். என்றாலும் எனக்கு அந்த இளம் வயதில்

*(அப்போது புகுமுக வகுப்பில் பயின்று கொண்டிருந்தேன்) யாருக்கும் கிடைப்பதற்கு அரிய ஒரு வாய்ப்புக் கிட்டியது.*

*என் தந்தை விஸ்வம் வித்யா சாகர் என்றொரு பள்ளி நடத்திக் கொண்டிருந்தார். அது சென்னை, மயிலை, சாயிபாபா கோயில் எதிரில் உள்ள கபாலி நகரில் இருந்தது. அந்தப் பள்ளியின் ஆண்டு விழாவில் பள்ளிச் சிறுவர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் நடக்கும். என் மற்றொரு சகோதரி மாலினிதான் முழுப் பொறுப்பும். அதில், அந்தக் கவிதைத் தாத்தாவின் பாடல்களை வைத்து அந்தத் தாத்தாவின் மகள் 'பாரிஜாதம்' என்ற நாட்டிய நாடகம் உருவாக்கித் தந்திருந்தார். அதில் கதைப் போக்குக்குச் சில பாடல்கள் இல்லாத குறையைப் போக்கச் சில பாடல்களை என் சகோதரி என்னை எழுதச் சொல்லி உருவான அந்த நாட்டிய நாடகம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.*

*நான் குறிப்பிட்ட கவிதைத் தாத்தா பழம்பெறும் பாடலாசிரியர் பாபனாசம் சிவன் அவர்கள். அவருடைய பாடல்களோடு என் பாடல்கள் கலந்து ஒரு நாடகம் உருவானது என்று சொன்னால் அது தெய்வம் தந்த வரமாகத்தானே இருக்க முடியும்!*

**பைந்தமிழ் மலர்ப்பா மாலை சூட்டியுன்**
**பாதமலர் பணிந்து பாடவும் வேண்டும்**
**சிந்தையும் என் நாவுமெந் நேரமும் - உன்**
**திருப்பெயர்ப் புகழ் மறவாமையும் வேண்டும்**
**வந்த உலகில் மதி மயங்கி**
**அறு பகைவர் வசமாய் அழியாமல் உன்**
**அருள்பெற வேண்டும்**

*இப்படிக் காதலாகிக் கண்ணீர் மல்கச் செய்யும் பாபநாசம் சிவனின் பாடல்களை எம்.கே.தியாகராஜ பாகவதரின் தேன்குரலில் கேட்டு எத்தனை முறை நெகிழ்ந்திருக்கிறேன்!*

*பாபநாசம் சிவனின் மகள் நீலா ராமமூர்த்தி அம்மையார்தான் மேலே நான் குறிப்பிட்ட பாரிஜாத நாடகத்தைத் தம் தந்தையின் பாடல்களை வைத்து உருவாக்கித் தந்தவர்.*

*அடுத்த ஆண்டு அந்தப் பள்ளி, தேவடி தெரு என்ற இடத்துக்கு மாறியது. இடம் மாறினாலும் தடம் மாறாமல் ஆண்டு விழாவை மேலும் சிறப்பாகக் கொண்டாட மாலினி ஏற்பாடுகள் செய்தார். அவருடன், என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று விட்ட ஒரு மங்கையும் சேர்ந்து ஒரு முழு நாட்டிய நாடகம் எழுதித் தரச் சொல்லி என்னை வற்புறுத்தினார்கள். நான் குறிப்பிட்ட மங்கை சங்கீத ஞானம் மிக்கவர்; டாக்டர் பத்மா சுப்ரமணியத்தின்*

*மூத்த சகோதரி; 'நீலு அக்கா' என்று நான் அழைத்த பாசம் மிக்க சகோதரி. நான் எழுத, அவர் மெட்டமைக்க, துர்க்கா மிஸ் என்ற ஆசிரியை பாடப் 'பாதுகா பட்டாபிஷேகம்' என்ற நாட்டிய நாடகம் உருவானது. அதற்கு ஆர்மோனியம் வாசித்தவர் ராமமூர்த்தி என்ற பெரியவர். தசரதன், கைகேயியிடம் பலவாறு வாதாடியும் அவள் தான் கேட்ட இரு வரங்களில் பிடிவாதமாக இருந்ததால், கடைசியில்,*

**என்னுயிரைக் கேட்கின்றாய் என்ன செய்வேன்**
**இருந்தாலும் நானுனக்குக் கட்டுப் பட்டேன்**
**சொன்னசொல்லைக் காக்க இரு வரமும் தந்தேன்**
**சுகமுறுவாய் நானெந்தன் உயிரைத் தந்தேன்**

*என்று பாடிக் கொண்டே தசரதனாக நடித்த சுஜாதா என்ற சிறுமி மயங்கிவிழுந்த காட்சியில் பலர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டதைக் கண்டேன். அட, மீண்டும் சுபபந்துவராளி ராகம் அப்பா!*

*என் மனத்தில் இசையும், கவிதையும் எப்படிக் கைகோத்துக் கொண்டு வளர்ந்தன என்பதை இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன.*

*'இசையா, கவிதையா என்று பட்டிமன்றம் வைத்தால் நீ எந்தக் கட்சி?' என்று என்னிடம் சிகாமணி, அதான் நம்ம பழைய புத்தி சிகாமணி, முன்பு ஒருமுறை கேட்டான். பட்டென்று பாட்டாக வந்தது பதில்:*

**உனக்குத் தெரியும் கவிதை என்றால்**
**உயரப் பறப்பதென்று**
**எனக்குத் தெரியும் இசையென் றாலது**
**என்னை இழப்பதென்று**
**பறந்து கொண்டே இழந்தது பாதி**
**இழக்க இழக்க வளர்ந்தது மீதி**

*இவ்வாறு, 1969–70 களில், அதாவது என் பதினாறு வயதினிலே, இசையும், கவிதையுமாய் என் வாழ்க்கை இப்படிச் சென்று கொண்டிருந்த போதுதான் அதில், இல்லை என் நெஞ்சில், இல்லை இல்லை, என் உயிரில் இசைக்கவிதையாகவே அவள் நுழைந்தாள். அந்தக் கதை.. .. !*

# 17

ஒருநாள், 1969 என்று நினைக்கிறேன், சிவம் வீட்டுக்குப் பரபரப்பாகப் போகிறேன். நம்ம சுகி சிவம்தான்!

'உடனே என்னுடன் வா. பி.எஸ்.ஹைஸ்கூலுக்குப் போகிறோம்" என்று சிவத்தை என் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு மயிலை பி.எஸ். உயர்நிலைப் பள்ளி வளாகத்துக்குப் போகிறேன். அங்கே...!

அப்போது சிவம், அமிர்தலிங்கம் (பின்னாளில், 'வசந்தப்பி ரியன்'), சீனி சுந்தரராஜன், சசீந்திரநாதன் என்ற சசி, வள்ளி, நான் ஆகிய ஆறு பேரும் மற்ற சில நண்பர்களோடு சேர்ந்து சிந்தனைக் கோட்டம் என்ற இலக்கிய அமைப்பை நிறுவி, நடத்தி வந்தோம். கீழே உள்ள புகைப்படத்தில் அமிர்தலிங்கம் தவிர மற்ற ஐவரையும் காணலாம். அதில் சிவமும், நானும் இருக்கிறோம் என்று நாங்கள் சத்தியம் செய்தால் கூட நீங்கள் நம்புவது கடினம்தான்! முதன்முதலாக பாரதியாரின் வரலாற்றை முழுநூலாக எழுதி "பாரதி லீலை" என்ற பெயரில் வெளியிட்ட சக்திதாசன் சுப்பிரமணியத்தின் ஒரே மகன் சசி.

அந்தச் சமயத்தில் அமராராகியிருந்த டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் பெயரில் "சிதம்பரநாதனார் சிந்தனைக் கோட்டம்" என்றுதான் முதலில் தொடங்கினோம். அவர் அமிர்தலிங்கத்தின் தாய்மாமன். சில நாட்களுக்குப் பிறகு, அது பொதுப்படையான நிறுவனமாக இருக்க வேண்டும் என்று கருதிச் 'சிந்தனைக் கோட்டம்' என்றே தொடர்ந்து நடத்தி வந்தோம். அப்படியோர் இலக்கிய அமைப்பை நிறுவி நடத்த வேண்டும் என்று எங்களைத் தூண்டியவர் எங்கள் தமிழாசான் சிதம்பரம் சுவாமிநாதன்.

“செந்தமிழ்த் தோட்டம் சிந்தனைக் கோட்டம் சேவையில் நாட்டம் செலுத்துவோர் கூட்டம்” என்று தனக்கே உரிய அடுக்குமொழி வசனத்தில் அந்த மன்றத்தின் கொள்கையை அவரே வரையறை செய்து தந்திருந்தார்.

நான் ஏழாம் வகுப்பில்தான் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன். என் தந்தை விஸ்வம்தான் சேர்த்து விட்டார். அவருக்கு என் சரியான பிறந்த தேதி கூட நினைவில்லை. தவறாக, 09–01–1952 என்று தந்து விட்டார், ஓராண்டும் நாலு நாட்களும் கூடுதலாக! அவர் வாழ்நாள் முழுதும் ஆசிரியராகவே பணியாற்றியவர். ஆசிரியர் தொழில், நாடகங்கள் எழுதி நடிப்பது இந்த இரண்டும்தான் அவருடைய வாழ்க்கையே. இவை தவிரக் குடும்ப விவகாரங்களில் எப்பொழுதுமே அதிக ஈடுபாடு செலுத்த மாட்டார். ஆனால் தாம் சிரமப்பட்டு ஈட்டும் பணத்தையெல்லாம் குடும்பத்துக்கே தந்து விடுவார். அவருக்கு நாடகம் தவிர வேறு கெட்ட வழக்கங்கள் கிடையாது,(நாடகக்காரர்கள் மன்னிக்கவும்). நாடகமே வாழ்க்கை என்று இருந்த அவருக்கு வாழ்க்கையில் நாடகமாடத் தெரியவில்லை. மற்றவர்களைப் புகழும் வழக்கம் மட்டும் அவருக்கு இருந்திருந்தால் அவர் சினிமாவில் பெரிய நடிகராகவோ, இயக்குநராகவோ வந்திருக்கக் கூடும். மற்றவர்களைப் புகழ்வதில்லை என்பதை அவர் ஒரு விரதமாகவே பயின்று வந்தார்.

திருச்சியில், 1940–50 களில் லேடி விஸ்வம் என்றால் எல்லாருக்கும் தெரியும். நாடக மேடைகளில் பெண் பாத்திரத்திலேயே அவர் அதிகம் நடித்திருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பின்னாளில் இருந்த பழனியாண்டி, வீனஸ் ரத்னம் அய்யர் (இயக்குநர் மணிரத்னத்தின் தந்தை) மற்றும் சிலரோடு விஸ்வம் திருச்சியில் விடாமல் நாடகம் நடத்தி வந்ததும், அவர்கள் எல்லாரும் தினமும் நாடக ஒத்திகை முடிந்து இரவு 11 மணிக்கு மேல் எங்கள் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டியவுடன் என் அம்மா, அதாவது என் வளர்ப்புத் தாயார் (என் வளர்ப்புத் தந்தை கல்யாணராமனின் இரண்டாவது மனைவி ‘அலங்காரம்’) அவர்களுக்கெல்லாம் உணவு பரிமாற, அவர்கள் உண்டு விட்டுத் திண்ணையில் உறங்கிய கதையும் நூறுமுறை என் வீட்டுப் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அவருடைய நாடகக் குழுவில் பயின்ற ஒரு நடிகர் கடைசிவரை அவரை ‘வாத்தியார்’ என்றே அழைத்து வந்தார். 1972–ல் ஒருநாள், ஏ.வி.எம். ஸ்டூடியோவில் அந்த நடிகரும், இயக்குநர் ஸ்ரீதரும் அமர்ந்திருந்த போது நான் அங்கே சென்று என்னைக் கல்யாணராமனின் மகன் என்று அந்த நடிகரிடம் அறிமுகம் செய்து கொண்டேன். எங்கள் குடும்ப விவகாரம் முழுதும்

தெரிந்து வைத்திருந்த அந்த நடிகர்," வாத்தியார் சௌக்கியமா" என்று கேட்டார். நான் திகைத்த போது, "உன் தந்தை விஸ்வம் சாரைத்தான் குறிப்பிடுகிறேன்" என்று விளக்கினார். அவர்தான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். இந்தச் சந்திப்புப் பற்றி இன்னும் சுவையான விவரம் ஒன்று உள்ளது.

சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் நான் சேரும் போது எனக்குத் தமிழ் சரியாக எழுத வராது. முதலில் மந்தைவெளியில் உள்ள 'பான் செகர்ஸ்' என்ற கான்வெண்ட் பள்ளியிலும், பிறகு செயிண்ட் பீட்டர்ஸ் என்ற ஆங்கிலோ இந்தியப் பள்ளியிலும் 6–ஆம் வகுப்பு வரை பயின்றதால், தமிழ்ப் பயிற்சி இல்லாமல் இருந்தேன். ஆனால், செயிண்ட் பீட்டர்ஸில் ஜேம்ஸ் மிஸ் என்ற ஆசிரியை 'மான்விழி' என்றொரு நாடகம் போட்டபோது, எங்கள் வகுப்பில் எல்லாரையும் தமிழ் படிக்கச் சொல்லிக் கேட்டு, மான்விழி என்ற கதாநாயகியாக நடிக்க என்னைத் தேர்வு செய்தார். 'உன் தமிழ் உச்சரிப்பு நன்றாக உள்ளது' என்று பாராட்டினார். அதுதான் நான் தமிழ் ஆர்வம் கொள்ள என் நெஞ்சில் தூவப்பட்ட முதல் விதை. அப்போது நான் சுமார் பத்து வயதுச் சிறுவன். சிறுவர் அரங்கில் (பின்னாள் கலைவாணர் அரங்கம்) நடந்த குழந்தைகள் தினவிழா நாடகப் போட்டியில் 'மான்விழி' நாடகத்தில் நடித்து நான் முதற் பரிசு பெற்றதும் என் தந்தை விஸ்வம் பூரித்துப் போய்விட்டார், தனக்கு ஒரு கலைவாரிசு வந்து விட்டது என்று.

ஏழாம் வகுப்பில் சாந்தோம் பள்ளியின் ஆங்கில மீடியத்தில் நான் சேர்ந்த புதிதில், சிதம்பரம் சுவாமிநாதன்தான் எங்கள் தமிழாசிரியர். நான் விடைத்தாளில் கோழி என்பதைக் 'கேழி' என்று எழுதியிருந்ததைப் பார்த்துக் கோபத்தோடு அதைக் கசக்கி என் முகத்தின் மீது விட்டெறிந்தார். மற்ற மாணவர்கள் முன்னால் எனக்கு அவமானமாக இருந்தது. ஏழாம் வகுப்பு முடிந்ததும், கோடை விடுமுறையில் நான் தினமும் சென்னை, மவுண்ட் ரோட்டில் இருந்த மத்திய நூலகத்தில் 3, 4 மணிநேரம் செலவிட்டுத் தமிழ் இலக்கிய நூல்களை எடுத்துப் படித்தேன். வாய்விட்டுப் படித்தேன், நூலகப் பணியாளர் 'உஸ்' என்று அடக்கும் வரை. நளவெண்பா, கலிங்கத்துப் பரணி, பாரதிதாசன் பாடல்கள், சிலப்பதிகாரம் என்று என் தமிழ் இலக்கியப் பயிற்சி வளர்ந்தது. கூடவே நன்னூல் இலக்கணத்தையும் பயின்றேன். இரண்டு மாதங்களில் எப்படி நான் அவ்வளவு படித்தேன்? இப்பொழுது நினைத்தாலும் மலைப்பாக இருக்கிறது. ஆனால் ஏதோ ஒரு வெறி என் பிடறியைப் பற்றி உந்தியதை உணர முடிந்தது.

8–ஆம் வகுப்புப் படிக்கும் போது, சிவம், சீனி சுந்தரராஜன், சசி, போன்ற நண்பர்களுக்குக் கலிங்கத்துப் பரணியின் கடைத்திறப்பு

அதிகாரத்தைப் படித்துக் காட்டி விளக்கிப் பாடம் எடுத்தது இன்னும் பசுமையாக என் நினைவில் உள்ளது. அந்த அதிகாரத்தில் உள்ள சிருங்கார ரசப் பாடல்கள் அந்த வயதில் எங்களை ஈர்த்ததில் வியப்பொன்றும் இல்லையே!

**மதுர மானமொழி பதற வாள்விழி சிவப்ப வாயிதழ் வெளுப்பவே**
**அதர பானமது பான மாகவறி வழியும் மாதர்கடை திறமினோ -**
**வருவார் கொழுநர் எனத்திறந்தும்**
**வாரார் கொழுநர் என அடைத்தும்**
**திருகும் குடுமி விடியளவும்**
**தேயும் கபாடம் திறமினோ**

இப்படிப் பல பாடல்கள் பல்கி வரும் கடைத்திறப்பு அதிகாரம் முழுவதையும், படித்தோம்.

நானும் கவிதை எழுதத் தொடங்கினேன். என் வகுப்பு நண்பர்கள் சேர்ந்து, சீனி சுந்தரராஜன் கைவண்ணத்தில், 'தமிழ்ச்சங்கு' என்ற கையெழுத்துப் பத்திரிகை தொடங்கினோம். மூன்று, நான்கு இதழ்கள் வந்தன. அதில்தான், என் முதல் கவிதை வெளியானது. அதன் தொடக்க வரிகள் மட்டும் இன்னும் என் நினைவில் இருக்கின்றன:

**அகத்திய முனிவரின் அகத்தினில் உதித்தவள்**
என்ன பொருத்தம் பார்த்தீர்களா?

"தழல்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்" என்று கவிச்சக்கரவர்த்தி போற்றிய அகத்திய மாமுனிவரின் அருளோடு என் கவிதைப் பயணம் தொடங்கியது. அந்தக் காலக் கட்டத்தில் எழுதிய கவிதைகள் நிறைய தொலைந்தும், மறந்தும் போய்விட்டன. ஒன்றிரண்டு மட்டும் நினைவுப் பேழையில் நீங்கா இடம் கொண்டன:

**ஒளிதந் தெரியும் விளக்கின் திரியும்**
**கரியா கத்தான் திரியும் - நெஞ்சக்**
**களிப்பை நல்கும் வெடியின் திரியும்**
**கரியா கிப்போய் மறையும் - ஆனால்**
**விளக்கில் உள்ள திரியின் நல்ல**
**சேவை உலகில் நிறையும் - இந்த**
**விளக்கம் தன்னை ஆய்ந்து பார்த்தால்**
**விந்தை வாழ்வு புரியும்**

**என்றும் வாழும் விளக்கின் திரிகள்**
**ஏசு புத்தர் காந்தி**

பொன்றும் வெடியின் திரியே மற்ற
பொல்லா உயிர்கள் எல்லாம் - இந்த
உண்மை தன்னை உணர்ந்து நல்ல
விளக்கின் திரிபோல் நாமே
வண்மை கொண்டு மனிதராக
வாழ்வோம் வாழ்விப் போமே

*முதலில் சொன்னேனே, 1969–ல் ஒருநாள் சிவத்தை அழைத்துக் கொண்டு பி.எஸ்.உயர்நிலைப் பள்ளி வளாகத்துக்குப் போனேன் என்று; அதற்குக் கொஞ்ச நாட்களுக்கு முன், நான் சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும் போது, பள்ளி மாணவி ஒருத்தி நடுத்தெருவில் என்னை வழிமறித்தாள். அவள் சொன்னாள்: "என் பெயர் விஜயா. செயிண்ட் ஆண்டனீஸ் உயர்நிலைப் பள்ளி மாணவி. நானும் என் வகுப்புத் தோழிகளும் தமிழில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். நீங்கள் ஏதோ மன்றம் நடத்துவதாகக் கேள்விப் பட்டோம். அதில் சேர விரும்புகிறோம்."*

*"பார்க்கலாம்" என்று சொல்லி விட்டு நான் நகர்ந்து விட்டேன். அவள் மீண்டும் என்னைச் சந்தித்தாள். "நானும் என் தோழியும் ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொள்கிறோம். நீங்கள் வந்து பார்க்கலாமே" என்று அழைத்தாள். சரியென்றேன்.*

*விஜயா சொன்ன நாளும் வந்தது.*

*பி.எஸ்.உயர்நிலைப் பள்ளி அரங்கம்; என் அருகில் சிவம். அரங்கத்தில் விஜயா குறிப்பிட்ட அவள் தோழி, குருநானக் தேவரைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருக்கிறாள். அவள் குரலொலி எனக்குக் கேட்கவில்லை, முகவொளி நெஞ்சை நிறைத்திருப்பதால். "இவள் பெயர் ஷோபனா!" என்று விஜயா சொன்னது மட்டும் நெஞ்சில் பதிகிறது.*

*அந்தக் காட்சியின் மின்னல் அதிர்ச்சியில் இருந்து நான் இன்னும் மீளவில்லை, நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆகியும்*

# 18

ஷோபனாவும், விஜயாவும், அவர்கள் வகுப்புத் தோழியர் பலருடன், ஒரு பெரிய பெண்கள் பட்டாளமாகவே வந்து சிந்தனைக் கோட்டத்தில் சேர்ந்து கொண்டனர். முதலில், பெண்களைச் சேர்க்கக் கூடாது, புத்த மதம் நிலைகுலைந்ததே அதனால்தான் என்றெல்லாம் என் நண்பர்கள் சிலர் தடுத்தும், சிவமும் நானும் வாதாடி, அவர்களைச் சமாதானம் செய்து பெண்களைச் சிந்தனைக் கோட்டத்தில் சேர்த்துக் கொண்டோம். அதற்கு முன் வள்ளியக்கா என்ற ஆசிரியை மட்டுமே சிந்தனைக் கோட்டத்தின் ஒரே பெண் உறுப்பினர். ஏற்கனவே எதிர்ப்புகளுக்கு இடையில் பெண்களைச் சேர்த்துக் கொண்டதால், ஷோபனாவிடம் நான் ஒரு தொலைவை அனுசரித்தேன். என்னிடமே எனக்கு பயம்! ஆனால், சிந்தனைக் கோட்டத்துக்காக நான் ஒரு பாட்டெழுத, ஷோபனா அதைப் பாடினாள்:

**சிந்தனைக் கோட்டம் வாழ்க செந்தமிழ் மணமே சூழ்க**
**சேர்ந்திருக்கும் யாவருமே பாச உணர்ச்சியில் ஆழ்க**

அதே போல் ஒரு புத்தாண்டுத் திருநாளன்றும் என் பாடல் ஒன்றை அவர் பாடினார்:

**புத்தாண்டுத் திருமகளே பூரிக்க வைப்பவளே**
**புன்னகையே தூவி வரவேற்கின்றோமே**
**புத்துணர்வு நல்க வரம் கேட்கின்றோமே**

இந்த நெருக்கம் ஒரே ஆண்டுதான் நீடித்தது. அந்தப் பெண்கள் கூட்டம் வேறு வேறு கல்லூரிகளில் சேர்ந்து விடவும், என்னையும், சிவத்தையும் தவிர மற்ற நண்பர்கள் வெவ்வேறு கல்லூரிகளுக்குப் போய் விடவும், சிந்தனைக் கோட்டமும் மெல்லச் செயலிழந்து போனது. நானும் ஷோபனாவும் பிறகு ஓராண்டுக் காலம் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டவில்லை.

*1971–ஆம் ஆண்டு மீண்டும் ஷோபனா தன் தோழி மங்களசுந்தரியோடு ஏதோ நிமித்தமாக பலாத்தோப்பு வீட்டுக்கு வந்து என்னைச் சந்தித்தாள். நவராத்திரி நாளொன்றில், அவளும், மங்களசுந்தரியும் வந்து என் வீட்டில், "மலரின் மேவு திருவே" என்ற பாரதி பாடலைப் பாடும் போதுதான், என் உள்மனத்தின் ஓசையை நான் உற்றுக் கேட்டேன். ஷோபனா என் இதயத்துக்குள் நுழைந்து அமர்ந்து விட்டதை அந்தக் கணத்தில் நான் உணர்ந்தேன்.*

*அவளும், மங்களசுந்தரியும் கேட்டுக் கொண்டபடியே நான் 'மாணவரிஸம்' என்ற மாத இதழ் தொடங்கினேன். அதன் ஆசியராக நானும், இணையாசிரியராக ஷோபனாவும் பொறுப்பேற்றுக் கொண்டோம்.*

*நானும் மங்களசுந்தரியும் பேசிக் கொண்டே இருப்போம். ஆனால், ஷோபனா அதிகம் பேச மாட்டாள். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ! நாங்கள் ஒருவரை ஒருவர் காதலிப்பதாகச் சொல்லிக் கொண்டதே இல்லை. திடீரென்று ஒருநாள் அவளிடம், "நம் திருமணம் இன்னும் 3 வருடங்களுக்குப் பிறகுதான் என்று நான் சொன்னதும், அது பற்றி அவள் மறுப்பு எதுவும் சொல்லாமல் இருந்ததும், 'வெரி கேஷுவல்', 25 ஆண்டுகளுக்குப் பிறகு நான் எழுதிய ஒரு கவிதை வரி நெஞ்சில் எதிரொலிக்கிறது: "மனமும் மனமும் தழுவிக் கொள்ள மௌனம் போதாதா!"*

*நானும் ஷோபனாவும் தினமும் சந்தித்துக் கொள்வதும், நண்பன் சசியும், தோழி மங்களசுந்தரியும் எப்போதும் எங்களுடன் சுற்றுவதும், ஏன் ஷோபனாவுக்குப் பிறந்தநாள் பரிசு வாங்க என் சகோதரி மாலினியே வந்து பரிசைத் தேர்வு செய்ய உதவியதும், ஒருநாள் ஷோபனா படித்த கல்லூரியில், அவளுடைய ஆங்கில இலக்கியத்துறை மாணவிகள் கோனே நீர்வீழ்ச்சிக்கு மறுநாள் சுற்றுலா போக இருப்பதைக் கேள்விப்பட்டு, அதிகாலை 7 மணிக்கெல்லாம் அவள் படித்து வந்த ராணி மேரிக் கல்லூரி வாசலுக்குக் காரில் சென்று அந்தக் கல்லூரிப் பேருந்தில் ஏறி விட்ட ஷோபனாவை இறங்கச் சொல்லி, என் காரில் ஏற்றிக் கொண்டு மஹாபலிபுரத்துக்குக் கடத்திச் சென்றதும், மாலை அவள் வீட்டுக்குப் போன பிறகு கோனே ஃபால்ஸ் எப்படியிருந்தது என்று அவள் அம்மா கேட்ட கேள்விக்கு நேரில் பார்த்தது போல் பதில் சொல்லி அவள் கதையளந்ததும், அதெல்லாம் ஒரு பொற்காலம்!*

*சென்னை வானொலியில் "எந்தன் காதலி" என்ற தலைப்பில் கவிதையே படித்து விட்டேன் என்றால் அதைவிட ஊருக்கெல்லாம் பறையறைந்து சொல்ல என்ன இருக்கிறது. அந்தக் கவிதை ஏட்டிலும் இல்லை, என் நினைவிலும் முழுமையாக இல்லை என்பதால்,*

*இப்படிப்பட்ட கவிதைகளையும் சேகரித்து வைத்திருக்கும் நண்பன் சு.ரவியிடமிருந்து அதைப் பெற்று இங்கே தருகிறேன்:*

எந்தன் காதலி எப்படி இருப்பாள்
என்பதை இங்கே இயம்பிட வந்தேன்
நடனத் தினவை நடையிற் காட்டி
நாடகப் பார்வையில் நளினமும் பூட்டி
மாடத்தில் உலவும் மாருதம் போலென்
இதயத் துள்ளே இலங்கும் தேவதை
மதனன் விடுத்த மலர்க்கணை இன்பப்
பதத்தில் இறக்கிய பாகு பழகும்
விதத்துக் கேயொரு விளக்கம் ஆவாள்
புன்னகை என்றொரு புதுப்பெய ராலே
ஜலத ரங்கத்தின் சப்தம் எழுப்பும்
அலங்காரக் கோயில் அவள்நுதல் நல்ல
மங்கலத் தாமரை மலர்ந்த தடாகம்
எங்குசென் றாலும் எந்தன் நெஞ்சின்
நிழல்போல் வருவாள் நித்திலக் குவியல்
தழலிடை இருப்பது போலத் தோன்றும்
சிரித்த வாயால் சிணுங்கி மகிழ்வாள்
கோலம் இழைத்த குளிர்நில வேபோல்
நாணம் படர்ந்த கன்னக் கனிகள்
தளிர்க்கரத் தாளின் தனிச்சிறப் பாகும்
அவளுடல் அசைவுகள் அருங்கலை விளக்கம்
சுவையூட்டும் அந்தச் சுந்தரச் சிற்பம்
அடிக்கடி நெற்றியில் விழும்குழல் ஒதுக்கலை
எப்படிப் புகல்வது அதுவொரு புதுக்கலை
விழியின் சுழற்சி விந்தை முயற்சி
அழியா அழகின் அனுபவக் கவர்ச்சி
நேரிழை யாளிவள் நெளிகுழல் போல
நெருங்கிய உறவும் நீடிய வாழ்வும்
எம்மிரு வர்க்கும் என்றும் இருக்கும்
இவ்வித மாக இருக்கும் அந்தச்
செவ்விதழ்க் கொடியுடன் சேர்ந்து
இன்பக் கனவில் எனைமறப் பேனே

*அந்தக் காலக் கட்டத்தில் எத்தனைக் காதல் கவிதைகள் ஊற்றெடுத்து வந்தன! ஒருநாள் வருகிறேன் என்று சொல்லி விட்டு அவள் வரமுடியாமற் போனதும் எழுதிய கவிதையின் சில அடிகள் மட்டும், அங்கொன்றும் இங்கொன்றுமாக, இன்னும் நினைவில் இருக்கின்றன:*

வடமிட் டிழுத்தால் வராத தேருண்டா
புடமிட்ட பொன்னே புரிந்து கொள்ளடி
. . . . . . . .
நீவர வேண்டாம் நான்வரு கின்றேன்
நேரம் கடந்தால் நேற்றைய கதைதான்

*முதல்நாள் கடற்கரையில் சந்தித்துக் கொண்டோம். கடற்கரையை விட்டால் இளம் காதலர்களுக்குப் புகலிடம் வேறு உண்டோ? மறுநாள், அந்த நிகழ்வுகளை நினைத்துக் கொண்டேன்.*

சோகத்தில் இழைகின்ற இசையைப் போல
சொப்பனத்தில் இழைத்திட்ட பொழுதைப் போல
மேகத்தில் தோன்றுகிற வண்ணம் போல
மேல்வண்ணம் இல்லாத ஏகாந் தத்தில்
மோகத்தீ கொளுத்தியதில் மூழ்கி மூழ்கி
முத்தமழை பொழிகின்ற இருவர் காம
யாகத்தில் உணர்கின்ற இன்ப மெல்லாம்
யாருக்கும் புரியாத விந்தை யன்றோ

ஆடையெலாம் அர்த்தத்தை இழந்து விட்ட
ஆனந்த நிலையினிலே ஆழ்ந்தி ருந்து
வாடையினால் வாட்டமுடி யாத வண்ணம்
வடவத்தீ போல்வெம்மை விளையச் செய்து
பூடகமாய் இருந்தசில புதிர்க ளெல்லாம்
புரிந்துவிட்ட நினைப்பினிலே புல்ல ரித்து
கூடலிலே தமிழ்தானா வளரும் இன்பம்
கூடத்தான் வளருமென்று கூறிக் கொண்டு

நாடகமாய் நாமிருந்த நிலைமை தன்னை
நள்ளிரவில் நினைத்தாயா நடுங்கி னாயா
சூடுவதற் கரியதொரு மலரே வெய்யில்
சுடுவதற்கும் அரிதான அல்லி நீதான்
பாடுவதற் கொருராகம் வேண்டும் இன்பம்
பரிமளிக்க நீயெனக்கு வேண்டும் பக்தர்
தேடுகின்ற தெய்வங்கள் நமக்கு வேண்டாம்
தெளிவான காதல்தான் நமது தெய்வம்

*போட்டி, பலத்த போட்டி! ஆம், நான் விவேகானந்தா கல்லூரியில் தத்துவம் இளங்கலை மாணவனாக இருந்த போது*

நிறைய படித்தேன். ப்ளேடோ முதல் கார்ல் மார்க்ஸ் வரை, ப்ரும்ம சூத்திரங்கள் முதல் ராதாகிருஷ்ணன் வரை எல்லா அறிவு மூலங்களையும் படித்துப் பயில வேண்டுமென்ற தாகம் ஒரு புறம், காதல் வயப்பட்ட வாலிபத்தின் தாக்கம் ஒருபுறம், சமுதாயத்தைச் சீர்திருத்தி நல்லுலகம் காணத் துடித்த நோக்கம் ஒருபுறம், இப்படிப்பட்ட போட்டிகளுக்கு நடுவில் சிக்கிக் கொண்டேன். ஒரு கவிதையில் இந்தப் போட்டியை இப்படித்தான் குறிப்பிட்டிருந்தேன்.

**கம்பன் வந்து கதவை இடிக்கிறான்**
**வாத்ஸ்யா யனனோ வம்புக் கிழுக்கிறான்**
**அசந்தர்ப்ப மாக அவசரப் பட்டு**
**வசந்தம் வந்தெனை வரவேற் கின்றது**

மனத்தில் உண்மையான ஆனந்தம் குதூகலமாகப் பொங்கிப் பெருகும் தருணங்கள் எவர் வாழ்விலும் அடிக்கடி நிகழ்வதில்லை. எப்பொழுதேனும், சில கணங்களே அப்படி அமைகின்றன. அந்தக் கணங்களைச் சிதைக்கவோ, ஆனந்த அனுபவங்களைத் தடுக்கவோ வேறு யாருக்கும் உரிமை கிடையாது. காதற் கணங்கள் கடவுளின் பரிசுகள். நல்ல வேளை எங்கள் இருவர் வீட்டிலுமே எங்கள் காதலுக்குத் துளிக்கூட எதிர்ப்பு எழவில்லை. அது எங்கள் மேல் பெரியவர்கள் வைத்திருந்த நம்பிக்கையின் வெளிப்பாடு.

1973–ஆம் ஆண்டு நவம்பர் 8–ஆம் நாள், எங்கள் பால்ய விவாகம், எனக்கு 20, அவளுக்கு 19, சென்னை, ஹேமமாலினி திருமண மண்டபத்தில், திருமதி எம்.எல்.வி. கச்சேரியுடன், அன்றைய தமிழ்நாடு ஆளுநர் உட்பட, அத்தனைப் பெரியவர்களும் வந்து வாழ்த்த, மிகச்சிறப்பாக நடந்தேறியது.

என் திருமண வரவேற்பில், என் அத்தனை நண்பர்களுக்கும் நடுவே சிவம் மட்டும் இல்லை. ஏன் என்று எனக்கும் புரியவில்லை. வரவேற்பு முடியும் தருணம், சிவம் வேகமாக மண்டபத்துக்குள் நுழைகிறான். அவன் கையில் ஒரு பெரிய கதவு, இல்லை, கதவு அளவில் கண்ணாடி பிரேம் போட்ட வாழ்த்து மடல். "இதுக்குத்தான் இவ்வளவு நாழியாகி விட்டது" என்கிறான். அதில் இருந்த ஒரு கவிதை, அவ்வளவு கூட்ட நெருக்கடியிலும், ஷோபனாவைப் போலவே என் நெஞ்சில் நுழைந்து நீங்கா இடம் பெற்று விட்டது:

**ஒருநாள் கண்டாய் மறுநாள் நின்றாய்**
**உயிரே அவர்தான் என்கின்றாய் - அவர்**
**வருநாள் தானே திருநாள் என்று**
**மனமே எனையேன் தின்கின்றாய்**

*சிவத்தின் கவிதை ரசனையை மிகவும் ரசித்தேன். அந்தக் கவிதையை எழுதியவர், "இரவு பகல் மாலை எழுதுவதே வேலை" என்று கவிதையிலேயே பிரகடனம் செய்த டாக்டர் மின்னூர் சீனிவாசன்.*

*25 ஆண்டுகளுக்குப் பிறகு, ஷோபனா எழுதிய கண்ணன் பாடல்கள், எஸ்.பி.பாலசுப்பிரமணியமும், வாணி ஜெயராமும் பாட, ரெஹானின் பின்னணி இசையோடு பதிவாகி, "கிரிதாரி" என்ற இசைப்பேழையாகத் தயாரானது. அதை வாணி மஹாலில் வெளியிட்டுப் பேசும்போது, எங்கள் திருமண வைபவத்தை மறவாமல் நினைவு கூர்ந்து, அதில் நாங்களும், எங்கள் தோழர், தோழியர் கூட்டமுமாக எப்படி அது ஒரு கோலாகலமான இளமைத் திருவிழாவாக இருந்தது என்று குறிப்பிட்டு, அதைத் தாம் கண்டு களித்ததைப் பகிர்ந்து கொண்டார் கவியரசி சௌந்தரா கைலாசம் அம்மையார்.*

# 19

என்னிடம் மிகுந்த பாசத்தோடு பழகியவர், அன்பே வடிவான கவியரசி சௌந்தரா கைலாசம் அம்மையார். பத்து ஆண்டுகளுக்கு முன், 'மின்னற் சுவை' என்ற என் நூலுக்கு நான் அவர்களுடைய அணிந்துரை வேண்டுமென்று கேட்ட போது கண்நோயால் பாதிக்கப்பட்டுப் படிக்க முடியாத நிலையில் தாம் இருந்த போதும், மறுக்காமல், தருகிறேன் என்று சொல்லிக் கவிமாமணி புதுவயல் செல்லப்பன் அவர்களைக் கொண்டு முழு நூலையும் படிக்கச் சொல்லிக் கேட்டு, மிக நல்ல அணிந்துரை வழங்கினார். அவருடைய அன்பை நான் மறக்க முடியுமா?

அவர் ஒரு சிறந்த கவிஞர். கவிதையின்மேல் அளவு கடந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தெய்வ பக்தியும், தேச பக்தியுமே தம் இரு கண்களாகக் கொண்டிருந்தார். இந்திய சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி வானவில் பண்பாட்டு மையத்தின் சார்பில் ஒரு கவியரங்கம் ஏற்பாடு செய்த போது அவரை அழைக்க நான் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அப்போது, என்னைத் தம் இல்லத்தின் பூஜை அறைக்குள் அழைத்துச் சென்று அங்கே வைக்கப் பட்டிருந்த ஒரு கலசத்தைக் காட்டினார். அதில் வெறும் மண் இருந்தது. "தம்பி, இது வெறும் மண் இல்லீங்க. நான் இந்த பாரத நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கிருந்து ஒரு பிடி மண் எடுத்து வந்து இந்தக் கலசத்தில் போட்டு வைப்பேன். இது எப்பொழுதும் பூஜை அறையில்தான் இருக்கும். இதை நான் பாரத மாதாவாகவே ஆவாகனம் செய்து பூஜை செய்து வருகிறேன்" என்று அவர் சொன்னதும் நான் நெகிழ்ந்து போனேன். அவர் எப்போதும் சிரித்த முகமாகவே காணப்பட்டதற்கு, அவருடைய அசைக்க முடியாத தெய்வ பக்தியே காரணம். அவரே கவிதையில் இதைச் சொல்கிறார்:

**சுடும்போதும் சிரிப்பேன் துன்பம் சுட்டபின் தென்றல் வந்து**
**தொடும்போதும் சிரிப்பேன் தீய சொல்லினால் நெஞ்சில் காயப்**
**படும்போதும் சிரிப்பேன் இந்தப் பாரெலாம் போற்றி மாலை**
**இடும்போதும் சிரிப்பேன் என்றன் இதயமே இறைவன் சோலை**

*கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் நின்று கொண்டு, சிவபெருமான் திருவடியை எண்ணித் தம் ஐம்புலன்களுக்கும் அது குளிர்ச்சி தந்த பரவசத்தை ஒரு பெருங்கிழவர் பாடினாரே, அந்தப் பாட்டு இதில் எதிரொலிக்கிறதே!*

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே**

*1999, கார்கில் போர் நடந்த போது, நம் வீரர்களுக்கு உற்சாகமும், உத்வேகமும் தர வானவில் பண்பாட்டு மையம் ஒரு முழுநாள் கவியரங்கம் நடத்தியது. அந்தக் கவியரங்கத்தில், சென்னையில் இருந்த முன்னணிக் கவிஞர்கள் அத்தனைப் பேரும் கலந்து கொண்டு கவிதை படித்தார்கள். அந்தக் கவியரங்கம் முழுதும் ஒலிப்பேழையாகப் பதிவு செய்யப்பட்டது. அதன் நூறு பிரதிகளை எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்று தீவுத் திடலுக்குப் பின்புறம், ஜிம்கானா கிளப்புக்கு எதிரில் உள்ள போர்ப்படைத் தளபதி அலுவலகத்தில் தலைமைத் தளபதியைச் சந்தித்து அவரிடம் நேரில் வழங்கத் திட்டமிட்டோம். அந்த ஒலிப்பேழைகளைப் போர்முனையில் இருந்த தமிழ் தெரிந்த வீரர்களுக்கு கொண்டு சேர்க்குமாறு அவரிடம் கேட்டுக் கொள்ளவும் தீர்மானித்தோம். நடக்க முடியாமல் கால் எலும்புகள் பாதிக்கப்பட்டிருந்த போதும் கவியரசி அம்மையார் தாமே முன் வந்து, அந்த ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிப் படைத்தளபதியிடம் அந்தப் பேழைகளைத் தந்த நிகழ்ச்சியை மறக்கவே முடியாது.*

*நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதை முழக்கங்களைக் கொண்ட இசைப்பேழைகளைப் போர்முனைக்குக் கட்டாயம் அனுப்பி வைப்பதாக அன்றைய படைத்தளபதி உறுதியளித்தார்.*

*'கவிதைகளைப் போர்முனைக்கு அனுப்பிய முதல் ஆள் நீதானப்பா' என்று புத்தி சிகாமணி முணுமுணுக்கிறான்.*

*'அப்பா சிகாமணி, முன்காலத்தில் போர்க்களத்திலேயே நின்று புலவர்கள் போர்ப்பரணி பாடியிருக்கிறார்கள். ஜயங்கொண்டான் என்ற புலவர் அப்படிப் பாடிய காவியம்தான் 'கலிங்கத்துப் பரணி'. சாதாரண வார்த்தைகளை விடக் கவிஞர்களின் கவிச்சொற்களுக்கு*

வலிமை அதிகம் என்பதுதான் என் கட்சி. 'வல்லமை' மின்னிதழில் நம் இலக்கியப் பேழைக்கு என்ன பெயர் கொடுத்திருக்கிறார்கள் பார்த்தாயா? சொற்சதங்கை! மற்றவர் நாவில் நடக்கும் சொற்கள், கவிஞர் நாவில் மட்டுமே நடனமாடும். அந்தத் தாண்டவத்தை, அதுவும் ருத்ர தாண்டவத்தை நம் போர் வீரர்கள் கண்டால், போர்முனையில் அவர்களுக்கு மேலும் வீர உணர்ச்சி உண்டாகும். நீ ஏட்டுச் சுரைக்காய், இதெல்லாம் உனக்கு விளங்காது, விடு' என்கிறேன்.

இந்த விவாதத்தை ஒதுங்கி நின்று கேட்டுக் கொண்டிருந்த மனோன்மணி திடீரென்று, கலிங்கத்துப் பரணியிலிருந்து ஒரு பாடலைத் தன் கணீரென்ற குரலெடுத்துப் பாடுகிறாள்.

**பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே**
**போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத**
**பருவயிரத் தோளெங்கே எங்கே என்று**
**பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்**

மனோன்மணியின் குரல் அதிர்வுகளுக்கு ஏற்றவாறு பைரவியின் நடன அசைவுகள் நிழற்படங்களாக, என் நினைவுத் திரையில் மெல்ல . . மெல்ல. .! மெய்சிலிர்க்கிறது! அட, ஒரு நோக்கில் மனோன்மணிதான் பைரவியோ!

சிகாமணி சொல்கிறான்: 'நீர் சொன்னதெல்லாம் எனக்கு வெளங்கலே. ஆனா அவ பாடினதும் புரிஞ்சுடுத்து ஓய், பாட்டு எப்படி வீர உணர்ச்சியத் தூண்டும்னு. மயிர்க்கூச்செறியுது!!'

எனக்குள் இருந்து பாரதியின் குரல் ஒலிக்கிறது:

**பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா**
. . . . . . .
**பூதங்கள் ஒத்துப் புதுமைதரல் விந்தையெனில்**
**நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ!**

நான் கவிதை எழுதத் தொடங்கிப் பல நாட்கள், இல்லை, பல ஆண்டுகள் கழித்தே பாரதிக்கு நான் முழுமையாக ஆட்பட்டேன். நான் விரும்பிய கவிஞர்களில் ஒருவனாக மட்டுமே இருந்த அவன் என் நெஞ்சின் நாயகனாக விஸ்வரூபம் எடுத்தது ஒரே கணத்தில். அந்த தரிசனத்தை எனக்கு முதலில் சூசகமாகக் காட்டியவர் கவிமாமணி தேவநாராயணன். அது நடந்தது சென்னை ஏ.வி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில், 1971–ஆம் ஆண்டு. பிறகு அந்த தரிசனத்தில் என்னை முழுமையாக மூழ்கச் செய்தவர் அருமைக் கவிஞர் கண்ணதாசன்; அது நடந்தது 1980–ல் என்று நினைக்கிறேன். இந்த இரண்டு தரிசனங்களையும் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டும்.

# 20

எட்டாம் வகுப்பு மாணவனாக நான் கவிதை எழுதத் தொடங்கிய சில மாதங்களிலேயே காவியங்கள் எழுத வேண்டும் என்ற ஆசை என்னைப் பற்றிக் கொண்டது. முதல் முயற்சியாக, சாம்ராட் அசோகனின் மனமாற்றத்துக்கு வழிவகுத்த கலிங்கத்துப் போரை மையமாகக் கொண்டு ஒரு குறுங்காவியம் நாலைந்து நாட்களில் எழுதி முடித்தேன். கலிங்கத்துப் பரணியில் தொடங்கிய என் தமிழ்ப் பயிற்சி, அதற்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட அசோகனின் கலிங்கப் போரில் வளர்ந்தது பற்றி மகிழ்ந்தேன். "வீரமா ஈரமா" என்ற தலைப்பில் எழுதிய சாம்ராட் அசோகன் சரித்திரக் காவியத்தின் கைப்பிரதியை முதலில் என் ஆசான் தண்டமிழ்க் கொண்டலிடம் தந்தேன். தவறுகள் இருந்தால் திருத்திக் கொடுக்க வேண்டினேன். பல நாட்கள் ஆகியும் அவருக்கு ஏனோ அதைப் படித்துப் பார்க்க நேரம் கிடைக்கவில்லை. "முதலில் இதைப் படித்துச் சரி பார்க்க குப்புசாமி வாத்தியாரிடம் கொடு, நான் பிறகு பார்க்கிறேன்," என்று அவர் சொன்னதும் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியிலேயே இன்னொரு தமிழாசிரியராக இருந்த குப்புசாமி அவர்களிடம் அதைத் தந்தேன். மறுநாள் அவர் என்னை அழைத்து, கவிதை நாடகம் நன்றாக இருப்பதாகப் பாராட்டி விட்டு, "உன் வீடு எங்கே?" என்று கேட்டார். சென்னை, மந்தைவெளி, ராமகிருஷ்ணா மடம் சாலையில், ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு எதிரில் என்று நான் சொன்னதும், வெகு அருகிலேயே இருக்கும் அவர் இல்லத்திற்கு மாலை 7 மணிக்கு என்னை வரச் சொன்னார். சென்றேன். தினமும் வரச் சொன்னார். இரண்டு வாரங்கள் தொடர்ந்து சென்றேன். என் கவிதை நாடகத்தின் ஒவ்வொரு பாடலையும் வரிவரியாகப் படித்து, சிறு திருத்தங்களும் செய்து, பல இடங்களில் நயம் வியந்து பாராட்டி, மிகப் பெரிய கவிஞர்களின் புகழ்மிக்க வரிகளுடன் ஒப்பு நோக்கி,

இரண்டு வாரங்கள் தினமும் மாலை அவர் எனக்காகச் செலவழித்த கணங்களுக்கு என் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தாலும் போதாது. அந்த நாடகத்தின் கவிதைகளை நான் அடியோடு மறந்து விட்டாலும், நான் என்றும் மறக்க முடியாதவராய் என் நெஞ்சில் குப்புசாமி வாத்தியார் இடம்பெற்று விட்டார்.

கோழியைக் கேழி என்று எழுதிக் கேலிக்கு ஆளான நான் தமிழ் வகுப்பில் எழுதிய கட்டுரைகள் பாராட்டுப் பெற்றன. கண்ணகி பற்றிய ஒரு கட்டுரையை இப்படி முடித்திருந்தேன்: "கண்ணகியின் புகழைச் செங்குட்டுவன் வடித்த கல்லும் சொல்லும்; இளங்கோவின் சொல்லும் சொல்லும்". அந்த வரிகளின் பக்கத்தில் என் ஆசான் தண்டமிழ்க் கொண்டல் எழுதியிருந்தார்: "கல்லும் சொல்லும் சொல்லும் சொல்லும் என்னும் சொல்லும் என்னை வெல்லும்"

ஓராண்டுக்கு முன் என் விடைத்தாளை விட்டெறிந்த ஆசானே இப்படி எழுதியதும் எனக்கு எப்படி இருந்திருக்கும்!

என் ஆசான் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன் அவர்களிடம் நான் பயின்றது சொல்லாளுமை. சொற்கள் எப்படி அடுக்கடுக்காக நெருங்கி வர வேண்டும், அதே சமயத்தில் ஒன்றிலொன்று கோக்கப்பட்டு ஊடுபாவி இருக்க வேண்டும் என்ற நுட்பத்தை அவருடைய கவிதைகளில் இருந்தே கற்றுக் கொண்டேன். அருவிபோல் பொழியும் சொல்லோட்டம் அவர் நடையின் தனிச்சிறப்பு:

கொஞ்சுமொழி மழலையைக் கோலத் தியற்கையைக் கோயிலாக் கொண்ட இறைவா

**அஞ்சுதலை உடையார்கள் ஆறுதலை அடைகின்ற**
**அற்புதம் புரிகின்றவா**
**தஞ்சமென யாங்களே பஞ்சனைய பதமலர்கள்**
**பற்றினோம் பற்றற்றவா**
**வஞ்சமறு நெஞ்சிலே விஞ்சுமருள் கொஞ்சவரு**
**வள்ளலே வரமருளவா**

கருத்துச் செறிவும் சொல்லழகும் கைகோத்து நடக்கும் அவர் பாடல்களில்:

**பாறைக் கதவைப் பார்க்கும் விதவை**
**கூறைப் புடவை கொடுவொரு தடவை**

எழுத்தெண்ணிப் பாடும் கட்டளைக் கலித்துறைக்கு அவருடைய ஒரு பாடலே கட்டளைக்கல்:

துலங்குவெண் ணீறு துணிப்பிறைக் கோடு துணைக்கரங்கள்
இலங்குநற் றொந்தி இறைவனென் புந்தி இருக்கையிலே
விலங்கெனும் வாழ்வு விளங்கிடும் தாழ்வு விரைந்தழியும்
கலங்கிடும் உள்ளம் களிப்பெனும் வெள்ளம் கலந்திடுமே

இந்தச் சொற்கட்டுக்கோப்பே வெகுநாட்களுக்குப் பிறகு எனக்குள் இருந்து வியக்கத் தக்க கட்டளைக் கலித்துறை பாடல்களை வரவழைத்தது.

1984–ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட ஒவ்வோர் ஆண்டும் சபரி மலை செல்லும் நான் எப்பொழுதும் மலையேற மிகவும் சிரமப் படுவேன். மூச்சுத்திணறித் திண்டாடுவேன். மலையில் இருந்து இறங்குவதில் எனக்கு அவ்வளவு சிரமம் நேர்ந்ததில்லை. பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை அதிக சிரமமில்லாமல் மலையில் ஏறிவிட்டதும் மகிழ்ச்சியாக, அடாடா, இவ்வளவு எளிதாக ஏறி வந்து விட்டேனே, இனி இறங்குவது இன்னும் சுலபமாக இருக்கப் போகிறது என்று மனத்துக்குள் சந்தோஷப் பட்டுக் கொண்டேன். ஆனால், அந்த ஆண்டு மலையில் இருந்து இறங்கும் போது, காலிரண்டும் துவள, உடல் ஒத்துழைக்க மறுக்க, முடியவில்லை ஐயப்பா என்று வாய்விட்டுக் கதறியழும் நிலை ஏனோ ஏற்பட்டது. காரணமே புரியவில்லை. எல்லாவற்றுக்கும் நமக்குக் காரணம் புரிந்து விடுகிறதா?

“என்ன சிகாமணி, சத்தமே காணோம்!”

அப்படி அழுது, தொழுது இறங்கியபின், சென்னை திரும்பும் வழியில்தான் ‘பிறவா வேட்கைப் பஞ்சகம்’ என்று ஐந்து கட்டளைக் கலித்துறைப் பாக்கள் வந்தன:

எழச்செய்தாய் சென்னி முடிதாங்கி மாமலை ஏறிவந்து
தொழச்செய்தாய் கால்கள் துவளத் துவள இறங்குகையில்
அழச்செய்தாய் ஆனால் அடுத்த பிறவிக் கருங்குகையில்
விழச்செய்தால் உன்னை விடமாட்டேன் வீர மணிகண்டனே

விழலுக் கிரைத்தநீர் இல்லை விரதம் நுதல்விழியின்
அழலுக் கெரிந்தவன் சாட்சி ஹரிஹரா உன்பதத்தின்
நிழலை அடைய நெடுந்தூரம் வந்தேன் மறுபிறவிச்
சுழலில் தவிக்க விடவேண்டாம் சோதி மணிகண்டனே

புகலின்றி வாழ்க்கைப் புதைமணல் சிக்கிப் புலம்புகின்றேன்
பகலை இரவாக்கும் பேரொளி யேயுந்தன் பாதமலர்
அகலா திருக்கும் அனுபூதி வேண்டும் கருவறையில்
புகச்செய்ய வேண்டாம் புனிதனே புண்ணிய பாலகனே

மறைவா யிருந்தாலும் காடு மலைகள் கடந்துவந்தே
இறைவா உனைநான் இருகண்க ளாலும் பருகிவிட்டேன்
மறவாமல் எந்தன் மனத்துக் கினிய வரம்தருவாய்
பிறவாமை யன்றிப் பிறிதொன்றும் வேண்டாப் பிடிவாதமே

துறவிக்கும் உண்டு துளியச்சம் நீடு துயில்நடுவே
மறலிக் குயிரைப் பறிகொடுக் கின்ற மரணபயம்
பிறவிப் பிணிதீர மட்டுமே நெஞ்சைப் பிணித்துவைத்தேன்
மறந்தும்நான் வேறு வரம்கேட்க மாட்டேன் மணிகண்டனே

மீண்டும், 1966–க்கே போவோம். "வீரமா ஈரமா" நாடகத்தைத் தொடர்ந்து, நூர்ஜஹான் கவிதை நாடகம், இன்னொரு சமூகக் கவிதை நாடகம், அதாவது, முற்றிலும் சொந்தச் சரக்கு, எழுதினேன். அந்த நாடகங்களின் பிரதிகள் எதுவுமே என் வசம் இல்லை. ஓரிரு பாடல்கள் மட்டும் நினைவில் உள்ளன.

நாட்டைக் காக்கும் பணியில் காதலன் போர்முனைக்குச் சென்றுவிடத் தனிமையில் அழுதபடிப் படுத்திருக்கும் காதலியின் நிலையைச் சொல்லும் ஒரு விருத்தம் நினைவுக்கு வருகிறது:

நீர்த்துளிகள் நித்திலத்தின் குவியல் போலே
நேரிழையின் கன்னத்தில் வழிய ஓசை
சேர்த்துளிகள் செதுக்காத சிற்பம் அங்கே
தேம்பிக்கொண் டிருந்ததுதன் மேனி யெங்கும்
வேர்த்திருப்ப தாலவளும் முனக லோடு
மெல்லத்தான் புரண்டுபடுத் தாள்அக் காட்சி
தேர்த்திருப்பம் போலிருந்த(து) அந்தத் தேரின்
தெய்வமோ போர்முனையில் இருந்த தம்மா

இப்படி என் கவிதைப் பயணம் நடந்து கொண்டிருந்த போது, 1967–ல் என்று ஞாபகம், திரைப்படத் துறையில் என் வளர்ப்புத் தந்தைக்குப் பரிச்சயமாயிருந்த கவிஞர் தேவநாராயணன் என் வீட்டுக்கு ஒருநாள் வந்திருந்தார். என் கவிதை ஈடுபாடு பற்றிக் கேள்விப் பட்டதும் அடுத்த வாரம் தம் வீட்டில் நடைபெற இருந்த ஒரு கவியரங்கத்தில் நான் பங்குபெற்றுக் கவிதை படிக்க வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டார். மறுநாள் சென்றேன், மந்தைவெளி, செயிண்ட் மேரிஸ் சாலையில் இருந்த அவர் இல்லத்துக்கு. சிறிய கூடத்தில் சுமார் இருபத்தைந்து நபர்கள் அமர்ந்திருந்தனர். ஒருவர் தலைமை. அவர் அழைக்க ஒவ்வொருவராகக் கவிதை படிக்க, வந்திருந்தோர் ரசிக்க, எனக்கு எல்லாமே அதிசயமாக இருந்தது. அது பாரதி கலைக் கழகம் என்ற

நிறுவனத்தின் மாதமொரு கவியரங்க நிகழ்ச்சி என்று பிறகு தெரிந்து கொண்டேன். அன்று பாரதியின் புதிய ஆத்திசூடியில் இருந்து ஒவ்வொருவருக்கும் ஒரு வரி தலைப்பாகத் தரப்பட்டிருந்தது. எனக்குத் தரப்பட்ட வரி, "சைகையில் பொருளுணர்". என் முறை வந்தது. எழுந்து நின்று என் கவிதையைப் படித்தேன்:

**அன்றொருநாள் ஆலமரம் விரித்த நீழல்**
**அமைதியுடன் அழகுமிக அமைந்த சூழல்**

கல்லால மரத்தடியில் மௌனமாக வீற்றிருந்து, சின்முத்திரை காட்டிச் சைகையில் பொருளுணர்த்திய தட்சிணாமூர்த்தி பற்றிய என் பாடல் நல்ல வரவேற்பைப் பெற்றது.

நான் தொடர்ந்து பாரதி கலைக் கழகத்தின் கவியரங்குகளில் பங்கேற்று நிறைய கவிதைகள் படித்தேன். பாரதி கலைக் கழகத்தின் தலைவர் பாரதி சுராஜ் மிகப் பெரிய கவிதை ரசிகர். நான் சந்தித்த மிகநல்ல மனிதர்களில் ஒருவர். அவரைப் பற்றித் தனியாக ஒரு பகுதியில் பிறகு சொல்கிறேன்.

பல கவியரங்கங்களில் பங்கு கொண்டு பாராட்டுப் பெற்றேன். ஆனாலும், என் மனத்தில் ஏதோ நெருடல். நான் என் திறமையைக் காட்டிக் கொள்ளும் ஒரு சாதனமாகக் கவிதையைப் பயன்படுத்துவதில் மனோன்மணிக்குச் சம்மதம் இல்லை. அவள் முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள். விரைவில் நான் தலைப்புகளுக்குப் பாடல் எழுதுவதை நிறுத்தி விட்டேன். அந்தச் சூழலில்தான் ஏற்கனவே சொன்னதுபோல் கம்பன் வந்து கதவை இடித்ததும், வாத்ஸ்யாயனன் என்னை வம்புக் கிழுத்ததும். இலக்கியம், தத்துவம், அரசியல் சித்தாந்தம்; இப்படிப் பலதுறைகளிலும் நிறைய படித்தேன். நிறைய எழுதினேன். அந்தச் சமயத்தில்தான், முன்பகுதியில் குறிப்பிட்டது போல எனக்கு ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது; இல்லை, தரிசனம் கிட்டியது. அதற்கும் தேவநாராயணனே காரணமாக இருந்தார்.

# 21

ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் அருட்செல்வர் திரு.நா. மகாலிங்கம் அவர்கள் நடத்தி வரும் வள்ளலார்–காந்தியடிகள் விழாவில் ஒருநாள், 1970 என்று நினைக்கிறேன், கவிஞர் தேவநாராயணன் இறைவணக்கம் பாடினார். அவர் பாடிய பாடல், பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வரும் கலைமகள் துதி.

**தெளிவுறவே அறிந்திடுதல் தெளிவுதர மொழிந்திடுதல்**
**சிந்திப் பார்க்கே**
**களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவுபல**
**காட்டல் கண்ணீர்த்**
**துளிவரவுள் ளுருக்குதலிங் கிவையெல்லாம் நீயருளும்**
**தொழில்க ளன்றோ**
**ஒளிவளரும் தமிழ்வாணீ அடியனேற் கிவையனைத்தும்**
**உதவு வாயே**

அவர் பாடும் போது ஏனோ தெரியவில்லை என் கண்கள் கலுழ்ந்தன. என்னைச் சுற்றி நிறைய பேர் இருந்தனர் என்பதை மறந்து நான் கண்ணீர் சொரிந்து நின்றது எனக்கே அதிசயமாய் இருந்தது. அது என்னை மீறி நடந்த செயல். காரணம் புரியவில்லை. என் அகங்காரத்தை ஊடுருவிச் சென்று உயிர்நிலையை அளாவிப் பிசைந்து, சுற்றம் மறக்கச் செய்து, ஏன், என்னையே நான் மறக்கச் செய்த அந்தப் பாட்டு வரிகளை எண்ணி எண்ணி வியந்தேன். ‘மெய்மறத்தல்’ என்பதை எனக்கு நிதர்சனமாக உணர்த்தியது அந்தப் பாடல். உருக்கம் விளைவிக்கும் ஆற்றல் கவிதைக்கு உண்டு என்பதை உணர்ந்து கொண்டேன். “அழுதால் உன்னைப் பெறலாமே” என்ற அரற்றலின் பொருள் புரியத் தொடங்கியது. இதுவே மெய்யான தரிசனம் என்று குதிக்கத் தொடங்கினாள் மனோன்மணி.

சிகாமணியோ தன் வேலையைக் கச்சிதமாகச் செய்யத் தொடங்கினான்.

“நமக்கு என்ன தெரியும் என்பதில் தெளிவு வேண்டும். அதைப் பிறர்க்குச் சொல்ல முயலும் போதும் தெளிவாகச் சொல்ல வேண்டும். சிந்திப்பார்க்கே களிபெருகுமாறு அவர்கள் உள்ளங்களில் ஆனந்தக் கனவுகள் பல காட்ட வேண்டும். கேட்போர் மனமுருக வைத்து, அவர்களறியாமல் கண்ணீர் பெருக்கெடுக்கச் செய்ய வேண்டும். ஈதனைத்தும் உன் அருளால் மட்டுமே கிடைக்கக் கூடியவை. இவை அனைத்தையும் எனக்கு நீ அருள வேண்டும். இவ்வாறு தன்னுள் தமிழ்க் கவிதைகள் ஊற்றெடுக்கும் சுடராக விளங்கும் கலைமகளை பாரதி வேண்டுகிறான்.”

இப்படி ஒரு நீண்ட வியாக்யானப் பிரசங்கம் செய்தான் சிகாமணி. உண்மைதான், கவிஞனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவள் கலைவாணி. அந்தப் பாட்டை நான் கேட்கும் போதே, என் உள்ளத்தில் ஆனந்தக் கனவு பல காட்டி, என்னையறியாமல் கண்ணீர் பெருகும் உருக்கத்தை விளைவித்தவள் அந்த ஸ்வேத பத்மாஸனி தானே!

மனோன்மணி அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் ஆனந்தக் கூத்தாடினாள். ஆனந்தக் கனவு பல காட்டுவதும், கண்ணீர்த் துளிவர உள்ளுருக்குவதும் ஆகிய இரண்டு தொழிலையும் ஒரே சமயத்தில் நடைபெறச் செய்யும் அதிசயத்தில் திளைத்துப் பரவசம் அடைகிறாள். தத்தரிகிட தத்தரிகிட தித்தோம் . . .!

அர்த்தம் முழுதாகப் புரியாத போதும் வானொலியில் “ஓ துனியா கே ரக்குவாலே”, “ஓ ரே தால் மிலே நதீகி ஜல் மே” போன்ற ஹிந்தி பாடல்களைக் கேட்டு உருகிக் கண்பனித்திருக்கிறேன். அது த்வனியின் சிறப்பு. த்வனி என்ற தென்றல் வீசும் போது தலையசைக்கும் நாணல்தானே அர்த்தம்! கவிதையின் ஊற்றுக்கண் எங்கே என்பதை ஒருவாறு புரிந்து கொண்டேன்.

என் கவிதைப் பயணத்தில் இரண்டு திருப்புமுனைகள்: பாரதி கலைக்கழகமாகிய அடியார்கள் திருக்கூட்டத்தில் நான் சேர்ந்தது ஒன்று; பாரதியின் விஸ்வரூப தரிசன அனுபவம் நேர்ந்தது மற்றொன்று. இரண்டுக்குமே கவிமாமணி தேவநாராயணன் காரணமானார்.

**ஆயிரம் மேதைகள் பிறந்திடலாம் - அதில்**
**ஒருவன்தான் கவியம்மா - அந்த**
**ஒருகவிஞன் சொல்லும் ஒவ்வொரு கவியும்**
**உன்னருட் துளியம்மா - அதற்கிவ்**
**வுலகம் விலையம்மா**

*இப்படி மனம் நெகிழச் செய்யும் கவிதைகள் பல எழுதியவர் தேவநாராயணன். படிப்போர் நெஞ்சில் நம்பிக்கைச் சுடரேற்றும் வரிகளையும் வாரி வழங்கியவர் அவர்:*

**உழைக்கத் தெரிந்த என்னை உலகம் ஒருநாள் உணருமடா**
**ஒவ்வொரு கல்லாய் அடுக்கி வைத்தே - என்**
**மாளிகை உயருமடா**

*எப்பொழுதும் என் மனத்தின் ஒரு மூலையில் ஒலித்துக் கொண்டே இருக்கும் அவர் பாடல் இது தான்:*

**பாரதியே ஒரு பாரதம் - அவன்**
**பாட்டெல்லாம் தமிழ் மாருதம்**
**பாரத மண்ணின் காவிய வளம்தான்**
**பாரதி தோன்றக் காரணம்**
**அந்தப் பாட்டில் வரும் ஒரு வரி:**
**ஏட்டில் எழுத்தில் இனிவரப் போகும்**
**எழுச்சிகள் எல்லாம் பாரதி**

*இந்தச் சத்தியப் பிரகடனத்தைச் செய்த அவருக்கு வெறும் சொற்களில் நான் புகழஞ்சலி செய்வதைக் காட்டிலும், அவர் அமரரானதும் அவருக்கு நண்பர் வ.வே.சு. சூட்டிய அற்புதமான கவிதைப் பாமாலையை நினைவு கூர்வதே பொருத்தம்:*

**யுகமொன்று மறைந்ததைப்போல் உணர்வளித்துச் சென்றுவிட்டாய்;**
**சகமீதோர் வெற்றிடத்தை சாட்சியெனத் தந்துவிட்டாய்;**
**எங்கிருந்து வந்தாய்நீ; இன்றெங்கே சென்றுவிட்டாய்?**
**தங்கிய காலமெல்லாம் தமிழிசைத்தே வாழ்ந்திருந்தாய்;**
**கலைக்கழகக் கவியரங்கில் கணீரென்று நீபாடத்**
**தலையசைத்து இரசிக்காதோர் தமிழறியாச் செவிடரன்றோ!**
**பல்லவிகள் நீபாடப் பல்லக்காய் எம்செவிகள்**
**அள்ளிச் சுமந்து ஆடியதை மறப்போமோ?**
**உள்ளும் புறமும் வெள்ளையென வந்திடுவாய்;**
**கள்ளமிலா நெஞ்சோடு கவிக்கணைகள் வீசிடுவாய்;**
**பொய்ம்மைக்கு எதிரிநீ; புன்மைக்கு எதிரிநீ;**
**இன்மைக்கு எதிரிநீ; இயலாமைக்கு எதிரிநீ.**
**கடிவாளம் போடாத கவிதைப் புரவிகட்கும்**
**பிடிதாளம் எனச்சொல்லிப் பின்னலிசை போட்டவன்நீ!**
**உன் கவிதைகள் -**
**உலாவரும் இடம்தான் உதடுகளே யன்றி**
**உதிக்கின்ற இடமென்றும் உள்ளிருக்கும் இதயமன்றோ!**
**பாடம் நாக நந்தியார் எடுக்கப்**
**பாத்திரங்கள் நீ துலக்க**

நாடகம் நடத்தியதை யாமின்றும் மறப்போமோ!
சகுனியென நீவந்து சபைகண்ட அழகெல்லாம்
பகரவொணாப் பரவசந்தான் மாமனே மறப்போமோ!
தேசமொழியில் வந்த தெய்வத் திருக்கதையை
பாசமொழி நம்தமிழில் பேசவைத்துப் பார்த்தவனே!
வண்ணத் திரையதனில் கண்ணனை ஆடவைத்தாய்;
எண்ணத்தில் உயர்ந்ததனால் எங்கும் உயர்ந்து நின்றாய்;
மண்வளத்தால் பிறந்தவன்நம் மாகவிஞன் என்றுரைத்தாய்;
மண்ணுக்கு வளம்சேர்த்து மனதில் நிறைந்துவிட்டாய்.
உனையிழந்த வருத்தம் எமக்குண்டு; உனக்கில்லை.
வினைமுடிந்த நண்பர்களின் விருந்தாகச் செல்வதனால்;
இளங்கார் வண்ணன்முதல் நாகநந்தி, நாசீ.வ.
வளஞ்சார் வ.சா.ப., ரா.பு.த. என்று பலர்
வரவேற்கக் காத்துள்ளார் வாயிற் படிகளிலே!
ஞாலம் தந்த உறவா நம்முறவு இல்லையில்லை
காலம்தந்த வரவு நம் கவிஞர்களின் உறவு;
காலம் பிரிக்கும்; காலமே இணையவைக்கும்;
காலம் பெரிது நம் களம்சிறிது; விடைபெறுவேன்

*எனக்குக் கவிதா தேவியின் தரிசனத்தை முதன்முதலாகக் காட்டிய தேவநாராயணனை நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.*

*அடுத்த தரிசனம் நான்பெறக் காரணமானவர் கண்ணதாசன்.*

# 22

1980–ஆம் ஆண்டு, ஒருநாள் மாலை, தொலைக்காட்சியில் (அப்பொழுதெல்லாம் ஒரே சேனல் 'தூர்தர்ஷன்' மட்டுமே) ஒரு கவியரங்கம். கவிஞர் கண்ணதாசன் தலைமையில் கல்லூரி மாணவர்கள் கவிதை படித்தனர். கவிதை படித்த எல்லாக் கவிஞர்களுமே பாரதியைக் குறிப்பிடத் தவறவில்லை. கவிஞர் கண்ணதாசனும் பாரதி பற்றிய உணர்வை அவருக்கே உரிய பாணியில் பகிர்ந்து கொண்டார்.

பாரதி பற்றி நிறைய கவிதைகள் கேட்டிருக்கிறேன். அதிலும் உணர்ச்சி பூர்வமான அற்புதக் கவிதைகள் நிறையவே கேட்டிருக்கிறேன். அன்று அந்தக் கவியரங்கில் படிக்கப் பட்ட கவிதைகள் மிகச்சிறப்பாக இருந்தன என்று சொல்ல முடியாவிட்டாலும், அக்கவியரங்கம் முழுதும் பாரதியின் உணர்ச்சிப் பெருக்கு, நீறு பூத்த நெருப்புப் போல இழையோடியிருந்தது. அன்று படிக்கப்பட்ட கவிதை வரிகளைக் காட்டிலும், அவை நினைவு படுத்திய பாரதியின் வரிகளிலும், அவன் வாழ்க்கையில் சந்தித்த சோதனைக் களங்களிலும் என் மனம் தோய்ந்து விட்டது. என்னை அறியாமல் அந்தக் கவிதைகளின் நடுவிலிருந்து முண்டாசுக் கவிஞன் முளைத்தெழுந்து என் மனத்திரையை ஆக்கிரமித்துக் கொண்டான். ஓர் உத்வேகத்தோடு என் உள்ளத்திலிருந்து சில கவிதை வரிகள் ஊற்றெடுத்து வந்தன. வந்த வரிகளை எழுதி வைத்துவிட்டுப் படித்துக் கூடப் பார்க்காமல் காத்திருந்தேன்.

ஷோபனா செய்தி படித்து முடித்துவிட்டு வந்து வீட்டுக்குள் நுழைந்ததும், பரபரப்பாக அவளிடம் அந்தக் கவிதையைப் படித்துக் காட்ட முயன்று, படிக்க முடியாமல் குரல் தழுதழுக்க, நான் அழ, ஷோபனாவும் அழச் சற்று நேரம் ஒரே உணர்ச்சி மயமாகக் கழிந்தது. அதை அழுகை என்று சொல்வதா, உள்ளத்தின் ஆழத்

திலிருந்து பீறிட்டெழுந்து வந்த உணர்ச்சிப் பிரவாகம் என்று சொல்வதா?

இது நடந்து சில நாட்களுக்குப் பிறகு பாரதி கலைக்கழகத்தில், ஹா.கி.வாலம் அம்மையார் நினைவுக் கவியரங்கத்தில் அந்தக் கவிதையைப் படிக்கத் துணிந்தேன். படித்து முடிக்கும் போது மீண்டும் தொண்டையடைக்கக் கண்ணீர் பெருக்கினேன்.

அந்தக் கவிதை:

அவனுக்காகக் கொஞ்சம் அழக்கூடாதா
புதைமண லில்சில விதைகள் தூவப் புறப்பட்டானே
போகும் வழியில் எல்லாம் நெஞ்சு மிதிபட்டானே
அதையும் மீறிச் சென்றே கனவுப் பயிர் வைத்தானே
அதற்குத் தன்னை ஆகுதி யாக்கி உயிர்விட் டானே
அவனுக்காகக் கொஞ்சம் அழக்கூடாதா

கானல் நீரில் காணி நிலத்தைக் காண நினைத்தானே
காட்டு வெளியில் பாட்டுச் சுடர்கள் ஏற்றி வைத்தானே
தேடிச் சென்ற திசையெல் லாம்பெருந் தீ வளர்த்தானே
தேகம் எடுத்தத னாலே அவனும் தேய்ந்து விட்டானே
அவனுக்காகக் கொஞ்சம் அழக்கூடாதா

கனவுக் கொடிகள் காற்றில் ஆடும் காட்சி தெரிகிறது
காட்டு வெளியில் எல்லாம் பாடல் காவல் இருக்கிறது
தினமும் இங்கே தெய்வ நெருப்பு நெஞ்சில் உதிக்கிறது
தேய்ந்து போகும் தேகங் களுக்குத் தெம்பு கொடுக்கிறது
நட்சத்திரங்கள் மண்ணில் விழக்கூடாதா

இந்தக் கவிதையைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு மும்பையில் நடந்த ஒரு கூட்டத்தில் நண்பன் சுகி சிவம் சொன்ன போது, பெருந்திரளாகக் கூடியிருந்த மக்களெல்லாம் அதை மிகவும் ரசித்ததாக அவனே சொல்லக் கேட்டு நெகிழ்ந்தேன்.

இந்தக் கவிதையில் அப்படி என்ன இருக்கிறது என்று இதுவரை சிகாமணி செய்த ஆராய்ச்சியில் அவனுக்கு எதுவுமே அகப்படவில்லை. ஆனால், மனோன்மணிக்குத் தெரியும், பின்னணி உணர்ச்சியாக, கனமாக, அதில் பொதிந்திருக்கும் சுமை என்ன என்று. கவிதைச் சுவையா, கவிதைச் சுமையா? பட்டிமன்றம் போல் சிகாமணி கேலியாகக் கேட்ட கேள்விகளை அவள் பொருட்படுத்தவே இல்லை. அது சுவையின் சுமை, சுமையின் சுவை.

ஒருநாள் தொலைப்பேசியில் சர்தார் சிங் என்ற கவிஞர் என்னைக் கேட்டார்: யாரும் அழுவதை பாரதி விரும்ப மாட்டான். அவனை நினைத்தாலே வீரம்தான் பொங்கியெழும், அழுகை வராது. பின் ஏன் நீங்கள் அவனுக்காக அழச்சொல்கிறீர்கள்?"

நான் அவரை மறுத்து எதுவும் பேசவில்லை. அவர் சொன்னது முற்றிலும் சரியென்றே தோன்றியது. அறிவு பூர்வமாக நிறுவவே முடியாத இரண்டு விஷயங்கள், கடவுளும், கவிதையும். அந்த முயற்சியில் ஈடுபடுவது வியர்த்தம்தான்.

சென்ற பகுதியில், பாரதியின் பாடல் ஒன்றை அமரர் தேவநாராயணன் பாடக் கேட்டு, "என் கண்கள் கலுழ்ந்தன" என்று நான் எழுதியிருந்ததைப் படித்து விட்டுக் 'கலுழ்ந்தன' என்ற சொல் கடினமான புலமைச் சொல்லாக இருக்கிறதே, அதை எளிய சொல்லாக மாற்றக் கூடாதா என்று ஷோபனா கேட்டாள்.

அவள் கேட்டு நான் எதைச் செய்யாமல் இருந்திருக்கிறேன்? உடனே, 'கலங்கின' என்று திருத்தி எழுதினேன். ஆனால், மறுநாளே நண்பன் சு.ரவி 'வல்லமை' மின்னிதழில் எழுதிய ஒரு கட்டுரை மீண்டும் அந்தச் சொல்லைக் 'கலுழ்ந்தன' என்று பழையபடித் திருத்தம் செய்ய என்னைத் தூண்டியது. சு.ரவியின் கட்டுரை மிகவும் சூடாகவே இருந்தது:

"நீ அழுவதற்காகப் பிறக்கவில்லை. பிறந்ததற்காக அழுதால் பயனேதும் இல்லை. கண்ணீர் மன அழுத்தத்தைக் கரைக்கிறது என்பதெல்லாம் கட்டுக்கதை.

அது உன் திறமையையும் தன்னம்பிக்கையையும் தகர்த்து விடுகிறது. அழுகை ஆன்மாவைப் "புனிதமாக்குகிறது என்பது வேலையற்றவரின் வெட்டி வேதாந்தம்."

இப்படித்தான் எழுதியிருந்தான் சு.ரவி.

அழுவது வேறு; கண்கள் கலுழ்வது வேறு. உருகிக் கரைவதைக் கூடப் பெரிய புலவர்கள் 'அழுகை' என்றே குறிப்பிட்டிருந்தாலும், அந்தச் சொல், சு.ரவி சொல்வது போல் இயலாமையையும், துயர் மிகுதியையும் குறிக்கக் கூடும் என்பதால், 'கலுழ்தல்' என்ற சொல்லே பொருத்தம் என்று முடிவு செய்தேன்.

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகச் செய்யும் சரணாகதி நிலைதானே ஆன்மிகப் பாதையில் அடிப்படை உந்து சக்தி! அதுதானே "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற துணிவோடு, கடவுளாகிய "கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்மலர்ச் சேவடியே" குறுகி நிற்கும் பணிவையும் அப்பரடிகளுக்குத் தந்தது!

*அதுதானே, "பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்" என்று முழங்கிய பாரதியை, "பரிபூரணர்க்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று நெகிழ்ந்துருகச் செய்தது!*

*"இமைகள் நனைந்தேன் இதய புரீஸ்வரா" என்று நெக்குநெக்குருகி சபரிகிரீசனைப் பாடிய நண்பன் சு.ரவி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் பரமானந்த நிலையை மறுக்கவோ, வெறுக்கவோ முடியுமா?*

*தொலைக்காட்சியில் கண்ணதாசன் தலைமையில் ஒளிபரப்பாகிய கவியரங்கம் எனக்குள் ஏற்படுத்திய அனுபவத்தை நான் மறுப்பதற்கோ, மறப்பதற்கோ இல்லை.*

*கவிதைக்குத் தெரியுமா எது சரி, எது தவறென்று? ஆனால் கவிதையில், அதன் த்வனியில் மூழ்கினால், மூழ்கினால் . . . !*

*'மூழ்கினால் மூச்சிழந்து மரணமடைய நேரிடும்' என்று சிரித்தான் சிகாமணி. மூச்சிழந்தபின் முத்து மண்டபம் காத்திருக்கும் என்று சொன்னால் அவனுக்குப் புரியாது. கவிதையாகவே சொன்னேனே, 1979–ல்:*

தடம் புரண்டன சொற்கள்
தவிக்க வைத்தது தாகம் - இருட்டில்
தடவிக் கொண்டே நடந்து செல்லும்
குருட்டு மனத்தின் குமுறல்
நடுங்க வைக்கும் நள்ளிர வைப்போல்
நகர மறுக்கும் தனிமை
ஓவென் றலறி உதவக் கூட
நாவின்றி நின்ற வேளை
உருவற்ற மேகத்தில் ஒருகோடி மின்னல்
உருவான தோகவிதை ஓசைப் பிரவாகம்
உடைகின்ற மௌனத்தை அடைகாத்த நெஞ்சம்
உயிர்க்கின்ற பயிர்க்கென்(று) உதிர்க்கின்ற முத்தெல்லாம்
சரித்திரக் கடலில் சங்கம மாகும்
சான்று தேவை யென்றால்
மூழ்க வேண்டும்
மூச்சிழந்த பின்னே
முத்து மண்டபம் காத்தி ருக்குமே

*கவிதை ஒரு வாசல், அனுபவ வாசல். அதைத் திறந்து கொண்டு உள்ளே நுழையத் துணிந்தால், அது உதித்த அதே அனுபவக் களத்துக்கு, அதற்குள் பதுக்கி வைக்கப் பட்டிருக்கும் அதே அனுபவக் களத்துக்குச் செல்ல முடியும் என்று நான்*

*சொல்வதை விட என்றாவது ஒருநாள் கவிஞர் சர்தார் சிங் சொல்வார் என்று காத்திருக்கிறேன்.*

*ஷீர்டி சாய்பாபாவை நினைந்துருகி ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் பாடிய பாடலொன்றை மெல்லிய குரலில் மனோன்மணி இப்போது பாடுகிறாளே!*

**அழுதழுது வரண்ட கண்கள் - உன்னை**
**அழைத்தழைத்து வாடும் நெஞ்சம்**
**தொழுவதற்கும் வலுவிழந்த கைகள் - நீ**
**தோன்றிவிடு என்னெதிரில் கொஞ்சம்**
**நிழல்கொடுக்கும் தூயவொளி நீயே**
**நேரில்வரும் தெய்வமிங்கு நீயே**
**உழல்கின்ற மனமாயை தீர - வந்(து)**
**உதிக்கின்ற தழலேயென் தாயே**
**ஸ்ரீ சாயிராம் ஜெய் சாயிராம்**
**சீரடிக் கமல க்ருபா சாயிராம்**
**. . . . . . .**

*சிந்தனைக் கோட்டத்தின் "கூட்டுவழி பாடு" என்ற வாராந்திரப் பிரார்த்தனைக் கூட்டங்கள் ஒரு சிறிய நண்பர் குழுவைக் கட்டிப் போட்டு வைத்திருந்த பொற்காலம் என் நெஞ்சத் திரையில் நிழலாடுகிறது.*

*ஓ அந்த இனிய நாட்கள் . . . .!*

# 23

*1968–ல் என்று நினைக்கிறேன், பங்களூரிலிருந்த என் குடும்ப நண்பர் கரியப்பா என்பவர் சொன்ன யோசனையின்படிச் சிந்தனைக் கோட்டத்தில் கூட்டு வழிபாடு என்ற வாராந்திரப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தும் வழக்கம் தொடங்கியது. அதை, அதன் ஆங்கிலப் பெயரில் 'மாஸ் ப்ரேயர்' என்றே அழைத்து வந்தோம். சனிக்கிழமை தோறும் மாலை 6–30 மணிக்கு என் தந்தை விஸ்வம் நடத்தி வந்த வித்யா ஸாகர் பள்ளியில் கூடுவதும், பலவிதமான பக்திப் பாடல்கள் பாடுவதுமாக அந்த நிகழ்ச்சி அமைந்தது.*

*முதலில் நான் எழுதிய ஒரு வெண்பாவுடன் தொடங்கும். பிறகு கவியோகி சுத்தானந்த பாரதியாரின் சர்வ மத சமரசப் பாடல் ஒன்றைப் பாடுவோம்:*

**வெண்பா**
**ஒற்றுமை ஓங்கிட உள்ளிருள் நீங்கிட**
**நற்றவம் நாளும் நனிசிறக்கக் - கற்றவர்க்**
**கண்வாழும் நாதனே காப்பென்று பற்றினோம்**
**பண்வாழும் நின்றன் பதம்**

*சுத்தானந்த பாரதியாரின் பாடல்*

**எல்லோரும் வாருங்கள் எல்லோரும் சேருங்கள்**
**ஈசனை அன்புசெய்வோம்**
**எல்லோரும் பாடுங்கள் எல்லோரும் ஆடுங்கள்**
**இன்பமே நமதுதெய்வம்**

**அல்லா பரமபிதா ஹரிஹர ப்ரும்ம மென்றும்**
**அம்மையப் பாவென்றும்**
**சொல்லில் அடங்கா ஜோதியைப் பாடிச்**
**சுகித்திருப் போம்வாரீர்**

*பிறகு "பார்த்தாய ப்ரதி போதிதாம்" என்று தொடங்கும் பகவத் கீதையின் பாராயண ஸ்லோகம் சொல்லி விட்டு அதன் பிறகு ஒவ்வொருவரும் அவரவர் கொண்டு வந்திருக்கும் பாடலைப் பாடச் சுமார் அரை மணி நேரத்தில் கூட்டு வழிபாடு நிறைவு பெறும். ஆவலுடன் அதுவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொங்கல், சுண்டல் போன்ற ஏதோ ஒன்றை அருந்தி விட்டுச் செல்வோம்.*

*இந்தக் கூட்டு வழிபாட்டில் பாடப்பட்ட பல பாடல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிச்சயமாக இடம்பெறப் போகும் பாடல்கள் என்பது என் நம்பிக்கை. அது சோதிடம் இல்லை சாமி! நான் சோதித்துச் சொல்லும் உண்மை. ஏற்கனவே, இந்தக் கூட்டு வழிபாட்டில் சுகி சிவம் இயற்றிப் பாடிய பாடல்களில் இருந்து சில வரிகளை இத்தொடரின் முந்தைய பகுதிகளில் சுட்டிக் காட்டி விட்டேன். அதில் ஒரு பாட்டில் வரும் இரண்டு பத்திகளை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். தேவி கருமாரி மீதான பாடல் அது:*

**என்கண் கனிச்சாறே நெய்வேதனம் - எந்தன்**
**பாடல்களில் உந்தன் நீராடனம்**
**என்னுள்ளம் தானுந்தன் அரிவாகனம் - ம்!**
**ஆகட்டும் உடனேயுன் ஆரோகணம்**

**நகர்கின்ற போதெல்லாம் ரதவுத்ஸவம் - நீரில்**
**நனைகின்ற போதெல்லாம் தெப்போத்ஸவம்**
**பகர்கின்ற வாக்கெல்லாம் நின்பாசுரம் - உன்னைப்**
**பாராட்டிச் செய்கின்ற அஷ்டோத்திரம்**

*முதலில் இந்த வரிகளின் சொல்வளத்தில், ஓசைச்சிறப்பில் சொக்கி நிற்கும் மனோன்மணியைப் பார்க்கிறேன். அருகில் இருக்கும் புத்தி சிகாமணி புன்னகை பூக்கிறான். அவன் புன்னகையின் அர்த்தம் எனக்குப் புரிந்து விட்டது. 'என்கிட்ட வந்து உட்கார்ந்து பாடம் கேட்க வேண்டும் ஓய்' என்பது போல் ஒரு கர்வப் புன்னகை அது. சரி, கேட்டு வைப்போமே! அவன் சொல்கிறான்:*

*"முதலில், தன்னிலிருந்து வேறாகத் தனக்கு வெளியில் அன்னையைப் பார்க்கிறான் பக்தன். தன் பரவசக் கண்ணீர்த் துளிகளை எடுத்தே அவளுக்கு நெய்வேதனமாகப் படைக்கிறான்.*

*தன் பாடல்களில் அவளை நீராட்டுகிறான். தன் உள்ளத்திலேயே அவள் அரோகணித்து எழுந்தருள வேண்டும் என்று வேண்டுகிறான்”*

*மனோன்மணி இடைமறித்துப் பேசுகிறாள்:*

*“ஆனால் எவ்வளவு கம்பீரமாக வேண்டுகிறான்! அந்த ஒற்றைச் சொல், “ம்” இருக்கிறதே, அது இடம் நிரப்பும் வெற்றுச் சொல் இல்லையப்பா. மற்றைச் சொற்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளி விட்டு முன்னிற்கும் வெற்றிச் சொல்.”*

*சிகாமணி தொடர்கிறான்:*

*“சபாஷ் மனோன்மணி, என் சகவாசத்தால் நீயும் இப்படிப் பேசக் கற்றுக் கொண்டு விட்டாய். சரி, என்ன சொல்லிக் கொண்டிருந்தேன், ஆம், ஆரோகணம். கருமாரி அன்னை பக்தனின் உள்ளத்தில் ஆரோகணித்ததும் என்ன ஆச்சு தெரியுமோ? பக்தன் நகர்கின்ற போதெல்லாம் அவளுக்கு ரதவுத்ஸவம், அவன் நீரில் நனைகின்ற போதெல்லாம் தெப்போத்ஸவம். குளிக்கும் போதெல்லாம் என்று கொச்சைப் படுத்தாமல், நீரில் நனைகின்ற போதெல்லாம் என்று போட்டான் பாருங்காணும், அதுக்குத்தான் துட்டு! ஆம், அவன் மழையில் நனையும் போது கூடன்னு அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். முதலில் அன்னையை முன்னிலைப் படுத்திப் பாடிய சிவம், அவளைத் தன்னிலைப் படுத்திப் பார்க்கும் அபூர்வ தரிசனத்தை விவரிக்கும் பாடலுக்கு இலக்கிய வரலாற்றில் இடம் கிடைக்காமல் போகுமா? மனோன்மணி விட்டு விடுவாளா? எப்படியும் சங்கப் பலகையை வரவழைத்து விடுவாள்.”*

*மனோன்மணி உரக்கப் பாடுகிறாள்:*

**வேண்டுமடி உன்னுடைய பாத நீழலே - தாயே**
**வேண்டுமடி உன்னுடைய பாத நீழலே**

*என்ன, சாமி வந்தது போல் மனோன்மணி ஆவேசமாகப் பாடுகிறாள்? ஓ, அது நண்பன் சு.ரவியின் பாட்டு. அவன், அதாவது, சு.ரவி; இந்த ‘அவர், இவர்’ மரியாதையைத் தவிர்த்து விடுகிறேன். அது கருத்தோட்டத்துக்குத் தடையாகிவிடும். அவன் அப்படித்தான் பாடுவான். பாரதியின் “வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா” என்ற சந்தத்திலேயே அமைந்த அந்தப் பாடலைத் தொடர்ந்து பாடுகிறாள் மனோன்மணி:*

**வெய்ய காம னெஞ்சிடாது வீழ வைத்தவன்**
**துய்ய மாமணிப் புறத்துச் சோதியானவன்**
**அஞ்சும் அமரர் நெஞ்சு குளிர**
**நஞ்சு கொண்ட கண்ட னங்குக்**

கொஞ்சு கின்ற போதில் உன்னைத்
தஞ்சம் என்ற டைந்து விட்டோம்
வேண்டுமடி உன்னுடைய பாத நீழலே

*சிகாமணி எதுவும் பேசவில்லை. ஒரு கனத்த மௌனம் சூழ்ந்து கொள்கிறது. அந்தச் சொற்களின் சந்தச் சுவையில், சொற்சதங்கையின் 'கலீர் கலீர்' நாதத்தில் லயித்து விட்ட பரவச மௌனம் அது!*

*வெய்ய காமன் நெஞ்சிடாது என்று படிப்பதா, இல்லை, எஞ்சிடாது என்று படிப்பதா? நஞ்சுண்டதால் சிவனின் கண்டம் சூடேறியதும், அமரர் நெஞ்சு குளிர்ந்தனர் என்ற முரண்பாட்டை ரசிப்பதா? அன்னையாக நீ தனித்திருக்கும் போது வராமல், அம்மையப்பனாக நீங்கள் சேர்ந்திருக்கும் தருணம் பார்த்துத் தஞ்சம் என்று வந்து விட்டோம், ஆட்கொள்வதைத் தவிர உமக்கு வேறு வழியில்லை என்று சொல்லாமல் சொல்லும் நயத்தை வியப்பதா?*

*கேள்விகள் சிகாமணியின் தொண்டை வரை வந்தன. மனோன்மணி ஒரு பிடிபிடித்ததால் அவை அங்கேயே தங்கி விட, விடம் உண்ட கண்டனைப் போல் சிகாமணி, கேள்விக் கணைகள் தொண்டையிலேயே சிக்குண்ட கண்டனாகப் பேச்சிழந்து நின்றிருக்கிறான். பாவம்!*

*சிந்தனைக் கோட்டம் செயலிழந்த பிறகும் மாஸ் ப்ரேயர் தொடர்ந்து சில ஆண்டுகள் நடந்தது. அது நடக்கும் இடங்கள் அவ்வப்போது மாறிக் கொண்டிருந்தன. அது நின்று போன பிறகு இரண்டு, மூன்று முறை அதை மீண்டும் தொடர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டும், நாளடைவில் அது நின்று விட்டது.*

*"மோகத்தைக் கொன்று விடு அல்லாலென்றன் மூச்சை நிறுத்தி விடு" என்ற பாரதி பாடல் நண்பன் அ.பாபுவின் குரலில் ஒலித்ததையும், நண்பன் ரமணன், சிவகுமார் போன்றவர்கள் பாடிய பாடல்களையும் நினைத்துப் பார்க்கும் போதெல்லாம், 'ஓ அந்த இனிய நாட்கள்!' என்றுதான் பெருமூச்சு விடத் தோன்றுகிறது.*

*தெய்வ பக்தியற்ற வறட்டுச் சித்தாந்த வாதியாக இருந்த என்னை மெல்ல மெல்லப் பக்குவப் படுத்தி, உருகச் செய்து, பக்தி மார்கத்தின் மகோன்னதத்தை உணரச் செய்த கூட்டு வழிபாட்டுப் பாடல்கள் என்றும் என் நெஞ்சை விட்டகலாதவை. நானும் உருகி, உருகிப் பாடத் தொடங்கினேன்:*

ராம மணி மந்த்ரம் ஸ்ரீ ராகவ முகுந்தம்
ரட்சகம் அளிக்கின்ற தேவாம்ருதம்

விழிகள் அரவிந்தம் அதில் கருணை மகரந்தம்
விதிகதி கலங்க வரும் கோதண்டம் - கொடும்
விதிகதி கலங்க வரும் கோதண்டம்
எழில்மிகு வசந்தம் என் கவிதை ப்ரபந்தம் - நீ
எழுந்தருளி வைகுமொரு வைகுந்தம்

ராம மணி மந்த்ரம் ஸ்ரீ ராகவ முகுந்தம்

நிதமருள்தரும் உந்தன் நிறமரகதம் - நெஞ்சில்
நிம்மதி கொடுக்குமுன் சங்கீர்த்தனம் - உந்தன்
பதமலர் தொழும் அன்பர் பவவினை கெடும் மண்ணில்
கனகமழை பொழியுமொரு கார்மேகமே

ராம மணி மந்த்ரம் ஸ்ரீ ராகவ முகுந்தம்

தோளழகு கண்டு விழி தோற்ற கதையுண்டு - உன்
தோளழகு கண்டு விழி தோற்ற கதையுண்டு - நீ
தொட்டவுடனே சிவன்வில் இற்றதன்று - உன்
காலடியிலே கல்லும் உயிர்த்ததென்றால் - கண்
நீர்த்துளிகளும் கவிதை யாவதுண்டு - என்கண்
ணீர்த்துளிகளும் கவிதை யாவதுண்டு

ராம மணி மந்த்ரம் ஸ்ரீ ராகவ முகுந்தம்

*"ஏம்பா, உன் கவிதையே வைகுந்தமா, உன் கண்ணீர்த் துளிகளும் கவிதை ஆகணுமா? என்னப்பா, காதல்னாலும் கவிதை, கடவுள்னாலும் கவிதை, உனக்கு எல்லாமே கவிதைதானா?" கேட்டானே ஒரு கேள்வி, புத்தி சிகாமணி.*

*வாயடைத்துப்போய் நின்று விட்டேன். மனோன்மணி மட்டும் மெல்லச் சிணுங்குகிறாள் . . . .!*

# 24

*இந்த அளவு எனக்குக் கவிதைவெறி வரக் காரணம் என்ன? அது என்ன விட்ட குறை, தொட்ட குறையோ!*

*முன்னொரு பிறவியில் நான் தேரழுந்தூரில் ஒரு புலவன் வீட்டில் கட்டுத்தறியாக முக்கி முனகிக் கொண்டிருந்தேனோ? இல்லை, அதற்கும் முன்பு ஒரு புலவன் தன் முழவுத் தொழிலை விட்டுவிட்டு, உழவுத் தொழிலை மேற்கொண்டதால், புறக்கணிக்கப் பட்ட பறையாக எனக்குள்ளேயே படபடவென்று ஒரு மூலையில் கிடந்து நெஞ்சு துடித்துக் கொண்டிருந்தேனோ? இல்லை, மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுமாய் ஒருத்தி விட்டெறிந்த ஒற்றைச் சிலம்பிலிருந்து தெறித்துப் பாண்டியன் அரண்மனைத் தரையில் உருண்டோடிய நினைவைச் சுமந்து கொண்டு அவளைச் சொல்லில் வடித்த துறவியின் நெஞ்சில் மாணிக்கப் பரலாய் பதிந்திருந்தேனோ? ஏன், ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன்பு, குடக்கூலி கூடக் கொடுக்க முடியாமல் ஒண்டு குடித்தனத்தில் ஒண்டிக் கிடந்தும், அண்டங்களையெல்லாம் ஒரே நொடியில் சுற்றிவர ஆவேசக் கவிஞன் செய்துகொண்ட ரதத்தின் ஒரு சக்கரமாகச் சுழன்று கொண்டிருந்தேனோ? யாருக்குத் தெரியும்!*

*அவளுக்குத் தெரியும். என்னை ஆக்கி, எனக்குள் ஊழிக் கனல் எழுப்பி, ஊதி ஊதி வளர்த்து அதில் தாண்டவம் ஆடுகிற பிச்சிக்குத் தெரியும். சொல்லுவாளா அவள்? சண்டித்தனம் செய்யும் சாகசக்காரி சொல்லுவாளா? பாட்டுப் பாடிக் கேட்டேனே. சந்தச் சதங்கை ஒலிக்கச் சதா ஆடிக்கொண்டே இருக்கும் அந்த பைரவியைச் சிந்து பைரவி ராகத்தில் பாடிக் கேட்டேனே:*

**நீல வானமாய் விரிகிறாய் - என்**
**நெஞ்சிலே இசை பொழிகிறாய்**
**கால காலமாய் நீயும் நானுமாய்**

ஆடினோம் பல நாடகம் - நாம்
அணிந்த வேடங்கள் ஆயிரம்

காளி தாசனின் நாவில் எழுதிய அட்சரம் உனது மந்திரம்
கம்ப நாடனின் கவியெ லாமுன் காற்ச தங்கையின் நர்த்தனம்
மேள மாயிடி மின்ன லாயொளி மேடை தந்தனன் பாரதி - அண்டக்
கோல மாகியே பாடல் யாவையும் கொள்ளை கொண்டனை பைரவி

நீல வானமாய் விரிகிறாய்

தத்து வங்களில் ஒளிகிறாய் - தர்க்கம்
செய்யும் போதுநீ நெளிகிறாய்
பித்த னாகநான் பேசும் போதுசிறு பிள்ளை யாகவந் தமர்கிறாய்
சித்தர் பாடலில் சிரிக்கி றாய்ப்பின் ஷெல்லி கவிதையில் ஜொலிக்கிறாய்
ஷேக்ஸ்பியர் கீட்ஸ் மாயா கௌஸ்கியெனத் தோழர் சூழநீ நடக்கிறாய்

கால காலமாய் நீயும் நானுமாய்
ஆடினோம் பல நாடகம் - நாம்
அணிந்த வேடங்கள் ஆயிரம்

தாயிலாமலே குழந்தையா - உன்
தயவிலாமல் ஒரு கவிதையா
தழலும் தென்றலும் நிழலும் வெய்யிலும்
கலந்து நிற்பதுன் சாயலே
நீயி லாமலிதழ் பாடுமா - சுடு
தீயி லாமல் சுடர் கூடுமா
சிறிய வன்மனம் திரி யதில்தினம்
தீபம் ஏற்றுதிரி சூலியே

*சிகாமணி ஏதோ சொல்ல வாயெடுக்கிறான். வார்த்தை வராமல் அவன் வாய் குழறுகிறது. மனோன்மணி எங்கே? ஒரு மின்னல் இழை வான் நடுவே சுழன்று, சுழன்று ஆடிக் கொண்டிருக்கும் அதிசயக் காட்சி மட்டும் தெரிகிறது. 'அரோரா போரியாலிஸ்' என்றெல்லாம் கானடா நாட்டில் போய்ப் பார்த்து வியப்பார்களே, அது போல்! அந்த இழையில் கலந்து மனோன்மணியும் ஆடுகிறாளோ?*

*இப்படி நான் பாடிக் கேட்டுப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அவள் பதில் சொல்லவில்லையே! ஆடிக் கறக்கவோ, பாடிக் கறக்கவோ மாடில்லை அவள். வாசிக்கலாம் என்றால் ஏடில்லை அவள். வசிக்கலாம் என்றால், வீடில்லை அவள். பிறகு யாரவள்?*

**புன்னகை யோசின்ன பூவிதழோ - ஒளி**
**பொங்கித் ததும்பும் வெண்ணிலவோ**
**கண்வழி யேநுழைந்(து) என்னுயிரை - மெல்லக்**
**கவர்ந்திழுக் கும்,எழில் காரிகையோ**

**காலையி லேதங்கத் தேரினிலே - வரும்**
**கனகதுர்க் காபர மேஸ்வரியோ**
**மாலையி லேமலர்ச் சோலையென - உரு**
**மாறும் மாயா மோகினியோ**

**புவியினி லேஉயிர்க் குலம்தழைக்கப் - பசும்**
**பாய்விரிக் கும்,அருள் தாய்மடியோ**
**வியனுல காய்விதை மூலமுமாய் - நித்தம்**
**விரிந்துகொண் டேவரும் விழிச்சுடரோ**

**கவிதையி லேசிறு கால்பதித்துக் - கொஞ்சம்**
**களிநடம் செய்யும் பேரழகோ**
**த்யானத்தி லேயெழும் தழல்வடிவோ - அது**
**அவனோ அவளோ வேறெதுவோ**

*த்யானத்திலே எழும் தழல்வடிவோ! எனக்கெதிரே, எதிரே இல்லை, உள்ளே, ஆம், எதிரும் புதிருமாய், உள்ளும் புறமுமாய், மூண்டெழுந்து சிரிக்கிறது ஒரு மூலத் தழல்வடிவம். ஒன்றென்றா சொன்னேன்? இரண்டோ, இல்லை இரண்டு போல் தோன்றும் ஒன்றோ? உற்றுப் பார்த்தால் அதற்குள், இல்லை, அதுவாய், நானே தெரிகிறேனா? நானா, இல்லை அவனா, அவளா, அதுவா?*

*சிகாமணி ஓரிழையாய், மனோன்மணி மற்றோர் இழையாய் ஒன்றிக் கலந்த அர்த்தநாரியாய், இல்லை, அர்த்த ஆடைகளைக் களைந்து எறிந்துவிட்டு அம்மணமாய் ஆடும் ஆவேசமாய் . . . என்ன குழப்பம்?*

*மேலே எத்தனை முறை 'இல்லை', 'இல்லை' என்று மறுத்துச் சொல்லியிருக்கிறேன் என்று எண்ணிப் பாருங்கள். இந்தத் திண்டாட்டத்தைத்தான் "நேத்தி நேத்தி" ( இல்லை, இல்லை) என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு ரிஷி கூவினானோ?*

என் மூச்சை ஒரு நிலைக்குக் கொண்டு வருகிறேன்.

'அப்பா, புலம்பாதே. நீ என்னதான் சொல்கிறாய். புரியும் படிச்சொல்.'

உங்களில் யாரோ கேட்பது என் செவியை எட்டுகிறது. சொல்வதற்கு என்ன இருக்கிறது? சோர்வு மேலிட மௌனத்தில் ஆழ்கிறேன்.

முதல் தரிசனம், அதாவது, "தெளிவுறவே அறிந்திடுதல்" என்ற பாரதி பாட்டைக் கவிமாமணி தேவநாராயணன் பாடக் கேட்டு நான் உருகினேன் இல்லையா, அதற்குப் பின் என் கவிதையின் போக்கு மாறியது. அப்படிச் சொல்வதைவிட, கவிதை பற்றிய என் நோக்கு மாறியது என்று சொல்வதே மேலும் பொருத்தமாக இருக்கும். நான் கவிதை எழுதுகிறேன் என்ற நினைப்புப் போய், கவிதையே என்மூலம் தன்னை எழுதிக் கொள்வதுபோல் உணரத் தொடங்கினேன். இப்படிச் சொல்வது பகுத்தறிவுக்கு ஒத்து வராததாகத் தோன்றலாம். அந்தச் சமயத்தில்தான் தத்துவக் கதவு திறந்தது.

புகுமுக வகுப்பு முடிந்து பி.ஏ. சேர வேண்டும். அதிலும் ஒரு போராட்டம். ஒரே சமயத்தில் ஆங்கில இலக்கியத் துறையில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள புதுக் கல்லூரியிலும், தத்துவத் துறையில் மயிலை விவேகானந்தா கல்லூரியிலும் எனக்கு இடம் கிடைத்தது. நேராக, விவேகானந்தா கல்லூரி தத்துவத் துறைக்குச் சென்று, அப்போது துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் த.ந.கணபதி அவர்களிடம் இந்தப் பிரதாபத்தைப் பற்றி அளந்து விட்டு, இலக்கியத் துறைக் கடிதத்தை அவர் முன்னிலையிலேயே கிழித்து விட்டுத் தத்துவத் துறையில் சேர்ந்தேன். அப்போது நினைத்தேன், சொன்னேனா என்று நினைவு இல்லை, 'இலக்கியம் எப்படியும் படித்துக் கொள்ள முடியும், அதனால் பி.ஏ. ஃபிலாஸஃபி சேர்வதே சரி.' என்ன ஆணவம்!

அப்புறம்தான் தத்துவ மேதைகளின் படைப்புகளைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் வாழ்ந்த தாலீஸ், ஹிராக்லிட்டோஸ், சோக்ரட்டீஸ், ப்லேடோ, அரிஸ்டாட்டுல் போன்ற சிந்தனையாளர்கள் தொடங்கி, முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த டேகார்ட், ஸ்பினோட்ஸா, லைப்னீட்ஸ், லாக், பார்க்லீ, ஹ்யூம் போன்ற மேலை நாட்டுத் தத்துவ ஞானிகளின் நூல்களைப் படித்தேன். அப்போதுதான் பதினெட்டாம் நூற்றாண்டில், ஜெர்மனியில் வாழ்ந்த இம்மானுவல் கண்ட் என்ற தத்துவ மேதையின் சிந்தனைகள் என்னை ஆட்கொண்டன. 'தூய அறிவு

பற்றிய ஆய்வு' என்ற தலைப்பில் அவன் ஜெர்மானிய மொழியில் படைத்திருந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, 'க்ரிடிக் ஆஃப் ப்யூர் ரீஸன்' என்னை மிகவும் பாதித்தது. அந்த நூலைத் தந்து என்னை ஆற்றுப் படுத்திய பேராசிரியர் கணபதிக்கு நான் என்றும் நன்றிக் கடன் பட்டவனாகிறேன். அந்த நூலில் இம்மானுவல் கண்ட் பகுத்தறிவின் எல்லைக் கோடுகளை வரைந்து காட்டியிருந்தான். அந்தக் கோட்டுக்குள் மட்டுமே பகுத்தறிவு செல்லுபடியாகும் என்பதையும், அந்தக் கோட்டுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் உள்ளன என்பதையும் தெளிவாக விளக்கியிருந்தான். "அறிவினால் ஆகுவ துண்டோ" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் கேட்ட கேள்வியின் அர்த்தம் அப்போதுதான் எனக்கு விளங்கியது. சங்கரரின் அத்வைதக் கொள்கை என்னை அதற்கு முன்பே ஈர்த்திருந்தாலும், அது வெறும் மாயா வாதமாகவே தோன்றிய தப்பெண்ணத்தை மாற்றி அதன் யதார்த்தத்தை நான் உணரக் கண்ட்டின் நூல்தான் உதவியது.

இலக்கியத்தை நான் விட்டாலும் அது என்னை விடுவதாகத் தெரியவில்லை. இந்தக் காலக் கட்டத்தில்தான் பாரதியின் பாட்டு மூலம் எனக்கு முதல் தரிசனம் கிடைத்தது. கண்ட் வரைந்து காட்டிய கோட்டை அலட்சியம் செய்துவிட்டு கோட்டுக்கு உள்ளும் புறமும் போய்வரக் கூடிய ஆற்றல் கவிதைக்கு உண்டு என்பதை உணரத் தொடங்கினேன். அந்தப் போக்குவரத்தின் அனுபவத்தில் தத்துவத் தாக்கம் அல்லது தத்துவத் தாகம் இழையோடும் கவிதைகள் வரப்பெற்றேன்.

**சிந்தனைக் கனலில் வெந்துகொண் டிருக்கிறேன்**
**(என்) சிந்தனைக் கனலில் (நானே) வெந்துகொண் டிருக்கிறேன்**
**முழுதும் எரிந்து முடிந்த பின்னர்**
**சாம்பலை எடுத்துச் சலித்துப் பாருங்கள்**
**காதல் கிடைக்கும் கவிதைகள் கிடைக்கலாம்**
**கருகிப் போன லட்சியங்கள் கண்ணில் படலாம்**
**(என்) அஸ்தியைக் கரைக்க ஆறுகள் வேண்டாம்**
**என்னைப் போலவே எங்கோ ஒருவன்**
**சிந்தனைக் கனலில் வெந்துகொண் டிருப்பான்**
**அவனுக் காவது அழது தீருங்கள் - அந்தக்**
**கண்ணீர்க் கடலில் கரைந்து போகிறேன்**

இருபது வயது வாலிபன் எழுதிய பாடலா இது!

"ஏன், கீட்ஸ் மிக இளம் வயதில் கனமான கவிதைகள் எழுதவில்லையா?" – ஓ, சிகாமணி வந்து விட்டான், கேள்வி கேட்க. என்ன பதில் சொல்லப் போகிறேன்?

# 25

என் கல்லூரி நாட்களில் ஆங்கிலக் கவிதைகள் நிறையவே படித்து, ரசித்து, அந்தச் சுவையில் தோய்ந்திருந்தேன். கீட்ஸும், ஷெல்லியும், பைரனும் பள்ளி நாட்களிலேயே என்னைக் கவர்ந்ததோடு, மிகவும் பாதிக்கவும் செய்திருந்தார்கள். சற்று நிதானமாக, ஆனால் மிகவும் அழுத்தமாகப் பிறகு சுவடு பதித்தவர்கள், வில்லியம் வொர்ட்ஸ்வொர்த்தும், அவருடைய நெருங்கிய நண்பர் எஸ்.டி.கோல்ரிட்ஜ்ஜும்.

கோல்ரிட்ஜ் என்றதும் நினைவுக்கு வருவது அம்பத்தூர்தான். அம்பத்தூருக்கும் கோல்ரிட்ஜ்ஜுக்கும் என்னய்யா சம்பந்தம்? அது ஒரு சுவாரசியமான கதை.

1970–ஆம் ஆண்டு, நாங்கள், அதாவது, சிந்தனைக் கோட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள், அம்பத்தூரில் இருந்த ஒரு பள்ளியில் இரண்டு நாட்கள் முகாம் இட்டோம். அது உண்மை யிலேயே ஓர் இலக்கிய முகாமாக, அல்லது, எங்கள் இலக்கிய வளர்ச்சியின் இன்னொரு முகமாக அமைந்தது. அந்தப் பள்ளியும் என் தந்தை விஸ்வம் நடத்திக் கொண்டிருந்த பள்ளிதான். நான், சுகி சிவம், சு.ரவி, ஆ.பாபு, கண்ணன், சுரேஷ் குமார் மேலும் சில நண்பர்கள் கும்பலாகச் சென்று அம்பத்தூரையே ஒரு கலக்குக் கலக்கி விட்டோம். அங்கே நாங்கள் அடித்த லூட்டிகளையும், அருகில் இருந்த வைஷ்ணவி கோயில், திருமுல்லை வாயில் கோயில் ஆகியவற்றுக்கு நடைப்பயணம் சென்றதையும், அதுவும், சிவத்தின் “தேவியின் கருணை மிகமிகப் பெரிது தேர்ந்து கொள்ளடா மானுடா” என்ற பாடலைப் பல ஸ்ருதிகளில் சத்தமாகப் பாடிக்கொண்டே சென்றதையும், அம்பத்தூர் பள்ளியின் புழக்கடையில் எங்களில் ஒருவனைத் தொட்டியில் போட்டு பாபு நீர் மொண்டு ஊற்றிக்

குளிப்பாட்டிய கண்கொள்ளாக் காட்சியையும் இன்னும் நினைத்துப் பார்த்துக் கொள்கிறோம். ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக, என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சியாக அமைந்தது, என் தந்தை விஸ்வம், ஒரு மரத்தடியில், எங்களுக்கு ஆங்கிலக் கவிதைகளைப் படித்துப் பாடம் நடத்தியதுதான். அங்கேதான் கோல்ரிட்ஜ்ஜின் ‘ரைம் ஆஃப் தி ஏன்ஷியன்ட் மெரினர்’ (ஒரு கிழ மாலுமியின் கவிதை) என்ற அருமையான ஆங்கிலக் கவிதையை அவர் எங்களுக்கு முழுதாகப் படித்து, விளக்கி, நடித்துக் காட்டி அந்தக் கவிதை வெள்ளத்தில் அவர் எங்களை மூழ்கடித்தார்.

ஒரு திருமண வைபவத்துக்குச் செல்லும் விருந்தினர்களில் ஒருவனை, ஒரு கிழ மாலுமி வழிமறிக்கிறான். ஏன் வழிமறிக்கிறாய் என்று விருந்தினன் கேட்டதும், கிழவன் அவன் கையைத் தன் மெலிந்த கரத்தால் பற்றுகிறான். “கப்பலொன்று இருந்தது” என்று கதையைத் தொடங்குகிறான். “கையை விடு” என்று விருந்தினன் சொன்னதும் கையை எடுத்துவிட்டு, ஒளிமின்னும் தன் கண்களால் அவனைப் பற்றி நிறுத்துகிறான் அந்தக் கிழவன். விருந்தினன் அசையாமல் நிற்கிறான். மூன்று வயதுக் குழந்தையைப் போலக் கதை கேட்கிறான். மாலுமி அவனை இப்படித் தன் வழிக்குக் கொண்டு வருகிறான். இப்படித்தான் ஒரு நாடகமாக ஆரம்பிக்கிறது அந்த நீண்ட கவிதை:

He holds him with his skinny hand, ‘There was a ship,’ quoth he.
‘Hold off! unhand me, grey - beard loon!’
Eftsoons his hand dropt he.
He holds him with his glittering eye&
The Wedding&Guest stood still,
And listens like a three years’ child:
The Mariner hath his will.

இந்த வரிகள் என் நினைவில் இன்னும் பசுமையாக இருக்கின்றன. அந்த மாலுமிக் கிழவனைப் போலவே, சற்றே சிவந்த கண்களாலும், தம் கனத்த குரலாலும் என் தந்தை விஸ்வம் எங்களைக் கட்டிப் போட்டுவிட, நாங்கள் எல்லாரும் அசையாமல் அந்தக் குறுங்காவியம் முழுவதையும் அமர்ந்து கேட்டோமே, அந்தக் காட்சியும் அப்படியே பசுமையாக நினைவில் தங்கிவிட்டது!

வொர்ட்ஸ்வொர்த்தின் “மைக்கெல்” என்ற அருமையான கவிதைச் சிறுகதையையும், தாமஸ் க்ரேயின் “எலிஜி ரிட்டன் இன் அ கன்ட்ரி சர்ச் யார்ட்” (ஒரு புறநகர் இடுகாட்டில் எழுதப்பட்ட இரங்கற்பா) என்ற கவிதையையும் என் தந்தை அங்கேதான் படித்தும், நடித்தும் பாடம் நடத்தினார்.

*வொர்ட்ஸ்வொர்த்தின் இரண்டாம் நூற்றாண்டு விழாவைச் சிந்தனைக் கோட்டம் 1970–ஆம் ஆண்டு கொண்டாடியது. அதில் வொர்ட்ஸ்வொர்த் பற்றி நான் ஒரு கவிதை படித்தேன். ஆனால் ஏனோ அந்த நிகழ்ச்சி என் நினைவில் பின்தங்கிவிட்டது. சில நாட்களுக்கு முன்னால் நண்பன் சு.ரவி அதை ஞாபகப் படுத்தியதோடு, தான் பத்திரப் படுத்தி வைத்திருந்த என் கையெழுத்துப் படிவத்தை நகலெடுத்து மின்னஞ்சலில் எனக்கு அனுப்பியதும் நான் நெகிழ்ந்து போனேன். அனுமன் கொண்டுவந்த சூடாமணியைக் கண்ட ராகவன் நிலையைக் கவிச்சக்கரவர்த்தி பாடுகிறானே, அதுபோல் நானும் ஆனேன்:*

**பொடித்தன உரோமம்; போந்து பொழிந்தன கண்ணீர்; பொங்கித்**
**துடித்தன, மார்பும் தோளும்; தோன்றின வியர்வின் துள்ளி;**
**மடித்தது, மணி வாய்; ஆவி வருவது போவது ஆகித்**
**தடித்தது, மேனி; என்னே, யார் உளர் தன்மை தேர்வார்?**

*வொர்ட்ஸ்வொர்த் பற்றி நான் எழுதிய அந்தக் கவிதை இதோ:*

**புலமைக் குன்றேறிப் பூரிக்கும் இயற்கையதன்**
**வளமைச் செழிப்பினிலே வைத்திழந்த நெஞ்சினனே**
**இயற்கை எழிலில் இறைவன் திருவுருவின்**
**நயம்தோன்றக் கண்டவனே நற்சிந்தைப் பாவலனே**
**ஆங்கிலத்தில் தன்னேரும் அற்றதொரு மாகவியே**
**பூங்குமுதப் பொற்றமிழிற் பொங்கும் புலமைக்கோ**
**பாரதியை ஒத்தவனே பார்போற்றும் வித்தகனே**
**ஓரத்தில் நின்றே மைய ஒளிப்பொருளாய்**
**உன்னை உணர்ந்தவனே ஒப்பில்லா உத்தமனே**
**சொன்ன கவிதையெலாம் சொட்டும் சுவையமுதே**
**இன்னுமுன் ஏற்றத்தை என்னென்று சாற்றிடுவேன்**
**சொன்னவையும் சொற்பமடா சொர்க்கக் கவித்திருவே**
**நாலைம்ப தாண்டுகளுன் நாவை அழிக்கவிலை**
**காலைக் கதிரவன்போல் என்றும் கவியுலகில்**
**மாறாப் புதுமையுடன் மாண்பொளியே வீசிடுவாய்**
**சீரார் தமிழ்மொழியின் சின்ன...சிறுகவிஞன்**
**உன்னை வணங்குகிறேன் உண்மைத் திருவிளக்கே**
**என்னை அருள்செய்வாய் இன்று**

*17 வயதினிலே எழுதியது இந்தக் கவிதை. நினைத்துப் பார்த்து நெகிழாமல் இருக்க முடியுமா? மனோன்மணியின் மெல்லிய விசும்பல் ஒலி. ஆற்றின் சலசலப்பொலி போல, இதமாகச் செவியில் மோதுகிறது!*

*“சரிண்ணே! 17 வயது, 20 வயதுண்ணு பேசிக்கிட்டே இருந்தா எப்படி? போன பகுதியிலே நான் கேட்டேனே கேள்வி, இளம் வயது பற்றி, அதற்கு இன்னும் பதில் வரலியே!” நம்ம புத்தி சிகாமணிதான் கேட்கிறான். அவனுக்கு பதில்சொல்வது போலவே அமைந்த ஒரு கவிதை, 1993–ஆம் ஆண்டில் நானெழுதிய ஒரு கவிதை, இப்பொழுது நினைவுக்கு வருகிறது.*

முதுமையின் கனிவை நேசிக்கிறேன் - இருந்தாலும்
இளமையைத் தான்நான் யாசிக்கிறேன்
இளமையில் இருந்து முதுமையில் நுழைய
இருமுறை நானும் யோசிக்கிறேன்
அருவியின் வேகம் அலைகளின் ஆற்றல்
தென்றலைப் போலெங்கும் செல்லும் சுபாவம்
உதயத்தின் செம்மை உள்ளத்தில் உண்மை
இவையனைத் தும்-என் இளமையின் தன்மை
முதுமையின் கனிவை நேசிக்கிறேன்
இளமையின் கனவை யாசிக்கிறேன்
இளமையில் இருந்து முதுமையில் நுழைய
இருமுறை நானும் யோசிக்கிறேன்
மதுச்சுமை யால்மலர் தளர்வதில்லை
வாடி யுதிர்ந்துபின் வளர்வதில்லை
புதுச்சுமை யால்நான் தளரவில்லை - என்னை
நானே சுமப்பதை உணருகிறேன்
எதுவரைக் கும்நான் எனத்தெரி யாமல்
எதைநான் முதுமை யென்பேன்
இதுவரை எத்தனை என்றுண ராமல்
இதைப்போய் இளமை யென்றேன்
முதுமையின் கனிவை நேசிக்கிறேன்
இளமையின் கனவை யாசிக்கிறேன்
இளமையில் முதுமை முதுமையில் இளமை
இரண்டையும் ஒன்றாய் வாசிக்கிறேன்

*அம்பத்தூர் பள்ளியிலே, நள்ளிரவு நேரம் வரை, மொட்டை மாடியில், அங்கே தரையில் பதித்திருந்த சதுரமான கண்ணாடி வழியாக வந்த வெளிச்சத்தில் கவிஞர் முருகுசுந்தரத்தின் கவிதைகளை நான் படிக்க, சிவமும், சு.ரவியும் மற்ற நண்பர்களும் சுற்றிப் படுத்துக் கொண்டு கேட்டு ரசிக்க, ஓ, சொர்க்கமே அதுதானோ என்பதுபோல் சொக்கிக் கிடந்தோம்!*

*ஆங்கிலக் கவிஞன் பைரன், இத்தாலியப் பெண், அதுவும் வேறொருவனுக்கு மனைவியாகி விட்ட மங்கை, தெரெஸாவுக்கு*

*எழுதிய கவிதைக் கடிதத்தைத் தமிழ் விருத்த நடையில் முருகுசுந்தரம் அழகாக வடித்திருந்த பாடல் இன்னும் நினைவில் இருக்கிறது:*

> **புதுமொட்டுப் பருவத்தைப் பொன்னிழைத்த தொட்டிலிலே கழித்து விட்டு**
> **மதுமொட்டுப் பருவத்தை மதக்கன்னி மாடத்தில் கழித்து விட்டு**
> **பதினெட்டுப் பருவத்தைப் பஞ்சணையில் கழிக்கின்ற படுக்கைப் பூவே**
> **மதிநட்டுக் கொலுவிருக்கும் கழுத்தழகி நானுன்னை மறப்ப தெங்கே!**

*நட்சத்திரக் குவியலுடன் பரந்து, விரிந்து கிடக்கும் வானத்தைப்போல், சொற்குவியல்களால் அலங்கரிக்கப்பட்ட இளநெஞ்சங்களை இணைத்துக் கொண்டு எங்களுக்குள்ளேயே, எங்கள் எல்லாரையும் உள்ளடக்கி, ஒரு கவிதை வானம் விரியக் கண்டோம். எங்களை நாங்களே வியந்து கொண்டோம்.*

# 26

"புரியுது தம்பி. நளவெண்பா, முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப் பரணி, பாரதிதாசன் என்று தொடங்கி, ஷெல்லி, கீட்ஸ், பைரன், வொர்ட்ஸ்வொர்த், கோல்ரிட்ஜ் போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் படைப்புகளில் தோய்ந்து, நா.பா., ஔவை நடராஜன் போன்ற சமகாலத்து இலக்கிய ரசிகர்களால் செப்பனிடப்பட்டு, சுரதா, முருகுசுந்தரம் போன்ற தற்காலக் கவிஞர்களாலும் பாதிக்கப்பட்டு உன் கவிதை உருப்பெற்று, வளர்ந்தது என்று..." சிகாமணி முடிக்குமுன் நான் குறுக்கிட்டேன்: "மிக முக்கியமானதை விட்டு விட்டாயே சிகா, தண்டமிழ்க் கொண்டலால் தட்டி எழுப்பப்பட்டு, பாரதியால் தடுத்தாட்கொள்ளப்பட்டு!"

"மறக்கலே தம்பி. நான் அதுக்கு வரதுக்குள்ள ஒனக்குப் பொறுக்கலே, அவசரம்" என்றான் சிகா.

"அது சரி, முன்னே அண்ணே என்றாய், இப்பொழுது தம்பி என்கிறாயே?" கேட்டேன்.

சிகா சொன்னான்: "நீதான் பாடிட்டியே, எதைநான் முதுமை என்பேன், இதைப்போய் இளமை என்றேன், என்று."

என் துட்டையே எனக்குத் திருப்பித் தருகிறான், சிகாமணி.

எப்படியோ, பலமுனைத் தாக்குதல்களுக்கு இடையில், வளைந்து, நெளிந்து, வளர்ந்து என் கவிதைச் சுடர் அணையாமல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

திருமணம் ஆனவுடன், நான் சட்டம் படித்துக் கொண்டே ஒரு பணியிலும் இருந்தேன். வேலைப் பளு அதிகம். நேரமும் கிடைக்கவில்லை. இருந்தாலும் நேரம் கிடைத்த போதெல்லாம் ஷோபனாவுடன் கவிதைகளைப் பகிர்ந்து கொண்டது மட்டுமின்றி,

*அவளுடன் சேர்ந்து அமர்ந்து கவிதை யோகத்தில் ஈடுபட்டேன். ஆம், அவள் வீணை வாசிப்பாள். அதற்கு ஏற்ப நான் பாடுவேன். அப்படி வந்த பாடல்களில் சில இன்னும் நினைவில் உள்ளன. 1974–75 ஆண்டுகளில் வந்தவொரு பாடல்:*

யாழில் மிதக்கும் விரல்களோ
தண்ணீரில் தளும்பும் நிலவின் துகள்களோ
யாழில் மிதக்கும் விரல்களோ
உனது பார்வை எனது நெஞ்சில்
ஒலியும் ஒளியும் சேர்க்குமோ

அனிச்ச மலரின் அருகில் வந்த தென்றலோ
பனிசுமந்த நதிவிழுந்த சாரலோ
உன்கரங்கள் தீண்டும் போது என்வதனம்
குழையும் சிலிர்க்கும் காதலோ

யாழில் மிதக்கும் விரல்களோ

விண்மீன்கள் தூளாகி விழுமொலியோ
கடலிசையில் மனமயங்கிக் கருமேகக் கூட்டங்கள் முறியும் ஒலியோ
உன்
சதங்கையோடென் இதயமும்
துடிக்கும் துவளும் பாவமோ

யாழில் மிதக்கும் விரல்களோ

*“உனது பார்வை எனது நெஞ்சில் ஒலியும் ஒளியும் சேர்க்குமோ” என்ற வரியோடு அந்தப் பாடல் வந்த நேரம், சென்னைக்குத் தொலைக்காட்சி வரவில்லை, தொலைக்காட்சியில் ‘ஒலியும் ஒளியும்’ என்ற நிகழ்ச்சி வரத்தொடங்கவில்லை!*

*இன்னொரு பாடல், சற்று வினோதமான சூழ்நிலையில் பிறந்தது. திரைப்படக் காட்சிபோல் ஒரு சூழ்நிலையைக் கற்பித்துக் கொண்டு அந்தச் சூழ்நிலையில் பாடுவதற்கு ஏற்ற பாடலாக ஏதேனும் எழுதிப் பாடுவது என்று ஷோபனாவும் நானும் முடிவு செய்தோம். காதலன், காதலி அல்லது கணவன், மனைவி இடையே சின்ன சின்ன கருத்து வேற்றுமைகள் வந்தாலும் அவை காதலுக்குக் குறுக்கே வரத் தேவையில்லை என்பதுபோல் பாடல் அமைய வேண்டும் என்று திட்டமிட்டோம். ஷோபனாவிடம், “ஏதாவது ஒரு ராகத்தை வீணையில் மீட்டு” என்று சொன்னேன். திடீரென்று ஒரு பல்லவி தோன்றியது.*

**ஆரோகணம் அவரோகணம்**
*வேறாக இருந்தாலும் விளைவாகும் ஒரு ராகம் சுகமே தரும்*

*ஆரோகணத்தில் வரும் எந்த ஸ்வரமும், அவரோகணத்தில் வராத வண்ணம், ஆரோகணமும், அவரோகணமும் முற்றிலும் வேறாக இருப்பதாக அமைந்த ஒரு ராகத்தில் ஷோபனா அந்தப் பல்லவியை வீணையில் வாசித்ததும் நான் நெகிழ்ந்து போனேன். பாடல் தொடர்ந்தது:*

**மாறாத இருட்டுக்கு மடியைக் கொடுத்தாலும்**
**நீராகி விடும் போது நிலம் வாழ்த்தும் கருமேகம்**
**போல் வந்திடும் ஊடற்களம்**
**போதென்ற மயல்சாய்ந்து நிலவென்ற பூவந்து கூடல்தரும்**
**ஆரோகணம் அவரோகணம்**
**வேறாக இருந்தாலும் விளைவாகும் ஒரு ராகம் சுகமே தரும்**

*ஷோபனாவுக்கும் எனக்கும் இடையில் எந்தக் கருத்து வேறுபாடு வந்தாலும், நிறைய வரும், இந்தப் பாடலைத்தான் நினைத்துக் கொள்வேன். "காதலர் இருவர் கருத்தொருமித்து" என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், கருத்துக்கும் காதலுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தோன்றவில்லை. எப்படிக் கருத்துக்கும், கவிதைக்கும் சம்பந்தம் கிடையாதோ அப்படித்தான் கருத்தும் காதலும்.*

*இப்படி இசையும் கவிதையுமாய்க் கலந்து என் வாழ்க்கை சென்று கொண்டிருந்த காலக் கட்டத்தில், சில ஆண்டுகளுக்கு முன் சந்தித்த பிறகு வேறு ஊருக்கு, பாட்னா என்று நினைக்கிறேன், சென்று விட்ட நண்பன் வ.வே.சு. மீண்டும் சென்னைக்கே வந்து சேர்ந்ததால் எங்கள் தொடர்பு நெருங்கிய நட்பாக வளர்ந்து என் இசையார்வத்தை மேலும் தூண்டிய செய்தியை முன்பே சொல்லிவிட்டேன்.*

*அதற்கு ஆறேழு ஆண்டுகளுக்கு முன், அதாவது, 1966–67 ஆண்டுகளில் வானொலியில், மன்சாஹே கீத், மனோரஞ்சன் நிகழ்சிகளில் தினம் தவறாமல் நான் கேட்ட பழைய ஹிந்திப் பாடல்களே என் கொஞ்ச நஞ்ச இசை ஞானத்துக்கும் முழுப்பொறுப்பு. ஓ.பி.நய்யர், நௌஷத், மதன்மோஹன், சலீல் சௌத்ரி, சங்கர் ஜெய்கிஷன் போன்ற இசை மேதைகளே என் குருநாதர்கள்.*

*ஏற்கனவே சொன்னதுபோல் பள்ளியில் அரங்கேறிய நாட்டிய நாடகப் பாடல்களால் நான் பெற்ற இசையனுபவங்கள், ஹிந்தித் திரைப் பாடல்களைத் தினமும் கேட்டு லயித்த ரசனை, வ.வே.சு.வின்*

நட்பு, எல்லாவற்றுக்கும் மேல் பாரதியின் இசைப் பாடல்களின் தாக்கம், இவற்றோடு ஷோபனாவின் இசைத் தேர்ச்சியால் கிடைத்த ராகப் பயிற்சி, எல்லாம் கலந்து, இசையையும், கவிதையையும் என் நெஞ்சின் இருகண்களாகத் திறந்து விட்டன.

"இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா" என்று கவிஞர் கேட்டதுபோல், இசை, கவிதை ஆகிய என்னிரண்டு அகக்கண்களும் இணைவாகவே இயங்கின. என் கவிதைகளில் பெரும்பாலானவை மெட்டோடும், தாளக் கட்டோடும் பிறந்தன. பின்னணி இசையும் கூடவே ஒலிக்கும். எப்பொழுதும் என் மனத்தின் ஓரிழையில், அதாவது, ஒரு சேனலில், ஏதாவது ஓர் இசைப்பாடல் உதித்து, ஒலித்துக் கொண்டே இருக்கும். 'எப்பொழுதும்' என்றால் தூங்கும் போதும் என்று கூட அர்த்தம் கொள்ளலாம். நிறைய பாடல்கள் உறக்கத்தில் உதித்துள்ளன. சில பாடல்கள் துயில் கலைந்ததும் மறந்து போகும். பிறகு, பல நாட்கள், அல்லது ஆண்டுகள் கழித்து நினைவுக்கு வரும். என் கவிதைகளில் பல கவிதைகளைப் பாடிப் பாடிப் பல மாதங்களுக்குப் பிறகே ஏதாவது துண்டுக் காகிதத்தில் எழுதி வைத்ததும் உண்டு; தொலைத்ததும் உண்டு.

"போதுமய்யா உன் சுய புராணம்" என்று அலுத்துக் கொண்ட சிகாவை அடக்குகிறேன்: ஏம்பா, இந்தத் தொடரே என் சுய புராணம் தானேப்பா!

கவிதை எப்போது உதிக்கும், எப்போது சொற்களாக உருவெடுத்து வெளிப்படும் என்று என்னால் முன்கூட்டிச் சொல்லவே முடியாது.

சில நிகழ்ச்சிகளை மட்டும் சொல்கிறேன்.

1988–ஆம் ஆண்டில் ஒருநாள், சென்னை உயர்நீதி மன்றத்தில் அன்றைய நீதியரசர் சாமிக்கண்ணு அவர்களுடைய மன்றில் அமர்ந்திருக்கிறேன். என் வழக்குக்கு முந்தைய வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. மணி சுமார் பகல் பன்னிரண்டரை இருக்கக் கூடும். பேசிக் கொண்டிருந்த வழக்குரைஞரின் இளவர், அதாவது, ஜூனியர் வழக்கறிஞரிடம் அவருடைய சீனியரின் வாதம் இன்னும் எவ்வளவு நேரம் நடக்கும் என்று மெல்ல வினவுகிறேன். பகல் இடைவேளை வரைக்கும் போகும் என்று அவர் சொன்னதும், ஓ அப்படியானால், நான் பிற்பகல் வந்தால் போதுமோ என்று கேட்கிறேன். "பிற்பகல் நீதிமன்ற அமர்வு கிடையாது, ஏனென்றால் அன்று சிவன் ராத்திரி என்று அவர் பதில் சொன்னதுதான் தெரியும், உடனே, 'சிவன்' என்ற சொல்லில் இருந்து ஒரு மின்னல் வெடித்துச் சிதறி என் அகத்திரையைத் தாக்குகிறது. கடகடவென்று

*பாடல்கள் நெஞ்சில் பெருக்கெடுக்க, எதிரே இருந்த காஸ் லிஸ்ட், அதாவது, வழக்குப் பட்டியல் அச்சாகித் தினசரி வருகின்ற தாளின் பின்புறத்தில் கிறுக்குகிறேன்.*

**ஆசையில் அலைந்து கெட்டேன் அனுபவம் பழுது பட்டேன்**
**ஓசையில் உழன்று நொந்தேன் ஒருகணம் உனைநினைந்தேன்**
**நீசனென் றெள்ளிடாமல் நீயெனைத் தேடி வந்தாய்**
**ஈசனே எம்பிரானே என்னை ஆளுடைய கோவே**

*மொத்தம் பன்னிரண்டு பாடல்கள். எழுதி முடித்து, நிமிர்ந்து பார்க்கிறேன், வழக்கு மன்றம் காலியாக இருக்கிறது. நீதியரசர், நீதிமன்ற அலுவலர், நான் ஆகிய மூவர் மட்டுமே இருக்கிறோம். நீதியரசர் சாமிக்கண்ணு சொல்கிறார், "உங்களுக்கு முந்தைய கேஸ் முடிந்து உங்கள் கேஸ் அழைக்கப் பட்ட போது, நீங்கள் ஏதோ மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தீர்கள். தொந்தரவு செய்ய வேண்டாம் என்று தான் காத்திருக்கிறேன்". நீதியரசர் சொன்னதைக் கேட்டு நெகிழ்ந்து போனேன்.*

*இப்படிப் பல அனுபவங்கள்!*

*ஒருநாள், வானத்து மின்னலே வந்து என்னகத்தை ஊடுருவிச் சென்று, அங்கே கவிதை நிலவை மலரச் செய்த அனுபவத்தைப் பிறகு சொல்கிறேன்.*

# 27

*1981–ஆம் ஆண்டில் தான் அந்த நிகழ்ச்சி நடந்தது. அதாவது, நிஜமாக ஒரு மின்னலே கவிதையான நிகழ்ச்சி. 'என்னய்யா, இதெல்லாம் ஒரு நிகழ்ச்சியா?' என்ற எகத்தாளக் குரல் எனக்குள்ளேயே எதிரொலிக்கிறது. தினமும் ஆங்கில நாளேடுகளைக் கரைத்துக் குடிக்கும் ஒருவன், தமிழ் நாளேடு மட்டும் படிப்பவனைப் பார்த்துக் கிண்டலாக உனக்கு என்ன உலக நிகழ்ச்சி தெரியும்? வண்ணாரப்பேட்டை ரவுடி இன்னொருவனைச் சதக், சதக் என்று கத்தியால் குத்திக் கொன்றான் போன்ற அன்றாட விஷயங்கள் மட்டுந்தான் உனக்குச் செய்தி, நிகழ்ச்சி. காஜா தெரியுமா? சட்டைப் பொத்தானைக் கஷ்டப்பட்டு நுழைப்போமே, அந்தக் காஜா இல்லேப்பா. இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் இடைப்பட்ட ஒரு சிறிய பகுதி. அதன் கடைசி எழுத்து ஆங்கிலத்தின் கடைசி எழுத்து. ஆனால் அதைச் சுட்டிக்காட்டத் தமிழில் 'ஜ'வை விட்டால் வேறு எழுத்து வடிவம் இல்லையே, என்ன பண்ணுவேன்? சரி, சரி, அந்த இடத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் கொன்று குவிக்கப்படும் நிகழ்ச்சி நடக்கிறதே, அந்தச் செய்தி தெரியுமா உனக்கு?*

*இப்படி நக்கல் செய்யும் அந்த மேதாவியிடம், 'ஐயா, உங்களுக்கு இந்தப் புவிக்கோளமாகிய பூமியில் நடக்கும் சமாச்சாரங்கள்தான் தெரியும்; அவைதாம் உங்களுக்குச் செய்திகள். ஆனால், பூமி மட்டுந்தானா உலகம்? பூமியைத் தாண்டிச் சூரியன் எனப்படும் நட்சத்திரத்தில் நடக்கும் அதிசயங்களை நீர் அறிவீரா? அதையும் தாண்டி அடுத்த அண்டத்தில் என்ன நடக்கிறது என்று தெரியுமா உமக்கு?' என்றெல்லாம் நான் கேட்கப் போவதில்லை. பாரதி ஒரு கட்டுரையில் எழுதியதை மட்டும் அந்த அதிமேதாவிக்குப் படித்துக் காட்டினால் போதும். பாரதி எழுதுகிறான்:*

**உலகத்தில் எங்குப் பார்த்தாலும் நிறைந்து கிடைக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந்தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன் பார்ப்பதற்கென்றால் நம்மவர்கள் கூட்டம் கூட்டமாக ஓடுகிறார்கள். சூரியாஸ்தமன காலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன் கூடப் போகிறதில்லை. அப்போது வானத்திலே இந்திரஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணமிருந்த தோற்றம் அடுத்த க்ஷணமிருப்பதில்லை... நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமாநந்த மெய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங்கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர். இக்காலத்திலேதான் இந்த துரதிஷ்ட நிலைகொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்களெல்லாரும் கவிகளென்று சொல்லி வெளிவருகிறார்கள்.**

*மின்னலே கவிதையான நிகழ்ச்சி என்று சொன்னேனே, அந்தச் செய்திக்கு வருவோம்.*

*என் வளர்ப்புத் தந்தை பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 1980–ஆம் ஆண்டு கமல்ஹாஸனை வைத்து ஒரு படம் தொடங்கப் பூஜை போட்டார். இயக்குநர் சக்திதான் அதன் இயக்குநர். சக்தியும், கமலும் மிக நெருங்கிய நண்பர்கள், இருவரும் ஒரூர்க்காரர்கள், ஆம், பரமக்குடி. சக்தியும், நானும் அமர்ந்து பலநாட்கள் விவாதம் செய்து ஒரு கதையைப் பின்னினோம். அந்தக் கதையை நாங்கள் கமலிடம் சொல்ல, அவரும் ஒப்புக் கொண்டு படத்துக்கு "வாய்ப்பூட்டு" என்று பெயர்சூட்டவும் செய்தார். 'வாய்ப்பூட்டு' பட பூஜை மிக விமரிசையாக நடந்தது. அதற்கு இளையராஜாவை இசையமைக்கக் கோரி அணுகினோம். அவர் மூன்று மாதங்களுக்குத் தமக்கு நேரமில்லை என்று சொல்லிவிட்டதால், பாடல் பதிவு எதுவும் இல்லாமல் பூஜை மட்டும் போட்டோம். ஏதோ காரணங்களால், பூஜை போட்ட சில நாட்களிலேயே அந்தப் படம் எடுக்கும் எண்ணத்தை என் தந்தை கைவிட வேண்டியதாயிற்று. எனக்கு அதற்குள் இயக்குநர் சக்தியுடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டு விட்டதாலும், திரைப்பட பூஜை என்று என் நண்பர்களையெல்லாம் நான் அழைத்துக் காட்டிவிட்டு உடனே மூட்டை கட்டிவிட என் ஈகோ, அதுதான், அகங்காரம், இடம்கொடுக்காததாலும், எப்படியும் சக்தியின் இயக்கத்தில் வேறொரு படம் எடுத்தே ஆக வேண்டுமென்று என் வளர்ப்புத் தந்தை கல்யாணராமனிடம் கேட்டேன். நான் கேட்டு அவர் எதையும் மறுத்ததே இல்லை.*

குறைந்த பட்ஜெட்டில் எடுப்பது என்று தீர்மானம் ஆகியது. கதாநாயகனாக என் நண்பர் எஸ்.வி.சேகரையும், கதாநாயகியாக புதுமுகம் ஸ்ரீலட்சுமி என்பவரையும் வைத்து, சக்தியும் நானும் கலந்து ஒரு கதை உருவாக்கிப் படத்துக்கு பூஜை போட நாள் குறித்தோம். குறைந்த பட்ஜெட் ஆயிற்றே! இளையராஜா அளவுக்கு இசையமைப்பாளருக்குச் சம்பளம் கொடுக்க முடியாதே என்ற நிலை வர, ஏதோ ஒரு துணிச்சலில் 'நானே இசையமைக்கிறேன்' என்று ஒரு பேச்சுக்குச் சொன்னதும் என் தந்தையும், சக்தியும் அதை அப்படியே ஒப்புக் கொண்டு இசையமைக்குமாறு என்னைத் தூண்டினார்கள். சரியென்று கோதாவில் இறங்கினேன். பூஜை அன்றே முதற்பாடல் பதிவு செய்வது என்று முடிவானது. அப்படி முடிவாகி நாலு நாட்களுக்குள் பூஜையும், பாடல் பதிவும் நடைபெற நாள் குறித்தாகி விட்டது. நாங்கள் முடிவு செய்திருந்த கதையோ கல்லூரியில், அதுவும், ஆண்களும், பெண்களும் இணைந்து படிக்கும் ஒரு கல்லூரியிலேயே பெரும்பாலும் நடப்பதாக இருந்தது. படத்தின் பெயர் 'ஸ்பரிசம்' என முடிவானது.

நான் விவேகானந்தா கல்லூரியில் படிக்கும் போதே நண்பர்கள் புடைசூழ நிறைய பைலா (இன்றைய கானா) பாடல்கள் எழுதிப் பாடியிருக்கிறேன். இயல்பிலேயே எனக்கு டப்பாங்குத்துப் பாடல்கள் மிகவும் பிடிக்கும். இலக்கண சுத்தமாக இனிய ராகத்தில் ஒரு பாடல் எழுதுவதைவிட, ஜனரஞ்சகமாக, டப்பாங்குத்துப் பாடல் எழுதுவது ரொம்பக் கடினம். "என்னடி ராக்கம்மா பல்லாக்கு நெளிப்பு", "தென்ன மரத்துல குந்தியிருப்பதச் சின்ன பாப்பா", போன்ற பாடல்கள் எழுதுவது அவ்வளவு சுலபம் இல்லை. "ஜவ்வாது பொட்டாகத்தான் இட்டுக்கவா ஒன்னத் தாயத்துக் குள்ளே வச்சுக் கட்டிக்கவா" என்ற பல்லவியை எப்போது கேட்டாலும் ரசிப்பேன். ஆகவே, துணிந்து ஒப்புக் கொண்டேன்.

பூஜை நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால், என் வீட்டில் 'சீத்தாத்தை' என்ற அத்தை ஒருத்தி, என் வளர்ப்பு அன்னை அலங்காரத்தின் தாயார், அவள் அடிக்கடிப் பாடும் ஒரு நையாண்டிப் பாடலைப் பாடினாள். அதைக் கேட்டதும் அதுவே பல்லவியாக என் முதல் திரைப்படப் பாடல் உருவானது.

முறையாக இசை பயிலாத, எந்த வாத்தியமும் வாசிக்கத் தெரியாத, ஸ்ருதியோடு பாடுவதே இல்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த நான் இசையமைப்பாளனாக, முதன்முதலில், ஏ.வி.எம். ஸ்டூடியோவில் இருந்த ஆர்.ஆர். ஒலிப்பதிவுக் கூடத்தில், ஸவுண்ட் எஞ்சினியர்கள் மாணிக்கம், சம்பத் ஆகியோருக்கு அருகில் எப்படி சப்த நாடியும் ஒடுங்க அமர்ந்திருந்தேன் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன். அது போதாதென்று,

நான் இசையமைக்கும் அழகைப் பார்க்கச் சாரு அண்ணா, அதாவது, சாருஹாசன் வேறு வந்து என் அருகில் உட்கார்ந்து கொண்டு விட்டார். என் நடுக்கம் இரட்டிப்பாகியது. பாடலை யார் பாடப் போகிறார்கள் என்று கூட முடிவு செய்யவில்லை. கோவையிலிருந்து நண்பர் சுந்தரேசன் என்பவரையும், அப்போது சில படங்களில் பாடியிருந்த டி.கே.எஸ். கலா அவர்களையும் மட்டும் பாடத் தயாராக வரச் சொல்லியிருந்தேன். பாடலோ பல மாணவ, மாணவியர் பாடிக்கொண்டு ஆடுவதாக அமைந்திருந்தது. என் பாடல் வரிகளை நான் முணுமுணுக்க, அதை எப்படியோ ஒரு மாதிரியாகச் சரியாகப் புரிந்து கொண்டு ராமமூர்த்தி அவர்கள் ஹார்மோனியத்தில் வாசித்துக் காட்ட, ராக்கெட் ராமனாதன், முத்துராஜா, என் மனைவியின் தம்பி ரதீஷ் உட்பட அங்கு வந்திருந்த நண்பர்கள் பலரையும் பாட வைத்துப் பதிவானது அந்தப் பாடல்.

நான் ஏதோ ஆபாசப் பாடல் எழுதியிருக்கிறேன் என்றும் அதை மேடையில் 'சொல்லி விடட்டுமா' என்றும் வாலி மிரட்டினார் என்று முன்னொரு பகுதியில் எழுதியிருந்தேனே, அந்தப் பாடல்தான் அது.

ராஜ கோபாலா ஒங்கம்மா தோசை வாத்தாளா
வேணு கோபாலா ஒங்கம்மா வெண்ணை தந்தாளா

'ஸ்பரிசம்' படம் முக்கால்வாசி எடுத்தாகி விட்டது. இன்னும் வியாபாரம் ஆகவில்லை. நான் வக்கீல் தொழிலில் சம்பாதித்த கொஞ்சநஞ்ச பணமும் நேராக படச் செலவுக்கே போய்க்கொண்டிருந்தது. ஷோபனா ரொம்பப் பொறுமைசாலி.

படம் தொடங்கியதிலிருந்து, ஒவ்வொரு நாளும், அந்த நாள் படப்பிடிப்புக்கு அல்லது பாடல் பதிவுக்குத் தேவைப்படும் பணம் அந்த நாள் காலையில்தான் யார் மூலமாவது எதிர்பாராமல் கிடைக்கும். அப்படி ஒரு ராசி அந்தப் படத்துக்கு. படம் பூஜையன்று விடியற் காலையில், செலவுக்குப் போதிய பணம் இல்லாமல் நானும், என் வளர்ப்புத் தந்தையும் புறப்பட்டு விட்டோம்; 'பார்க்கலாம், மாலைக்குள் பணம் வரும்' என்ற துணிவோடு, டிரைவ்–இன் ஓட்டலில் போய் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த போது அங்கு வந்த ஒரு நண்பரிடம் நான் விளையாட்டாக இதைச் சொன்னதும் அன்றைய செலவுக்குத் தேவைப்படும் பணத்தை அப்படியே தம் கைப்பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தார். மெய்சிலிர்த்துப் போனேன். அவர்தான், நான் வக்கீல் தொழில் தொடங்கியதும் தம் அலுவலக வளாகத்திலேயே என் அலுவலகம் அமைக்க உதவிய டி.எஸ்.சத்யம். 'சத்யம் அட்வர்டைஸிங்' என்ற விளம்பர

நிறுவனம் வைத்து நடத்திய அவர் எங்கள் குடும்ப நண்பர். சமீபத்தில் அமரராகிவிட்ட அவர் போன்ற நல்ல உள்ளம் படைத்த நண்பர்களே எனக்கு எப்பொழுதும் உதவிசெய்து வந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் யாராவது வந்து உதவக் காத்திருந்த என் துணிவை எண்ணிப் பார்த்து வியக்கிறேன். இப்படித்தான் வளர்ந்தது 'ஸ்பரிசம்' படம்.

'என்னய்யா, மின்னல், கவிதை என்றெல்லாம் அளந்து விட்டு ஏதோ தோசை மாவை அரைத்துக் கொண்டிருக்கிறாய்?' என்ற கேள்வி தொலைவிலிருந்து என் செவியை எட்டுகிறது. கதை என்று வந்தால் அப்படித்தான் சுற்றி வளைந்து போகும். பொறுமை தேவை.

சரி, மின்னலுக்கு வருகிறேன்.

அந்தப் படத்துக்கு இன்னொரு பாடலை அடுத்துப் பதிவு செய்து படம் பிடிக்க வேண்டும். கல்லூரியிலே கதாநாயகனுக்கும், நாயகிக்கும் எப்பொழுதும் சின்ன சின்ன சண்டைகள். இப்படியே பாதிப் படம் போகிறது. நாயகன் செய்த ஒரு விஷமம் நாயகியை மிகவும் பாதித்துவிட அவள் அவனிடம் நிரந்தரமாகக் கோபித்துக் கொண்டுவிட, நாயகன் அவள் மனத்தை மாற்றுவதற்குப் பாட வேண்டும். மறுநாள் அதுபற்றி விவாதிக்க இயக்குநர் சக்தி அழைத்திருந்தார். ஆனால் அதற்குள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சத்யதேவ், ஒரு வழக்கில் என்னைக் கமிஷனராக நியமித்து விட்டார். அன்றிரவே நான் தேவகோட்டைக்குச் சென்று அங்கிருந்த வயது முதிர்ந்த ஒருவரைச் சாட்சியாக விசாரித்து வரக் கட்டளையிட்டு விட்டார்.

இரவு, புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தேன். மனமெல்லாம் 'ஸ்பரிசம்' படத்திலேயே இருந்தது. இரவாகியும் தூக்கம் வரவில்லை. ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டே இருந்தேன். திடீரென்று ஒரு வெட்டு மின்னல் கண்ணைப் பறித்தது. ஜன்னலை சாத்திவிட்டுப் படுத்துக் கொண்டேன். மின்னல் மட்டும் என் மனத்துக்குள் ஆழமாகத் தைத்து, ஊடுருவிச் சென்று, அங்கிருந்து ஒரு பாடலை வரவழைத்து விட்டது. இல்லை, மன்னிக்கவும், அந்த மின்னலே பாடலாக உருமாறி என் நெஞ்சில் குடியேறிவிட்டது. அது பல்லவியோடு நின்றுவிட்ட பாடல் போல் இரண்டே வரிகளில் முடிந்து விட்டது. நானும் தூங்கி விட்டேன்.

# 28

*ரயிலில் என்னைத் தாக்கிய மின்னற் கவிதை என்று போன அதிகாரத்தில் குறிப்பிட்டேன் இல்லையா? அதுதான் 'ஸ்பரிசம்' படத்தின் அடுத்த பாடலாகியது. அதுவும் இரண்டே வரிகள். அதையே வேறு வேறு ஸ்தாயியில், ஆனால் ஒரே ராகத்தில் கதாநாயகன் பாடுவதாக அமைந்த பாடல். எனக்குத் தெரிந்த வரையில் அதைவிட அளவில் சிறிய பாடல் எதுவும் எந்தத் திரைப்படத்திலும் வந்ததில்லை.*

*அந்தப் பாடலைப் பாட எஸ்.பி.பாலசுப்ரமண்யம் ஒப்புக் கொண்டிருந்தார். அதற்கு முன் நான் அவருக்கு அறிமுகம் இல்லை. பாடல் பதிவுக்கு நாள் குறித்தாகி விட்டது. அன்று பகல் 2 மணியிலிருந்து இரவு 9 மணி வரைக்கும் ஆர்.ஆர்.ஒலிப்பதிவுக் கூடத்தை வாடகைக்கு எடுத்து விட்டோம். வாத்தியக்காரர்களை எல்லாம் வரவழைத்து, ஹார்மோனியம் ராமமூர்த்தி உதவியுடன் ஸ்வரங்கள் எழுதித் தந்து, ஒத்திகை எல்லாம் பார்த்து முடித்து, இரவு 6 மணிக்குத் தயாராக, எஸ்.பி.பி. அவர்களின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தோம். 7 மணியாயிற்று வரவில்லை. தொலைப்பேசியிலும் அவர் அகப்படவில்லை. 8 மணிக்குத் தொலைப்பேசியில் கிடைத்தார். "சாரி ரவி, நான் திருப்பதியில் இருந்து வந்து கொண்டிருக்கிறேன். வரப் பத்து மணிக்கு மேலாகிவிடும். ரொம்பக் களைப்பாகவும் இருக்கிறது. நீங்கள் ம்யூஸிக் டிராக்கைப் பதிவு செய்து கொள்ளுங்கள். நான் இன்னொரு நாள் பாடிக் கொடுக்கிறேனே" என்று மிகப்பணிவாக அவர் வேண்டுகோள் விடுத்தார். டிராக் பதிவு செய்த அனுபவம் எனக்கு அப்போது இல்லாததாலும், எஸ்.பி.பி. பாட வேண்டிய என் முதல் பாட்டிலேயே இப்படித் தடை வருகிறதே என்ற ஆதங்கத்தாலும் அவர் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காமல் அன்றிரவே அவர்*

வந்து பாடிக் கொடுக்க வேண்டும் என்று அடம் பிடித்தேன். என் நிலையைப் புரிந்து கொண்டு அவர் வீட்டுக்குக் கூடப் போகாமல் இரவு பத்து மணிக்கு நேராக ஒலிப்பதிவுக் கூடத்திற்கு வந்தார். பாடல் சொல்லுங்கள் என்றார். நான் இரண்டு வரிகளைச் சொன்னேன். ஓகே, சரணம்? என்றார். அவ்வளவுதான் என்றேன். நிமிர்ந்து பார்த்தார். பாடலே அவ்வளவுதானா? ஆம். அரை மணி நேரத்துக்குள் மலஹரி ராகத்தின் சாயையில் அமைந்திருந்த அந்தப் பாடலை அமர்க்களமாகப் பாடிக் கொடுத்தார். என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பாடல் மிகவும் நன்றாக அமைந்தது. அந்தப் பாடல் இதுதான்:

**ஊடல் சிறு மின்னல் ஒளி நிலவே வாடலாமா**
**காதல் விளையாட்டில் கண்ணீர் மாலை சூடலாமா**

அவ்வளவுதான் பாடல். இதே வரிகளை வெவ்வேறு விதமாக மூன்று முறை கதாநாயகன் நாயகியிடம் பாடுவதாகக் காட்சி அமைந்தது.

ராக்கெட் ராமனாதன், சுப்புணி (என்னுடன் விவேகானந்தா கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்த நண்பன் டி.எம்.சுப்பிரமணி) இவர்களுடைய நகைச்சுவையும், இந்தப் படத்தின் பாடல்களுமே, வினியோகஸ்தர்கள் இந்தப் படத்தை வாங்க, முக்கியமான காரணங்களாக அமைந்தன.

மேலே உள்ள பாடல், பல்லவியோடு நின்றுவிட்ட பாடல் இல்லை. பல்லவியே ஒரு முழுப்பாடலாக உருக்கொண்டு விஸ்வரூபம் எடுத்த பாடல். அதற்குமேல் வளர அதில் இடமில்லை. ஆனால், பல்லவியோடு நின்றுவிட்ட பாடல்களும் உண்டு.

ஒருநாள் இளங்காலைப் பொழுது, சின்ன சின்ன இழைகளாக வானம் மெல்ல மழைதூவிக் கொண்டிருந்தது. அந்த ரம்மியமான சூழ்நிலையில் ஒரு பல்லவி, தர்பாரி கானடா ராகத்தில், மனத்தில் மெல்லப் படர்ந்தது. அதையே மனம் முணுமுணுத்துக் கொண்டிருக்க, அதுவே அப்படியே மெல்லத் தேய்ந்து போனது, ஆங்கிலத்தில் ஃபேட் அவுட் ‘fade out’ என்பார்களே, அது போல்.

**மழைத்**
**தூறலிடும் ஒரு காலைப் பொழுது - உனைத்**
**தூண்டிவிடும் ஒரு பாடல் எழுது**

பிறகு நேர்ந்த எந்தத் தூண்டுதலும் அனுபல்லவி, சரணங்களைத் தரவில்லை. அந்தப் பல்லவியைத் தொடர்ந்து எழுதப் பலமுறை நான் முயன்றும் முடியவில்லை. வார்த்தைகள் வந்தன. ஆனால்

அந்தப் பல்லவியோடு அவை இணைய முடியவில்லை. முயற்சியைக் கைவிட்டு விட்டேன்.

ஷோபனாவும் பாடல்கள் எழுதியுள்ளாள். அதுவும் அவள் இஷ்ட தெய்வமாகிய கண்ணன் மேல் அவள் வடித்த பாடல்களில் மீராவின் தாபமும், ஆதங்கமும் எதிரொலிக்கக் கேட்கலாம். அப்படி அவள் 1980–களில் எழுதிய ஒரு பாடலில் வரும் இரண்டு வரிகளை இந்தச் சூழ்நிலையில் எண்ணிப் பார்க்கலாம்:

**குழலில் இருந்து பிறந்த இசை நான் - அவன்**
**குழலில் இருந்து பிறந்த இசை நான்**
**கண்ணனின் கற்பனை நான்**

இந்தப் பல்லவியோடு தொடங்கும் அந்தப் பாடலின் சரணத்தில் வரும் அந்த இரண்டு வரிகள்:

**தென்ற லின்வழி சென்றத னாலே கண்ணனை மறந்திருந்தேன்**
**பல்லவி யோடு நின்றத னாலே கண்ணனைச் சரணடைந்தேன்**

செதுக்கச் சிற்பி வந்தால்தான் கல் சிலையாகும். அவிழ்க்கக் கவிஞன் வந்தால்தான் சொல் கவியாகும். நம் உயிரே ஒரு கல்; ஒரு சொல்; அதைச் செதுக்க வரும் சிற்பிக்காக, அல்லது அதை விரித்துப் பாடவரும் கவிஞனுக்காக அது எத்தனை யுகமானாலும் காத்திருக்கும், ராமனுக்காகக் காத்திருந்த அகலிகை போல!

பல ஆண்டுகள் கழித்து நான் எழுதிய ஒரு பாடலின் தொகையறா (இந்த வார்த்தைக்கு என்ன பொருளோ!):

**உளிதாக்கி உடைகின்ற கல் - நான்**
**உமிவிலகக் காத்திருக்கும் நெல்**
**ஒருதேவ முனிவன்வந் துச்சரிக் கும்வரை**
**ஓசையின்றி ஒளிந்திருக்கும் மந்திரச்சொல்**

என் வாழ்க்கையில் எப்படியெல்லாம் மின்னல் அடித்திருக்கிறது! 5 வயதில் 'மின்னல் வீரன்' என்ற பெயரில் என் வளர்ப்புத் தந்தை தயாரித்த படத்தில் குட்டிக் கதாநாயகனாக நடித்தேன். 11 வயதில் என் ஆசிரியர் என் தமிழ் விடைத்தாளைச் சுருட்டி என் முகத்தில் வீசியெறிந்த ஒரு மின்னல் அதிர்ச்சியில் உந்தப் பட்டு மூன்று மாதங்களில் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களை நானே நூலகம் சென்று பயின்று கவிதை எழுதத் தொடங்கி, "மின்னற் சுவையே கன்னற் கனியே" என்று தொடங்கும் ஒரு நீண்ட கவிதை எழுதி ஆசிரியரின் அங்கீகாரத்தையும், பாராட்டையும் பெற்றேன். 28 வயதில் எஸ்.பி.பி பாட "ஊடல் சிறு மின்னல்" என்ற என் பாடலை நானே இசையமைத்துப் பதிவு செய்தேன். பிறகு, 1998–ஆம் ஆண்டில் பாரதியியல் பற்றி "மின்னற் சுவை" என்றொரு நூல்

*எழுதி அதற்குக் கவியரசி சௌந்தரா கைலாசத்திடம் அருமையான முன்னுரை வாங்கி வெளியிட்டேன்.*

*என் இசையமைப்பில் எஸ்.பி.பி. பாடிய இன்னொரு பாடலிலும் மின்னலடித்தது. ஆனால் அது 'ஸ்பரிசம்' படம் வெளியாகி இரண்டு வருடங்களுக்குப் பிறகு என் வளர்ப்புத் தந்தை எடுத்த 'ராஜா நீ வாழ்க' படத்துக்காகப் பதிவானது. பிரபு, சத்யராஜ், அம்பிகா நடித்து, சி.வி.ராஜேந்திரன் இயக்கத்தில் தயாரான அந்தப் படத்துக்காக எஸ்.பி.பி. பாடிய பாடலைப் பதிவு செய்ய என் உதவியாளராகப் பணியாற்றிய எல்.வைத்தியநாதனை இப்போது நினைத்துக் கொள்கிறேன். ஏற்கனவே, 'ஏழாவது மனிதன்' என்ற படத்துக்கு இசையமைத்து வெற்றியும் பெற்ற இசையமைப்பாளர் அமரர் எல்.வைத்தியநாதன் தம்மை விட வயதிலும், அனுபவத்திலும் குறைந்த எனக்கு உதவிசெய்ய முன்வந்த பெருந்தன்மையை நன்றியுடன் நினத்துக் கொள்கிறேன். அந்தப் பாடலை எஸ்.பி.பி எப்படித் தம் இனிய குரலால் வளம் செய்திருக்கிறார் என்பதை நினைத்தால் இப்பொழுதும் என் கண்கள் குளமாகின்றன:*

**தென்றலே மலர் சூடவா -கொடி**
**மின்னலே வளை போடவா**
**மேகமே மழைத் துளிகளில் - மணிச்**
**சதங்கைகள் கட்ட ஓடிவா**

**நிலவே ஒரு மலரென மலர்வதும்**
**நிழலே மணி ஒளியென விரிவதும்**
**கனவா இல்லை நினைவா உன் முகமா**
**காவியம் ஆயிரம் பாடுவதென் மனம்**
**பார்வையே மலர் சூடுமே - ஒளிப்**
**புன்னகை வளை போடுமே - என்**
**கண்களின் மழைத்துளிகளே - உன்**
**கால்களில் ஜதி போடுமே**

**தென்றலே மலர் சூடவா**

**வீணை நாதஸ்வர மேள தாளமின்றி**
**வெண்ணிலா தினம் உதிப்பதில்லையா**
**கனவு மலரக் கண் இமைகள் நெகிழப் - புதுக்**
**கனவு மலரக் கண் இமைகள் நெகிழ - ஒரு**
**மழலை வடிவமுன் மடியில் தவழவரும்**
**வெண்புறா விளையாட வா - குயில்**
**பேடையே குழ லூதி வா - அலைக்**

கரங்களில் நுரைக் குடங்களில் - நதி
அன்னை யேசீர் கொண்டு வா
தென்றலே மலர் சூடவா
கொடி மின்னலே வளை போடவா

*இந்தப் பாட்டுக்கும் ஒரு பின்னணி உண்டு. அதுவும் இலக்கியப் பின்னணி. என் பாட்டு ஒவ்வொன்றுக்கும் பின்னணி இசை போலவே ஒரு பின்னணிக் கதையும் உண்டு. என் கல்லூரி நாட்களில் என் நண்பன் ஓவியக் கவிஞர் சு.ரவி எனக்கு அவ்வப்போது சம்ஸ்க்ருத இலக்கியத்திலிருந்து நல்ல கவிதைகளைச் சொல்லி விளக்கியிருந்தான். அதிலும் மஹாகவி காளிதாசனின் 'ரகுவம்சம்' என்ற காவியத்தில் இருந்து அவன் சொன்ன ஒரு பாடல் என்னை மிகவும் கவர்ந்தது. ரகுவம்சத்தில் ஒரு பகுதிதான் ராமனின் கதை. அதில், ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போகும் வழியில், சீதை தன் ஆபரணங்களை ஒவ்வொன்றாகக் கழற்றிக் கீழே வீசி எறிந்ததாகவும், அவள் கைவளையல்களை அப்படிக் கழற்றி எறிந்ததும், அவளுடைய வெறுங்கையைப் பார்க்கப் பொறுக்காமல் வானமே இடியிடித்து, மின்னலால் அவள் கைக்கு வளையிட்டது என்ற அருமையான பாடல் என் மனத்தில் பதிந்து விட்டிருந்தது. தக்க நேரத்தில் அது தமிழில் வெளிப்பட்டதை எண்ணி மகிழ்கிறேன்.*

*இன்னும் என் வாழ்வில் என்னென்ன மின்னல்கள் காத்திருக்கின்றனவோ !*

*அட, இந்த வரி எழுதும் போதே உள்ளத்தில் பளிச்சென்று மின்னலிடுகிறதே ஒரு புதுக்கவிதை; அதாவது, இப்பொழுதுதான் உதித்த புதிய கவிதை. சுடச்சுட, அப்படியே பரிமாறுகிறேன். இந்தக் கவிதைக்கு இதுவே சூழல்; நீங்களே இதன் செவிலித் தாய்மார்கள்:*

காற்றும் மின்னலுமாய்க் கதைசொல்ல வந்தேனே
நேற்று நினைவுகளை நெஞ்சுருகத் தந்தேனே
போற்றிப் புகழ்வதற்கா புலனழிந்து போவதற்கா
ஏற்றம் எனக்கில்லை எல்லாம் திருவருளே

சாட்டை சொடுக்கியவன் சங்கல்பத் தால்நானும்
ஆட்டம் போடுகிறேன் ஆலோலம் பாடுகிறேன்
வேட்டைக் காரனுக்கு வேறென்ன குறிக்கோளோ
வேடிக்கை காட்டுகிறான் வேஷங்கள் போடுகிறேன்

கூத்து நடக்கையிலே கூட நடிப்பார்கள்
கூத்து முடிந்ததுமே கூட்டம் கலைந்துவிடும்
கூத்தன் அவனன்றிக் கூட்டில் எதுபறவை
கூத்து நடக்கட்டும் கொண்டுவா கவிதைகளை

# 29

“என்னப்பு! ஆசுகவி எல்லாம் எழுதித் தள்ளிப்புட்டீர்.” சிகாமணி திடீரென்று என்முன் கேலி கலந்த கேள்வியோடு தோன்றுகிறான். “அது கெடக்கட்டும். ஏதோ புதுக்கவிதை என்று காதில் விழுந்தது. அதெல்லாம் வேறு எழுதுவதுண்டோ?”

“ஓ! மாணவரிஸம் பத்திரிகையில்...” என்று நான் முடிக்குமுன், சிகாமணி இடைமறித்து, “அதென்ன ஓய் பேரு? மாணவரிஸம்?” என்று கேட்கிறான்.

அது ஒரு கதை அப்பா. சிந்தனைக் கோட்டத்தில் சேர்ந்த பெண்கள் கூட்டம் சில மாதங்களுக்குப் பிறகு காணாமல் போய்விட்டார்கள் என்று சொன்னேன் இல்லையா? ஷோபனாவும் அப்படித்தான். கிட்டத்தட்ட ஒரு வருடம் பார்க்கவில்லை. திடீரென்று ஷோபனாவும், மங்களசுந்தரியும் நான் வசித்த பலாத்தோப்பு வீட்டுக்கு என்னைத் தேடி வந்தார்கள். அப்போது, அவர்கள் ‘நாம் மாணவர்களுக்காக ஒரு பத்திரிகை ஆரம்பித்தால் என்ன?’ என்று கேட்கப் போய், நான் உடனே அந்த யோசனையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். பத்திரிகைக்கு நாங்கள் தேர்ந்தெடுத்த எந்தத் தலைப்பையும் பத்திரிகைப் பதிவாளர் அங்கீகரிக்கவில்லை. ஏற்கனவே பதிவாகி விட்ட பெயர்கள் என்று தள்ளி விட்டார். மாணவர் குரல், மாணவர் முரசு எல்லாம் தள்ளுபடியாகி விட்டன. எனக்குப் பொறுமை போயிற்று. யாரும் வைத்திருக்க முடியாத ஒரு பெயர் வேண்டும் என யோசித்துத் தேர்ந்தெடுத்த பெயர்தான் ‘மாணவரிஸம்’.

அந்தப் பத்திரிகை சுமார் நாலாண்டுக் காலம் நடந்தது. அவ்வளவு காலம் நான் படித்துக் கொண்டிருந்தேன். ஒரே வகுப்பில் இல்லை சாமி! பி.ஏ. முடித்துவிட்டு, பி.எல்.! அது முடித்த பிறகு, எம்.ஏ. அதற்கும் பிறகு எம்.ஃபில். மாணவனாகவே

என் வாழ்நாள் முழுதும் போய்விடுமோ என்ற அச்சமே வந்து விட்டது. திருமணத்துக்குப் பிறகும் நானும், ஷோபனாவும் சில ஆண்டுகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தோம், கவிஞர் சொன்னதுபோல் பாடித் திரிந்த பறவைகளாக!

சரி, சரி மாணவரிஸத்துக்கு வருகிறேன். அதில் எத்தனை மாணவர்கள் கதை, கவிதை, கட்டுரை எழுதினார்கள்! எத்தனை மாணவர்கள் ஓவியம் வரைந்தார்கள், நிருபர்களாகச் செய்தி திரட்டித் தந்தார்கள்! வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான், பின்னாளில் ஐ.பி.எஸ். அலுவலராக வரவிருந்த ரவி ஆறுமுகம், சுகி சிவம், சு.ரவி, க்ரேஸி மோகன்! ஏன், பின்னாளில் பெரிய திரைப்பட இயக்குநராக வரவிருந்த மனோபாலா மாணவரிஸத்தின் நிரந்தர ஓவியராகப் பணியாற்றினார். சென்னை, திருச்சி, கடலூர், பாண்டிச்சேரி, மதுரை, திருநெல்வேலி, பம்பாய், டில்லி என்று எல்லா இடங்களிலும் மாணவ நிருபர்கள் இருந்தும் நிறைய பிரதிகள் அவர்கள் மூலம் மாதம்தோறும் பட்டுவாடா ஆகியும் வசூல் மட்டும் சரிவர இல்லாததால், என் கைப்பணத்தைச் செலவழித்துத்தான் பத்திரிகையை ஒவ்வொரு மாதமும் அச்சகத் திலிருந்து கொண்டு வருவேன்.

சிகாமணிக்குப் பொறுக்க முடியவில்லை. ‘ஏம்பா, புதுக்கவிதை எழுதியுள்ளாயா என்று கேட்டேன். அதற்கு பதில் சொல்லாமல் ஏதேதோ சொல்லிக் கொண்டு போகிறாய். உன் பதிலைப் புரிந்து கொள்வதை விடப் புதுக்கவிதையைப் புரிந்து கொள்வதே சுலபம் போல இருக்கிறதே!’ என்று ஒரு போடு போட்டான்.

நான் எழுதும் கவிதை புதுசா, பழசா என்று நானே சொல்வதை விட அதைப் படிப்பவர்கள்தான் சொல்ல வேண்டும். இலக்கணக் குடத்துக்குள் கவிதையை அடக்கவும் நான் முயலவில்லை, இலக்கணத்தை மீறி எழுதியே ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததும் இல்லை. நான் எழுதத் தொடங்கும் போது, இப்பொழுது ஒரு வெண்பா எழுத வேண்டும் அல்லது விருத்தம் எழுத வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு ஆரம்பிப்பதில்லை. ஏதோ தோன்றுவதை மனத்துக்குள் சொல்லி அல்லது பாடிப் பார்த்து, ஓ! இது வெண்பாவோ? ஓ! இது கட்டளைக் கலித்துறையோ? என்று அடையாளம் காண்பதே என் வழக்கம். பல சமயங்களில், இலக்கண வடிவுகளில் கட்டுப் படாமல் கவிதை திமிறிக் கொண்டும் வரும். ஆனால், அதற்கும் புது இலக்கணம் வடிவமைத்துச் சொல்ல இருக்கவே இருக்கிறான் நம்ம புத்தி சிகாமணி! எடுத்துக்காட்டாக ஒன்று சொல்கிறேன். 1978–ஆம் ஆண்டில் எழுதிய ஒரு கவிதை:

எதற்காக வோமனம் படபடக் கின்றது
யாழெடுத் தேனதில் ஸ்ருதிகலை கின்றது

கருமே கங்கள் உருமா றிப்போய்
நெஞ்சுக் குள்ளே நுழைந்து கொண்டன
ஒருதுளிக்கும் மறுதுளிக்கும்
இடைவெளி இன்றி மழைபொழி கின்றன
எதற்காக வோமனம் படபடக் கின்றது
.. .. ..

இந்தக் கவிதையில், "ஒருது ளிக்கும் மறுது ளிக்கும்" என்று யாப்பிலக்கணப்படி எழுதிப் படித்துப் பாருங்கள். சப்பென்று இருக்கும். அப்படி இல்லாமல், மேலே உள்ளது போல், இடைவெளி இல்லாமல் 'ஒருதுளிக்கும் மறுதுளிக்கும்' என்று சேர்த்துப் படித்துப் பாருங்கள். அப்போது, இடைவெளியின்றி மழைபொழியும் சந்தம் புரிபடும். இலக்கணம், கவிதைக்குப் பணிசெய்ய வேண்டுமே அல்லாமல், இலக்கணத்தால் கவிதை முடங்கிவிடக் கூடாது. எப்படி என் பிரசங்கம்!

இப்பொழுது நிஜமாகவே புதுக்கவிதை சமாச்சாரத்துக்கு வருவோம். புதுக்கவிதை இயக்கத்துக்கும் மரபுக் கவிதைப் புலவர்களுக்கும் நடந்துவந்த போர்பற்றி முன்பொருமுறை நான் எழுதியிருந்ததை நினைத்துக் கொள்கிறேன்:

"பொய்க்கால் குதிரைகளும் வைக்கோல் கன்றுகளும் போர்க்குரல் எழுப்புகின்றன."

மாணவரிஸத்தில் 'பகலவன்' என்ற பெயரில் கவிதைகளும், 'கதிரவன்' என்ற பெயரில் கட்டுரைகளும் எழுதிய காலத்தில், மரபு மீறாத ஒரு புதுக்கவிதை மாணவரிஸத்தில் எழுதினேன். அது என்னய்யா, மரபு மீறாத புதுக்கவிதை? கவிதையின் தலைப்பு "இவள் ஒரு புதுக்கவிதை":

இவளொரு புதுக்கவிதை

சுரதாவின் கவிதையைப்போல் சுகமான நளினங்கள்
சுழலும் பார்வை
எலியெட்டின் கவிதையைப்போல் என்றைக்கும் புதிராக
இருக்கும் உள்ளம்
தத்துவங்கள் கனக்கின்ற தாகூரின் கவிதையைப்போல்
தழைந்த கூந்தல்
இத்தனையும் இவளிடமே இயைந்திருக்கும் காரணத்தால்
மட்டும் இல்லை

செவிவரைக் கும்தான் செல்ல வேண்டுமெனக்
கவிஞர் வகுத்த கண்ணிலக் கணத்தை
மீறிய தாலும்
தன்சிலிர்ப் புக்குத் தக்க காரணத்தைத்
தானே அறியாமல் தயங்குவ தாலும்
உரைநடை ஒன்றை ஒடித்து வளைத்துப்
பாட்டெனச் சொல்லும் பாசாங் கைப்போல்
தென்றலைக் குழைத்துத் தேக்கில் இழைத்து
மின்னலின் வடிவில் மெல்ல வளைத்து
(அதை)
இடையெனச் சொல்லும் இரகசியத் தாலும்
இவளொரு புதுக்கவிதை

*சிகாமணி ஒரு கேள்வி கேட்கிறான். "சரி ஓய், இன்ன வடிவில் எழுதுவது என்று முடிவு செய்து கொள்ளாமல் எழுதுகிறாய் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறாய். எதைப் பற்றி எழுதுவது என்றாவது முடிவு செய்து கொண்டு எழுதுவாயா, இல்லை...? என்று சிகாமணி இழுக்கிறான்.*

*எல்லாம் தெரிந்தே, தெரியாதது போல் கேட்கிறான் சிகாமணி. என்னை வம்புக்கு இழுப்பதில் அவனுக்கு அவ்வளவு ஆனந்தம்!*

*எதைப் பற்றி எழுதுகிறேன் என்ற முன்முடிவோடு நான் கவிதை எழுதுவது கிடையாது. அதுவாக உள்ளிருந்து பொங்கி வரும். வந்து, வார்த்தைகளாகிச் சிந்திச் சிதறி, வெடித்துச் சில சமயங்களில் கோவென்று கதறிய பிறகே அதன் பொருள் என்ன என்று புரிந்து கொள்ள முயல்வேன். சில சமயம் புரிந்து கொள்ளும் முயற்சியில் தோற்றும் போயிருக்கிறேன்.*

*நேற்று நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். இந்தத் தொடரின் சென்ற பகுதியை வல்லமை ஆசிரியருக்கு அனுப்பிய பிறகு அவர் என்னைத் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு, "சார், நீங்கள் அனுப்பிய கட்டுரையின் நிறைவில் ஒரு கவிதை எழுதியிருந்தீர்கள். அதில், 'கூத்தன் அவனன்றிக் கூட்டில் எதுபறவை' என்று ஒரு வரி இருக்கிறது. ஒருவேளை, 'ஏதுபறவை' என்பது தட்டச்சுப் பிழையால் 'எதுபறவை' என்று ஆகி விட்டதோ?" என்று கேட்டார். அவர் கேட்டது பற்றிச் சிந்தித்தால் அவர் சொன்னது சரியென்றே பட்டது. ஆனாலும், அது எப்படி இருக்கிறதோ அப்படியே இருக்கட்டும் என்று சொல்லி உரையாடலை முடித்து விட்டேன். உடனே பொறிதட்டியது. ஆம், 'கூத்தன் அவனின்றி' என்றிருந்தால் 'ஏதுபறவை' என்பதே சரியாக இருந்திருக்கும். அவன் இல்லாமல் உயிர்ப்பறவை எப்படியிருக்க முடியும் என்று*

அர்த்தமாகும். ஆனால் அவன் அன்றி எதுபறவை என்றால், அவனே பறவை என்று பொருளாகிறது. கூத்து நடத்துபவனும் அவனே. கூடு கட்டுபவனும் அவனே. கூட்டுக்குள் உயிர்ப்பறவையாய்ச் சிறைப்பட்டிருப்பவனும் அவனே. இந்தப் பொறி தட்டியதும் உடனே நான் வல்லமை ஆசிரியரைத் தொலைப்பேசியில் அழைத்து இதைச் சொன்னேன். அவரும் ஒப்புக் கொண்டார்.

நான் பல வருடங்களுக்கு முன் எழுதிய நாடோடிக் குறள் என்ற குறட்பாக்களில் வரும் ஒரு குறளுக்கு அர்த்தம் இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சம் தெளிவாகிறது:

**கூடோ தான் கட்டுறது கூண்டோ போய்ச் சிக்குறது**
**கூடேகூண் டானதென்ன கூத்து**

கூத்தன் சிரிக்கிறான். வானத்தில் இடியிடிக்கிறது. மழைபொழியப் போகிறதோ?

"என்னடா கதையளக்கிறாய். வானத்தின் இடியோசைக்குத் தாளம்போட உன்னால் முடியுமா? இல்லை கடலின் ஓங்காரத்துக்கு ஸ்ருதி சேர்க்கவாவது முடியுமா? என் தலைப்பாகை மைந்தனைப் போல் மழைபொழிந்திடும் வண்ணத்தைத்தான் காண முடியுமா? கவிதைக்கு என்ன வடிவம், என்ன அர்த்தம் என்றா ஆராய்ச்சி செய்கிறாய்! அங்கே பார், ஓர் ஓரத்தில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டு உன்னைப் பார்த்து அந்த நந்தியாவட்டைப் பூ நமுட்டுச் சிரிப்புச் சிரிக்கிறது. அதன் மேல் ஒரு பனித்துளி எவ்வளவு கனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறது பார்த்தாயா? இன்னும் ஒரு நொடியில், ஒரே நொடியில் அது உடையப் போகிறது. தன் கனம் தாங்காமல் தானே உடையப் போகிறது. அதைத் தன் கதிர்க் கையால் அபகரித்து விழுங்கிவிடப் போகிறான் சூரியன். அது காணாமல் போய்விடுமோ? அதற்குள் விரிந்த வானமும் காணாமல் போய் விடுமோ? உடையும் துளியில் இருந்து ஒரு புதிய வானம் தெறித்து விழுந்து விரிந்து இன்னுமோர் புதிய உலகம் பிறக்கும் கணநேர அதிசயத்தை உன்னால் தரிசிக்க முடிந்தால், அதற்குப் பிறகு வா, கவிதை, வடிவம், அர்த்தம் என்று வம்பளப்போம். நான் காலபைரவன்! காத்திருப்பேன்."

கூத்தன் சிரிக்கிறான். வானத்தில் இடியிடிக்கிறது. மழைபொழியப் போகிறதோ?

**எதற்காக வோமனம் படபடக் கின்றது**
**யாழெடுத் தேனதில் ஸ்ருதிகலை கின்றது**

**கருமே கங்கள் உருமா றிப்போய்**
**நெஞ்சுக் குள்ளே நுழைந்து கொண்டன**

ஒருதுளிக்கும் மறுதுளிக்கும்
இடைவெளி இன்றி மழைபொழி கின்றன

எதற்காக வோமனம் படபடக் கின்றது

செவியறி யாத ஓசைகள் எல்லாம்
சிந்தனைக் குள்ளெ ஜெபிக்கப் படவும்
புவியறி யாத உருவங்கள் எல்லாம்
புலன்க ளுக்குள் நடன மாடவும்
கவிதை என்ற பெயரி லேஒரு
கனத்தை நெஞ்சில் தாங்கிக் கொண்டும்
தவிக்கி றேன்நான் தளர்ந்து போயிதில்
தர்க்கம் வேறு தனிமை வேறு

மாம்பழத் துக்குள் வண்டிருப் பதைப்போல்
மனத்துக் குள்ளே ஏதோ ஒன்று
நடுங்கிக் கொண்டே நாதம் இழந்து
முனகுவ தைநான் உணருகிறேன்
வாரணம் ஆயிரம் மார்புக் குள்ளே
வந்து நுழைந்து மிதிப்ப தைப்போல்
காரணம் இன்றிக் கதறுகி றேனிதில்
கற்பனை வேறு கனவுகள் வேறு

இருட்டுக் குள்ளே மூழ்கிப் போயென்
இதயம் புழுங்கித் தவிக்கிறது
அறிவோ ஞானக் குளிரெடுத் துப்போய்
அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறது
ஒருமை பன்மை பேதங்கள் இன்றி
உள்ளம் குழம்பித் திகைக்கிறது
ஒருநிமி டம்தான் அதற்குள் இந்த
உலகே மாறி விடுகிறது

எங்கோ தொலைவில் ஒருகுயில் கூவ
மின்னல் வெளிச்சம் பிறக்கிறது
இருட்டை விரட்டி இதயம் மட்டும்
இடியிடி என்று சிரிக்கிறது
தர்க்கம் தனிமை கற்பனை கனவு
தத்துவம் எல்லாம் புரிகிறது
தாளத் தோடு மிதந்து கொண்டே
பாடல் ஒன்று வருகிறது
எதற்காக வோமனம் களிப்படை கின்றது
யாழெடுத் தேனதில் இசைபிறக் கின்றது

# 30

காலபைரவன் என்றெல்லாம் சொல்லி பயமுறுத்துகிறேனா? காலத்தில் முன்னும், பின்னும் நாம் சென்றுவர வேண்டுமென்றால் அவன் துணை வேண்டும். காலக் குதிரையின் கடிவாளம் அவன் கையில்.

ஆங்கிலத்தில் டைம், ஸ்பேஸ் என்று சொல்லப்படும் காலமும், வெளியும் எப்போதுமே புதிரானவை. இந்த இரண்டில் எது முன்னது, எது பின்னது என்று கேட்டால், முன்–பின் என்ற தொடர் மூலம் காலம் தலைக்காட்டித் தானே முன்னிற்கும். இந்த இரண்டில் எதிலிருந்து எது வந்தது என்று கேட்டால், எதற்கு எது இடமளித்தது என்ற கேள்வியாக அதை மாற்றி வெளியாகிய இடமே வியாபித்து நிற்கும். தலைசுற்ற வைக்கும் இரட்டைக் குதிரைகள் அப்பா!

முன்பொருமுறை, 1988–ஆம் ஆண்டு என்று ஞாபகம், சென்னை, பெஸண்ட் நகரில் உள்ள ரத்னகிரீஸ்வரர் கோயிலில், ஆதிசங்கரர் விழாவையொட்டி, நண்பர் சுப்பு, இப்பொழுது மிகப் பிரபல எழுத்தாளராயிருக்கும் 'திராவிட மாயை' சுப்பு, ஒரு கவியரங்கம் ஏற்பாடு செய்திருந்தார். அதில், கவிமாமணி மதிவண்ணன் தலைமையில் நான் பாடிய பாடலின் பல்லவி இப்பொழுது நினைவுக்கு வருகிறது:

**வெளிச்சம் வந்தா இருட்டு எங்கே போகும் - அட**
**இருட்டு தானே வெளிச்சமுனு மாறும்**

இப்படி இரட்டைப் புதிர்கள் இயற்கையில் ஏராளம். 25 ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தக் கவியரங்கத்தை நான் இப்போது நினைத்துக் கொண்டதற்குக் காரணம், நான் புதுக்கவிதையோ அல்லது அது மாதிரி ஏதாவதோ எழுதியிருக்கிறேனா என்ற கேள்விதான். அந்தக் கவியரங்கத்தில், மேலே குறிப்பிட்ட பாடலைப்

பாடிவிட்டு நான் படித்த ஒரு கவிதை, அல்லது வசனம், என் நினைவில் நிழலாடுகிறது. அதையும்தான் சொல்லி வைக்கிறேனே:

ஓம்!
பஞ்ச பூதங்களை வணங்குகிறேன்
ஆதாரம் ஆகி என்னைத் தாங்கும் நிலத்தை
ஆகாரம் ஆகி என்னைக் காக்கும் ஜலத்தை
தேகாபி மானம் கொன்று புசிக்கும் நெருப்பை
ஓசைகள் பறக்கச் சிறகு கொடுக்கும் காற்றை
ஓங்காரம் என்ற லயம் ஜனிக்கும் வெளியை
வணங்குகிறேன்

லம் வம் ரம் யம் ஹம்
ஐந்தும் கடந்து சென்று
ஆறாவ தான புருவ மத்தியில்
மாறாத ஜோதி வடிவில்
பாராள வந்த பஞ்ச பூதங்களை
ஒருமைப் படுத்தி வணங்குகிறேன்

நீங்களிட்ட பிச்சை - நான்
அணிந்திருக்கும் சட்டை - என்
ஒவ்வோர் அணுவும் உங்கள் வசம் ஒப்படைக்கப் போகிறேன்

பஞ்ச பூதங்களே பஞ்ச பூதங்களே - என்
த்யானம் பலிக்கட்டும் - என்
சங்கல்ப தீபம் சத்தியமாக ஜொலிக்கட்டும்

எத்தனை மேடு பள்ளங்கள் ஏறி இறங்கிய பாதங்கள்
எத்தனைக் கோடி உயிர்களின் மீது நடந்தன கேளுங்கள்

தட்டுப்பட்ட பொருள்களைத் தட்டி விட்ட புறங்கால்கள்
தண்டைபொற் சதங்கை கட்டி நடனமிட்ட கணுக்கால்கள்
தண்டனிட்டு மண்டியிட்டுத் தேய்ந்து போன முழங்கால்கள்
ஆணவத்துடன் ஆயிரம் முறைத் தட்டப்பட்ட தொடைகள்
ரத்தஓட்டப் பித்தலாட்டத்(து) அகப்பட்டு முறுக்கேறிச்
சத்தழிந்து போவதற்கே சதிசெய்த குறியீடு
உண்டுயிர்த்து வாழ்வதையே மாபெரும் லட்சியமாய்க்
கொண்டிருக்க வைத்த வயிறு
தேகத் தினவு தீரச் சத்தமிட்டுப் பிறர்
நோகச் சிரித்து நொந்தவிலா
உணர்வலை ஓட்டத்தில் சிக்குண்டு

துடித்துத் துடித்துத் துவண்ட மார்பு
பந்தபாச நுகத்தடிக்கே தந்த இரு தோள்கள்
தன்னைவிடச் சிறியவர்கள் தன்னிச்சைக் கடிபணிய மடங்கித்
தன்னைவிட வலியவரின் தண்டனையில் இருந்து தப்ப வணங்கித்
தன்னுடையதாய் எண்ணித் தர்மத்தின் பேர்சொல்லி வழங்கி
மடங்கிக் குவிந்து வளைந்து மெலிந்த கைகள்
ஆகாத ஓசைகள் ஏராளம் எழுப்பி ஆகாசம் கெடுத்த தொண்டை
காவல் மறந்து பேசிப்பேசிக் கலிவளர்த்த நாக்கு
கர்மவாசம் அற்றுப் போகாமல் நுகர வைத்த மூக்கு
வண்ணமே வடிவமென்றும் வடிவமே உண்மையென்றும்
கண்டு மயங்கிச் சுழன்ற கண்கள்
வியப்பூஞ்சல் ஆடியாடி வில்லாய் வளைந்த புருவங்கள்
கவலைக் கதிர்கள் தாக்கித் தாக்கிச் சுருங்கிப் போன நெற்றி
மௌனம் என்ற மகோன்னதத்தை மறக்க வைத்துச்
சத்தச் சில்வண்டின் ரீங்காரத்தில் மரத்துப் போன காதுகள்
நாடி நரம்பில் ஓடியடைந்த சேதிகளை
வகைப்படுத்துவதிலேயே அறிவு முழுக்கச் செலவழித்த மண்டை

அத்தனையும் உங்களிடம் அர்ப்பணிக்கிறேன்
அக்குவே றாணிவே றாகக் கழற்றி
ஒவ்வோர் அணுவும் உங்கள் வசம் ஒப்படைக்கப் போகிறேன்

பஞ்ச பூதங்களே பஞ்ச பூதங்களே - என்
த்யானம் பலிக்கட்டும் - என்
சங்கல்ப தீபம் சத்தியமாக ஜொலிக்கட்டும்
ஓம்!

*நிலம், நீர், காற்று, நெருப்பு, வெட்டவெளி ஆகியவற்றைப் பஞ்ச பூதங்கள் என்று குறிப்பிடும் வழக்கம் இந்தியாவில் உண்டு. இந்தக் கட்டத்தில் 1996–ஆம் ஆண்டு நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைத்துக் கொள்கிறேன். அந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற வானவில் பண்பாட்டு மையத்தின் மூன்றாம் ஆண்டு பாரதி விழாவில்தான் அந்த நிகழ்ச்சி நடந்தது.*

*வானவில் பண்பாட்டு மையம், பாரதி விழா என்று நான் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே போனால் எப்படி? விளக்க வேண்டாமா?*

*1994–ஆம் ஆண்டில், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடி என்னுடைய சில பாடல்களை சங்கீதா ஸ்டூடியோவில் பதிவு செய்தேன். என் மேல் மிகவும் அன்பு கொண்ட அந்த*

ஸ்டூடியோவின் நிறுவனர் மஹேஷ், அந்தப் பாடல்கள் கொண்ட ஒலிப்பேழையைத் தாமே வெளியிட முன்வந்து உதவினார். அதில் பதிவு செய்யப் பட்டதெல்லாம் தெய்வப் பாடல்கள். அது கூட ஒரு கேள்விக்கு இடம் தந்துவிட்டது.

ஏற்கனவே வல்லமையில் அந்தப் பேழையில் இருந்து கலைமகள் மேல் உள்ள பாடலின் வரிகளை மட்டும் பதிவேற்றி யிருந்தார்கள். அதைப் படித்துவிட்டுத் தேமொழி என்ற சகோதரி அது பக்திப் பாடல்தானா என்று கேட்டிருந்தார். அந்தப் பாடலின் ஒலிப்பதிவைக் கேட்டால் இன்னும் என்ன சொல்வாரோ? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நான் அடிக்கடிச் சொல்வதுபோல், ஜேசுதாஸ் காதல் பாட்டுப் பாடினாலும் அது பக்திப் பாடல் போல் இருக்கும், எஸ்.பி.பி. பக்திப் பாடல் பாடினாலும் அது காதல் பாடல் போல இருக்கும். அடுத்த காரணம், எனக்கே பக்திக்கும், காதலுக்கும் வேறுபாடு புரியாது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடும் போது இந்த வேற்றுமை எப்படிக் குறுக்கே வரும்? நான் காதலியைப் பாடினாலும் பக்திதான்; மதுரை மீனாட்சியைப் பாடினாலும் காதல்தான்.

அந்த இசைப்பேழைக்குத் ‘தெய்வகானாம்ருதம்’ என்று பெயர் தந்து அதை வெளியிட ஒரு விழா நடத்த வேண்டுமென்று மஹேஷ் என்னைக் கேட்டுக் கொண்டார். சங்கீதா நிறுவனம் வெளியீட்டு விழாக்கள் நடத்தும் வழக்கம் இல்லையென்பதால் வேறு ஏதாவது ஒரு அமைப்பின் பெயரில் அந்த விழாவை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சிந்தனைக் கோட்டம் செயலற்றவுடன் திரு.ஔவை நடராஜனின் நல்யோசனையின்படி ‘வானவில்’ என்று ஒரு கட்டமைப்பில்லாத, அதாவது, ஆங்கிலத்தில் இன்ஃபார்மல் என்பார்களே அப்படியோர் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு அதில் ஒவ்வொரு மாதமும் ஓர் இலக்கிய ஜாம்பவானை அழைத்துப் பேசச் சொல்லிக் கேட்பது என்று முடிவு செய்தோம். அது 1971 – ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஆழ்வார்பேட்டையில் இருந்த என் மூத்த சகோதரி நந்தினி சத்தியமூர்த்தி வீட்டில் இந்த நிகழ்ச்சிகளை நடத்தவும் முடிவு செய்தோம். ஒரு மாதம் பெரியவர் ஸ்ரீ. அவர்கள் தள்ளாத வயதிலும் வந்து சாய்ந்து படுத்தவாறே, கம்பராமாயணக் காட்சிகள் சிலவற்றை விவரித்ததை மறக்க முடியுமா?

**.. .. .. .. அவர்**
**சொன்னன சொன்னன செவியில் தூங்கவும்**

அசோக வனத்தில் சீதை இருந்த நிலை பற்றிய கம்பனின் வரியை அந்தக் கிழவர் அப்போது அனுபவித்துச் சொன்னவிதம் கேட்டவர் செவிகளில் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கும்.

அதே போல் இன்னொரு மாதம், பேராசிரியர் அ.சீ.ரா. என்ற ஆ.சீனிவாஸ ராகவன் வந்து "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி" என்ற பாரதி பாடலின் நாலே நாலு வரிகளை வியந்து, விளக்கி ஒன்றரை மணி நேரம் பேசி எங்களையெல்லாம் பிரமிப்பில் ஆழ்த்தியதைத்தான் மறக்கமுடியுமா? இல்லை, ஒவ்வொரு நிகழ்ச்சி முடிந்ததும் நந்தினி படைத்த நல்விருந்தை, அதுவும் நா.பாவும், ஔவையும் மீண்டும் மீண்டும் விரும்பிக் கேட்டு வாங்கிக் குடித்த ஆப்பிள் மில்க்கைத்தான் மறக்க முடியுமா? அந்த நிகழ்ச்சிகள் ஏனோ நாலைந்து மாதங்களுக்குமேல் தொடரவில்லை. 'தெய்வ கானாம்ருதம்' இசைப்பேழையை 1994–ல் வெளியிட மஹேஷ் கேட்டுக்கொண்டதும் பழைய வானவில்லையே புதுப்பிக்கலாம் என்று சுப்பு யோசனை சொன்னார். அதே வானவில் பெயரில் 1994–ல் பிறந்ததுதான் '**வானவில் பண்பாட்டு மையம்**'.

இசைப் பேழை வெளியீட்டு விழா முடிந்ததும் வானவில் பண்பாட்டு மையத்தை என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆலோசனை செய்த போது சுப்பு கொடுத்த யோசனைதான், ஆண்டுதோறும் பாரதி பிறந்த நாளை விமரிசையாக, அதுவும் திருவாரூர் தியாகைய்யர் உத்சவம் போல் இசை விழாவாகக் கொண்டாடுவது. அப்படித்தான் ஆரம்பித்தோம் ஆண்டுதோறும் பாரதி விழா கொண்டாடும் வழக்கத்தை. அந்த விழாவில், முதலாண்டில் திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமியும், திருமதி டி.கே.பட்டம்மாளும் கலந்து கொண்டு பாடியதும், அதில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. தள்ளாத வயதிலும் வந்து கலந்து கொண்டு ஆற்றிய பேருரையும் சரித்திர நிகழ்ச்சிகள்.

ஒவ்வோர் ஆண்டும், பாரதி விழாவில் பாரதி கண்ட கனவு மெய்ப்படத் தொண்டாற்றியவர்களுக்கு 'பாரதி விருது' வழங்குவது என்றும் முடிவு செய்தோம்.

மூன்றாவது ஆண்டு பாரதி விழா, 1986–ஆம் ஆண்டு, டிசம்பர் 8–ஆம் தேதி, சென்னை ம்யூஸிக் அகாடமி பிரதான கூடத்தில் நடக்க ஏற்பாடு ஆகியிருந்தது. அதில் பாரதி விருது வழங்க இரண்டு பேரைத் தேர்வு செய்து விட்டோம். ஒருவர், பத்மா சேஷாத்திரி பால பவன் பள்ளியின் நிறுவனர் திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி. 'பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாரதி கண்ட கனவு மெய்ப்பட அவர் ஆற்றிவந்த கல்விப் பணிக்காக அவரைத் தேர்வு செய்தோம்.

அவரும் நான் கேட்டவுடன் ஒப்புக் கொண்டு விட்டார். இன்னொருவர் அப்போது புதுதில்லியில் மிக முக்கியமான மத்திய அரசு அலுவலராக இருந்தார். "சந்திர மண்டலத்து இயல் கண்டு தெளிவோம்" என்ற பாரதியின் கனவு மெய்ப்படப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். தொலைப்பேசியில் அவரை அழைத்ததும், "நான் பாரதி பக்தன். மேலும் உங்கள் விழாக்குழுத் தலைவர் செம்மங்குடி சீனிவாசய்யரின் அபிமானி. உங்கள் அழைப்பை எப்படி மறுக்க முடியும்?" என்று அவர் கேட்டதும் நெகிழ்ந்து போனேன். விழா நாள் வந்தது. அதற்கு இரண்டு சோதனைகள் ஏற்பட்டன. ஒன்று அந்த விழா நடைபெற வேண்டிய நாளுக்கு நலைந்து நாட்களுக்கு முன்பு தமிழ்நாடு மாநில ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி காலமாகி விட்டார். அதனால் அரசாங்கம் பத்துநாள் துக்கம் என்று அறிவித்து விட்டது. அதனால் விழாவில் நான் எழுதிய முதல் தமிழ் நூலை வெளியிட ஒப்புக் கொண்டிருந்த கல்வியமைச்சர், பேராசிரியர் அன்பழகன் விழாவில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை. விழாவுக்கு முந்தைய நாளில் இருந்தே சென்னையில் பலத்த புயல், மழை. விழாவன்று காலையில் விருது பெற்றுக் கொள்ள தில்லியில் இருந்து வந்துவிட்ட அந்த அறிவியற் பெருமகனாரைத் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு விழாவை ஒத்தி வைக்கலாமா என்று கேட்டேன். அவர், " வேண்டாம், குறித்த படியே நடத்தி விடலாம்" என்றார். விழா நடந்தது. நீதியரசர் பக்தவத்சலம் விருது வழங்கினார். திருமதி ஒய்.ஜி.பி. அவர்களும், அந்த அறிவியற் பெருமகனாரும், அவர்தாம் பிறகு நம் குடியரசுத் தலைவரான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களும் விருது பெற்றுக் கொண்டு நல்லுரையாற்றினார்கள். "நமக்குத் தொழில் கவிதை" என்ற என் நூலை டாக்டர் ஔவை நடராஜன் அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

பொறுமை! பொறுமை! பஞ்ச பூதத்துக்கு வந்து விடுகிறேன்!

ஔவை அவர்கள் அந்த விழா நிறைவின்போது என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "நீ ஏன் கவிதை என்பதை அறிவுக்கு அப்பாற்பட்ட ஏதோ மாயப் பொருளாகக் காட்டியிருக்கிறாய்? நம் நாட்டில்தான் அறிவு புறக்கணிக்கப் படுகிறது. நிலம், நீர், காற்று என்று நாம் அன்றாடம் காணும் பொருள்களைக் கூடப் பஞ்ச பூதங்கள் என்று சொல்லிக் கதையளக்கிறோம். நீயும் ஏன் இப்படியெல்லாம் எழுதுகிறாய்?"

அந்தக் கேள்விக்கு நான் அப்போது எதுவும் விடை சொல்லவில்லை. சிந்தித்துப் பிறகு சொல்கிறேன் என்று நழுவி விட்டேன், ஏனென்றால், அதற்குள் திரு.கலாம் அவர்கள் என்னை அருகில் வரச் சொல்லி அழைத்துவிட்டார். சென்றேன்.

*ஷோபனாவையும் அழைத்தார். அவளுடைய செய்தி வாசிப்பைப் பாராட்டிச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு, என்னிடமே தாள் கேட்டுப் பெற்று அதில் ஒரு கவிதையும் எழுதித் தந்தார், 'எழுச்சி உள்ளம்' என்ற தலைப்பிட்டு. அது இதோ:*

**எழுச்சி உள்ளம்**
**செல்வத்திற் கெல்லாம் தலையான செல்வம்**
**என்ன என்ன என்று எண்ணுக!**
**உயர் லட்சியத் தீக்கொழுந்தால்**
**எழுச்சி செய்யப்பட்ட உள்ளத்தின் சக்தி**
**எல்லாச் சக்திக்கும் பெரிய சக்தி;**
**சக்திக் கெல்லாம் சக்தி!**
**பூமியிலும் விண்ணிலும் பூமிக்கடியிலும்**
**நிகரில்லாத சக்தி!**
**மாந்தரின் உள்ளச் சக்தி!!**

*கலாம் விடை பெற்றுச் சென்ற பிறகு, ஔவையிடம் உங்கள் கேள்விக்கு நிச்சயம் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். இன்னும் சொல்லவில்லை. ஆனால், அதற்கான விடை, மாணிக்கவாசகர் எழுதியதாக நம்பப்படும் 'ஞானத் தாழிசை' என்ற தமிழ் நூலை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அதற்கு ஆங்கிலத்தில் ஒரு விரிவுரையும் எழுதி, 'வெர்ஸஸ் ஆஃப் விஸ்டம்'* (Verses of Wisdom) *என்ற நூலாக படைத்தபோது அதில் வெளிப்பட்டது. அந்த விடையை அடுத்த பகுதியில் சொல்கிறேன்.*
*ம்*

# 31

*1989-90* என்று ஞாபகம். என் குருநாதர் டாக்டர் நித்யானந்தம் ஒரு பழைய நூலை என்னிடம் தந்து அதைப் படித்து ஆங்கிலத்தில் எழுத வேண்டும் என்றார். அதில் மாணிக்க வாசகப் பெருமான் அருளிய 'ஞானத் தாழிசை' மூலமும் அதற்குத் தமிழில் ஒரு பெரியவர் எழுதிய உரையும் இருந்தன. படித்தேன். தோய்ந்தேன். நான் ஏதோ அனுபவத் தெளிவு பெறுவதற்காகவே அந்த மூலநூல் எழுதப்பட்டதோ என்று எனக்குத் தோன்றியது. ஆனால் அதற்காக பாடல்களுக்குத் தரப்பட்டிருந்த பழைய உரை எனக்கு நிறைவு தரவில்லை. இதை டாக்டரிடம் சொன்னேன். என் குருநாதரை நானும், என் சக சீடர்களும் டாக்டர் என்றுதான் அழைப்போம். உனக்கு என்ன தோன்றுகிறதோ, எப்படித் தோன்றுகிறதோ அப்படியே எழுது என்று அவர் கட்டளையிட்டார்.

தமிழ் இலக்கணத்தில், விருத்தம், துறை, தாழிசை என மூன்று பாவினங்கள் சொல்லப் படுகின்றன. 'ஞானத் தாழிசை' நூல், பன்னிரண்டு ஆசிரிய விருத்தங்கள் கொண்ட நூல். ஆனால் அதற்கு 'ஞான விருத்தம்' என்று பெயர் தராமல், 'ஞானத் தாழிசை' என்ற பெயர் ஏன் வழங்கப் பட்டது என்பது முதலில் புரியவில்லை. முழுதும் படித்து, ஆங்கிலத்தில் உரை எழுதும் போதுதான் அந்த மர்ம முடிச்சு அவிழ்ந்தது.

நாம் எவ்வளவுதான் ஞானத்தைத் தேடியலைந்தாலும், எவ்வளவு உயர, உயரப் பறந்தாலும் ஞானம் கிட்டாது; ஞானமே இசைந்து, தாழ்ந்து வந்து, நம்மை வரவேற்று, நம்முள் இசையாகக் கலந்தாலன்றி. அப்படித்தான் என் குருநாதரும் என்னைத் தேடி வந்து ஆற்றுப் படுத்தினார். இன்னும் சரியாகச் சொல்வதென்றால், இறைவனே ஒரு மனித வடிவிலோ அல்லது வேறு வடிவிலோ இறங்கி வந்து குருநாதனாக ஆற்றுப் படுத்துவான். இதை ஆங்கிலத்தில்

‘டிஸென்டென்ஸ்’ (descendance) என்று சொல்வார்கள். ஞானம் தமக்குள் இறங்கி வந்த அனுபூதியை மாணிக்கவாசகப் பெருமான் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பாக்கள் என்பதைக் குறிக்கவே விருத்தங்கள் கொண்ட நூலுக்கு, ‘ஞானத் தாழிசை’ என்று பெயர் தரப்பட்டதாகத் தோன்றியது. தாழிசை என்ற பாவகையிலேயே அந்த நூலின் பாடல்கள் அமைந்திருந்தால் அதன் பெயர்க் காரணம் பற்றிய சர்ச்சையே எழுந்திருக்காது, இந்தக் குறிப்பை உணர வாய்ப்பின்றிப் போயிருக்கும். எனவே, காரணத்துடன்தான், ‘தாழிசை’ என்று பெயர் சூட்டிவிட்டு, விருத்தங்களில் அந்தப் பாக்கள் எழுதப்பட்டன என்று தோன்றியது.

இந்தப் பாக்களை மாணிக்கவாசகப் பெருமான் பாடினார் என்பதைப் பண்டிதர்கள், அதுவும் சைவநெறியில் தோய்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதன் நடையும் திருவாசக ஆசிரியர் நடையை ஒத்ததாக இல்லை. ஆனாலும் இந்தப் பாக்கள் மாணிக்கவாசகர் அருளிய பாக்களே. இது என்ன புதிர்?

இந்தப் பாடல்களுக்கான உரை எழுதும் போது ஒரு செய்தி இந்தப் பாடல்களில் இருந்து பெறப்பட்டது. அது என்ன? திருவாசகத்தில், சிவபுராணம் பகுதியில், மாணிக்கவாசகரே சொல்கிறார்:

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்**

இதில் ஒன்று கவனிக்க வேண்டும். மனிதப் பிறவி எடுக்கும் முன்பு பல பிறவிகளும், மனிதப் பிறவிக்குப் பிறகு பல பிறவிகளும் எடுத்ததாக அவர் சொல்கிறார். மனிதனாக வாழ்ந்து மரணம் அடைந்த பின்பு, பேயாகவும், அசுரராகவும், முனிவராகவும், தேவராகவும் பிறக்கும் வாய்ப்பைச் சுட்டிக் காட்டுகிறார். இப்படி எல்லாப் பிறப்பும் எடுத்து விட்டாலும், பிறவாநிலையாகிய வீடுபேற்றை அடைய வேண்டுமானால், கந்தர்வனாகவும், தேவனாகவும், தவ முனிவனாகவும், மேல் படிகளில் சஞ்சாரம் செய்த பிறகு மீண்டும் நிறைவாக ஒருமுறை மனிதப் பிறவி எடுத்த பிறகே முக்தி கிட்டும் என்ற ஒரு நுட்பத்தை ஞானத் தாழிசை நூலின் பாடல்கள் எனக்குக் குறிப்பாக உணர்த்தின.

இப்படி இரண்டாவது முறை மனிதப் பிறவி எடுப்பவர்களே 'இருபிறப்பாளர்கள்' என்று பழைய மறைநூல்களில் குறிக்கப் பட்டனர். அடுத்தடுத்துப் பல மனிதப் பிறவிகள் எடுப்பவர்கள் இந்தப் பட்டியலில் சேர மாட்டார்கள். மனிதப் பிறவிக்குப் பிறகு, சில காரணங்களால், பேயாய், கணங்களாய், வல்லசுரர்களாய் இருந்து விட்டு மீண்டும் மனிதப் பிறவி எடுப்பவர்களும் இந்தப் பட்டியலில் சேர முடியாது. மனிதப் பிறவியில் இருந்து உயர் தளங்களுக்குப் பதவி உயர்வு பெற்று, உயர் பதவிகள் எல்லாம் வகித்த பிறகு, பணி ஓய்வாகிய மோட்சம் அல்லது வீடுபேறு அடைவதற்கு முன்பு, மீண்டும் கர்மபூமியில், மிச்சமுள்ள கர்ம பலன்களைக் கழிக்க மனிதப் பிறவி எடுப்பவரே இருபிறப்பாளர்கள். ஒருவன் இந்தப் பொருளில் இருபிறப்பாளன் என்பதை அவனுக்குத் தக்க தருணத்தில் நினைவுறுத்தவே அப்படிப்பட்டவனுக்கு தக்க குருநாதரால் பிரம்மோபதேசம் செய்து வைத்துப் புனித நூல் அணிவிக்கும் வழக்கம் ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறப்பவர்கள் எல்லாரும் இருபிறப்பாளர்கள் என்பதாகவும், மற்ற ஜாதிகளில் பிறந்தவர்கள் எவரும் இருபிறப்பாளராக இருக்க முடியாது என்பது போலவும் ஒரு தப்புக் கணக்கு எப்படியோ மதத்தின் பெயரால் நம்மிடையே பரவிவிட்ட ஒரு நச்சுக் கருத்து. பாரதி சொன்னது போல்:

**கலகத்து அரக்கர் பலர் எங்க முத்து மாரியம்மா**
**கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் எங்க முத்து மாரியம்மா**

பறையடியத்துக் கொண்டு சேரி மக்கள் பாடும் பாட்டாக இதை அமைத்துப் பல நூற்றாண்டுப் பிழையைத் திருத்த முன்வந்த பாரதியின் துணிவும், தெளிவும் நினைந்து, நினைந்து போற்றுதற்குரியது.

மாணிக்கவாசகராகத் 'திருவாசகம்' போன்ற பக்திச் சுவைசொட்டும் பாக்கள் எழுதி முடித்த பிறகு, உயர்நிலைகளில் பல நூற்றாண்டுகள் இருந்துவிட்டு வந்து மீண்டும் ஒரு மனிதனாகப் பிறந்து அவர் முக்தி அடையுமுன் தந்த அனுபூதிச் செய்யுள்களே ஞானத் தாழிசையின் பன்னிரண்டு பாக்களும் என்று கொள்ளலாமா?

அல்லது, அவர் சூக்கும நிலையில் இருந்து வேறொரு புலவனை ஆட்கொண்டு அவனுள் தாழ்ந்து, இறங்கி வந்து அவன் மூலம் பாடிய செய்யுள்கள் என்று சொல்லலாமா?

இப்படிப் பல நுட்பங்களைப் பெயரிலேயே கொண்ட ஞானத் தாழிசையின் பன்னிரண்டு பாக்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அவற்றுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதும் போது,

சில சமயம், நான் ஏதேனும் வலிந்து பொருள் சொல்கிறேனோ என்று சந்தேகம் எழும். உடனேயே, அடுத்த வரி அல்லது அடுத்த பாட்டில் அதற்குத் தீர்வு கிட்டும். உடனே, உட்குரல் ஒலிக்கும்: 'அட சந்தேகப் பிராணியே, நீ சொன்ன பொருள் சரிதான். அதை நீயா சொல்கிறாய். உன் மூலம் அது சொல்லப் படுகிறது. நம்பு.'

ஒருமுறை டாக்டரிடம் இது பற்றிச் சொன்ன போது, அவர் சொன்னார்: "அந்த நூல் ஒரு பொற்குவியல் பெட்டி (treasure box); உன் அறிவு அதைத் திறக்கும் சாவி என்று ஒரு நோக்கில் தோன்றலாம். உண்மையில், உன் ஆழ்மனமே ஒரு பொற்குவியல் நிறைந்த பெட்டி. அதன் "தாழ்" அல்லது தாழ்ப்பாளைத் திறக்கும் சாவிதான் "ஞானத் தாழிசை".

கூச்சப் படுவது கூட கர்வமாகி விடும் என்று பட்டது. ஞானத் தாழைத் திறக்கும் சாவியாகிய இசை என்ற பொருளும் அந்த நூலின் தலைப்புக்குப் பொருந்துவதை எண்ணி வியந்தேன். "தாழ்" என்ற சொல்லுக்கு இத்தனை அர்த்தங்களா! அது ஒரு மந்திரச் சொல் என்று புரிந்து கொண்டேன்.

இப்போதாவது பஞ்ச பூத வாதத்துக்கு வாப்பா! சிகாமணி பொறுமை இழந்து விட்டான். மனோன்மணியும் முனகுகிறாள். இனியும் காலம் கடத்துவது சரியில்லை. பஞ்ச பூதங்கள் பற்றிய ஒரு விளக்கம் ஞானத் தாழிசைக்கு நான் எழுதிய உரையில் பளிச்சிட்டது. அது அறிவியலோடு முரண்படாத விளக்கம். அது என்ன?

சாதாரணமாக, நம் புலப்பாட்டுக்கு உள்ளாகும் பொருட்கள் மூன்று நிலைகளில் இருப்பதாக விஞ்ஞானம் சொல்கிறது. திடப்பொருள் நிலை, திரவப் பொருள் நிலை, வாயு அல்லது ஆவி நிலை. ஆங்கிலத்தில் சொல்வதென்றால், ஸாலிட், லிக்விட், கேஸ் (நான் கோர்ட்டில் வாதாடும் "CASE" என்ற வழக்கில்லை ஓய், சமையலுக்குப் பயன்படுத்துகிறோமே அந்த சிலிண்டரில் வரும் ஆவி)!

இன்னும் சற்று நுட்பமாக ஆராய்ந்தால், இந்த மூன்று விதமாகவும் இல்லாத சில விஷயங்கள் அறிவியல் புலப்பாட்டிற்கு உட்படுவது தெரிகிறது. இந்த மூன்று நிலைகளில் ஒன்று இன்னொன்றாகச் சில சூழ்நிலைகளில் மாறும். எடுத்துக்காட்டாக, திடப் பொருளாக இருக்கும் பனிக்கட்டி, உருகினால், திரவமாகி விடும். நீரைக் கொதிக்க வைத்தால் அது ஆவியாகி விடும். விஞ் ஞானிகள், சோதனைக் கூடத்தில் செய்த சில பரிசோதனைகளில், சில பொருள்கள் இந்த மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் மறைந்தே போய்விடுவதைக் கண்டுபிடித்தார்கள்.

ஆனால், பொருண்மை அழிவதே இல்லை என்ற விதியின்படி அவை மறைவதில்லை என்று சொல்லி, அவை ‘ப்யூர் என்ர்ஜி’ என்ற ஆற்றல் நிலைக்கு ஏகி விட்டன என்று அமைதி செய்தார்கள். அணுகுண்டின் சூக்குமமே அதுதான். எந்தப் பொருண்மை நிலைக்கும் அடிப்படைப் பொருண்மையான அணுவுக்குள் ஆற்றல் பொட்டலமாக ஓர் உட்கரு, மையம்கொண்டு இருப்பதை ரதர்ஃபோர்ட் என்ற அறிவியல் மேதை கண்டுபிடித்துச் சொன்னார். அவரைத் தொடர்ந்து, அவருடைய சீடர்கள், சாட்விக் போன்றவர்கள், அந்த ஆற்றல் பொட்டலத்தைப் பிரித்து, அவிழ்த்து அதற்குள் இருந்து மிகப் பெரிய அளவு ஆற்றல் வெளிப்படக்கூடிய வாய்ப்பை முன்மொழிந்த பிறகே, ஓப்பன்ஹைமர் என்ற விஞ்ஞானியின் தலைமையில் ஒரு குழு, அணுகுண்டை உருவாக்க முடிந்தது. திடநிலை, திரவநிலை, ஆவிநிலை, ஆற்றல்நிலை ஆகிய நான்கு நிலைகளில் பொருண்மை இருக்க முடியும் என்பது தெளிவாகியது. ஆனால், இன்னும் நுட்பமாக விஞ்ஞானம் வளர, வளர வெட்டவெளி என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் வெளியில் உண்மையிலேயே, பாரதி வியந்து சொன்னதுபோல் கணம்தோறும் சிற்றணுத் துகள்கள் கோடிக்கோடித் தோன்றி, நொடிப் பொழுதில் மறையும் தீராத விளையாட்டு, அல்லது கம்பர் சொன்னதுபோல் “அலகிலா விளையாட்டு”, நடைபெற்றுக் கொண்டே இருப்பது தெளிவாகியது. எனவே, ஆற்றலாக உருவெடுத்து, அதிலிருந்து சிற்றணுக்களாக உருவெடுத்து, உடனே மறைந்து, மீண்டும் தோன்றி, ஓர் ஓயாத சக்தி நடனத்தை வெட்டவெளி நடத்திக் கொண்டிருக்கும் வியப்பை விஞ்ஞானம் ஒப்புக் கொண்டுள்ளது.

இப்பொழுது சொல்லுங்கள், திடப் பொருள், திரவப் பொருள், ஆவிப்பொருள் ஆகிய மூன்று நிலைகள், அவற்றைக் கடந்த ஆற்றல்நிலை என்ற நாலாவது நிலை, நான்கு நிலைகளுக்கும் நிலைக்களமாக விளங்கும் வெட்டவெளியாக விரிந்து கொண்டே இருக்கும் ஐந்தாம் நிலை. இப்படி ஐந்து நிலைகளை அறிவியல் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த ஐந்து நிலைகளே, திடப்பொருள் நிலையைக் குறிக்கும் நிலம்; திரவப் பொருள் நிலையைக் குறிக்கும் நீர்; ஆவிப்பொருள் நிலையைக் குறிக்கும் காற்று; ஆற்றல் நிலையைக் குறிக்கும் நெருப்பு; வெட்டவெளி நிலையைக் குறிக்கும் ஆகாசம் அல்லது வெளி. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்கள்! சரிதானே!

‘என்னப்பா, ஆவி, பூதம் என்று அச்சுறுத்துகிறாய்?’ என்ற குரல் கேட்கிறது. ‘ஆவி’ என்பது வாயு நிலை. அவ்வளவுதான். ‘பூதம்’ என்ற சொல்லுக்கு வடமொழியில் தோற்றம் என்று பொருள்.

பூத உடல் என்றால் புலப்பாட்டுக்குத் தோன்றும் உடல். சூட்சுமம் என்பதன் எதிர்ப்பதமே பௌதிகம். பௌதிகம் என்ற சொல்லில் இருந்து வருவது பூதம். பூச்சாண்டி காட்டவில்லை. தோற்றங்களால் ஆன உலகத்தில் தோன்றும் பொருள்கள் இந்த ஐந்து விதமாகத்தான் தோன்ற முடியும் என்ற விஞ்ஞான உண்மையைக் குறிப்பதே, 'பஞ்ச பூதங்கள்' என்ற சொற்றொடர். பஞ்ச பூதங்கள் இன்றி உலகம் இல்லை. பஞ்ச பூதங்களை நுகரும் பொருட்டே அவற்றுக்கு ஏற்ப ஐந்து பொறிகளும், அவற்றின் மூலம் புலப்பாடாகின்ற ஐந்து புலன்களும். எப்படி ஒரு கச்சிதமான அமைப்புமுறை! இந்தப் பஞ்ச பூத அமைப்புமுறை பஞ்சர் ஆனால் சூனியம்தான். அடாடா, என்ன பஞ்ச் டயலாக்!

சிகாமணி விசிலடிக்கிறான், அதுவும் ஒரு திரைப்படப் பாடலை. என்ன பாடல்? "கேள்வி பிறந்தது அன்று, நல்ல பதில் கிடைத்தது இன்று". சரியான கேள்வி கேட்பதே தீர்வின் முதற்படி. இல்லையா? ஔவை நடராஜன் அவர்கள் 1996-ல் கேட்ட கேள்வியால், ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் கழித்து, 'ஞானத் தாழிசை' மூலம் ஒரு தீர்வு கிடைத்த வரலாறு இதுதான் ஐயா! அவருக்கு என்றும் நான் நன்றி சொல்ல வேண்டும்.

குருவாகத் தேடி வந்து என்னை ஆற்றுப் படுத்திய டாக்டர் நித்யானந்தம் அவர்களைப் பற்றி இன்னும் நிறைய சொல்ல வேண்டியுள்ளது. அது மட்டுமில்லை. ஞானத் தாழிசைக்கு உரை எழுதக் கட்டளை இட்டதற்கு முன் அவர் தந்த உள்ளூக்கத்தால், ஏதோ ஓர் உயர்ந்த களத்தோடு என் ஆழ்மனம் தொடர்பு கொண்டதாகத் தோன்றியது. திருமூலருக்கு எப்படித் திருமந்திரம் பாடல்கள் உருவாயின என்று சொல்லப் படுகிறதோ, கிட்டத்தட்ட அப்படியொரு நிலையில் சில அதிசயச் செய்யுள்கள் என் அகத்தில் உதித்தன. அப்படி வந்த 101 செய்யுள்களை என் கவிதைத் தொகுப்பான "உன்னோடு நான்" என்ற நூலில் 'குருமந்திரம்' என்ற துணைத் தலைப்பிட்டுத் தந்துள்ளேன். அதில் கூட பஞ்ச பூதங்களைப் பற்றிய விளக்கம் பொதிந்து கிடப்பதை நான் உணர்ந்தேன். குருமந்திரத்திலிருந்து, மாதிரிக்கு ஒரு செய்யுள் மட்டும் இங்கே தருகிறேன்:

நெருப்புக்கு நீர்தந் தணைக்கலாம் அன்றி
நெருப்பை வளியால் பெருக்கலாம் உள்ளே
நெருப்பை விதைக்க நிலம்தரலாம் தீயில்
உருவாரம் செய்துவெளி ஊதலாம் அன்றே

சரி, சரி. அந்தக் கதைகளை அப்புறம் கேட்கலாம். நாம் பாட்டுக்கு ஏதேதோ பேசிக் கொண்டே, கால பைரவன்

துணையோடு கடகடவென்று பத்துப் பதினைந்து ஆண்டுகள் தாண்டி வந்து விட்டோமே. அந்தக் காலக் கட்டத்தில் என்னவெல்லாம் நடந்தனவோ? அவற்றைத் தவற விடலாமா?

திருமணம் ஆன பிறகு, முன்பே சொன்னது போல், அவ்வப்போது நானும் ஷோபனாவும் சேர்ந்து அமர்ந்து சில இசைப்பாடல்கள் உருவாக்கினோம் என்றாலும், 'கவிதை கவிதை' என்று வெறி கொண்டு பாடிய தாகம் குறைந்து விட்டது போல் ஆனது. திருமணம் ஆகிச் சில ஆண்டுகளாக நான் பாரதி கலைக் கழகக் கவியரங்கத்திற்குச் சரிவரப் போகாமல் இருந்த நிலையில், திடீரென்று, 1977–ஆம் ஆண்டில், மீண்டும் அந்தக் கலைக் கழகத்தோடு தொடர்பைப் புதுப்பித்துக் கொள்ள, மீண்டும் என்னுள் மின்னிக் கொண்டிருந்த கவிதைக் கனலை ஊதி வளர்க்க, மந்தைவெளி, நார்ட்டன் லேனில் அப்போது நான் வசித்து வந்த வீட்டில் பாரதி கலைக் கழகத்தின் கவியரங்கம் நடைபெற அழைப்பு விடுத்தேன். எல்லாரும் வந்து கவிதை பாடினார்கள். என்னைப் பாட அழைப்பார்கள் என்று தெரியும். அதற்குச் சில நாட்கள் முன்பிருந்தே அந்தக் கவியரங்கத்துக்காக ஏதாவது கவிதை எழுத முனைந்து, முயன்று முடியாமல் தோற்றுப் போய்க் கடைசியாக ஒரு கவிதை எழுதினேன். அதைத்தான் படித்தேன். என் கவிதை நண்பர்கள் இன்றும் அந்தக் கவிதை வரிகளைச் சொல்லி வருகிறார்கள். அதன் ஆரம்ப வரிகள்:

**எனக்குக் கவிதை எழுத வராது**
**ஏக்கம் இல்லாமல் இலக்கியம் ஏது**

அந்தக் கவிதை அந்த அரங்கத்தில் அனைவரையும் கவர்ந்தது. ஆனால் அந்த அரங்கத்தில் என் கவனம் வேறு திசையில் சென்றது. அந்த அரங்கத்தில் புதிதாக எனக்கு அறிமுகமான ஒரு கவிஞரும், அவருடன் வந்திருந்த இன்னொரு நண்பரும் என் கவனத்தைக் கவர்ந்தார்கள். அவர்கள் இருவருமே நெற்றி நிறைய குங்குமம் நீட்டியிட்டிருந்தார்கள். தீட்டியிருந்தார்கள் என்று கூடச் சொல்லலாம். அந்த அரங்கத்துக்கு வந்திருந்த என் நண்பன் கண்ணன், " என்னடா ஒரே சாக்தர் கூட்டமா இருக்கே" என்று சத்தமாகக் கேட்டுவிட்டான். அந்தக் குங்குமக் கவிஞர்கள் இருவரும் வேறு யாருமில்லை, நம்ம இசைக்கவி ரமணனும், திராவிட மாயை சுப்புவும்தான். அவர்களைச் சந்தித்தது என் வாழ்வின் ஒரு திருப்புமுனை என்றே சொல்லலாம்.

ரமணனின் கவிதாவேசமும், சுப்புவின் அடக்கமான எதேச்சாதிகாரமும் என்னை எப்படியோ கவர்ந்ததோடு, எனக்குள்ளும் தொற்றிக் கொண்டன. சீன தத்துவத்தில் 'யின் அண்ட்

யாங்' (yin and yang) இரட்டை நிலைக்கு இந்த இரட்டையரை உதாரணம் காட்டலாம். அவர்களுக்குள் அப்படியோர் முரண்பட்ட இணைவு, இணைபிரியாத தொலைவு!

அன்று முதல் அவர்கள் என் வீட்டுக்கு வருவதும், நானும் ஷோபனாவும் பெஸண்ட் நகரில் ரமணன் குடியிருந்த வீட்டுக்குப் போவதும் அன்றாட வழக்கமாகி விட்டது. சுப்புவுக்கு ஷோபனாவின் மேல் ஒருவித பக்தி கலந்த மரியாதையுண்டு. ஆனால், முதலில் பார்த்த போது 'இந்தப் பெண்ணுக்கு கவிதை சமாச்சாரம் எல்லாம் எதற்கு" என்பதுபோல் பார்த்தவன் தன் அபிப்ராயத்தைப் பிறகு மாற்றிக் கொண்டான். 'உனக்கு என்ன பாடல் பிடிக்கும்?' என்று சுப்பு அவளிடம் கேட்டதும், பாரதியின் 'மோகத்தைக் கொன்றுவிடு பாடல்' என்று அவள் விடை சொன்னாளாம். அதனால், அவனுடைய அபிப்பிராயம் அடியோடு மாறிவிட்டதாம். இதை அவனே சொல்லியிருக்கிறான்.

ரமணன் என்ன எழுதினாலும் அந்தத் தாளின் முகப்பில், "சக்தி காக்கிறாள் சஞ்சலம் இல்லை" என்று எழுதியிருப்பான். அது அவனுடைய தாரக மந்திரமாகவே இருந்தது. ஒருநாள் மாலை, பெஸண்ட் நகர் ரமணன் வீட்டில் கவிதைக் கச்சேரி, ரமணனுடைய அப்பா சேஷு மாமாவின் கிண்டல், ரமணன் அம்மா தந்த பாயசம் என்று எல்லா கலாட்டாவும் முடிந்த பிறகு, ரமணன் அன்று இரவு ரயிலில் ஏதோ ஊருக்குக் கிளம்பினான். அவனுடைய பெட்டி, மூட்டை முடிச்சுகளை எல்லாம் சுப்புவும், இன்னொரு தாசானுதாசனான நண்பன் கௌரிசங்கரும் எடுத்துக் கொண்டனர். "என்னப்பா, இப்படியே நடைபயணமாகச் சென்ட்ரல் ரயில் நிலையம் வரை, "சக்தி காக்கிறாள் சஞ்சலம் இல்லை" என்று கோஷம் போட்டுக் கொண்டே போவதாக உத்தேசமா?". இப்படி நான் கேட்டதும் எல்லாரும் சிரித்தார்கள். சுப்பு மட்டும் விரைப்பாக, ரமணனை வழியனுப்பப் போவது ஏதோ சபரிமலை யாத்திரை மாதிரி ஒரு பரவச உணர்வுடன், நடை கட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

நான் அந்த சாக்தர் கூட்டத்தில் வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன். அப்போது கடவுள் என்றெல்லாம் ஒரு தீவிர நம்பிக்கை எனக்குக் கிடையாது. அப்படி ஒருவரோ, ஒருத்தியோ, ஒன்றோ இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும் என்ற ஒரு கர்வத்தோடு நான் இருந்த காலம் அது. உடைந்து தவிடுபொடி ஆவதற்குத்தானே கர்வம்! அது உடைந்த கதையைப் பிறகு சொல்கிறேன்.

# 32

திடீரென்று போன பகுதியில் நண்பன் கண்ணன் என்றொரு புதுமுகத்தைச் சந்தடி சாக்கில் நுழைத்து விட்டேனே. அவனைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் நான் பதினோராம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது, அதே பள்ளியில் எட்டு அல்லது ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த என் ஜூனியர்தான் கண்ணன். அவனுக்கும் உள்ளுக்குள் கவிதையார்வம் இருந்ததைக் காலப் போக்கில் நான் தெரிந்து கொண்டேன். நானும், நண்பர்களும் சிந்தனைக் கோட்டம் நடத்திக் கொண்டிருந்த போது, தான் எழுதிய “சொர்க்கச் சுழல்” என்ற கவிதைக் குறுங்காவியத்தை அவன் என்னிடம் காட்டினான். அதில் நல்ல கவிதையோட்டம் தென்பட்டது. அதை அச்சடிக்கப் போதிய பணம் இல்லாத நிலையில், 50 பிரதிகள் சுழற்பதிவு (சைக்லோஸ்டைல்) செய்து சென்னை, மத்திய நூலக அரங்கில் அதற்கு ஒரு வெளியீட்டு விழாவும் நடத்தினோம்.

அந்த விழாவில் எங்கள் ஆசான் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன் கண்ணனுக்கு எழுதிய வாழ்த்து வெண்பா இப்பொழுது கிடைத்தது:

**கவிகண்ணன் வாழ்வில் கவிக்கண்ண னாகச்**
**செவிக்கினிய செம்பாடல் சேர்த்தான் - புவிப்புகழைப்**
**பற்றுகவே இன்றமிழில் இத்தொண்டு கற்கண்டு**
**சுற்றுகவே சொர்க்கச் சுழல்**

அதன் பிறகு, பல ஆண்டுகள் கழித்து, நான் ஐ.ஏ.எஸ்., அதாவது இந்திய அரசுப் பணிக்கான தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு அவன் பொருளாதாரப் பாடம் சொல்லிக் கொடுத்து நான் தேர்ச்சிபெறத் துணை செய்தான்.

*1980–ஆம் ஆண்டு ஒருநாள் மந்தைவெளி நார்ட்டன் தெருவில் இருந்த வீட்டின் மொட்டை மாடியில் விடியற்காலைப் போதில் நான் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தேன். மெல்லச் சூரியன் தலைக்காட்டத் தொடங்கியதும், கண்ணை மூடிக் கொண்டு கதிரவன் உதயக் காட்சியில் மனத்தைப் பறிகொடுத்து, ஏறக்குறைய ஒரு தியான நிலையில் அமர்ந்திருந்தேன். என்னைச் சுற்றி யாரும் இல்லை. எனக்குள் இருந்து ஒரு கவிதை பீறிட்டுக் கொண்டு வந்தது. அது வந்த வேகத்திலேயே, பித்துப் பிடித்தவன் போல், அந்தக் கவிதை வரவர, அதைச் சத்தமாக சொன்னேன்.*

இதுதான் சமயம் இதயம் திறக்க
இருவிழி களிலும் தீப்பொறி பறக்கப்
பாடிக் கொண்டே ஓசை இழக்க

உதயம் என்ற பெயரில் இங்கே
பிடறி சிலிர்த்தொரு சிங்கப் பறவை
பிறந்து விட்டது பார்
சிதறிக் கிடந்த சிறுவிண் மீன்கள்
ஓடி ஒளிந்தன பார்
புதுமை வெள்ளம் புனலா வதுபார்
புதைந்து கிடக்கும் நினைவுக் குள்ளே
தங்கச் சூலம் தைப்பத னாலே
தகதக வெனவொரு கனலா வதுபார்
புதுமை வெள்ளம் புனலா வதுபார்

உற்றுப் பாரொரு கணமே போதும்
வெட்ட வெளியும் பற்றி எரியும்
புரண்டு படுக்கும் பூமித் தாய்க்குப்
புதிய கனவுகள் தோன்றும் நேரம்
உற்றுப் பாரொரு கணமே போதும்
வெட்ட வெளியும் பற்றி எரியும்

புலரப் போகும் பொழுதுக் குள்ளே
புகுந்து பார்த்துவிடு - நீ
சுமந்தி ருக்கும் ஜோதியை அங்கே
கொண்டு சேர்த்துவிடு - முடிந்தால்
நீயே இங்கொரு காலைப் பொழுதாய்
நீண்டு படுத்துவிடு
நீயே இங்கு நிரந்தர மாகி
இருட்டைத் தடுத்துவிடு

**இதுதான் சமயம் இதயம் திறக்க**
**இருவிழி களிலும் தீப்பொறி பறக்கப்**
**பாடிக் கொண்டே... பாடிக் கொண்டே....**
**பாடிக் கொண்டே... ஓசை யிழக்க**

*முடிக்கும் போது எனக்கு வியர்த்து விட்டிருந்தது, ஒரு மைல் தொலைவு ஓடிவிட்டு வந்ததுபோல். சற்று நேரம் நான் கண் மூடியபடியே உட்கார்ந்திருந்தேன். கண்திறந்ததும், என் பின்னால் யாரோ நிற்பது போல் நிழலாடியது. திரும்பிப் பார்த்தேன். கண்ணன் நின்று கொண்டிருந்தான். அவன் எப்பொழுது வந்தான் என்று கேட்டேன். "நீ வெறி பிடித்தவன் போல் கவிதை சொல்லிக் கொண்டிருந்த போதே வந்து விட்டேன்" என்றான்.*

*இந்த நிகழ்ச்சியை நான் இங்குக் குறிப்பிடக் காரணம் உண்டு. ஒரு கவிதைப் பிரசவம் நிகழும் போதே, அதை அருகில் இருந்து பார்ப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எல்லாருக்கும் அந்தப் பேறு கிட்டாது. கண்ணனுக்கு அன்று அது வாய்த்தது. எனக்கு அந்த வாய்ப்பைப் பலமுறை வழங்கியவன் ரமணன். அவனுடைய பல கவிதைகள் உதயம் ஆகி வெளிப்பட்ட தருணத்தில் நான் அருகில் இருந்து பார்த்துக், கேட்டுப் பரவசப் பட்டிருக்கிறேன்.*

*மேலே உள்ள கவிதை, என் கவிதை வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே சொல்லலாம். அதற்கு முன்பு நான் நிறைய கவிதை எழுதியிருக்கிறேன். ஆனால் முதன் முதலாக அந்தக் கவிதையைத்தான், அது வரும் போதே, வரவர எழுதாமல் அப்படியே சுடச்சுட வாய்விட்டுச் சொன்னேன். கவிதை எப்படி அறிவின் பெருமுயற்சியின்றிக் கவிஞனை மீறி வெளிப்படுகிறது என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொண்டேன். புத்தி சிகாமணி கனைத்துக் கொள்ளும் சத்தம் கேட்கிறது.*

*மேலே குறிப்பிட்ட கவிதையைச் சில நாட்களுக்குப் பிறகே தாளில் எழுதி வைத்தேன். எழுதிய போது எழுதிய நாளைக் குறிப்பிடாமல், அந்தக் கவிதை உதித்த நாளை மறக்காமல் குறிப்பிட்டேன். இந்த வழக்கமே பிறகு தொடர்ந்தது. அதற்குப் பிறகு நிறைய கவிதைகள் உதித்து வெகுநாட்களுக்குப் பிறகே தாளேற்றம் கண்டன. ஆனால் மேற்சொன்ன கவிதையைப் போல் வரும் பொழுதே உரக்கச் சொல்லப்பட்ட கவிதை அது மட்டுமே. அதற்குச் சாட்சியான கண்ணன் இந்தக் கவிதை வரலாற்றில் இடம்பிடித்தது நியாயம்தானே!*

*"நீயே இங்கொரு காலைப் பொழுதாய் நீண்டு படுத்துவிடு" என்ற வரி என்னை அவ்வப்போது உலுக்கிக் கொண்டிருந்தது.*

அது சாத்தியமா? நடக்க முடியாத ஒன்றைக் கவிதையில் உயர்வு நவிற்சியாகச் சொல்லி விட்டேனோ? ஒன்று புரியத் தொடங்கியது. அறிவு நிலையில் நம்ப மறுக்கும் விஷயங்கள், நடக்கவே முடியாது என்று தோன்றும் விஷயங்கள் கவிதை நிலையில் அனாயசமாகச் சொற்களில் வந்து விழக்கூடும் என்பதைப் புரிந்து கொண்டேன். கை, கால், தசை, எலும்பு, குருதி, நரம்புகளால் ஆன இந்த உடல்தான் நான் என்ற நினைப்பின் ஆணி வேரை அசைக்கும் கவிதைகள் வரத் தொடங்கின. நான் வெறும் உடற்கூடு இல்லை. அதையும் கடந்து, எங்கும் பரவ முடிந்த ஆன்மசக்தி. நானே இந்தப் பிரபஞ்சம். நானே அனைத்தும். காலங்களில் நான் மார்கழியாகவும், பொழுதுகளில் நான் உஷஸ் எனப்படும் வைகறையாகவும் இருக்கிறேன் என்று கீதாச்சாரியன் சொன்னதுபோல் என்னாலும், ஏன், எல்லாராலும் சொல்ல முடியும். ஒவ்வொரு துளியுமே எல்லையற்ற கடல் என்ற உணர்வு பெருகி வரலாயிற்று. தாகூர் எழுதிய கீதாஞ்சலியின் வரிகளில் பொதிந்திருந்த மர்ம முடிச்சுகள் அவிழத் தொடங்கின. பூமண்டலத்தில் அன்பும் பொறையும் வளர்ந்து, புல், பூண்டு, பூச்சி, மரம், செடிகொடிகள், விலங்குகள் என எல்லா உயிர்களும் இன்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திட, ஞான ஆகாசத்தின் நடுவே நின்று தான் வாழ்த்த வேண்டும் என்று பாரதி விரும்பினானே, அந்தப் பேசாப் பொருளைப் பேசும் துணிச்சல் வந்தது.

ஒருபுறம், இந்த உடம்பின் உபாதைகளையும், அவஸ்தைகளையும் அனுபவித்துக் கொண்டே, இந்த வாழ்க்கையின் இழுபறிகளுக்கு ஆளாகி அத்தனை இடர்ப்பாடுகளையும் முக்கல், முனகல்களோடும், அம்மா, அப்பா என்று அரற்றிக் கொண்டே, தாங்கிக் கொண்டு வாழும் என் அகங்கார வாழ்க்கை!

மறுபுறம், இதில் எதிலும் பட்டுக் கொள்ளாமல், தொலைவில் இருந்து வேடிக்கை பார்த்தபடி உலகம் முழுவதையும், அதன் ஒவ்வோர் அணுவையும், அதில் நிகழும் ஒவ்வோர் ஆச்சரியத்தையும் வியந்து, ரசித்துக் கொண்டு எனக்குள் பாடல்களாகப் பாடிக் கொண்டே இருக்கும் கவிதை வாழ்க்கை. இப்படி இரட்டை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பது புரியத் தொடங்கியது.

பல துன்பங்களுக்கு நடுவிலும், "எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய்" என்று பாரதியால் எப்படிப் பாட முடிந்தது என்று புரிந்தது. "வையத் தலைமை கொள்" என்ற பாரதியின் மஹாவாக்கியம் அரசியல் தலைமை பற்றியில்லை என்பதும், தானே இந்தப் பிரபஞ்ச சக்தி என்ற தெளிவு பெறுதலே அத்தலைமையின் சாரம் என்பதும் புரியத் தொடங்கியது.

இதெல்லாம் புரிந்து விட்டதாலேயே, உடல் வாழ்க்கை, உலக வாழ்க்கை மாறிவிடுவதில்லை. அதில் உழல்வதும், அதன் மேடு பள்ளங்களில் விழுந்தெழுந்து சுழல்வதும், சின்ன சின்ன இழப்புகளை எண்ணி உள்ளுக்குள் அழுவதும், அற்ப சந்தோஷங்களில் ஆழ்ந்து மகிழ்வதும், எதுவும் மாறவில்லை. இவற்றை மாற்றுவது கவிதையின் பணி இல்லை. ஆனால், இவற்றிலிருந்து அவ்வப்போது விடுபட வைத்தும், சிறகு தந்து பறக்க வைத்தும், தான் பறந்து திரிவதற்காகவே விரிந்து கிடக்கும் வானமும் தானே என்ற விரிவை உணர வைத்தும் கவிதை ஏதோ ஒரு வழியில் நம் ஆன்மப் பயணத்தின் இலக்கோடு ஒரு தொடர்பை உருவாக்கித் தருகிறது என்று தெரிந்து கொண்டேன்.

மேலே நான் குறிப்பிட்ட 'இதுதான் சமயம்' கவிதையைப் பற்றி இரண்டு குறிப்புகள் சொல்ல வேண்டும்.

வானவில் பண்பாட்டு மையம் பாரதி விழா நடத்தத் தொடங்கிய கதையை முன்பே சொல்லிவிட்டேன். முதல் ஆறு வருடங்கள் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை அரங்கத்திலும், நாரத கான சபாவிலும், ம்யூஸிக் அகாடமியிலும் பாரதி விழா நடத்திக் கொண்டிருந்த வானவில் பண்பாட்டு மையம் 2000–ஆம் ஆண்டிலிருந்து திருவல்லிக்கேணியில், துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் பாரதி தன் இறுதி மூச்சை விட்ட பாரதி நினைவு இல்லத்தில் அதைக் கொண்டாட முன்வந்தது. இதற்குக் காரணம் கவிமாமணி குமரிச் செழியன். அவர்தான் அந்த யோசனையைச் சொன்னார். அந்த யோசனைப்படி அந்த ஆண்டிலிருந்து பாரதி விழாவை பாரதி நினைவு இல்லத்திலேயே ஆண்டுதோறும் மூன்று அல்லது நாலு நாட்கள் கொண்டாடி வருகிறோம். எட்டையபுர ஜமீந்தாருக்கு பாரதி எழுதிய சீட்டுக் கவியில், "சொற்புதிது பொருள்புதிது சுவைபுதிது ஜோதிமிகு நவகவிதை எந்நாளும் அழியாத மாக்கவிதை" தந்த தன்னை ஜமீந்தார் ஊரெல்லையில் எதிர்கொண்டழைத்துத் தனக்குச் சாலுவை, பொற்பை, வயப்பரிவாரங்கள் தந்து ஜதிபல்லக்கில் அழைத்துச் செல்ல வேண்டும் என்று மிகவும் கம்பீரமாகக் கேட்டிருந்தான். அவன் வாழ்நாளில் அது நடக்கவில்லை. அதனால், அவன் தனக்கென்று கண்ட அந்த ஒரே கனவை அவனுக்குப் பிறகாவது நிறைவேற்றி வைக்க, அவனுடைய பிறந்தநாளான டிசம்பர் 11–ஐக் கவிஞர் திருநாளாகக் கொண்டாடுகிறோம். அன்று அவனுடைய உருவச் சிலையைப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து, அதற்குச் சால்வை போர்த்திப் பொன்முடிப்புக் காணிக்கை வைத்துச் சிறுவர், சிறுமிகள் ஜதிசொல்லிக் கொண்டு நடனமாடிவரக் கவிஞர் கூட்டம் புடைசூழ, அவனை யானை மிதித்த திருவல்லிக்கேணி

பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் இருந்து பாரதி இல்லத்திற்குக் கொண்டுவரும் ஜதிபல்லக்கு நிகழ்ச்சியை ஆண்டுதோறும் நடத்தி வருகிறோம்.

உவமைக் கவிஞர் சுரதா உயிருடன் இருந்த வரைக்கும் ஆண்டுதோறும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு ஜதிபல்லக்கைத் தம் தோளில் சுமந்த காட்சியையும், சில ஆண்டுகள் ஒருபுறம் இலக்கியச் செல்வர் குமரி அனந்தனும், மறுபுறம் என் உடன்பிறவாச் சோதரர் திரு.இல.கணேசனும் ஆக நாட்டின் இருபெரும் தேசிய இயக்கங்களின் தலைவர்கள் ஜதிபல்லக்கைச் சுமந்து வந்த காட்சியையும் என்னால் மறக்கவே முடியாது.

பெண்மை வாழ்கென்று கூத்திட்ட கவிஞனின் பல்லக்கை நடனக் கலைஞர் திருமதி ஷோபனா ரமேஷ், இசைக்குயில் திருமதி வாணி ஜெயராம், டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், வழக்கறிஞர் திருமதி சுமதி போன்ற பெண்மணிகள் தூக்கி வந்த காட்சியும் மாட்சிமை மிக்கது.

இசைக்கவி ரமணன் பாடியது போல, “இதுபோதும் அம்மா இதுபோதும் ஈரேழு ஜென்மத்துக் கிதுபோதும்” என்று பாடிக் கொண்டே இருக்கத் தோன்றுகிறது.

ஜதிபல்லக்கு முடிந்ததும் பாரதி இல்லத்தில் முழுநாள் கவிப்பொழிவு நிகழ்ச்சி நடைபெறும். சுமார் 200 கவிஞர்கள் காலை முதல் இரவு வரை இடைவிடாமல், உணவு இடைவேளை கூட இல்லாமல், கவிதை சொல்லும் நிகழ்ச்சி அது. இந்தக் கவிப்பொழிவு நிகழ்ச்சியைக் கவிமாமணி குமரிச்செழியனும், ஒய்.எம்.சி.ஏ.பட்டிமன்றத்தின் செயலாளராக நாற்பதாண்டுகளுக்கு மேல் நற்பணியாற்றி வரும் திரு.கெ.பக்தவத்சலம் அவர்களும் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து ஆண்டுதோறும் நல்ல முறையில் நடத்தித் தருகிறார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் கவிப்பொழிவில் நான் கலந்து கொண்டு கவிதை சொல்வேன். அந்த அரங்கின் ஓர் ஓரத்தில் எங்கிருந்தோ “பலே பாண்டியா” என்று பாரதி குரல் கொடுத்துப் பாராட்டுவதாக அவ்வப்போது உணர்ந்திருக்கிறேன். 2000–ஆம் ஆண்டுக் கவிப்பொழிவில், “இதுதான் சமயம்” என்ற கவிதையைச் சொன்னேன். சொல்லி முடித்துவிட்டு வந்ததும், அரங்கில் அமர்ந்திருந்த ஔவை நடராஜன் அவர்கள் என்னைப் பாராட்டிவிட்டு சொன்னார்: “அது சரி ராஜா, நீ கவிதை படித்த போது ‘சிங்கப் பறவை’ என்ற சொல் காதில் விழுந்தது. தமிழில் சிம்புட் பறவை என்று சொல்வதுண்டு. அப்படி நீ எழுதியிருக்கலாமோ?” அவருடைய அந்தக் கேள்விக்கு நான் எதுவும் பதில் சொல்லவில்லை. ஆனால், பிடறி சிலிர்த்துக்

கொண்டு ஒரு சிங்கம் பறக்கத் தொடங்கினால் எப்படியிருக்குமோ, அப்படிச் சூரியன் தன் கிரணங்களை விரித்துக் கொண்டு எழுந்த பிரும்மாண்டமான காட்சிச் சிறப்பைச் சிம்புட் பறவை என்ற சொற்சிமிழுக்குள் அடக்கிவிட முடியுமா என்ற பதில் கேள்வி என் மனத்தில் எதிரொலித்தது. அறிவைக் கடந்த மேற்பரப்புகளில் கவிதை சஞ்சாரம் செய்யும் நுட்பம் தெளிவாகியது. கவிதையை வெறும் அறிவுத் துலாக்கோல் வைத்து அளக்க முடியாது என்பது புரிந்தது. அறிவுக்கு முரணாகக் கவிதை அமையக் கூடாது என்று பாடம் சொன்ன ஔவை நடராஜன் அவர்களுக்கு, அறிவே கவிதைக்கு எல்லையாகிவிடக் கூடாது என்று நான் பதில் பாடம் நடத்த முடியுமா? அவருக்குத் தெரியாதா என்ன? என் சிந்தனையைத் தூண்டுவதற்காகவே அவர் இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கிறார் என்று எனக்குத் தெரியும்.

“இதுதான் சமயம்” கவிதை பற்றிய இன்னொரு குறிப்பைச் சொல்ல இதுதான் சமயம்.

இந்த பகுதி எழுதப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன், குரல் எழுப்பிப் பேசவும் சிரமப்படும் நிலை எனக்கு உண்டானது. கணீர் என்ற குரலில் சத்தமாகப் பேசியும், பாடியும் வந்த எனக்கு இது ஒரு பெரிய சோதனையாகியது. நீதிமன்றத்தில் வாதாடுவதிலும் மிகுந்த சிரமம் உண்டானது. நாலைந்து நாட்களுக்கு முன்பு என் முதல் மகளின் கணவன் ஷௌகத் என் வீட்டிற்கு வந்த போது ‘உன்னோடுநான்’ என்ற என் கவிதை நூலைப் புரட்டிப் பார்த்துவிட்டு, ‘அங்கிள், இந்த புக் எப்போ எழுதினீங்க?’ என்று கேட்டான். ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன் என்று பதில் சொன்னேன். ஓ, சமீபத்தில் எழுதினீர்களோ என்று நினைத்தேன் என்றான். ஏன் அப்படி நினைத்தாய் என்று கேட்டேன். “பாடிக் கொண்டே ஓசை இழக்க” என்ற வரியால், எனக்குக் குரல் போனபின் அப்படி எழுதியிருப்பேனோ என்று நினைத்ததாகச் சொன்னான்.

தன்னால் பாட முடியவில்லையே என்று மனமுருகி நண்பன் சு.ரவி முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய வரிகள் நெஞ்சில் அலைமோதுகின்றன:

**என்**
**குரல் நாண்களிலே இசையே நீயேன்**
**குலவ மறுக்கின்றாய் - இதமாய்க்**
**குழைய மறுக்கின்றாய்**

# 33

ஓசை எழுப்ப முடியவில்லை என்று ஏன் வருத்தப் படுகிறாய்? ஓசையெல்லாம் அடங்கி மோனநிலை அடையத்தானே யோகிகள் முனைகிறார்கள். இப்படிக் கேட்கலாம். ஆனால், ஓசையே என் கவிதைகளின் உயிர்நாடி. அதை நான் எப்படி இழக்க முடியும். 1980–ஆம் ஆண்டில் எழுதிய ஒரு கவிதையை இங்கே சொல்லியாக வேண்டும். அந்தக் கவிதைக்கு ஒரு சிறிய முன்னுரை தேவைப்படுகிறது.

பத்மாக்கா என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களுக்குக் கவிதை ஈடுபாடு அதிகம். இருக்காதா பின்னே. எப்படிப்பட்ட கலைப் பாரம்பரியத்தில் வந்தவர் அவர்! அவரிடம் கலைமகளின் எல்லா அம்சங்களும் நிறைந்திருக்கக் காண்கிறேன். அவருக்கு எங்கள் கவிதைச் சுற்றத்தின் மீது, அதாவது, இசைக்கவி ரமணன், வ.வே.சு., நான், இன்னும் பல கவிதை நண்பர்கள் உள்ளிட்ட கவிதைச் சுற்றத்தின் மீது அளவு கடந்த அன்பு. தம் மனத்துக்கு நெருக்கமான எந்த நிகழ்ச்சி நடத்தினாலும், அவர் எங்களை அழைத்துக் கவிதைகள் சொல்ல வைப்பார். அப்படித்தான் 1980–ஆம் ஆண்டு, அவர் வீட்டில் விஜய தசமி பூஜையில் ஒரு கவியரங்கம் ஏற்பாடு செய்து எங்களை அழைத்திருந்தார். அந்தக் கவியரங்கத்தில்தான் என்னுடைய அந்தக் கவிதை அரங்கேறியது. அதுதான் ஓசைக் கவிதை. அந்தக் கவிதைக்கு இன்னொரு சிறப்புப் பெருமை உண்டு. ஆம், ரமணனின் பராசக்தி கவிதையோடு அதுவும் அரங்கேறியது என்பதே அதன் பெருமை. நடிகர் திலகம் சிவாஜியுடன் சேர்ந்து நடித்த 'தேவர் மகன்' திரைப்படத்தை எப்படிக் கமல்ஹாஸன் மறக்கவே முடியாதோ, அப்படி இசைக்கவி ரமணன் சொன்ன பராசக்தி கவிதையுடன் சேர்ந்து என் கவிதை ஒன்று அரங்கேறிய பெருமையை நான் மறக்கவே முடியாது. என்னைப் பொறுத்தவரை,

*மிக உயர்ந்த, என்னை மிகவும் பாதித்த கவிதைகளில் ஒன்றாகவே ரமணனுடைய பராசக்தி கவிதையைக் கருதுகிறேன்.'*

கட்டறுந்த காட்டாற்று வெள்ளமாக - மெத்தக்
கற்றவர்க்கும் கால்தடுக்கும் பள்ளமாக - புத்தி
முட்டமுட்ட முளைக்கின்ற பாறையாக - எங்கோ
முணுமுணுத்துக் கொல்லுகின்ற தேரையாக
ஓடஓடச் சரியும் தொடுவானாக
உந்த உந்த விலகும் நிலவாகப்
பாடப் பாடப் பணிய மறுக்கும்
பரவசம் அதிசயம் பொய் எங்கள் பராசக்தி

*இப்படி ஒரு மடை திறந்த வெள்ளமாகப் பாய்ந்து வந்த பராசக்தி கவிதையை ரமணனே சொல்லிக் கேட்க வேண்டும்.*

*அந்தக் கவிதையுடன் அரங்கேறிய பெருமை என் ஓசைக் கவிதைக்கு உண்டென்றேன் இல்லையா? அந்த ஓசைக் கவிதை இதோ:*

நான் எழுப்பும் ஓசைதான் - இந்த
மாநிலம் எங்கும் மோதிச் சிதறி
வானம் பூமியென வையம் பிளந்து
இடைப்பட்ட வெளியெங்கும் இடிமின்னல் மழையாகிக்
காற்றைச் சொடுக்கிக் காதல் நினவுகளை
ஆற்றங் கரையில் அழகு மலர்களாய்
அடுக்கி வைத்துப் பச்சைப் பசேலென்ற
புன்னகையின் ஊடே புகுந்து விளையாடி
உங்களுக் கென்றோர் உலகம் படைத்துப்பின்
உங்கள் மனத்துக்குள் ஊழிக் கனலெழுப்பி
உங்கள் உணர்வுகளை ஊதிக் கலைத்தபடித்
திங்கள் பகலென்று தேகம் எடுத்தபடி
எங்கும் பரவி எக்காளம் இடுவதெல்லாம்
நான் எழுப்பும் ஓசைதான்
ஓசை எழுப்பும் உத்வேகம்தான் - என்
ஆசைக் கடையாளம் ஏக்கத்துக் காதாரம் - அந்த
ஆதார சக்திக்கே ஆளாகி விட்டவனை
நாதப் பொருளையே நம்பிக் கிடப்பவனைக்
காது குளிரக் கேளுங்கள்
ஓசைப் பெருவெளியில் உட்கார்ந்த படியங்கே
உதயக் கதிரழகை உற்றுக் கவனியுங்கள்
இதயம் வெடித்துச் சிதறுண்டு போனாலும்
உதயக் கதிரழகை உற்றுக் கவனியுங்கள்

**உலகப் பரப்பே உதிர்ந்து போனாலும்**
**புலனழிய வாருங்கள் புலனழிந்து போனாலும்**
**புதிய வடிவங்கள் பூண்டு மகிழுங்கள்**
**சிந்தை அழிந்தாலும் செவிமலர்ந்து நில்லுங்கள் - வாழ்க்கைப்**
**புயலென்ன செய்யுமப் போது**

*ஓசையைக் கவிஞர்கள் எப்படியெல்லாம் போற்றிப் பாடியிருக்கிறார்கள்! இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு பாடலே சான்று:*

**உழவர் ஓதை மதகோதை உடைநீர் ஓதை தண்பதம்கொள்**
**விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி**

*ஆர்க்கும் ஓசைகளை எப்படி அடுக்கிச் சொல்கிறார் இளங்கோவடிகள்!*

**ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே**

*இது அப்பர் பெருமான் வாக்கு.*

**ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!**

*இது பாரதியின் தீர்ப்பு.*

*இயற்கையின் ஓசைகளில் மனம் பறிகொடுத்து என்னை இழக்கிறேன். அப்படி என்னை இழப்பதில் ஒரு பெரிய லாபம் இருக்கிறது. இசையில், இயற்கையின் ஓசைகளில் மெய்மறந்து, இந்த உடலெல்லைக்கு உட்பட்ட மிகச்சிறிய அகங்காரமான என்னை இழக்கிறேன்; அப்படி என் சிறிய நானை நான் இழக்கும் போதே, இந்த உடலைக் கடந்து, எல்லையற்ற பிரபஞ்சமாகவே விரிந்திருக்கும் என் மிகப் பெரிய நானை மெல்ல மெல்லக் கண்டுபிடித்து, என் விரிவை உணரத் தலைப்படுகிறேன். சின்ன முதல் போட்டு, பெரிய லாபம் ஈட்டும் செட்டியார் கதை! வெங்காயத்தைக் கொடுத்துச் சீரகம் வாங்கும் மளிகை வியாபாரம்! திருவேரகத்து முருகப் பெருமானைச் செட்டியாரே என்று அழைத்துச் சீர் அகமாகிய முக்திநிலை கேட்கும் சொக்கநாதப் புலவரின் தனிப்பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது:*

**வெங்காயம் சுக்கானால் வெந்(து)அயத்தால் ஆவதென்ன**
**இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை - மங்காத**
**சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்**
**ஏரகத்துச் செட்டியா ரே**

*இயற்கையின் ஓசைகள் இனியவை. அவற்றில் இதயம் பறிகொடுத்து, இறைவனையே நாதப் பிரும்மமாய்க் கண்டு துய்த்த மஹாகவிகளும், மஹான்களும் நமக்கு வழிகாட்டிகள்.*

*ஆனால், நமக்குள் ஓயாமல் ஓசை எழுப்பிக் கொண்டிருக்கும் மனச்சலனங்கள் அமைதி செய்யப்பட வேண்டியவை. அவற்றைச் சிந்தாகுலம் என்றே பெரியவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'ஆகுலம்' என்பது ஆரவாரத்தைக் குறிக்கும் சொல்.*

*மனச்சலனங்களை நிலைக்குக் கொண்டு வந்து, சலனமற்ற மோன லயத்தில் மூழ்குவதும், புறத்தே இயற்கையில் எழும் சலனங்கள் அனைத்திலும் இறைமையைக் கண்டு பரவசத்தில் ஆழ்வதும், ஆகிய இரண்டுமே உயர் அனுபூதி நிலைகளே! முதல் சாதகத்தை யோகியும், அடுத்த சாதகத்தைக் மஹாகவியும், இசைஞானியும் மேற்கொள்வார்கள். இந்த இரண்டு முறைகளின் இறுதி முனைகளும் சந்தித்துக் கொள்ளும் ஒரு வட்டத்தில் நான் சுழன்று கொண்டிருக்கிறேனோ?*

*மிகச் சமீபத்தில் (அதாவது, 2014 – ல்) உதித்த ஒரு பாடலைச் சொல்ல இதுதான் சரியான இடம். தினமும் காலை 5 மணிக்கு யோகாசனப் பயிற்சிகள் சொல்லிக் கொடுக்கும் ஆசான் என் வீட்டுக்கு வருவார். நான் 4.30 மணிக்கு எழுந்து, தயாராக வேண்டும். அதற்காக மேஜைக் கடிகாரத்தில் அலாரம் வைத்துக் கொண்டு படுப்பேன். ஒரு நாள், ஏனோ தெரியவில்லை, அலாரம் அலறவில்லை. ஆனால், அந்த அலறல் ஓசை இல்லாவிட்டாலும், 4.45–மணிக்கெல்லாம், பொழுது புலரும் அலர் ஓசையோடு, பலவிதமான பறவைகளின் கீச்சுக் கீச்சுக் குரலில், இயற்கையாய் விரிந்திருக்கும் பராசக்தியே என்னைத் துயில் எழுப்பினாள்! நான் கண்மலர்ந்தேன்; ஒரு பாடல் என் நெஞ்சில் மலர்ந்தது.*

**எத்தனை ஓசைகளோடு தினம் என்னை**
**எழுப்புகிறாய் தாயே**
**எத்தனை வண்ணங்கள் காட்டி என்னை நீ**
**இயக்குகிறாய் தாயே**

**சத்தமெல்லாம் ஒரு கணத்தில் இழந்து**
**வெட்ட வெளியில் வடிவின்றிக் கலந்து**
**போவதற்கா இந்தப் பகல் வேஷம் - வெறும்**
**பொம்மைக ளோடென்ன சகவாசம்**

**எப்பொழுதும் உன் சன்னிதியில்**
**என்குரல் ஓசை கேட்கட்டுமே**
**ஒவ்வொரு சொல்லுமுன் கார்குழலில்**
**ஒவ்வொரு மலராய்ப் பூக்கட்டுமே**
**கேட்பதெல்லாம் தரும் தாய்மனமே - என்**
**கவிதையில் வந்தமர்வாய் தினமே.**

*இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே என் வீட்டுத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தேன். பாடி முடித்ததும் எந்தச் சத்தமும் இல்லாத ஒரு பேரமைதியின் நடுவே நான் நிற்பதை உணர்ந்தேன். பறவை ஒலி, மரங்களின் சலசலப்பு, பூச்சிகளின் ரீங்காரம், ஏன், என் இருதயத்தின் லப்டப் துடிப்பு, ஹூம்ஹூம், எந்தச் சத்தமும் இல்லை. இல்லையா, எதுவும் எனக்குக் கேட்கவில்லையா? அரைநிமிடம் அப்படியோர் அமைதி! என்னுள் இருந்து புறப்பட்டு வெளிவந்த கவிதையை வரவேற்க இயற்கை ஆடாமல் அசையாமல் நின்றதுபோல் உணர்ந்தேன்.*

# 34

*கவிதையை வரவேற்க இயற்கையே கைகட்டிக் காத்திருக்கும் என்பதுபோல் பேசிவிட்டாயே! சிகாமணி முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. ஏன் அப்படி நடக்காதா அல்லது நடக்கக் கூடாதா? கவிதையே பராசக்தியின் ஊஞ்சல்; அவள் அமர்ந்து உலாவரும் சிவிகை அல்லது பல்லக்கு. இது உண்மையானால், அவளே கவிதையின் ஊற்றுக்கண் என்பது சரியென்றால், ஒரு கவிதை வரும் போது இயற்கை கைகட்டிக் கொண்டு நின்று வரவேற்றுத்தானே ஆக வேண்டும். என் இனிய நண்பன், கவிஞன் பா.வீரராகவன் எந்த அரங்கத்தில் என்ன கவிதை படித்தாலும், அதற்கு முன்னால் தன் கவிதை ஒன்றைக் கட்டாயம் சொல்லுவான்.*

**மனமாரச் சொன்னகவி எல்லாம்**
**மன்றத்தில் புகழ்கொள்வ தில்லை**
**எனதானால் இக்கணமே வீழும் - அன்றி**
**உனதானால் எந்நாளும் வாழும்**
**எனதில்லை உனதென்றே அர்ப்பணித்தேன்**
**நின்னருள் நின்செயல் நின்கடனே**

*கவிதைகளைச் செய்பவளும், கவிதைக்காக ஏங்கும் நெஞ்சங்களில் கவிதை வெள்ளம் பெய்பவளும், சில காதல் நெஞ்சங்களைத் தோட்டங்களாக்கி அங்கே கவிதை மலர்கள் கொய்பவளும், கனவுத் தறியில் கவிதை இழைகள் நெய்பவளும் ...! எல்லாம் அவளே. அவள்தானே இயற்கையன்னை, பராசக்தி.*

*அவள் கவிதைச் சிவிகையில் அமர்ந்து வரும் நேரம், கவிதை வரும் நேரம்..!*

**கவிதைவரும் நேரம் இது கவிதைவரும் நேரம்**
**கனவுகளும் நினைவுகளும் கலந்துதடு மாறும்**

கவிதை வரும் நேரம் இது கவனம்மிக வேண்டும்
கருத்தில் ஒரு நெருப்புமலர் கட்டவிழும் நேரம்
கவிதைவரும் நேரம் இது கவிதைவரும் நேரம்

மலருதிரும் ஓசையிலும் மனமதிரும் நேரம்
மதகுடைய வேண்டியொரு நதிபுரளும் வேகம்
மண்மரகதங்களும் விண்ணதிசயங்களும்
பண்வடிவம் ஏற்கத் தவம் செய்யும் கோலம்

கவிதைவரும் நேரம் இது கவிதைவரும் நேரம்

சுவர்க்கோழி சில்வண்டு ஸ்ருதிசேர்ப்ப தைக்கண்டு
சிரக்கம்பம் செய்யும் சிறுதென்னம் பாளை
புதிதாக வருகின்ற பூந்தென்றல் காற்றுக்குச்
சதகோடி விண்மீன்கள் மாலை மரியாதை
கவிதைவரும் நேரம் இது கவிதைவரும் நேரம்

தவிக்கின்ற நெஞ்சத்தில் தணலாய் எழுந்து - பசுந்
தளிர்க் கரங்களில் பனித் துளியாய்ப் படர்ந்து
கவிழ்கின்ற மேகங்க ளுக்குள் கலந்து
சிரிக்கின்ற தேயொரு கவிதைக் கொழுந்து
கவிதைவரும் நேரம் இது கவிதைவரும் நேரம்

*கவிதையைச் சுமந்து வரும் பூந்தென்றல் காற்றுக்குச் சதகோடி விண்மீன்கள் மாலையிட்டு மரியாதை செய்யுமாமே!*

*இதற்குக் காரணம் என்ன? கவிதை உதிக்கும் கணத்தில், ஓர் அதிசயம் நடக்கிறது. இன்னும் சரியாகச் சொல்லப் போனால் அந்த அதிசயம் நடக்கும் போதுதான் கவிதை உதிக்கிறது. அது என்ன அதிசயம்?*

*இந்த உடற்கூட்டுக்குள் அடங்க மறுத்து, இந்த உலக எல்லைகளையும் ஏற்க மறுத்து, எல்லையற்ற வானமாய்த் தானே விரியத் துடிக்கும் ஆதங்கம், பிடிவாதம், வெறி, நெஞ்சில் உண்டாகி, அது மிகும் போது, அதன் கனம் தாங்காமல், நினைவுக்குமிழ் வெடித்துச் சிதற, அதனால் மிக லேசாகி, ஒரு விடுதலை உணர்வோடு அந்த உயிர்த்துடிப்பு உயர உயரப் பறந்து செல்கிறது. ஏதோ ஓர் உயரத்தில், முன்பு யாரோ ஒரு மஹாகவியின், அல்லது, மஹரிஷியின் சங்கல்பத்தில் உருவாகி, ஏதாவது ஓர் உயிர்த்துடிப்பு வந்து தன்னைப் பற்றிக் கொள்ளாதா என்று காத்துக் கொண்டிருக்கும் சலன அலைகளை அது சந்திக்க*

*நேரிடலாம். அந்தச் சந்திப்பே ஒரு யுகசந்திப்பு. அந்தச் சந்திப்பே ஒரு சங்கமம் ஆகும் போது, அந்தச் சங்கமத்தில் ஜனிப்பதுதான் உயர்கவிதை. அப்படியோர் யுகசந்திப்பின் சங்கமத்தில் ஜனித்து வரும் ஒரு மகத்தான கவிதையின் பிறப்பை உலகமே, இயற்கையே ஒரு மாபெரும் வைபவமாகக் கொண்டாடுகிறது. இதுதான் கவிதையின் ஜனன ரகசியம்.*

*என்னய்யா கதையளக்கிறாய்? இதை யார் சொன்னது. யாரா? கவிதைதான். கவிதையே தன் ஜனன ரகசியத்தை எனக்கு அறிவுறுத்தியது.*

வெறிகொண்டு விட்டேன் கவிதை வெறி கொண்டு விட்டேன்

நர்த்தனச் சொற்களில் நானுலா போகவும்
நடனமே நடையாகவும் - விழி
மத்தளம் கொட்டி வியப்பிலே மூழ்கவும்
மீண்டும் மீண்டும் பாடவும்
வெறிகொண்டு விட்டேன்

துரிதகதியில் மனம் துணிவு பெறவும் நடை
துவளாத லயம் சேரவும்
பரிதியுதயம் வெண் பனியில்நிகழும் தனிப்
பரவசம் உருவாகவும்
சிறிதுசிறிதாய் இழை பிரியுமுணர்வே ஒரு
சித்திரத் தறியாகவும்
சிந்தனைக் குள்ளே சிறகடிக்கும் வண்டுயிர்ச்
சங்கிலே நின்றூதவும்
வெறிகொண்டு விட்டேன்

வானைப் பிளக்கும் வைரக் கரங்கள்
இடிமுழக்கம் செய்வதாய் - அலை
வாரித் தெறிக்கும் கடல்திகைக் கும்படி
வார்த்தைப் பிரளயம் நிகழ்வதாய்த்
தேன்பிலிற்றும் சொற்களுக்குள் - ஒளித்
திகிரியே உருகி விழுவதாய் - அண்டக்
கோளமெல்லாம் குலைநடுக்கத்துடன் நேர்க்
கோட்டிலே வந்து நிற்பதாய்ப்
பாட்டிலே என்மனக் கூட்டிலே பலகோடி
வீணைகள் தாமே ஒலிசெய்வதாய்
ஒவ்வொன்றிலும் ஒரு ஸ்வரமாகவே விண்
மீன்களெல்லாம் நின்றதிர்வதாய்த்

திமிர்பிடித்த யானை சிறகெடுத்துப் பறக்கும்
தினவிலே எக்காளக் கனவிலே
சுக்கு நூறாக வெடித்துச் சிதற
வெறிகொண்டு விட்டேன்

கனவுகளாய் மனவாசல் தோறும்
சிதறிக் கிடக்கிறேன்
படிக்க முயன்றால் பறந்து விடுவேன்
பணிந்து கேட்கிறேன்
காலடி ஓசை கேட்டால் கூடக்
கலைந்து போய்விடுவேன் - மூச்சுக்
காற்றில் பாதை அமைத்தால் உள்ளே
நுழைந்து வளர்ந்திடுவேன்

*எப்படியிருக்கிறது கதை! புத்தி சிகாமணி எதுவுமே பேசாமல் உம்மென்று இருக்கிறானே! அவனும் தியானத்தில் இருக்கிறானோ!*

*இப்படிக் கவிதை வெறி ஒருபுறம். வக்கீல் தொழில், குடும்பம், காதல் மனைவி, மறுபுறம். இழுபறிதான். ஆனால், ஷோபனா அடிக்கடி ஒன்று சொல்வாள். அவள் மேல் எனக்குள்ள காதலே, என் அக எழுச்சிக்கு, அதாவது, கவிதை வானில் மென்மேலும் சிறடித்துப் பறப்பதற்கு ஒரு தடையாகி விடக் கூடாது என்பதே அவள் கவலை. மேலே கண்ட கவிதையை நான் எழுதுவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன், என்னுடைய 25–ஆவது பிறந்த நாளன்று, சரியாகச் சொல்வதென்றால், அதற்கு முதல்நாள் மாலை, 12–01–1978 மாலை, அவள் இந்தக் கவலையை ஒரு கவிதையாகவே ஆங்கிலத்தில் வடித்துத் தந்தாள்:*

It’s a long time since I wrote to you
In the words of song and honey dew
But now my Love lends to my words
The lilt of life and song of birds

In the rush of time I wonder most
What made me worth your heart as host;
Though I may stumble, every time
You straighten me with thoughts sublime

What bade you bear my wounds and woe?
What shade of rest do I give you?
For every frown upon my face,
Why should your heart pound twice apace?

Let not Love be your tragic flaw
As blessed muse I speak this law
The gale of Life may lash me down
You stay away, do not be blown

You wear a halo round your crown
Don't crowd it with a worldly frown
As blessed Muse I speak this law
Let not Love be your tragic flaw

இந்தக் கவிதையை நான் எப்படித் தமிழாக்கம் செய்வேன்?

**உனக்குநான் எழுதி வெகு நாட்களாயின**
**பாடற் சொற்களைத் தேனில் நனைத்து**
**இன்றென்**
**காதலே சொற்களுக்குக் கொடை வழங்கியது**
**உயிர்த்துடிப்பும் பறவையின் கானமும் குழைத்து**

இப்படித் தொடங்கி வளர்ந்த அந்தக் கவிதையில் இரண்டு வரிகள் அமர வரிகள்.

**"காதலே உன்வீழ்ச்சிக்குக் காரணம் ஆகிவிட வேண்டாம்;**
**அருள்பெற்ற வாணியாய் இந்த விதிசெய்கிறேன்"**

மன்னிக்கவும். அந்த ஆங்கிலக் கவிதையை அப்படியே மொழிபெயர்க்க முடியவில்லை. தோற்றுவிட்டேன். வேறு சொற்களில் அடைபட மறுக்கும் அதன் ரௌத்திரத்தை நான் மதிக்கிறேன். கவித்திறத்தை மிஞ்சிய அதன் பவித்திரத்தை நான் வணங்குகிறேன்.

அடாடா, எனக்கு எல்லாமே கவிதைதானா? ஆம், பள்ளியில் கவிதை, பத்திரிகை நடத்தினால் கவிதை, காதலில் கவிதை, களித்தால் கவிதை, கவலைப் பட்டாலும் கவிதை, திரைப்படம் எடுத்தால் கவிதை, நாடகம் போட்டால் கவிதை ...

"இரு, இரு! கொஞ்சம் பொறு அப்பா. நாடகம் போட்டால் என்று பள்ளி நாடகத்தைத்தானே சொல்கிறாய்?" கேள்வி எழுகிறது.

பள்ளியில் போட்ட நாடகத்தைச் சொல்லவில்லை. திருமணம் ஆன பிறகு ஒரு நாடகம் போட்டோம். அந்தக் கதையை அப்புறம் சொல்கிறேன்.

# 35

*1976–77.* இந்தக் காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில், குறிப்பாகச் சென்னையில், நாடகங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. தமிழ் நாடக உலகின் பொற்காலம் என்றே அதைச் சொல்லலாம். அப்போது நாமும் ஒரு நாடகம் போட்டால் என்ன என்று தோன்றியது. என்னதான் கல்யாணராமன் மாமாவிடம் வளர்ந்தாலும், லேடி விஸ்வத்தின் மகன் இல்லையா? நடிப்பு என் ரத்தத்தில் ஊறியிருந்தது.

ஆனால், நடிப்பைக் காட்டிலும், நாடக ஆவலைக் காட்டிலும், கவிதை வெறியே என் உயிரணுக்கள் ஒவ்வொன்றிலும் பதிந்து கிடந்தது. எனவே, நாடகம் என்று யோசித்த போதும் கவிதையே முன்னின்று வழிகாட்டியது. ஆம், நானும் ஷோபனாவும் இணைந்து நாடகக் கதை ஒன்றை உருவாக்கினோம். என் தந்தை விஸ்வம்தான் நாடக இயக்குநர்.

அதன் கதாநாயகன் அரவிந்தன் ஒரு கவிஞனாக இல்லாமல் வேறெப்படி இருக்க முடியும்? அவன் தன் நிஜ வாழ்க்கையில் பார்த்திராத ஒரு பெண் அவனுடைய கனவுகளில் மட்டும் அடிக்கடித் தோன்றி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தாள். கனவில் அரவிந்தனோடு கவிதையாகவே அளவளாவுவாள். கவிதைச் சுவையில் இருவரும் மூழ்கிக் களிப்பார்கள். இதைப் பற்றி அவன் தன் நண்பனிடம் சொல்கிறான். அந்த நண்பன் ஓர் ஓவியன். அரவிந்தன் அவளை நன்றாக வர்ணித்தால் தான் அவளை அப்படியே வரைந்து காட்டுவதாகச் சொல்கிறான் ஓவிய நண்பன். அரவிந்தனின் வர்ணனைகளுக்கு வர்ணம் தீட்டிக் காட்டுகிறான் நண்பன். அப்படியே தத்ரூபமாகத் தன் கனவுக் காதலியை நண்பன் வரைந்து விட்டதைச் சொல்லி வியந்து மகிழ்கிறான் அரவிந்தன். அவளுக்குக் கல்பனா என்று

பெயர் சூட்டுகிறார்கள். ஓவியம் வரைந்து முடித்த பிறகு, ஏனோ அரவிந்தன் கனவில் கல்பனா வருவதில்லை. அவனுக்குக் காரணம் புரியவில்லை. மிகவும் சோகத்துக்கு ஆளாகிறான். அப்போது ஒரு நாள் தெருவில் சென்று கொண்டிருக்கும் போது, கல்பனாவையே நேரில் பார்த்து விடுகிறான். சென்று பேசுகிறான். தான் கல்பனா இல்லை, தன் பெயர் ரூபா, தனக்குக் கவிதையிலெல்லாம் துளிக்கூட ஆர்வம் கிடையாது என்று அவள் எவ்வளவோ சொல்லியும், விடாமல் அவளை அரவிந்தன் தொடர்ந்து சந்தித்துப் பேசப் பேசப் அவர்களிடையே காதல் மலர்கிறது. ஆனால், கொஞ்சம், கொஞ்சமாக அரவிந்தனுக்குப் புரியத் தொடங்குகிறது, உருவத்தில் மட்டுமே ரூபா தன் கல்பனாவைப் போல் இருப்பது. மற்றபடி அவளுடைய எண்ணம், செயல், பேச்சு எதுவுமே கல்பனாவை நினைவு படுத்துவதாக இல்லை. இதனால் வருத்தம் அடைந்து அரவிந்தன் கல்பனாவின் ஓவியத்தின் முன் அமர்ந்து கொண்டு அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில், ரூபா ஏதோ முக்கியமாகப் பேசியதை அவன் கவனிக்காததால் ஆத்திரம் கொண்ட ரூபா, அந்தக் கல்பனா ஓவியத்தை உடைத்துக் கிழித்து எறிகிறாள். அரவிந்தனும் தான் இனிமேல் கல்பனாவை மறந்துவிட்டு ரூபாவுடன் சாதாரண மனிதனைப்போல் சந்தோஷமாக வாழ்வதாக உறுதியளிக்கிறான். ஆனால், அன்றிரவே மீண்டும் அவன் கனவில் கல்பனா வருகிறாள். நிலைமை மாறுகிறது. தினமும் அவன் கனவில் கல்பனா வரத் தொடங்கியதும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி அரவிந்தன் தடுமாறிக் கிட்டத்தட்ட ஒரு மனநோயாளியாவே மாறி விடுகிறான். எப்படியாவது கல்பனாவை மறந்தால் மட்டுமே அவன் நிம்மதியாக இயல்பு வாழ்க்கை வாழ முடியும் என்ற தெளிவு ஏற்படுகிறது. ஒரு மனோதத்துவ நிபுணரின் யோசனைப்படி அரவிந்தன் கனவில் கல்பனா வரும் போது அவளைக் கனவிலேயே கொன்றுவிட வேண்டும் என்று முடிவாகிறது. அன்றிரவு ஒரு கத்தியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அரவிந்தன் படுக்கிறான். மறுநாள் அவன் பிறந்ததினம். காலையில் ரூபா கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து விட்டுப் பிரசாதத்துடன் வருகிறாள். அப்போது, கனவில் கல்பனாவைக் கண்டு, “போய்விடு ராட்சஸி. உன்னைக் கொன்று விடுகிறேன்” என்று தூக்கத்தில் அரவிந்தன் அலறும் சத்தம் கேட்கிறது. ரூபா படுக்கை அறைக்குள் ஓடுகிறாள். ஒரே இருட்டு. அலறல் சத்தம் ... அரவிந்தன் கத்தியில் ரத்தம் சொட்டச் சொட்ட வெளியே வருகிறான். “கல்பனாவைக் கொன்று விட்டேன்” என்று உரக்கக் கூவுகிறான். ஆனால் அவன் உண்மையில் கொன்றது ரூபாவை.

அவனுடைய கவிதைகளுக்கு ஞான பீட விருது வழங்கப் பட்டதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாமல், விழிப்பு நிலையிலும்

*கல்பனாவுடனேயே பேசிக் கொண்டும், கவிதைகள் சொல்லிக் கொண்டும் ஒரு மனநோயாளியாக அரவிந்தன் வாழ நேரிடுகிறது.*

*தலை சுற்றுகிறதா? நாடகத்தில் நான்தான் அரவிந்தன், ஷோபனாதான் கல்பனா–ரூபா ஆகிய இரட்டை வேடங்கள். முதலில், "கனவுக்கும் நிழல்கள் உண்டு" என்று நாடகத்துக்குக் பெயர் வைத்தோம். பிறகு அன்றைய நாடக உலகத்தின் போக்குக்கு ஏற்பப் "பார்வைக்கு என்ன பொருள் " என்று அதை மாற்றினோம். 1976 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், ஸ்ரீ கிருஷ்ண கான சபாவில் நாடகம் அரங்கேறியது. முதல் பாதி வெற்றி. சுகி சிவம் கூட அதில் திரைக்குப் பின்னால் இருந்து குரல் தரும் ஒரு காட்சி இடம்பெற்றிருந்தது. ஆனால், இடைவேளைக்குப் பின்னால், கல்பனா–ரூபா மாறிமாறி வரும் காட்சிகளில் ஒளியமைப்பு ஒத்துழைக்காமல் போய் நாடகம் குழப்பமாகியது. எங்களுடன் நடித்த ராகவன், ராமச்சந்திரன் உட்பட எல்லாருமே நன்றாக நடித்திருந்தும், என் சிந்தனைகளைப் புரிந்து கொண்டு என் நண்பர்கள் ஸ்ரீதர்–சாமா நன்றாக வசனம் எழுதியும், எடுத்த எடுப்பிலேயே நிறைய தந்திரக் காட்சிகள் கொண்ட ஒரு கதையைத் தேர்ந்தெடுத்ததாலும், அதைச் சரிவர நிகழ்த்திக் காட்ட முடியாமற் போனதாலும், நாடகம் அரங்கேறிய பிறகு அதைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. பல ஆயிரங்கள் நஷ்டமானதுதான் மிச்சம். 1976 ஆம் ஆண்டில் அது பெரிய தொகைதானே!*

*"நாடகமே இந்த உலகம்! இதில் ஆடுவதோ பொம்மலாட்டம்" என்று மனோன்மணி மெல்லிய குரலில் பாடுகிறாள்.*

*அந்தக் காலக் கட்டத்தில்தான், 1977–ஆம் ஆண்டில், நான் இப்படி ஒரு கவிதையை எழுத நேர்ந்தது:*

**உள்ளக் கதவை மெல்லத் திறந்துநான் உற்றுப் பார்க்கிறேன்**
**உருத்தெரியாமல் நான்தான் அங்கே உதிர்ந்து கிடக்கிறேன்**
**என்**
**உள்ளக் கதவை மெல்லத் திறந்துநான் உற்றுப் பார்க்கிறேன்**
**உருத்தெரியாமல் நான்தான் அங்கே உதிர்ந்து கிடக்கிறேன்**

**தாபத் தோடு சுடரும் எந்தன் தீபக் கனவுகள்**
**நடுங்கி னாலும் நடுநடு வேயொளி நடனம் செய்வதால்**

**என்**
**உள்ளக் கதவை மெல்லத் திறந்துநான் உற்றுப் பார்க்கிறேன்**
**உருத்தெரியாமல் நான்தான் அங்கே உதிர்ந்து கிடக்கிறேன்**

காலைப் பனியின் காதற் பொழிவில் கண்வி ழித்ததும்
கதிரவ னுடைய க்ரணங்களை அருந்தி வளர்ந்தி ருந்ததும்
மாலையில் வண்டு மழலையில் தாய்மை சுரந்தி ருந்ததும்
மாயையா இல்லை வாழ்க்கையா என்று மனம்வெ தும்பிடும்
ரோஜா மலரின் இதழ்க ளாகப் படப டக்கிறேன்
ஊதற் காற்றில் உடம்பு நடுங்க முடங்கிக் கிடக்கிறேன்

என்
உள்ளக் கதவை மெல்லத் திறந்துநான் உற்றுப் பார்க்கிறேன்
உருத்தெரியாமல் நான்தான் அங்கே உதிர்ந்து கிடக்கிறேன்

ஆடித் திரிந்த கால்களில் நாதம் அள்ளித் தெறித்ததும் - ஓர்
ஆரணங் கென்னைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டதும்
பாடிக் களித்த பண்களெல் லாமென் நெஞ்சிற் பதிந்ததும்
பாழும் கனவா பழமை நினைவா என்ற பதைப்புடன்
உதிர்ந்து கிடக்கும் சதங்கை மணிகளாய் ஒடுங்கிக் கிடக்கிறேன்
- மனம்
அதிர்ந்த போதும் அசைவே இன்றிப் புழுங்கித் தவிக்கிறேன்

அருவித் துகிலை அணிந்த வண்ணம் அமர்ந்திருந்ததும்
யாரோ ஒருவன் சிற்றுளியாலே வளைந்து நெளிந்ததும்
வருவோர் எல்லாம் வணங்கித் துதிக்க வாழ்ந்தி ருந்ததும்
வாழ்க்கையா இல்லை மாயையா என்று மனம் வெதும்பிடும்
தூள்தூள் ஆன பாறைத் துகள்களாய்த் துடிது டிக்கிறேன்
நாளொவ் வொன்றும் நானே பலவாய்ப் பிரிந்து தேய்கிறேன்

அறிவில் பூத்த அரவிந் தங்களின்
நறுந்தேன் அள்ளிப் பருகிய நாட்கள்
உலகு திருத்தும் உணர்ச்சி வேகத்தில்
உன்மத்த னாகவே ஓடிய கால்கள்
அழகுப் பசியின் அசுர போதையில்
கனல்வயப் பட்ட என் காவியப் பார்வைகள்
மெழுகாய் உருகி மெலிந்த நினைவுகள்
மீண்டும் மீண்டும் மீண்ட ஸ்வர்கங்கள்
தனிமை இருட்டில் தவித்த படியோர்
அச்சத் தாலே அதிர்ந்த நரம்புகள்
இனிய இசையில் என்னை மறந்துநான்
இதய மாகவே அலைந்த பொழுதுகள்
அணுக்க ளாகச் சிதறிச் சிதறி
அழுது முடித்த ஆயிரம் கணங்கள்

**எல்லா மாகி இருந்த பின்னும்**
**எதுவும் முழுமை பெறாத நிலையில்**

**என்**
**உள்ளக் கதவை மெல்லத் திறந்துநான் உற்றுப் பார்க்கிறேன்**
**உருத்தெரியாமல் நான்தான் அங்கே உதிர்ந்து கிடக்கிறேன்**

*இதை உருக்கம் என்பதா, விரக்தி என்பதா, வேதாந்தம் என்பதா? என் இல்லற வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. பொருளாதாரமும் மோசம் இல்லை. பின் ஏன் இந்தப் பாடல்? யாரைக் கேட்பது? எந்த அனுபவக் களத்தில் இருந்து நான் இந்தப் பாடலை எடுத்து வந்தேன்?*

*நிஜ வாழ்க்கை என்று நாம் சொல்கிறோமே, அதில் நடக்கும் சம்பவங்களைக் காட்டிலும் என் மனம் சென்று சஞ்சரிக்கும் வேறு நிலைகளில் நிகழும் அல்லது நிகழ்ந்த சம்பவங்களே என் கவிதைகளின் கருப்பொருள்கள் ஆகியிருக்கின்றன. அந்தச் சம்பவங்கள் இன்னவை என்று என் மேல் மனத்துக்குப் பல சமயங்களில் தெரியக் கூடத் தெரியாது.*

*எனக்குத் தோழர்களை விடத் தோழிகளே அதிகம். "என்னப்பா கங்கைக் கரைத் தோட்டம்" என்றுதான் ராஜகோபால் என்ற என் நண்பன் என்னை அழைப்பான். ஒருமுறை, சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், ஷோபனா, அவளுடைய தாயார், என் தோழி ஒருத்தி ஆகியோருடன் திருவண்ணாமலைக்குச் சென்றிருந்தேன். அங்கே, விடியற்காலையில், மலை மேல் அமர்ந்தபடி அந்தத் தோழியிடம் கவிதை ஒன்று சொல்லிக் கொண்டிருந்தேன். ஷோபனாவின் தாயார் அதைக் கேட்டிருக்க வேண்டும். நான் அந்தத் தோழியிடம் ஏதோ காதல் கவிதை சொல்லிக் கொண்டிருந்ததாகவும், எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் மறுநாள் அவர் ஷோபனாவிடம் சொல்லிப் புலம்பினாராம். ஷோபனாவும் நானும் சிரித்துக் கொண்டோம். உண்மையில் அது ஒரு பராசக்தி கவிதை. ஆனால் என் கவிதைகளில்தான் பக்தி எது, காதல் எது; பராசக்தி எது, ஷோபனா எது என்று புரியாதே!*

*உலக நடப்புகள் என் சிந்தனையை பாதித்த அளவு என் கவிதை மூலத்தை உசுப்பவில்லை என்பதை நான் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். நாட்டில் நடக்கும் அநியாயங்களை எண்ணிக் கோபப் பட்டிருக்கிறேன். கொந்தளித்துப் பேசியிருக்கிறேன். ஏன், ஊழலை எதிர்த்து, அன்னா ஹசாரே உண்ணாவிரதம் இருந்த போது, நானும் உண்ணாவிரதம் இருந்தேன். அவருடைய*

போராட்டத்தை அலட்சியப் படுத்தி, ஆணவத்தோடு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் பேசியதைக் கேட்டு, சிவம் வீட்டுக்குச் சென்று உட்கார்ந்து சீற்றத்தோடு, கண்கலங்கிப் புலம்பியிருக்கிறேன். ‘குடிமக்களாகிய நாம்’ (We The People) என்ற அமைப்பை நிறுவி ஊழல் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறேன். என் மீது உள்ள அன்பு மிகுதியால், என்னுடைய ஊழலெதிர்ப்பு நடவடிக்கை பற்றி அமுதசுரபி இதழில் ஒரு தனித் தலையங்கமே எழுதி விட்டார், அதன் ஆசிரியர், திரு. திருப்பூர் கிருஷ்ணன்.

அந்த அளவு சமூக உணர்வு இருந்தும், இப்படிப்பட்ட உலக நடப்புகள் என் கவிதையின் ஊற்றுக்கண்ணை ஏனோ அணுக முடியவில்லை. உலகத்தின் அன்றாட மானுட நிகழ்ச்சிகள் என் கவிதைப் பொறியைத் தூண்டிவிடவில்லை. என் கவிதை வேறெங்கெங்கோ சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

# 36

*சமூகப் பிரக்ஞை இன்றி எழுதப்படும் கவிதைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்றொரு கருத்து நிலவுகிறதே! அதற்கு என் பதில் என்ன?*

சூழலின் தாக்கமின்றி எந்தப் படைப்பும் வருவதில்லை. ஆனால், ஒரு கவிஞனின் கவிதைகள் எந்தச் சூழலில் பிறக்க வேண்டும் என்பதை அவனே எப்படி முடிவு செய்ய முடியும்?

என் உடனடிச் சூழலில் உள்ள சிக்கல்கள் எல்லாம் மனிதனால் தீர்வு காணக் கூடிய பிரச்சினைகளே. அந்தப் பிரச்சினைகள் பற்றி நானும் பலவாறு சிந்தித்து, அவற்றுக்குத் தக்க தீர்வுகளையும் முன்மொழிந்திருக்கிறேன். நான் என்னுடைய தத்துவத் துறை எம்.ஃபில். பட்டத்துக்கான ஆய்வுரைக்கு எடுத்துக் கொண்ட பொருள், "நல்வாழ்வுச் சிந்தனைகள்" (Philosophy of Welfare). அதில் தத்துவம் அதிகமா, பொருளாதாரச் சிந்தனைகள் அதிகமா, சமூகவியல் சிந்தனைகள் அதிகமா என்ற குழப்பமும், தடுமாற்றமும் நேர்முகத் தேர்வுக் குழுவினர்க்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. அந்தக் குழுவில் மேற்சொன்ன மூன்று துறை வல்லுநர்களும் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எப்படியோ நல்ல மதிப்பீடுகள் தந்து என்னைத் தேர்ச்சி பெறச் செய்தனர். அந்த ஆய்வுரையில் நல்வாழ்வுச் சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்று ஒரு மாதிரிப் படிமமே, ஆங்கிலத்தில் சொல்வதென்றால், ஒரு ப்ளூ ப்ரிண்டே கொடுத்திருந்தேன். அதில் முக்கியமான, ஆனால், புதுமையான ஒரு பரிந்துரையைச் செய்திருந்தேன். பணத்துக்குக் குறைந்த பட்சம் இரண்டு பரிமாணங்கள் இருக்க வேண்டும் என்பதே அந்தப் பரிந்துரையின் சாரம். ரூபாய், அல்லது டாலர் தாளுக்கு அதன் மதிப்பு, 1, 10, 100 என்று குறிப்பிடப்படுவது போல்,

அதன் ஆயுளும், அதாவது அது எந்த நாள் வரை செல்லுபடியாகும் என்ற தேதியும் குறிப்பிடப்பட வேண்டும். அந்தத் தேதிக்கு ஒரு வாரம் முன்பிலிருந்து காலாவதியாகப் போகும் பணத்தை வங்கிக் கணக்கில் செலுத்திப் புதுப்பணம் அதற்கு பதிலாகப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் எல்லாப் பணமும் வங்கிக் கணக்குக்குள் வந்தே ஆக வேண்டும்; கருப்புப் பணம் அறவே இல்லாமற் போகக்கூடும்.

என் உரை நடைப் படைப்புகளில் சமூகச் சிந்தனைகளும், சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் விரவியிருந்தும், என் கவிதை மட்டும் சற்றுத் தனித்தே இருந்தது.

நம் நல்வாழ்வுக்குத் தேவையான தளவாடங்களையும், சூழ்நிலைகளையும் இயற்கையிலிருந்து உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு நமதே. அந்தப் பொறுப்பைக் கவிதை எழுதித் தட்டிக் கழிக்க முடியாது. சுதந்திரம் கிடைத்த பிறகு எத்தனை ஆயிரம் கவிதைகள் சமூகக் கொடுமைகள் பற்றிய குமுறல்களைக் கொட்டித் தீர்த்திருக்கின்றன! அவற்றால், அந்தக் கொடுமைகள் ஒழிந்து விட்டனவா? இல்லையே. எதைச் சிந்தித்துச் செயல்படுத்திச் சரிசெய்ய வேண்டுமோ அதை வெறும் புலம்பல்களால் தீர்க்க முடியாது. சிந்திக்க வேண்டிய விஷயங்களில் சிந்தித்துத் தான் ஆகவேண்டும். சிந்தனை ஒதுங்கியிருக்க வேண்டிய கவிதைக் கணங்களில் சிந்திப்பதே இடர்ப்பாடாகிவிடும். இதுவே என் தன்னிலை விளக்கம்.

பாரதியிடம் ஆழ்ந்த பற்றுக் கொண்ட நான் இப்படிச் சொல்லலாமா? பாரதி வாழ்ந்த காலத்தில், மக்களை உணர்வு பூர்வமாகத் தட்டி எழுப்ப வேண்டியிருந்தது. அது அவன் வாழ்ந்த காலத்தின் கட்டாயம். இன்றைய சூழ்நிலையில், நம்மை நாமே ஆண்டுகொள்ளும் சுதந்திரம் பெற்றுவிட்ட பிறகும், சிந்தித்துத் திட்டங்கள் தீட்டிச் செயல்படாமல், இன்றும் உணர்ச்சி பொங்கப் பேசிக் கொண்டிருந்தால் பயனில்லை. வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மக்களின் உணர்ச்சிகளைப் பற்ற வைத்து, அதன்மூலம் ஆட்சியைப் பிடித்துப் பின் நாட்டையே ஊழற் காடாக்கிவிட்ட அரசியல் வாதிகளே இதற்குச் சான்று. இதற்கு மேலும் இது குறித்துச் சொல்ல ஒன்றுமில்லை.

சில சமயங்களில் நானே இந்தக் கேள்வியை மனத்துக்குள் எழுப்பியிருக்கிறேன். நம் எழுத்து என்ன சாதிக்கப் போகிறது?

அப்படியொரு நாள், 2000–ஆம் ஆண்டு, என் அலுவலக அறையில் தனியாக, நெஞ்சு நிறைய கேள்விகளுடன் அமர்ந்திருக்கிறேன். மேஜை மேல் இருந்த வெற்றுத் தாள்கள்

*காற்றில் படபடக்கின்றன. எழுதுகோலை எடுத்து ஏதாவது எழுதலாமா? ஒரு தயக்கம். அப்போது சடாரென்று வந்து கதவைத் தட்டுகிறது, ஒரு கவிதை; மனக்கதவைத்தான்!*

எழுதுகோல் என்னெதிரே ஏளனம் செய்கிறது
எழுதி எழுதிநீ என்னதான் சாதித்தாய்
பழுதுகளைச் செப்பனிடப் பாதை அமைத்தாயா
எழுதுகோல் என்னெதிரே ஏளனம் செய்கிறது

வெற்றுத்தாள் படபடத்து வெடிச்சிரிப்(பு) உதிர்க்கிறது
மற்றவர்க் காகநீ மனம்திறந்து பேசுகிறாய்
சற்றேனும் உன்மனத்தைச் சரிபார்த்துக் கொண்டாயா
வெற்றுத்தாள் படபடத்து வெடிச்சிரிப்(பு) உதிர்க்கிறது

ஏளனத்தை வெடிச்சிரிப்பில் ஏற்றிவைத்(து) ஒருகணத்தில்
காலத்தை நிறுத்துகிறேன் காகிதமும் பேனாவும்
ஓலத்தை நிறுத்தியென்முன் ஓருருவாய்க் கலந்துவிடச்
சூலுடைத்து வருகிறதே சொப்பனமாய் ஒருகவிதை

*மீண்டும், மீண்டும் சொல்கிறேன், கவிதை என் கைவாள் இல்லை; என் கேடயம் இல்லை; என் ஆயுதமோ, கருவியோ, சாதனமோ இல்லை. நானே கவிதையின் கருவி, ஆயுதம், சாதனம். கவிதையே என்னை ஆட்டி வைக்கும் பிச்சி, பேய், பெருந்தெய்வம்!*

*யாருக்கும் என் கவிதை பயன்படப் போவதில்லை என்றால் நான் ஏன் கவிதை எழுத வேண்டும்? இந்தக் கேள்விக்கான விடை, 'பயன்' என்ற சொல்லின் அர்த்தத்தைப் பொறுத்தது. 1980–ல் இப்படித்தான் ஒரு கவிதை வந்தது:*

என்கவிதை எந்நாளும் பயன்படாது
எற்றத்துக்(கு) இன்பத்துக்(கு) இடம்தராது
மின்னல் போலத் துள்ளியெழும்
அடுத்த கணமே தடுக்கிவிழும் - ஆனால்
எண்ண அலைகள் எழுப்பிவிடும்
ஏகாந்தத்தில் வளையவரும்
நின்று வரவேற்றால்
நிச்சயம் உங்கள் தளையவிழும்

நேற்று பெய்த மழைத்துளிகள் - என்
நெஞ்சக் கதவை இடிப்பதும்
காற்றில் அசையும் மலர்கள்போல்
கனவுத் தளிர்கள் துளிர்ப்பதும்
இன்றிப் பொழுதை என்றைக்கும்
இருக்க வைக்க நினைப்பதும்
நினைவுக் குள்ளே நழுவிக் கொண்டே
நிற்ப தைப்போல் நடிப்பதும் - அட
இருட்டைத் தேட வெளிச்சம் போடும்
அறிவீ னம்தான் கவிதைகளா - இதைக்
கேட்ப தற்கு வாய்திறந் தாலும்
தாளம் போடும் வார்த்தைகளா

என்கவிதை எந்நாளும் பயன்படாது - அது
எல்லைகளை ஏற்காத மாயச் சூது

"நின்று வரவேற்றால் நிச்சயம் உங்கள் தளையவிழும்"
*என்பதை ஒரு பொருட்டாக எண்ணாதவர்க்கு என் கவிதை எந்நாளும் பயன்படாது.*

*அப்படியானால், என் கவிதைகளைப் படித்துவிட்டு யாராவது முக்தி அடைந்திருக்கிறார்களா என்று கேட்டுவிடக் கூடாது.*

*கூட்டத்தில் என் கவிதையைக் கேட்பது, ரசிப்பது வேறு; அதையே தனிமையில், மனத்துக்குள் மெல்ல அசைபோட்டு, அசைபோட்டு, அதன் த்வனியாகிய வாகனத்தில் ஏறிக்கொண்டு அது கூட்டிச் செல்லும் உயரத்துக்கோ, ஆழத்துக்கோ துணிச்சலாகப் பயணித்து, அதன் அனுபவக் களத்தில் நின்று வரவேற்றால், கொஞ்சம் கொஞ்சமாக, ஆனால், நிச்சயமாகத் தளையவிழும். "ஏகாந்தத்தில் வளையவரும்" என்ற வரி புரிகிறதா? "நின்று வரவேற்றால்" என்ற வரியில் நின்று கொண்டிருக்கும் "நின்று" என்ற சொல்தான் இந்தக் கவிதையையே நிற்க வைக்கும் சொல் என்பதும் புரிகிறதா?*

*"வா வா நயினா ஒண்ணா சேந்து வாரவதிக்கே போயிடலாம்". இப்படித்தான் என் கவிதை உன்னை அழைக்கும் தோழா! வரத் தயாரா? அந்த வாராவதி, யாரும் எளிதில் வாரா பதி. மூட்டை முடிச்சுகள் வேண்டாம். தூக்கியெறி. அணிந்திருக்கும் சட்டையைக் கூடக் கழற்றியெறி. ஏன், உன் உடம்பே உனக்கு பாரமாகப் போகிறது. வள்ளுவக் கிழவனின் எச்சரிக்கைக் குரல் கேட்கிறதா?*

மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்(கு) உடம்பும் மிகை

*"அதெல்லாம் சரி நயினா. நீ என்னமோ கடவுள் நம்பிக்கை இல்லாம இருந்தே, அப்புறம் சடார்னு மாறிட்டேன்னு ஒரு வார்த்தை முன்னே சொன்னியே, அந்தக் கதையைக் கொஞ்சம் எடுத்து வுடுப்பா."*

*சொல்கிறேன். உயர்நிலைப் பள்ளியில் படித்த நாட்களில், கடவுள் நம்பிக்கை இல்லாதவனாகத்தான் இருந்தேன். எதையும் தர்க்கம் செய்துதான் ஒப்புக் கொள்வது என்ற தீர்மானத்தோடு நான் இருந்த நாட்கள் அவை. ஹிந்தி வகுப்புகளில், அந்த மொழியின் இலக்கணம் பற்றி நான் கேட்ட கேள்விகளில் திக்குமுக்காடி, எங்கள் ஹிந்தி ஆசிரியர் வகுப்பில் எல்லார் முன்னிலையிலும் எனக்குச் சாபமிட்டார்: "உனக்குத் தர்க்கமே தொழிலாகக் கடவது". அந்த நல்ல உள்ளத்தின் வாழ்த்துப் பலித்து விட்டது. நீதி மன்றங்களில் தர்க்கம் செய்வதே என் தொழிலாகிவிட்டது.*

*ஒருநாள், ஹிந்தி வகுப்பில் உட்கார்ந்து கொண்டு ஹிந்தி ஆசிரியரை ஓவியமாக வரைந்தான் என் வகுப்புத் தோழன் சீனி. சுந்தரராஜன். அதைப் பார்த்து விட்டு அவர், அப்போது தலைமை ஆசிரியராக இருந்த சகோதரர் ஆன்ஸலம் அவர்களிடம் புகார் செய்ய, அவர் சுந்தரராஜனைத் தம் அலுவலக அறைக்கு வரச்சொன்னார். அடிவிழப் போகிறது என்று பயந்து கொண்டே போன அவனிடம் அவன் வரைந்த ஓவியத்தைப் பாராட்டிச் சாக்லேட் கொடுத்து யாரிடமும் சொல்லாதே என்று சொல்லி அவனை அவர் அனுப்பி வைத்தார். அப்படிப்பட்ட ஆசிரியர்களிடம் பயின்றதால்தான் நாங்கள் சுதந்திர உணர்வோடு வளர்ந்தோம். வீடு திரும்ப மாலை ஆறு மணிக்கு மேல் ஆனால் சுந்தரராஜன் வீட்டில் அவனுக்கு உதைவிழும். அப்படிக் கட்டுப் பெட்டியாக வளர்க்கப்பட்ட அவன் பிறகு ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் போது தன் தந்தையையே எதிர்த்து வீட்டை விட்டுச் சென்றதும், பிறகு டாக்டராகி, உலக வங்கியின் நிர்வாகத்தில் உயர்ந்த பதவியில் பணியாற்றியதும், திருமணம் செய்து கொள்ளாமல் சுதந்திரமாக வாழ்ந்து வருவதும், தான் சேர்த்த பணத்தில் இருந்து தான் பயின்ற சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, விவேகானந்தா கல்லூரி, ஜிப்மர் ஆகியவற்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து சூரிய ஆற்றல் கருவிகள், அதாவது, சோலார் ப்ளாண்ட், வாங்கித் தன் தாய் தந்தையர் பெயரில் கொடை வழங்கியதையும் நினைத்துப் பார்க்கிறேன். இவற்றையெல்லாம் சாத்தியமாக்கியவர்கள், சுதந்திரமாகவும், கலையுணர்வோடும் எங்களை வளர்த்த ஆசிரியப் பெருமக்களே. தலைமையாசிரியர்*

*ப்ரதர் ஆன்ஸலம், தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன், தமிழாசிரியர் கிருஷ்ணராமானுஜம் பிள்ளை, குப்புசாமி வாத்தியார், ஹிந்தி பண்டிட் போன்ற நல்லாசிரியப் பெருமக்கள் கிடைத்தது எங்கள் பேறு. பதினோராம் வகுப்பு முடித்து நாங்கள் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் இருந்து விடைபெறும் போது நடந்த நிகழ்ச்சியில் நான் படித்த ஒரு வெண்பாவின் இறுதி வரிகள் நினைவுக்கு வருகின்றன:*

**கல்வியெனும் சீரேந்திக் கண்களிலே நீரேந்திச்**
**செல்கின்றோம் சேவிக்கின் றோம்.**

# 37

கடவுள் நம்பிக்கையைப் பற்றிக் கேட்டதற்குத் தர்க்கம் பற்றி ஒரு பேருரையாற்றிவிட்டுக் குரல் தழுதழுக்க ஒரு கவிதை சொல்லிப் போன பகுதியை முடித்து விட்டேனோ? தர்க்கத்துக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் உண்டா? உண்டு, இல்லை. இது என்னப்பா பதில்?

கவிஞர் கண்ணதாசனே பாடவில்லையா: "உண்டென்றால் அது உண்டு; இல்லை என்றால் அது இல்லை".

கவிச்சக்ரவர்த்தி கம்பர் தம் காவியத்தில் ஒரு புதுமை செய்தார். காவியத்தின் நுழைவாசலில் மட்டும் கடவுள் வாழ்த்துப் பாடி முடிக்காமல், காவியத்தின் ஒவ்வொரு காண்டத்துக்கும் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடினார். பாரதி கம்பரை ஆழ்ந்து கற்றவன். அதனால் அவனும் 'பாஞ்சாலி சபதம்' காவியம் படைத்த போது, அதன் ஒவ்வொரு சருக்கத்துக்கும் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல் வைத்தான்.

கண்ணதாசனும் கம்பரை நன்கு கற்றுத் தோய்ந்தவர். கம்பர் பாடிய ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல்தான் கண்ணதாசனின் மேற்சொன்ன வரிகளுக்கு உள்ளூக்கம் தந்திருக்க முடியும். கம்பர் பாட்டைப் பார்ப்போம்:

**ஒன்றே என்னின் ஒன்றேயாம், பல என்று உரைக்கின் பலவேயாம்**
**அன்றே என்னின் அன்றேயாம், ஆமே என்னின் ஆமேயாம்**
**இன்றே என்னின் இன்றேயாம், உளது என்று உரைக்கின் உளதேயாம்**
**நன்றே நம்பி குடி வாழ்க்கை நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா!**

எப்படியோ தர்க்கத்துக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் உண்டு என்று தர்க்க ரீதியாக நிறுவி விட்டேன். சரிதானே?

தர்க்கத்தால் கடவுள் இருப்பை நிறுவவே முடியாது என்ற தீர்மானத்தைத் தர்க்கத்தால் நிறுவியவன் ஜெர்மானிய தத்துவ மேதை, இமானுவெல் கன்ட்.

கவிச்சக்கரவர்த்தியின் முதல் கடவுள் வாழ்த்துப் பாடலின் அர்த்தப் பொதிவு, இமானுவெல் கன்டைப் படித்துணர்ந்த பிறகே, எனக்கு மெல்லப் புரியத் தொடங்கியது:

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விளையாட்டு உடையார் அவர்**
**தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே**

அதாவது, இந்த உலகத்தை ஒருவன் படைத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. அது தானாகவே இருப்பது. தானே தோன்றி, விரிந்து, வளர்ந்து கொண்டிருக்கிறது. “முதற் சிதறல்” (Big Bang) எனப்படும் ஒரு புள்ளி வெடிப்பில் சிதறுண்டு, விரிந்து கொண்டே இருக்கும் புதிர் அது. இப்படியெல்லாம் விஞ்ஞானம் பேசுகிறது. அந்தப் பகுத்தறிவுக் குழந்தையின் மழலைப் பேச்சின்படி இந்த உலகெலாம் தாமே, அதாவது, படைத்தவன், காப்பவன் என்பதாக யாரும் தேவைப்படாமல் தாமே இருக்கின்றன என்று நம்மை நினைக்க வைக்கும் வகையில் இந்த உலகெலாம் ஆக்கி, அவை தாமாகவே விரிந்து வளரச் செய்து, அவற்றை நீக்கி, இப்படியாக ஓர் ஓயாத விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் அவர் தலைவர். இதைத்தானே கம்பன் சொல்கிறான்.

அப்பொழுது இவ்வளவுதான் புரிந்து கொண்டேன். ‘தாமுளவாக்கல்’ என்பதற்குள்ள வேறு பரிமாணங்கள் பற்றியும், ‘நிலைபெறுத்தலும்’ என்ற சொற்றொடரில் ‘று” என்ற வல்லின எழுத்து உள்ளது பற்றியும், ‘அலகிலா’ எந்ற சொல்லின் அடர்ந்த கருத்துச் செறிவு பற்றியும் அப்பொழுது நான் ஆய்வு செய்து பார்க்கவில்லை. அதை இங்கே இப்போது விவரிக்க இடமில்லை. அப்போது இந்த அளவாவது கம்பரின் கடவுள் வாழ்த்துப் பாடலை எனக்குப் புரிய வைத்தவன் மேற்சொன்ன ஜெர்மானிய தத்துவ மேதைதான்.

ஒருநாள், மயிலை கபாலி கோயில் எதிரில் உள்ள ஒரு மண்டபத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். கூர்மையான பார்வையோடும், கணீரென்ற குரலோடும் தாடிக்காரர் ஒருவர் அந்தச் சொற்பொழிவில் கம்பனின் மேற்சொன்ன கடவுள்

*வாழ்த்துப் பாடல் ஒன்றைப் பற்றி ஒன்றரை மணி நேரம் பேசினார். மெய்மறந்து அமர்ந்திருந்தேன். அப்போதுதான், இமானுவெல் கன்ட் எனக்குப் புரிய வைத்ததையும் கடந்த, ஆழ்ந்த பொருள் அந்தப் பாடலில் பொதிந்திருப்பதை உணர்ந்தேன். அந்தத் தாடிக்காரர்தான், 'இலக்கியக் கலை' என்ற அருமையான நூலின் மூலம் என் இலக்கிய ரசனையை நெறிப்படுத்திய மேதை அமரர் அ.ச. ஞானசம்பந்தம். அதற்குப் பிறகு இரண்டு முறை அவர் வீட்டுக்குச் சென்று கம்பராமாயணத்திலும், பெரியபுராணத்திலும் நான் சில விளக்கங்கள் கேட்ட போது நேரம் ஒதுக்கி அவர் அன்புடன் எனக்குப் பாடம் சொன்னதை என்னால் மறக்க முடியாது.*

*இவ்வளவுக்குப் பிறகும், அனுபவ ரீதியாகக் கடவுள் நம்பிக்கை என்னைப் பற்றவில்லை.*

*நான் 1981–ல் மதுரைக்குப் போய் ரமணனைச் சந்தித்தேன். அவனிடம் 'ஸ்பரிசம்' படத்துக்கு ஒரு காதல் பாடல் தரச் சொல்லிக் கேட்டேன். அவனும் தந்தான். அந்தப் பாடலைப் பிறகு, தீபன் சக்கரவர்த்தியும், எஸ்.பி.ஷைலஜாவும் பாட நான் இசையமைத்துப் பதிவு செய்து, அந்தப் பாடல் காட்சியும் படத்தில் இடம்பெற்றது. அந்தப் பாடல் நல்ல வரவேற்பைப் பெற்றது.*

**ஆயிரம் மலர்கள் பனியில் நனைந்து**
**ஆனந்த வெளியில் முகில்கள் திரிந்து**
**பாவையென் மனதில் நுழைந்து தவழ்ந்து**
**மேனியில் ஆயிரம் மின்னலை வெள்ளம் அம்மோய்... ஸ்பரிசம்**

**மனமோ உடலோ மயக்கங்களின் வடிவோ**
**கனவில் பவனி வரும் - கண்கள்**
**கார்த்திகை தீபங்களோ**
**காலக் கதவினை மெல்லத் திறந்து**
**கடந்த பாதையை மறந்து - இந்தக்**
**கணத்தில் நாம் பிறந்து வளர்ந்து**
**தவழ்ந்தோம்... ஸ்பரிசம்**

**வைரப் படைக்கெலாம் நடுவே நாம்**
**கைகள் இணைக்கலாம் நடக்கலாம்**
**தென்றல் திகைக்கலாம் அதற்குமேல்**
**தேவர் இருக்கலாம் அவர்க்கெல்லாம்**
**பாடல் கொடுக்கலாம்**
**இந்த்ரப் பதவி கிடைக்கலாம் உடனேநாம்**

**அதையும் மறுக்கலாம்**
**பறக்கலாம் சிரிக்கலாம் வா... ஸ்பரிசம்**

*இந்தப் பாடலைப் பாடிக் காட்டிவிட்டு, ரமணன் என்னிடம் மதுரை மீனாட்சி கோவிலுக்குப் போகலாமா, நான் வருவேனா என்று கேட்டான். நான் என்ன பதில் சொன்னேன் தெரியுமா?*

*"வந்தால் போச்சு. அந்தக் கோவிலில் நல்ல சிற்பக் கலையம்சம் மிக்க வேலைப்பாடுகள் உண்டாமே. பார்த்துவிட்டு வரலாம்."*

*எப்படி இருக்கிறது என் பதில்? அதில் எவ்வளவு அலட்சியம்! ஆணவம் என்று கூடச் சொல்லலாமோ? நினைத்தாலே கூச்சத்தில் இப்பொழுது உடல் நடுங்குகிறது.*

*ஷோபனாவும், என் சகவாச தோஷத்தால் கிட்டத்தட்ட அந்த மனநிலையில் தான் இருந்தாள். ஆனால், அதில் அறிவின் ஆணவத்தைக் காட்டிலும், குழந்தைத் தனமான அறியாமையே தெரிகிறது. 1977–ல் அவள் ஓர் ஆங்கிலக் கவிதை எழுதியிருந்தாள்:*

I wish there were a God somewhere
That I can bow and plead - Then
My tears will bring the Grace of care
They'll die a death of need

Tear after tear, year after year
They've rolled and gone awaste - When
My fate evades a thought too dear
They die for me in haste

I do not ask of them to die
I know not that they come
But when they die I only sigh
"What fruitless martyrdom!"

I wish there were a God somewhere

That I can bow and plead

Then my tears would bring the Grace of care

They'll die a death of need

*அந்த ஆங்கிலப் பாடலின் முதற்சில வரிகளின் தமிழாக்கம் இதோ:*

**என்**
**விருப்பமெல்லாம் எங்கேனும் - நான்**
**வணங்கி இறைஞ்ச ஒரு கடவுள்**
**இருக்க வேண்டும் என்பதே - இருந்தால்**
**பரிவின் கருணையை வரவழைத்துப்**
**பொழியும் கண்ணீர்த் துளிகளெல்லாம் - ஓர்**
**அவசியத்தாலே மறைந்துவிடும் - அந்த**
**மரணத்துக்கொரு பயனிருக்கும்**

*பிறகு கடவுள் நம்பிக்கை எப்படி என் நெஞ்சில் நுழைந்தது? அந்தக் கேள்விக்கு அடுத்த சந்திப்பில் பதில் சொல்கிறேன்.*

# 38

*கடவுள் நம்பிக்கை எப்படி என் நெஞ்சில் நுழைந்தது என்றா கேட்டேன்? எனக்கு 6 அல்லது 7 வயது இருக்கும் போதே, தினமும் கந்தர் சஷ்டிக் கவசம் சொன்னது நினைவு வந்தது. நான் எழுதிய முதல் கவிதையே "அகத்திய முனிவரின் அகத்தினில் உதித்தவள்" என்றுதானே தொடங்கியது? அதை அடுத்து நான் எழுதிய கவிதை, "வேலவனின் வேலினிலே விளங்கி நிற்கும் செந்தமிழே" என்றுதான் அமைந்தது. அப்படியென்றால், அப்பொழுதே என் நெஞ்சில் கடவுள் நம்பிக்கை வேரூன்றி யிருந்ததே! நடுவில் நான் சிறிது தடுமாறி விட்டேனோ?*

*இப்பொழுது நினைத்துப் பார்த்தால், அதன் காரணம் சற்று விளங்குகிறது. தமிழ் சரியாக எழுதத் தெரியாத காரணத்தால் வகுப்பில் நேர்ந்த அவமானம், என்னைச் சில மாதங்களுக்குள் தமிழில் கவிதை எழுதும் அளவுக்கு வளர்த்துவிட்ட கதையை முன்பே சொல்லி விட்டேன். இதனால், தமிழ், தமிழ் என்று ஒரு தாகம் என்னுள் ஊற்றெடுத்தது. அதே சமயத்தில் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளில் மிகவும் ஈடுபட்டேன். அந்த காலக்கட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர் கிளர்ச்சி எழுந்த அரசியல் வரலாறு நமக்குத் தெரிந்ததுதான். அந்தக் கிளர்ச்சியின் போது அதில் ஈடுபட என்னை ஊக்குவித்தவர் என் தமிழாசான் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன். வகுப்பில் அவர் ஆற்றிய வீர உரையால் தூண்டப்பட்டு, எங்கள் பள்ளி மாணவர்களைத் திரட்டிக் கொண்டு இந்தித் திணிப்பை எதிர்த்து ஊர்வலம் போனதும், கைவிரலைக் கீறி ரத்தக் கையெழுத்திட்டதும் நினைவுக்கு வருகிறது. அந்த ஈடுபாட்டின் காரணமாக, மொழிப்பற்றின் காரணமாக, அந்தப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய அரசியல் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டேன். 1967–ஆம் ஆண்டுத் தேர்தலில் அண்ணாவின்*

தலைமையில் ஆட்சி அமைந்ததும் பெரிதும் மகிழ்ந்தேன். பாவேந்தர் கவிதைகளும், பகுத்தறிவுப் பாசறை என்று பறைசாற்றிக் கொண்ட அரசியல் இயக்கமும் என் கடவுள் நம்பிக்கையைப் பின்னுக்குத் தள்ளி மறைத்து விட்டன என்பதே சரி. அத்துடன், எதையும் தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்க்கும் தீவிரமும் சேர்ந்து கொண்டது. ஆனால், நான் எப்பொழுதும், கடவுள் மறுப்பு என்ற நிலைப்பாட்டை எடுத்ததில்லை. கடவுள் உண்டு என்று நிறுவ முடியாத நிலையில், எந்த அனுபவமும் எனக்கு அதற்கு உதவாத நிலையில், கடவுள் உண்டா இல்லையா என்று எனக்குத் தெரியாது, அப்படியே இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும் என்ற நினைப்புடன் சில காலம் இருந்து விட்டேன்.

இந்த காலக்கட்டத்தில்தான், சிந்தனைக் கோட்டத்தில் மாஸ் பிரேயர் என்ற கூட்டு வழிபாடு நடத்தத் தொடங்கியிருந்தோம். அதில் பக்திப் பாடல்கள் பாடுவோம். தெய்வம் உண்டா, இல்லையா என்று தெரியாது என்று சொல்லிக் கொண்டே நானும் அந்தக் கூட்டுப் பிரார்த்தனையில் தவறாமல் கலந்து கொண்டு, மிகவும் சிரத்தையோடு மற்றவர்கள் பாடல்களைப் பாடுவதோடு நானும் பக்திப் பாடல்கள் எழுதிப் பாடிக் கொண்டிருந்தேன். அது ஒரு வினோதமான நிலை.

அதன் பிறகு நான் தத்துவப் பாடம் படிக்கத் தொடங்கிய கதையை முன்பே சொல்லி விட்டேன். தத்துவ மேதைகளின் தர்க்கமும், வாதங்களும் என்னை மிகுந்த குழப்பத்தில் ஆழ்த்தின. தெளிவான விடை கிட்டவில்லை. ஒருபுறம் இம்மானுவெல் கன்டின் வாதம், மறுபுறம் சங்கரரின் அத்வைதக் கொள்கை! நடுவில், ஏனென்றே தெரியாமல் என்னை ஈர்த்த விவேகானந்தரின் எழுச்சியூட்டும் எழுத்துகள்! ஒரே போராட்டம்தான்! எல்லாவற்றையும் விட, மஹாகவி பாரதியாரின் அதிதீவிரமான பக்திப் பாடல்களும், சக்திப் பாடல்களும் எனக்குள் ஏற்படுத்திய கிளர்ச்சி!

அப்போதுதான், என் வாழ்வில் சில சம்பவங்கள் நிகழ்ந்தன.

ஷோபனாவின் தம்பி, அதாவது, அவளுடைய சித்தியின் மகன், அவளுடனேயே வளர்ந்தவன், 1981–ஆம் ஆண்டு திடீரென்று தன் வாழ்வை முடித்துக் கொண்டான். இன்றளவும் அதன் காரணம் தெரியவில்லை. இதனால், ஷோபனா மிகவும் ஆழ்ந்த துயரத்தில் இருந்தாள். துயரம் ஒருபுறம் இருக்க, ஏன் இப்படி நடந்தது, என்ன காரணம் என்ற கேள்விகள் அவளை மிகவும் பாதித்தன. விடை கிடைக்காதா, இறந்த தன் தம்பிக்கு என்ன ஆயிற்று, யாராவது வந்து வெளிச்சம் காட்ட மாட்டார்களா

என்று அவள் குழப்பத்திலும், விரக்தியிலும் மூழ்கியிருந்த போது, தொலைக்காட்சியில் விளையாட்டுத் துறை வர்ணனையாளராக இருந்த முரளி என்பவர் ஷோபனாவின் நிலையை அறிந்து, தனக்குத் தெரிந்த ஒருவரை மனோவசிய நிபுணர் என்று சொல்லி அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்தான் டாக்டர் நித்யானந்தம். அறிமுகம் ஆன சில நாட்களிலேயே அவரைத் தன் ஆன்மிக குருவாக ஷோபனா ஏற்றுக் கொண்டதோடு என்னையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருந்த எனக்கு உடனே ஆன்மிக நாட்டம் ஏற்படவில்லை. இருந்தாலும், ஷோபனாவின் உள்ளூக்கத்தில் எனக்கு மிகவும் நம்பிக்கை இருந்தது. அவள் சொன்ன செய்திகளை அலட்சியம் செய்யாமல் கேட்டு உள்வாங்கிக் கொண்டேன். ஷோபனா டாக்டரிடம் தீட்சை பெற்று விட்டதை என்னிடம் சொன்னாள். அவளுடன் சேர்ந்து தொலைக்காட்சி நிலையத்தில் பணி செய்து கொண்டிருந்த எழுத்தாளர் சு.சமுத்திரம், அனந்த பத்மனாபன் இருவருக்கும் டாக்டர் தீட்சை வழங்கியதை அறிந்தேன். எனக்கும் அப்படி ஓர் அனுபவம் நேரிடாதா என்ற எண்ணம் ஏற்பட்டது.

அன்று மாலையே, எப்பொழுதும் போல், வீட்டு மொட்டை மாடியில் சென்று காற்றாட அமர்ந்தேன். அப்படித்தான், காற்று வாங்கப் போய் நிறைய கவிதைகள் அவ்வப்போது வாங்கி வந்திருக்கிறேன். அன்று எப்பொழுதும் போல் அமர்ந்திருந்த என் கண்கள் தாமாக மூடிக் கொண்டன. ஏதோ ஒரு தியான நிலைக்கு யாரோ என்னை அழைத்துச் செல்வது போல் உணர்ந்தேன். சிறிது நேரத்தில், இதெல்லாம் வெறும் பிரமை என்று ஒதுக்கி விட்டுக் கண்களைத் திறந்த போதுதான் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அதைச் சொல்வதற்கு முன், அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் நடந்த இரண்டு சம்பவங்களைச் சொல்லியாக வேண்டும்.

என் அண்ணன், அதாவது, என் சித்தியின் மகன், ஸ்ரீதர் மிகவும் தெய்வ பக்தி உள்ளவன். அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆண்டுதோறும் சபரி மலைக்குச் சென்று கொண்டிருந்தான். நான் அப்போது சபரிமலைக்குச் சென்றதில்லை. என் குடும்பத்திலேயே, என் உடன்பிறந்த சகோதரர்களைக் காட்டிலும் ஸ்ரீதரிடம் எனக்கு நெருக்கமும் பாசமும் அதிகம். 1983–ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், ஒருநாள் அவன் என்னை மயிலையில் உள்ள ஷீர்டி சாயிபாபா கோவிலுக்குப் போகலாமே என்று அழைத்தான். பாபாவைப் பற்றிப் படித்திருந்தேன். அவருடைய எளிமைத் தோற்றம் என்னை ஓரளவு கவர்ந்திருந்தது. சரி போகலாம் என்று சொல்லி அவனுடன் சாயிபாபா கோவிலுக்குச் சென்றேன். அங்கே நான் எதுவும் பிரார்த்தனை செய்யவில்லை. வெளியே வந்து தெருவில்

*நடந்து கொண்டிருந்த போது, ஸ்ரீதர் என்னிடம் சாயிபாபா பற்றி ஒரு பாடல் வேண்டும் என்று கேட்டான். பார்க்கலாம் என்றேன். அத்துடன் விடாமல், "சங்கம்" என்ற ஹிந்திப் படத்தில் முகேஷ் பாடிய "தோஸ்த் தோஸ்த் நா ரஹா" என்ற பாடல் மெட்டிலேயே பாபா பற்றிய பாடல் அமைய வேண்டும் என்ற ஒரு விசித்திரமான விண்ணப்பத்தையும் வைத்தான். அவன் சொல்லி முடிக்கும் முன்பே, நான் மெல்லப் பாடத் தொடங்கி விட்டேன்: "சாயிராம் சாயிராம்" என்று, அதுவும் அவன் கேட்டுக் கொண்ட மெட்டைத் தழுவியே:*

சாயி ராம் சாயி ராம் சாயி ராம் சாயி ராம்
தாயின் கருணை சாயி ராம் - ஒளி
தவழும் வதனம் சாயி ராம்
நேய உணர்வு சாயி ராம் - என்றும்
நிலைக்கும் உறவு சாயி ராம்
தூய மனமுன் ஆலயம்
தீப ஒளியுன் ஆசனம்
தேகம் எடுக்கும் ஆணவம் - அதைத்
தடுக்கும் உன் அருட்கரம்

நீரும் நெருப்பும் சேருமோ - உன்
நிழலில் துயரம் தோன்றுமோ - உன்
பார்வை அழைக்கும் போது - மனம்
பாதை மாறிப் போகுமோ

சாயி ராம் சாயி ராம்
சாயி ராம் சாயி ராம்

*இந்தப் பாடலைப் பாடும் போது என் கண்களிலிருந்து என்னை அறியாமல் கண்ணீர் கசிவதை உணர்ந்தேன். அதில் உள்ள சொற்கள் மெட்டுக்காகக் கோக்கப்பட்ட சொற்கள் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.*

*அடுத்த நாள், மீண்டும் ஸ்ரீதரும் நானும் சாயி பாபா கோவிலுக்குச் சென்றோம். திரும்பி நடந்து வரும்போது, ஸ்ரீதர் தன்னுடன் சபரி மலைக்கு வர முடியுமா என்று கேட்டான். யோசிக்கவே இல்லை. சரியென்று சொல்லி விட்டேன். நடந்து வரும் போதே, இன்னொரு பாடலையும் பாடினேன். ஆபோகி ராகத்தில் அமைந்த அந்தப் பாடலின் பல்லவி, பம்பை நதியில் விளக்குகள் மிதந்து செல்லும் காட்சியைப் பற்றி இருந்தது. சபரி மலைக்கு நான் சென்றதில்லை; பம்பை நதியைப் பார்த்ததில்லை;*

*அதில் பக்தர்கள் விளக்குகள் மிதக்க விடும் செய்தியும் எனக்குத் தெரியாது. எப்படியோ பாடல் வந்தது:*

**பம்பையிலே செல்லும் தீபங்களே - எங்கள்**
**நம்பிக்கையின் ஒளி ஓடங்களே**
**பம்பையிலே செல்லும் தீபங்களே**

**செந்தழல் போல்மேனி சீறும் புலியேறிக்**
**கைகளில் வில்லேந்திக் காவல்செய் யும்தீரம்**
**பந்தள ராஜன் மைந்தனைக் காண**
**வந்தவர் பிணிதீர்க்கும் புண்ய நதி தீர்த்தம்**
**பம்பையிலே செல்லும் தீபங்களே**

**நெய்யபிஷேகத்தில் நெஞ்சுருகாதா**
**கற்பூர தீபத்தில் கண்பனிக்காதா**
**ஐய்யனைக் காணும் தருணம் வராதா**
**ஆவலைத் தீர்த்து வைக்கும் ஆனந்த க்ஷேத்ரம்**

**பம்பையிலே செல்லும் தீபங்களே - எங்கள்**
**நம்பிக்கையின் ஒளி ஓடங்களே**
**பம்பையிலே செல்லும் தீபங்களே**

*அந்தப் பாடல் வந்த அடுத்த நாள்தான், டாக்டர் நித்யானந்தத்தின் ஆன்மிகப் பாதையில் சேரலாமோ என்ற நினப்பு எனக்கு ஏற்பட்டது. அன்றுதான், நான் மொட்டை மாடியில் சென்று அமர்ந்து கொண்டேன். த்யான நிலைக்கு யாரோ என்னை அழைத்துச் செல்வது போன்ற உணர்வை பிரமை என்று அலட்சியம் செய்துவிட்டுக் கண்ணைத் திறந்தால், அந்த மொட்டை மாடியின் சுவரின் மேல், '4' என்ற வடிவில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு, ஒரு கிழவர் அமர்ந்திருந்தார். கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தால் அவர் அங்கே இல்லை. மாலை மயக்கமோ? திரும்பினேன், பின்னால் சுவரில் அதே கிழவர், வெள்ளைத் தாடி! மீண்டும் மறைந்தார். திரும்பினால், முன்னால் சுவர் மேல் மீண்டும் அவர், சாயி பாபாவேதான்! எனக்குச் சற்று பயமாக இருந்தது. ஆனால் உற்றுப் பார்த்தேன். அவர் முகம் மட்டும் கருப்பாக, டாக்டர் நித்யானந்தத்தின் முகச்சாயலில் தெரிந்தது. விரைந்து மாடியில் இருந்து இறங்கி வந்து விட்டேன். அது நடந்த சில நாட்களிலேயே நானும் டாக்டரின் ஆன்மிகப் பாதையில் சேர்ந்து விட்டேன்.*

*எப்படியோ, கடவுள் பற்று இல்லாமல் இருந்த நான், சபரி மலைக்கு வருவதாக ஸ்ரீதரிடம் வாக்களித்ததும், டாக்டரின்*

ஆன்மிகப் பாதையில் சேரும் முடிவுக்கு வந்ததும் ஒரே சமயத்தில் நடந்துவிட்டன. என் வாழ்வில் ஓர் அதிசயமான திருப்புமுனையாக அந்த நிகழ்ச்சிகள் அமைந்தன! அதன்பின் காற்றில் அடித்துச் செல்லப்படும் இலவம் பஞ்சு போல நான் வேகமாகப் பறந்து கொண்டிருந்தேன்.

# 39

போன பகுதியில் சொன்னேனே, ஷோபனாவின் தம்பி தன் வாழ்வைத் தானே முடித்துக் கொண்டான் என்று, அந்தச் சம்பவம் நடப்பதற்கு முதல்நாள், 1981–ஆம் ஆண்டு ஜூன் மாதம், என் மனத்தில் ஒரு கவிதை உதித்தது. அந்தக் கவிதைக்கும் அந்தத் துயர நிகழ்ச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், உதித்த போதே, ஏனோ, அந்தக் கவிதை எனக்கு ஒரு நடுக்கம் தந்தது. அதைத் தாளில் எழுதவில்லை. மறுநாள், மாலை அதை ஒரு தாளில் எழுதத் தொடங்கினேன். எழுதி முடிக்கும் போதே வாசலில் ஓர் அழுகுரல் கேட்டு ஓடினேன். ஷோபனாவின் சித்தி மகள் ப்ரீத்தி அழுது கொண்டே தன்னுடைய அண்ணன் தன்வாழ்வைத் தானே முடித்துக் கொண்டுவிட்டான் என்ற துயரச் செய்தியைச் சொல்லி என் தோள் மேல் சாய்ந்து கொண்டு கதறினாள். இதை இங்கே குறிப்பிடக் காரணம் உண்டு. அன்று நான் எழுதி வைத்த கவிதையைப் பிறகு வெகு நாட்கள் பிரித்துப் படித்துப் பார்க்கத் துணிவின்றி வைத்து விட்டேன். போன பகுதியில் சொன்னதுபோல், 1983–ஆம் ஆண்டு சாயி பாபா கோயில்; சபரிமலைக்கு வர ஒப்புதல்; டாக்டர் நித்யானந்தம் காட்டிய ஆன்மிகப் பாதை; இப்படி ஒரே சமயத்தில் என் மனத்தில் ஒரு மாற்றம் உருவான பிறகே, ஒருநாள் அந்தக் கவிதையை எடுத்துத் துணிந்து படித்துப் பார்த்தேன். வியப்பாக இருந்தது. ஆன்மிக நாட்டம் என்னுடைய மனத்தின் மேல்தளத்தில முளைவிடும் முன்பே, ஏதோ ஓர் இனம் தெரியாத, உடல் கடந்த உன்மத்தம், ஓர் உள்ளூளைச்சல், ஓர் ஆழ்மன வேதனை என்னை உலுக்கி இருக்கிறது என்பதை அந்தப் பாடல் எனக்கு உணர்த்தியது. தெய்வ நம்பிக்கை இல்லை என்று நான் கற்பித்துக் கொண்டது கூடச் சரியில்லையோ?

சரி, அந்தக் கவிதையை இப்போது சொல்கிறேனே.

உள்ளே
இருந்து கொண்டே சிரிப்ப தென்றால்
இலக்கியம் என்பார் - என்னைப்
பிளந்து கொண்டு வெளியே வந்தால்
பிச்சி என்பாரோ
சொற்களுக்குள் அடைபடாதே சூலமேந்திப் புறப்படு

அந்தி வானச் செந்தழல்போல் விழிசிவந்திடு
அர்த்த ஜாமக் காரிருள்போல் குழல்விரித்திடு
நீலம்பாய்ந்த அலைகடல்போல் வடிவெடுத்திடு
பிச்சியென்றும் பேதையென்றும் பேரெடுத்திடு
சொற்களுக்குள் அடைபடாதே சூலமேந்திப் புறப்படு

நிச்சயத்தை நிர்ணயத்தை நீயுடைத்திடு
அச்சமென்ற திரைவிலக்கி ஆர்ப்பரித்திடு
உச்சிவெய்யில் துச்சமென்று புன்னகைத்திடு
பிச்சியென்றும் பேதையென்றும் பேரெடுத்திடு
சொற்களுக்குள் அடைபடாதே சூலமேந்திப் புறப்படு

மௌனமென்ற கானகத்தில் மூண்டுவிட்ட தீ
மூங்கிலோடு மோதவந்த காற்றுமோகி னீ
மொழிச்சதங்கை சிதறிப்போக நடனமாடு நீ
விழியெதற்கு மொழியெதற்குன் உலகமே தனி
உன்னைப்
ப்ரதிபலிக்கக் காத்திருக்கும் சிறிய பனித்துளி
நானுன்னைப்
ப்ரதிபலிக்கக் காத்திருக்கும் சிறிய பனித்துளி

*இப்பொழுதும் ஏனோ இந்தக் கவிதையைச் சொல்லும் போதும், எண்ணும் போதும் உள்ளுக்குள் ஒரு நடுக்கம் வருகிறது. எல்லாவற்றுக்கும் நமக்குக் காரண, காரியம் தெரிந்து விடுகிறதா என்ன?*

*அப்படியானால், ஆன்மிகத் தாகம் என் நெஞ்சின் ஆழத்தில் எப்பொழுதுமே பொதிந்திருந்ததோ? அந்தக் கவிதை வருவதற்கு வெகு நாட்களுக்கு முன்பே வந்த இன்னொரு கவிதை நினைவில் நிழலாடுகிறது. ஆம், ஆன்மிக நாட்டமே எப்பொழுதும் என் ஆழ்மனத்தின் அடிநாதமாக இருந்திருக்கிறது என்பதை அந்தப் பழைய கவிதை உறுதி செய்கிறது.*

*அந்தக் கவிதை உதித்தது 1978–ஆம் ஆண்டு மார்ச் மாதம். தொலைக்காட்சியில், நந்தனாராகத் தண்டபாணி தேசிகர் தோன்றி, "ஐய்யே மெத்தக் கடினம்" என்று பாடியதைப் பார்த்துக் கேட்டு ரசித்த அன்று இரவே அக்கவிதை உதித்தது. அதை இப்பொழுது நீங்கள் படிக்கத் தருகிறேன்.*

நந்தன் வந்துவிட்டேன் - இன்னும்
நந்தி விலகவில்லை
அனுபவத்தின் முன்னே - எந்தன்
அறிவு பெருந்தொல்லை

உலக வீதியில் ஓடியாடியே
ஓய்ந்து போனதென் மனம் - இன்று
உண்மை வீதியில் உனது வாசலில்
உருகி நிற்பதென் தவம்
தெய்வம் என்றுநான் தேடவில்லை - வெறும்
தீபம் ஒன்றுதான் தேடி நிற்கிறேன்
நந்தன் வந்துவிட்டேன் - இன்னும்
நந்தி விலகவில்லை

கண்கள் கூப்பிக் காத்து நிற்கிறேன்
கவிதையாகவே அழுகிறேன்
எண்ணம் என்பதே ஏக்கமாக - நான்
இருப்ப தென்பதே மறந்து போக
நந்தன் வந்துவிட்டேன் - இன்னும்
நந்தி விலகவில்லை

உன்
நகலை மட்டும் ஏந்திக் கொண்டு
மனிதர் கூட்டம் போவதுண்டு
நிழலும் தெரியவில்லை - என்
நினைவு தெளியவில்லை
தேகம் என்பதே தேய்ந்து போக - ஒரு
தாகம் என்பதே வடிவம் ஆக
நந்தன் வந்துவிட்டேன் - இன்னும்
நந்தி விலகவில்லை

கண்கள் பார்ப்பதாம் - செவிப்
பறையர் கேட்பதாம்

ஜாதி பேதங்கள் செய்கிறார் - இவை
யாவும் ஒன்றிடும் ஞான மன்றில் நீ
ஒளிந்திருப்பதை அறிந்துதான்
ஐந்து வாசல் தாண்டி - நானும்
ஆர்வத்தோடு வந்தேன் -உன்
ஞான வாசல் முன்னே - த்வஜ
ஸ்தம்ப மாகிவிட்டேன்

இந்தப் பாடல்கள் சொல்லும் கதையென்ன? அந்தக் காலக் கட்டத்தில் எனக்குள் ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த கதையைத்தான் இவை சொல்கின்றன. என்ன போராட்டம்? யாருக்கும் யாருக்கும் போராட்டம்?

கடவுள், தெய்வம், உயிர்நிலையாகிய ஆன்மா! இவற்றைப் பற்றிய போராட்டம். அறிவுக்கும் ஆழ்மனத்துக்கும் இடையில் போராட்டம்! நம்ம புத்தி சிகாமணிக்கும், மனோன்மணிக்கும் நடுவில் நடந்த கணவன்–மனைவி பூசல்தான் அது என்று புரிந்து கொண்டேன். இந்தப் பூசலைத்தான் டாக்டர் நித்யானந்தம் மூலமாக ஷிர்டி சாயிபாபா தீர்த்து வைத்தாரோ? இந்தக் கதையைத்தான் இப்படித் திக்கித் திணறிச் சொல்ல முற்பட்டேனோ? சொல்லி விட்டேனா? புரிந்து விட்டதா?

ஆன்மிக நாட்டம் ஏற்பட்டதற்குச் சில மாதங்களுக்கு முன், 1982, ஆகஸ்ட் மாதம், ஒருவழியாக, 'ஸ்பரிசம்' திரைப்படம் வெளியானது. அது எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. அது நல்ல முறையில், நல்ல திரையரங்கங்களில் வெளியிடப்படாததும், மலையாள டப்பிங் படமோ என்று எண்ண வைத்த தலைப்புமே அதன் தோல்விக்குப் பெரிதும் காரணமாயின. ஆனாலும் அதன் பாடல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன. எனக்கு ஒரு குறை, அதில் இடம் பெற்ற ஓர் அருமையான பாடல் அதிகம் கவனிக்கப் படாமல் போனதே. ஆம், பெற்றோர்களின் கண்டிப்பால் கதாநாயகனைக் கதாநாயகி சந்திக்க முடியாமல் தனிமையில், வீட்டுச் சிறையில் வாடிய துயரத்தை, எனக்குத் தெரிந்த வரை இவ்வளவு அழகாகவும், சுருக்கமாகவும் வேறு எந்தப் பாட்டின் பல்லவியும் சொல்லி யிருக்க முடியாது.

**உறக்கமிலா இரவுகள் இரக்கமிலா உறவுகள்**

நச்சென்று, பொட்டில் தெறித்தாற் போல் இருக்கிறதா? இது பொன்னெழுத்தில் பொறிக்கப் பட வேண்டிய பல்லவி என்பதைக் காவிரி மைந்தன் போன்ற திரைப்படப்பாடல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். நான் கேட்டவுடன் அந்த அருமையான பாடலை எழுதித் தந்தவர் நண்பர் வ.வே.சு.தான்.

படம் வெற்றி பெறாத ஏமாற்றத்திலிருந்தும், அதனால் ஏற்பட்ட பண நெருக்கடியிலிருந்தும் நான் சில மாதங்களிலேயே சற்று விடுபட்டேன். அப்படி விடுபட்டு, மீண்டும் அமைதி திரும்பிய நிலையில்தான் ஆன்ம விடுதலை நோக்கி என் மனம் திரும்பியது என்று கூடச் சொல்லலாம்.

நான் ஆன்மிகப் பாதைக்கு ஆற்றுப் படுத்தப் பட்டதற்கு இன்னொரு திசையிலிருந்து நான் பெற்ற தெளிவும் உதவியது. மேற்கத்திய நாடுகளில் தோன்றிய தத்துவ மேதைகளில், ரெனே டேகார்ட், இம்மானுவெல் கன்ட் ஆகியோருக்குப் பிறகு என்னை மிகவும் பாதித்த தத்துவ மேதைகளில், சோரென் கீர்க்ககார்ட் என்ற டேனிஷ் சிந்தனையாளரும், ஹென்ரி பெர்க்ஸன் என்ற ஃப்ரெஞ்ச் தத்துவ மேதையும், விட்ஜன்ஸ்டைன் என்ற ஆஸ்ட்ரிய சிந்தனையாளரும் குறிப்பிடத் தக்கவர்கள். அதே போல் இந்தியச் சிந்தனையாளர்களில், ‘மாண்டூக்ய காரிகா’ என்ற பெயரில், மிகச்சிறிய, ஆனால் மிக ஆழமான, நூலின் ஆசிரியர் கௌடபாதர் என்னை மிகவும் பாதித்தார். அவர், ஆதிசங்கரரின் குருநாதர் என்று சுட்டப்படும் கோவிந்த பாதரின் குருநாதர் என்று சொல்லப்படுகிறது. இவர்களுடைய சிந்தனைகளை 1975–78 ஆண்டுகளில், விவேகானந்தா கல்லூரியில், தத்துவத் துறையில், முதுகலை, எம்.ஃபில். வகுப்புகளில் பயின்ற போது படித்து ஓரளவு புரிந்து கொண்டேன். இதனால் ஏற்பட்ட தெளிவும் என் மனமாற்றத்துக்குப் பெரிதும் உதவியது. அவர்களுடைய வாதங்களையும், சிந்தனைகளையும் எடுத்துச் சொல்ல இது இடமில்லை. ஆனால் அவர்கள் மூலம் நான் பெற்ற தெளிவுகளையும், டாக்டர் நித்யானந்தம் அவர்களால் ஊக்குவிக்கப் பட்ட மெய்யனுபவங்களையும், கொஞ்சமேனும் இங்குக் கோடிட்டுக் காட்டாவிட்டால், உங்களுடன் பகிர்ந்து கொள்ளாவிட்டால், என் கவிதை வரலாறு முழுமையடையாது. ஆனால் அவற்றையெல்லாம் ஒரே மூச்சில் சொல்லிவிட முடியாது. அடுத்துவரும் பகுதிகளில், அந்தத் தெளிவுகளும் அனுபவங்களும் எப்படி என் கவிதை வாழ்க்கையுடன் சம்பந்தப் பட்டு, அதை நெறிப்படுத்தின என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்கிறேன்.

# 40

ஆன்மிகப் பாதையில் நான் அடியெடுத்து வைத்த பிறகு ஒருநாள் மாலை மீண்டும் வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்திருந்தேன். வெளிச்சம் மறைந்து, இருட்டு மெல்லத் தலைகாட்டத் தொடங்கியிருந்தது. வானத்தில் அலையலையாய் மேகச் சுருள்கள்; நடுவே பிறை நிலவு. திடீரென்று ஒரு மின்னல் மின்னி மூன்றாகக் கிழித்துச் சென்றது, வானத் திரையை! என் மனம் சற்றுப் பின்நோக்கிச் சென்றது. 1983–ஆம் ஆண்டு நான் குடும்பத்தோடு கஷ்மீர் சென்றிருந்த போது ...!

மன்னிக்க வேண்டும், அது கஷ்மீர்தான் என்பதை நிறுவுவதற்காகத் தொலைக்காட்சியில் ஷோபனா மிகவும் போராட வேண்டியிருந்தது. தஞ்சாவூர் என்ற தமிழ்ச்சொல்லைச் சரியாக உச்சரிக்க முடியாதவர்கள் அதைத் 'டேஞ்சூர்' என்று மாற்றியதை எண்ணி நான் வருந்தியது போலவே, கஷ்மீர் என்ற பெயரைக் 'கேஷ்மீர்' என்று சொல்லக் கேட்டும் வருந்தினேன். சரி, கதைக்கு வருவோம்.

நாங்கள் கஷ்மீர் சென்று ஒரு படகு வீட்டிலேயே நாலைந்து நாட்கள் தங்கியதையும், 7 வயதும், 3 வயதும் ஆகியிருந்த என் மகள் மதுமதியும், ஐஸ்வர்யாவும் அங்கே ரசம் சாதம் வேண்டுமென்று கேட்டதும், அந்தப் படகு வீட்டை நடத்தி வந்த இஸ்லாமியர் வீட்டுச் சமையலறைக்குள் சென்று, என் வளர்ப்பு அன்னை அலங்காரவல்லி என்ற அலாப்பாட்டி, பர்தா அணிந்த மகளிர் புடைசூழத் தானே ரசமும், சாதமும் பண்ணி எடுத்து வந்து என் பெண்களுக்கு ஊட்டி விட்ட கதையையும் நான் இப்பொழுது நீட்டிச் சொல்லப் போவதில்லை. அதேபோல், கஷ்மீர் சென்றதும் அந்த மாநில மக்கள் எங்களை இந்தியர்களா என்று கேட்ட வருத்தத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போவதில்லை.

ஆனால், கஷ்மீர் பள்ளத்தாக்கிற்குள் எங்கள் பேருந்து நுழைந்த போது, பாதித் தூக்கத்தில் இருந்த என்னைத் தட்டியெழுப்பி ஷோபனா காட்டிய காட்சியை மட்டும் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும். நெடிதுயர்ந்த பனிமலை, உடலெங்கும் வெண்ணீறு அணிந்து கொண்டு சிவபெருமானே தவக்கோலத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறாரோ என்பது போல் காட்சி தந்த மலைப்பு நீங்க வெகுநேரம் ஆயிற்று. வியப்பதா, கைகுவித்து வணங்குவதா என்ற குழப்பம்! ஆனால் அப்போது நான் இன்னும் மேலே சொன்னவாறு ஆன்மிகப் பாதைக்கு வரவில்லை. பிரமிப்பூட்டிய அந்தக் காட்சி என் மனத்தைக் கொஞ்ச நேரம் சலனமற்றதாகச் செய்ததனால், கவிதை எதுவும் வரவில்லை. ‘புதிய வானம் புதிய பூமி’ என்று பாடியாடத் தோன்றவில்லை.

முதலில் சொன்னேனே, நான் ஆன்மிகப் பாதையில் அடியெடுத்து வைத்த பிறகு மொட்டை மாடியில் சுருள் மேகங்கள், அவற்றுக்கிடையே நிலாப்பிறை, மின்னல் வெட்டு, மூன்றாய்க் கிழிந்த வானத்திரை என்றெல்லாம்! அந்தக் காட்சியிலிருந்து நான் மீண்டும் கஷ்மீருக்கு மானசீகமாகச் சென்றுவிட்டேன். கஷ்மீரில் பேருந்து நுழைந்த போது ஷோபனா என்னை எழுப்பிக் காணச் செய்த காட்சியை, மலைத்தொடரே சிவனோ என்று மலைக்க வைத்த அனுபவத்தை மீண்டும் நினைத்துக் கொண்டேன். அப்போது நெஞ்சின் ஆழத்தில் ஒரு கவிதை உயிர்த்துக் கொண்டு புரளும் சப்தம் கேட்டது. அதற்குள், யாரோ வந்து என் த்யானநிலையைக் கலைத்ததால், நான் வாய்ப்பேச்சில் ஈடுபட வேண்டியதாயிற்று. பிறகு உறங்கி விட்டேன். மறுநாள் காலையில் கவிதையுடன்தான் கண்விழித்தேன். மாலையும், இரவும், காலையும் கலந்த காட்சியாய் அதில், ஆகாசமாகவே விரிந்தபடி, அதோ அந்தப் பரமசிவம்...!

கவிதையைப் படிப்பதோடு, என் இசையில் எஸ்.பி.பாலசுப்ரமணியம் அந்தக் கவிதையைப் பாடியுள்ளதையும் யூட்யூப்பில் கேட்கலாமே!

**நிலவை அணிந்து கொண்டு - சடை**
**புரளப் புரளவிழி நிறைந்தது வானம்**
**மின்னல் த்ரிசூலம் - எட்டுத்**
**திசையும் அதிரநகை குலுங்கிய தேகம்**
**புலரும் போது சாம்பல் - பனிப்**
**புகையப் புகைய மெல்லப் படர்ந்தது வெள்ளி**
**காயழல் ஏந்தும் கைகள் - ஒளிக்**
**கதிர்கள் விரியுமொரு கனக விதானம்**

ஆகாசம் சிவம் - உயிர்
ஆதாரம் சிவம்
தேஜோ மயம் சிவம்
இருள் ஒளி எனும் பகை அறும் நிழல் சிவம்

புயல் வடிவம் பூத கணங்கள்
கோள்களாய் விண் மீன்களாய்
சுழல் நடனம்
அண்டமெல்லாம் ஜனிக்கும் மஹாசூன்யம்
ஆனந்தமயம் மஹாதேவம்
ஆனந்தமயம் மஹாதேவம்

ஆகாசம் சிவம் - உயிர்
ஆதாரம் சிவம்
தேஜோ மயம் சிவம்
இருள் ஒளி எனும் பகை அறும் நிழல் சிவம்

ப்ரணவ ஸ்வரூபம் - கங்கை
ப்ரவாகமாய் அருள்மழை பொழியும் ஜடாதரம்
ப்ரளையமாகி உலகைப் புசிக்கும் காலதேவம்
ஆனந்தமயம் மஹாதேவம்
ஆனந்தமயம் மஹாதேவம்

மங்கலம் சிவம் - சுப
மந்திரம் சிவம்
சங்கல்பம் சிவம்
சலனமில் லாதது சதாசிவம்

*அந்தப் பாடலின் அனுபவக் களத்தை நினைத்தால், இன்னும் மெய்சிலிர்க்கிறது! இப்படிப்பட்ட சிலிர்ப்புகளும், சிறகடிப்புகளும் இல்லாத வறண்ட பாலைவனம் போன்ற தர்க்கப் பாதையில், சிற்றறிவுப் பட்டறையில் எத்தனைக் காலம் வீணடித்து விட்டேன்!*

*ஒருநாள் ரமணன் என் வீட்டில் ஏதோ ஒரு கவிதை உதிக்கப் போகிறது என்று கட்டியம் கூறும் வெறித்த பார்வையோடு மௌனமாக அமர்ந்திருந்தான். திடீரென்று பாடினான். அப்போது, எஸ்.பி.பி. பாடி மிகவும் பிரபலமாகியிருந்த ஆதிசங்கரரின் சிவாஷ்டகம் மெட்டிலேயே ரமணனின் தமிழ்ப்பாட்டு வந்தது.*

மனம் கொன்ற பாவம் தனைக் கண்ட கோலம்
மலர் மாலை யாகிப் பதம் சூடும் காலம்
விசித்ரம் வினோதம் விளங்காத போதம்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

அசைவற்ற கண்கள் அகண்ட ப்ரபஞ்சம்
அமைதித் தடாகம் அலைகள் சுநாதம்
சினத்தோடிருக்கும் தனித்தேன் தரங்கம்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

துரும்பாகி நெஞ்சில் துளிர்க்கின்ற கண்ணீர்
அரும்பாத முன்வந் தணைக்கின்ற தெய்வம்
கரங்கள் விசாலம் வரங்கள் சுபாவம்
காருண்யமே ஈசன் காட்டும் ப்ரபாவம்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

அவன்தந்த வார்த்தை அவன்வைத்த போதை
அவன்செய்த மாயை அகந்தைப் பதாகை
சிவன்சொந்தம் என்கின்ற போதே வசந்தம்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

அலுக்காது நாமம் அடங்காது தாகம்
கணம்தோறும் நெஞ்சத்தில் காபாலி நடனம்
நடுங்கித் துகள்போல் நொறுங்கட்டும் காலம்
பயங்கள் விதிப்பேய்கள் யாவும் நிர்மூலம்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

புயல்வீசும் பாதம் நிழல்தேடும் வேதம்
புஜம்போன்ற மௌனத்தில் ஆரங்கள் கீதம்
கணங்கள் யுகங்கள் மயங்கும் ஸ்வரங்கள்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

சிரம்தாழ்த்தி எங்கள் சிவன்வெற்றி சொல்ல
கரம்பற்றி மெல்லக் கரைசேர்க்கும் செல்வன்
கபாலன் தயாளன் கனல்மின்னும் சூலன்
அருள்தேடும் கைக்குள் அமர்கின்ற பாலன்
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

உயிர்நின்ற போதும் உணர்வாக மோதும்
அருள்வீசும் தீபம் அகண்ட ப்ரகாசம்
பதம்கண்ட நெஞ்சில் கணம்தோறும் தில்லை
சிவன் சங்கரன் தங்கும் ஈசானம் ஈதே

அவன் பாடி முடித்ததும், உடுக்கைச் சத்தம் கேட்டது போல் ஓர் ஓசை எழுந்தது. சிவபெருமானே வந்து விட்டாரோ? ரமணனே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அப்புறம்தான் புரிந்தது, என் வீட்டில் வளர்ந்து கொண்டிருந்த 'ரோமுலஸ்' என்ற நாய் தன் தலையை இருபுறமும் சுழற்றிச் சுழற்றித் தன்னிரு காதுகளாலும் படபடவென்று உடுக்கடித்துக் கொண்டது என்று.

என்ன புரிந்தது? அந்த வேளையில் உடுக்கடிக்கும் சத்தம் கேட்டதற்கு என்ன பிரபஞ்ச காரணம் என்று புரிந்து கொண்டோமா? அறிவு திகைக்கும் தருணத்தில், சிந்தனை ஸ்தம்பித்துவிடும் கணத்தில் என்ன புரியும், என்ன புரியாது?

இப்படியாகக் கவிதை ஜனித்த கணங்களில், மெய்மறந்த நிலையில், ரிஷிகள் போல், பூத கணங்கள் போல், இந்திராதி தேவர்கள் போல், அட, எத்தனை அனுபவச் சுழல்களில் நாங்கள் சிக்கித் திக்குமுக்காடி எக்களித்திருக்கிறோம்! அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது என்று திருவிளையாடலில் சிவனாக வந்து சிவாஜி பேசிய வசனத்தைத்தான் பேச வேண்டும். என்னத்தைப் புரிந்து கொண்டோம் போங்கள்!

கவிதையின் ஜனன ரகசியத்தைக் கொஞ்சம் புரிந்து கொண்டு விட்டேனோ என்று மலைக்க வைத்த இன்னொரு சம்பவம் நடந்தது.

1986–ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். தூக்கத்தில் நான் பாடுவதாக ஒரு கனவு. கனவு என்று சொல்லக் கூடக் கூச்சமாக இருக்கிறது. எது நிஜம், எது கனவு என்று சொல்ல முடியுமா? வ.வே.சு.வின் ஒரு பல்லவி நினைவுக்கு வருகிறது:

**கனவுக்குள் நானொரு கனவினில் ஆழ்ந்திருந்தேன்**
**கனவு மறைந்திடக் காட்சிகள் மாறியும்**
**கனவு தொடர்கிறது - வேறொரு**
**நனவாய்ப் படர்கிறது**

1970–களிலேயே நானும் ஒரு பாடல் எழுதியிருந்தேன், ஆபோகி ராகத்தில்:

**உனக்கொரு சிலைநான் செய்வதற்குள் - நீ**
**உருவம் மாறி விட்டாய்**
**கணப்பொழு தெந்தன் கலைப்பொரு ளாகிக்**
**கனவாய் ஓடி விட்டாய்**

**தூக்கத்திலே ஒரு பாடல் எழுதி**
**துயில்கலைந்ததும் அதை மறந்து விட்டேன் - பனித்**

துளிகளிலே ஒரு மாலை தொடுத்துச்
சூரியன் வந்ததும் தோற்று விட்டேன்

நீரில் வரைந்த கோலத்தைப் போலென்
நிழலின் வடிவம் கலங்குவதை
யாரிடம் சொல்வேன் எப்படித் தடுப்பேன்
இதுதானோ மனச் சித்ரவதை

*மீண்டும் 1986 நிகழ்ச்சிக்கு வருவோம். தூக்கத்தில், சரி, கனவில், நான் பாடுகிறேன். தூக்கம் கலைந்து எழுந்ததும் அந்தப் பாடல் மறந்துவிட்டது. ஷோபனாவிடம் கனவு பற்றிச் சொல்லிவிட்டுப் பாடல் மறந்து போனதையும் சொல்லி அங்கலாய்க்கிறேன். சற்று நேரத்துக்கெல்லாம் தொலைப்பேசி மணியடிக்கிறது. அதை எடுக்கிறேன். எடுக்கும் போதே, நான் கனவில் பாடிய பாடல் முழுதும் அப்படியே நினவுவர, அதை மனத்துக்குள் பாடிக் கொண்டே தொலைப்பேசியைக் காதில் எடுத்து வைத்துக் கொண்டு, ஆனால் எதுவும் பேசாமல் ஏறக்குறைய ஒரு நிமிடம் இருந்து விட்டேன். அடுத்த முனையிலிருந்த நபரும் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தது வியப்பாக இருந்தது. அந்த மௌனத்தை எனக்கு நன்கு தெரிந்த ஒரு சிரிப்பொலி கலைத்தது. தொலைப்பேசியின் எதிர்முனையில் டாக்டர்தான் சிரித்தார். சிரித்துவிட்டுக் கேட்டார், "என்னப்பா பாட்டுப் பாடி முடித்தாகி விட்டதா?" நான் வாயடைத்துப் போய் விட்டேன். யார் கனவில் யார் நுழைந்து 'எப்படிப் பாடினரோ!'*

ஆதி சேஷன் ஆகவா - ஓர்
ஆலிலை என்றாகவா
மாதவா ஸ்ரீ ராகவா - என்
தாகம் தீர்க்க வா

பார்த்தசாரதி உனக்குப் பாஞ்சசன்யம் ஆகவா
கீதைசொன்ன பாதையோரம் வேணுகானம் ஆகவா
அரிதுயில் கலைப்பதற்குக் கோதையாகிப் பாடவா - நீ
ஆலிங்கனம் செய்யும் ராதையாக மாறவா

மாதவா ஸ்ரீ ராகவா - என்
தாகம் தீர்க்க வா - ஓ
மாதவா ஸ்ரீ ராகவா - என்
தாகம் தீர்க்க வா

**முதலைவாய் விழுந்த நெஞ்சின் கதறல் கேட்க வில்லையா - என்**
**இதயத் தூணை இரணியன் உதைப்ப தறிய வில்லையா**
**சார்ங்கமென்று சாற்றுகின்ற சத்தியத்தின் வில்லையா**
**சார்வதிந்தச் சஞ்சலங்கள் தர்மவீரம் இல்லையா**

**சங்குச் சக்ரம் ஏந்தி வா - என்**
**சங்க டங்கள் நீங்க வா**
**தர்ம வீரம் ஆனவா**
**சர்வ லோக நாயகா**

*கனவில் உதித்துக் கண்விழித்ததும் மனத்துக்கு வெகுதொலைவில் சென்று மறைந்த பாடல், தொலைப்பேசியில் டாக்டர் அழைத்ததும், மேலெழும்பி மலர்ந்த கதையைச் சொல்லி விட்டேன். அதைக் கனவில் நான் பாடிய மெட்டு மட்டும் நினைவு வரவில்லை. பிறகு, அமீர்கல்யாண் ராகத்தில் பல்லவி தொடங்க, ராகமாலிகையாக இசையமைத்து ஷோபனா அதைப் பாடிக் காட்டினாள்.*

*மறந்துபோய், மனத்தில் மீண்டும் பதிவான இந்தப் பாடல், ஒலிவடிவில் பதிவாகவே இல்லை. பதிவு ஆனது, ஆனால் ஆகவில்லை. 'அட, நான் இந்த விளையாட்டுக்கு வரலப்பா' என்கிறீர்களா? எல்லாம் விளையாட்டுத்தானே. அவனே அலகிலா விளையாட்டுடையான்; தீராத விளையாட்டுப் பிள்ளைதானே!*

*மலர்ந்தும் மலராத பாதிமலர் போலப் பதிந்தும் பதியாத பாடலின் கதையை அடுத்த பகுதியில் சொல்கிறேன்.*

# 41

பாடல் பதிந்தும், பதியாத கதை சொல்கிறேன். ஆனால், அதற்குமுன், ஒரு செய்தி, அதைச் செய்தி என்று கூடச் சொல்ல முடியாது, ஒரு கருத்து அல்லது நோக்கு, அதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

வரலாற்று நிகழ்ச்சிகளை விட, அவை நமக்கு உணர்த்தும் கருத்து அல்லது கதை முக்கியம் என்று பல முன்னணி வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். எனவே, என் கவிதையின் வரலாறாகவே அமைந்து விட்ட என் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைக் காட்டிலும், அந்த நிகழ்ச்சிகளின் உந்து சக்தியாகவும், அவற்றை முந்து சக்தியாகவும் அமைந்த அக நெகிழ்ச்சிகள் மிக முக்கியம். அதைக் கருத்தில் கொண்டு, நான் சில எண்ணங்களை இப்போது உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அலையலையாய் விரிந்த கூந்தல் மேகக்கூட்டம் போல் இருப்பதாகச் சொல்லும் உவமை புதியதில்லை. ஆனால், வானத்தைப் பார்த்ததும், அதன் சுருள்சுருளான மேகங்களுக்கிடையில் நிலாப்பிறையைக் கண்டதும், அப்போது மின்னல் வானத்திரையைப் பிளந்து கொண்டு பளிச்சிட்டதும், இவையெல்லாம் பிறைசூடிய பித்தனை மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது வெறும் உவமையாகவோ, உருவகமாகவோ மட்டும் இல்லை. அது ஓர் அனுபவக் களம். ஆகாசத்தையே பிறவா யாக்கைப் பெரியோனாகப் பார்த்த பிரமிப்பில்தான், போன பகுதியில் படித்த “நிலவை அணிந்து கொண்டு” என்று தொடங்கும் கவிதையின் உயிர்வீச்சே இருக்கிறது. “விழிநிறைந்தது வானம்” என்ற சொற்றொடரே அதன் ஜீவ நாடி. நிலவும், மேகமும், மின்னலுமாக இரவில் தொடங்கி, பனிப்புகையின் நடுவே வெள்ளி முளைத்துச் சிவன் கையில் காயமுலாய்க் கதிரவன் உதிக்கும் காலை வரை அந்தக் கவிதை

நகர்ந்து அல்லது படர்ந்து செல்வதே, அந்தக் கவிதை வெறும் அசையாப் பொருள் இல்லை, அதற்கு இயக்கம் உண்டு என்று அதன் உயிர்மூச்சை அடையாளம் காட்டுகிறது. "மெல்லப் படர்ந்தது வெள்ளி" என்ற வரியில், 'மெல்ல' என்ற சொல்லின் ஆதிக்கமே அதன் இயக்க நிலைக்குத் தக்க சான்று. அண்டமெல்லாம் ஜனிக்கும் மஹாசூன்யமே, ப்ரளயமாகி உலகைப் புசிக்கும் காலதேவனாகவும் அமைந்து, கடைசியில் சலனமற்ற சதாசிவமாகவும் நிலைத்து விடும் அனுபவம், ஆங்கிலத்தில் 'மிஸ்டிக் எக்ஸ்பீரியன்ஸ்' என்று சொல்லப்படும் ஒரு புதிரான அனுபவம். நாம் சிற்றறிவால் சட்டெனப் புரிந்து கொள்ள முடியாத பேருண்மையை, ஏன், பேரழகை, அல்லது பேரானந்தத்தை உள்ளுணர்வில் ஏற்படுத்தும் அனுபவம். இப்படிப்பட்ட அகநெகிழ்ச்சியே அந்தக் கவிதையின் அனுபவக் களம் அல்லது சூழல். அந்தக் கவிதையைக் கேட்கும் போது, அதுவும் இன்னிசையோடு எஸ்.பி.பி. போன்ற நல்ல குரலுடையவர் அதைப் பாடக் கேட்கும் போது, கேட்பவரையும் அந்த அனுபவக் களத்திற்குக் கடத்திச் செல்லும் ஆற்றல் அந்தச் சொற்களுக்கு இருந்தால், அதுவே மந்திரமாகி விடுகிறது. ஒரு கவிதையில் இந்தச் சொல் நன்றாக உள்ளது, அந்த உவமை அற்புதம், என்றெல்லாம் நயம் வியப்பது பேச்சாளர்களின் பணி. ஆனால், ஒரு கவிதை எந்த அனுபவக் களத்துக்குப் படிப்பவனை அல்லது கேட்பவனைக் கடத்திச் செல்கிறதோ, அந்தக் களத்தில் ஆழ்ந்து அதை அனுபவிப்பதே ஒரு ரசிகனின் பணி. ஒரு கவிதை வாசகனை அனுபவக் கடத்தல் செய்வதற்கு நல்ல இசை எப்படி உதவுகிறதோ, பாடகர் எப்படி உதவுகிறாரோ, அப்படியே கவிதையின் நயம் வியக்கும் பேச்சாளர்களும் அதே விதத்தில் உதவக் கூடும். ஆனால், மிக முக்கியம், அல்லது இலக்கு என்ன தெரியுமா? களமும் அதில் மூழ்கித் திளைக்கும் ரசனையும் மட்டுமே.

ஒரு கவிஞன் தன் கவிதையையே வியந்து, விரித்துரைக்கலாமா என்ற கேள்வியும், அப்படிச் செய்வது அதிகப்பிரசங்கித் தனம் இல்லையா என்ற கேலியும் எழக்கூடும். என் படைப்புகளை நானே ரசிக்கவில்லை என்றால், யார் ரசிப்பதற்கு நான் அதை வெளியிடுவது? ரசிக்கத் தக்கதுதான் என்று நான் ஒரு முடிவுக்கு வராமல், மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்து கொள்ள முன்வரலாமா? விருந்தினர்களுக்குப் படைக்கும் முன், உணவை நாம் சோதித்துச் சுவை பார்ப்பதில் தவறில்லையே. சபரி மூதாட்டி சொல்லிக் கொடுத்த பாடம் இல்லையா? என் கவிதை என்பது என் குழந்தை போன்றது. என் குழந்தையின் படைப்புக்கு நானே முழுப்பொறுப்பா? நான் அதன் படைப்புக்கு ஒரு கருவியானேன். ஆனால், அதன் கர்த்தாவோ, கடவுளாகிய இயற்கை அல்லது பிரபஞ்ச சக்தி இல்லையா? என் குழந்தையை நான் ரசித்துக்

கொஞ்சுவது தவறா? மற்றவர்கள் அதை மெச்சிப் புகழும் போது என் மேனி சிலிர்ப்பது இயற்கைதானே? பாரதி பாடவில்லையா?

**உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளருதடி**
**மெச்சியுனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி**

ஒரு கவிதை பிறக்க என்னைக் கருவியாகத் தேர்ந்தெடுத்த இறைவனுக்கு நான் செலுத்தும் நன்றிதானே அது!

“தன்னைப் புகழ்தல் தகும் புலவோர்க்கே” என்று ஓர் இலக்கண சூத்திரம் உண்டு. என் ஆசான் தண்டமிழ்க் கொண்டல் அதைத் தம் இல்லத்தின் சுவரில் பெரிதாக எழுதி மாட்டி யிருப்பார். அதன் மெய்ப்பொருள் இப்பொழுதுதான் விளங்குகிறது. ஒரு புலவனாக நீயிருக்கும் பட்சத்தில், நீ உன்னைப் புகழ்ந்து கொள்ளலாம். ஏனென்றால், நீ எப்பொழுதும் உன் உள்ளத்தில் பொங்கிவரும் கவிதையையே சுவைத்துக் கொண்டிருப்பாய். அந்தக் கவிதை வெள்ளத்தை மற்றவர்களும் பருகத் தருவதற்கு உனக்கு அனுமதியுண்டு என்பதோடு, அப்படிப் பருகத் தருவது உன் கடமையும் ஆகும் என்பதை நினைவிற்கொள். அப்போது நீ உன்னைப் புகழ்வது என்பது உனக்குள் ஊற்றெடுக்கும் கவிதையை, அதைத் தரும் பிரபஞ்ச சக்தியை, இறைவனைப் புகழ்வதாகத்தான் பொருள். எல்லாப் புகழும் இறைவனுக்கே!

சரி, இப்பொழுது நான் சொன்னது ஏதோ என் கவிதையில் மட்டுமே கிட்டும் அனுபவம் என்று எண்ணிவிட வேண்டாம். போன பகுதியில் ரமணன் எழுதிய சிவாஷ்டகத்தையும் படித்து ரசித்தோம் இல்லையா? அதில் வரும் ஒரு வரி, அமர வரி, அதுவே போதும். “புஜம் போன்ற மௌனத்தில் ஆரங்கள் கீதம்”. அடாடா, அதைப் பற்றி வியப்பதற்கு முன், அந்த வரியையே நாலைந்து முறை படித்துச் சொல்லி அனுபவிக்க வேண்டும். புஜம் அல்லது தோள், மலை போல் இருந்தது, மூங்கில் போல் இருந்தது என்றெல்லாம் உவமை சொல்வதுண்டு. புஜத்தையே வேறொன்றுக்கு உவமை சொல்ல முடியுமா? முடியலாம், அந்த வேறொன்று தோள் போல ஒரு பருப்பொருளாக அல்லது திண்பொருளாக, வடிவமுடையதாக இருந்தால். சரி, மௌனம் போன்ற வடிவற்ற ஒரு கருத்தீட்டுக்கு புஜத்தை எப்படி உவமை சொல்ல முடியும்? இது என்ன குழப்பம்? கொஞ்சம் உள்ளுக்குள் போய் உற்றுப் பாருங்கள். மௌனம் என்பதன் வடிவம் மெல்ல ஒரு திரைக்குப் பின்னால், பனித்திரைக்குப் பின்னால் வானம் போல் தெளிவின்றிப் புலப்படக் கூடும். அது மிகப் பெரிதாகத் தோற்றம் கொடுக்கும். அம்மாடியோவ், மௌனம் என்பது இவ்வளவு பெரிசா? வானம் எவ்வளவு விரிந்து, பரந்ததோ, அவ்வளவு விரிந்து, பரந்த பெரிய விஷயம் மௌனம்!

*சிவனுடைய தோள்களைப் போல! "தோள்கண்டார் தோளே கண்டார்" புரிகிறதா? "தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின் நாள்பலக் கழியுமால்" என்ற கம்ப சூத்திரத்தின் மர்ம முடிச்சு அவிழ்கிறதா? துயரமோ, கவலையோ மனத்தை அழுத்தும் போது, மனம் சாய்ந்து கொள்ளத் தோள்கொடுப்பது அல்லது தோளாகவே அமைவது மௌனம்தானே! மௌனத் தோளில் மனம் சாய்ந்து கொண்டு ஆறுதல் காணும் அற்புதமான அகக்காட்சியை உள்ளுக்குள் தரிசிக்க முடிகிறதா?*

*பாரதி எந்த ஞான ஆகாசத்தில் நின்று கொண்டு யாரும் பேசாப் பொருளைப் பேசத் துணிந்தானோ, அந்த ஆகாசத்தின் சமாச்சாரங்கள் இல்லையா இதெல்லாம்!*

*'புஜம்போன்ற மௌனம்' என்ற சொற்றொடர் ஏற்படுத்தும் மலைப்பிலிருந்து நாம் மீள, மெல்ல விசிறி விசிறிக் காற்று வரவழைக்கும் சொற்களே, "ஆரங்கள் கீதம்". அது சாதாரண விசிறி இல்லை. சபரி மலைக்குச் செல்பவர்களுக்கு, அதுவும், பெரிய பாதையில் செல்பவர்களுக்குத் தெரியும். மிகவும் சிரமப்பட்டுக் கரிமலை ஏறி வருபவர்களுக்கு முன்னால் நின்று கொண்டு, ஏற்கனவே உச்சியை அடைந்தவர்கள், துண்டால் விசிறும் போது கிடைக்கும் ஆசுவாசம்; நிம்மதி; ஆனந்தம்! அதை அனுபவித்து உணர வேண்டும். அப்படியொரு காற்றை வீசும் விசிறியே அந்த ஆரங்களின் கீதம். மன்னிக்கவும், ஆரங்களின் கீதம் இல்லை, "ஆரங்கள் கீதம்". ஆரங்களில் இருந்து, அவற்றின் அசைவுகளில் இருந்து உண்டாகும் கீதம் இல்லையாம். ஆரங்களே கீதமாம். மௌனம் என்ற தோளில் கீதம் கூட ஒலியெழுப்பக் கூடாது. வெறும் அசைவுதான். உஸ்...! கீதம், இசை கூட அங்கே நிசப்தம்தான்.*

*விட்டு விடுங்கள், இதற்குமேல் தாங்காது. இதைவிட ஒரு போதை, இதைக் காட்டிலும் உடற்சிறையை உடைத்துக் கொண்டு உயிர் திமிறிக் கொண்டு வரும் ஒரு பாதை உண்டா? சொல்லுங்கள். நான் ஏன் கவிதைப் பித்துப் பிடித்துத் திரிகிறேன் என்று புரிகிறதா? தலையாட்டிப் பயனில்லை, என்னோடு பயணம் செய்ய, இல்லை, இல்லை, என்னோடு எனக்குள் ஊடுருவிச் செல்ல, அங்கே கண்டறியாதன காண, கேட்டறியாதன கேட்கத் துணிய வேண்டும். தயாரா?*

*அது எப்படி ஒருவருக்குள் இன்னொருவர் செல்வது? இதெல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதோ? அட, ஒதுக்கி வையுங்கள் அறிவை. புத்தி சிகாமணி, ஓர் ஓரமாகக் கைகட்டிக் கொண்டு நில்.*

*1970–களில் வந்த ஒரு கவிதை இப்பொழுது உள்ளத்தில் ஒலிக்கிறது:*

**தென்றலே சற்று நில் - நீ**
**சென்றிடும் பாதையை மாற்றிக் கொள்**
**கனவிதழ் கூப்பிக் கவிதை மலராள்**
**கடுந்தவம் செய்கின்றாள் - நீ**
**கவனம் இழந்து மோதி விடாதே**
**கண்ணீர் உகுத்திடுவாள்**

**ஞானமே எச்சரிக்கை - உன்**
**ஆணவப் பேச்சை நிறுத்திவை**
**ஸ்வரங்களின் தேவி சுடர்ரதம் ஏறி**
**ஊர்வலம் வருகின்றாள் - நீ**
**அவசரப் பட்டுப் பரபரக் காதே - உன்**
**சிறகை முறித்திடுவாள்**

**மௌனமே இதழ்விரி - பனி**
**மகுடங்கள் அசைய நீசிரி**
**மானஸ தேவதை ஊர்வலம் வரும்வழி - பொன்**
**மகரந்தங்க ளால்நீ மழைபொழி - அவை**
**பொலபொல வென்று விழும் ஒலியே - அவள்**
**புன்னகையாம் திருக்கோயில் மணி**

*அப்படியானால் ஒருவருக்குள் ஒருவர் நுழைந்து பார்க்க முடியுமா? ஏன் முடியாது? நான் வேறு, நீ வேறு என்ற பிரிவினைத் தோற்றத்தைப் புலப்படுத்தும் உடற்கூடுகள் வெறும் குறுக்குச் சுவர்களே. பானைக்குள் இருக்கும் வெளியும், பானைக்கு வெளியில் உள்ள வெளியும் வேறு வேறா? ஒரே வெட்ட வெளியை, உள்ளென்றும், வெளியென்றும் பிரிக்கும் மண் ஓடுதானே பானை?*

*1984–85 என்று நினைக்கிறேன். சபரி மலைக்கு எங்கள் குழுவினரோடு பேருந்தில் சென்று கொண்டிருந்த போது ஒரு நிகழ்ச்சி நடந்ததாம். போன பகுதியில், என் கனவுப் பாடலைத் தொலைப்பேசியில் எனக்கு டாக்டர் ஞாபகப்படுத்திய செய்தியை 'வல்லமை' இதழில் படித்து விட்டு, நண்பன் சு.ரவி எனக்கு அந்த நிகழ்ச்சியை நினைவூட்டினான். அதை இப்பொழுது சொல்கிறேன். அந்தப் பேருந்துப் பயணத்தின் ஒரு கட்டத்தில், சு.ரவியும் நானும் பாடிக் கொண்டே இருந்தோம். மற்றவர்கள் உறங்கிவிட்ட பிறகும் சிறிது நேரம் பாடி விட்டு நாங்கள் இருவரும் அப்படியே மௌனத்தில் ஆழ்ந்தோம். நான் த்யானத்தில் ஆழ்ந்து விட்டேன். சு.ரவியும் அப்படியே. என் த்யானத்தில் ஷீர்டி சாயிபாபா ஒளி*

வடிவமாகக் காட்சி தந்து என்னைப் பேரானந்தத்தில் மூழ்கச் செய்தார். சுமார் ஒருமணி நேரம் இந்த நிலை நீடித்தது. த்யானத்தில் இருந்து புறவுணர்வு நிலைக்கு நான் திரும்பியதும், சு.ரவியிடம், யாராவது காயத்ரி மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்களா என்று கேட்டேன். அவன் ஆச்சரியப் பட்டான், அவன் அந்த ஒரு மணி நேரமும் காயத்ரி மந்திரத்தை மனத்துக்குள்ளேயே ஜெபித்துக் கொண்டிருந்த செய்தி எனக்கு எப்படித் தெரிந்தது என்று. அப்போது அவனுடைய புருவ மத்தியில் சாயி பாபா அமர்ந்திருந்த தரிசனத்தையும் சொன்னான். நான் அந்த ஒரு மணி நேரம் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று அவன் கேட்டதும் நானும் த்யானத்தில் இருந்ததாகவும், சாயி தரிசனமே பெற்றதாகவும் சொன்னேன். த்யானத்தில் எப்படி எனக்குள் அவனும், அவனுக்குள் நானும்?

எங்கள் உரையாடல் த்யான நிலை பற்றித் தொடர்ந்தது. நான் முதன் முதலாக டாக்டர் முன்னிலையில் த்யானம் செய்ய நேர்ந்த கதையைச் சொன்னேன். அப்போது பனிமலையுருகி வழிவது போல் என் தலை குளிர்ந்து போனதைச் சொன்னேன். உடனே சு.ரவி, செளந்தர்ய லஹரியின் 20–ஆவது செய்யுளைச் சொல்லிக் காட்டினான்.

> **கிரந்திமங்ஞேப்யஹ கிரண நிகுரும்பாம்ருத ரஸம்**
> **ஹ்ருதித்வா மாதத்தே ஹிமகரசிலா மூர்த்திம் இவ யஹ**
> **ஸ ஸர்ப்பாணாம் தர்ப்பம் சமயதி சகுந்தாதிப இவ**
> **ஜ்வர ப்லுஷ்டான் த்ருஷ்ட்யா சுகயதி சுதாதாரஸிரயா**

இந்தக் கவிதையின் பொருள் த்யானத்தில் பனிமலை உருகுவது போல உள்ளுக்குள் அமுதம் பொழியும், அப்போது மாயையின் சின்னங்களான பாம்புகள் பட்சிராஜனைக் கண்டது போல் ஓடி மறையும் என்பதாம். “ஹிம கர சிலா மூர்த்திம்” என்பது பனிப்பாறையில் செதுக்கப் பட்ட அல்லது அமர்நாத்தில் தெரிவது போல் பனியில் தானே தன்னை வடித்துக் கொண்ட மூர்த்தி அல்லது வடிவம் என்று பொருள்படுகிறது. “கிரண நிகுரும்பம்ருத ரஸம்” என்ற சொற்றொடர் அமுதப் பெருக்கையும், “சகுந்தாதிப” என்பது பறவைகளின் ராஜனான கருடனையும் குறிக்கின்றன. கருடனே த்யான அனுபவத்துக்குக் காரணகர்த்தாவாக இருக்கிறான் என்று சு.ரவி சொன்னதுமே எனக்கு மெய் சிலிர்த்தது. காரணம், டாக்டரின் முன்னிலையில் நான் முதன்முறையாக த்யானம் செய்த போது எனக்குள் பனிமலை உருகி அமுதம் பொழிந்த அனுபவத்தை அவரிடம் சொன்னேன். அதை அவர் கண்டு கொள்ளாமல், அருகில் இருந்த இன்னொரு நபரிடம், “இன்று காஞ்சிபுரத்தில் கருட சேவை இல்லையோ?” என்று கேட்டார்.

*அதன் உட்பொருளை அன்று நான் உணரவில்லை என்றாலும், பிறகு மேற்சொன்னவாறு பேருந்தில், சௌந்தர்ய லஹரியின் 20–ஆவது ஸ்லோகத்தை சு.ரவி விளக்கியதும் புரிந்து கொண்டு சிலிர்த்தேன்.*

*யாருக்குள் யார்? நான் எழுதிய கவிதையொன்றின் சில வரிகள் இப்போது நினைவுக்கு வருகின்றன:*

**யார்மாயை யார்நிஜம் யார்சாயை யார்நிழல்**
**என்மாய வட்டத்தில் நீமாயையா - அல்லது**
**என்மாய வட்டமே உன்சாயையா**

*கவிதையும், மந்திரமும் வேறு வேறு இல்லை. வேத மந்திரங்கள் சிலவற்றைத் தமிழில் பாரதி எழுதி வெளியிட்ட போது, அதற்கு, "வேத ரிஷிகளின் கவிதை" என்றுதான் பெயர்சூட்டினான்.*

*என் கனவுக்குள் நுழைந்து அங்கே என்னைப் பாட வைத்து, நான் அதை மறந்து விட்ட போது மீட்டுத் தந்த குருவின் அருளை நினைந்து நெகிழ்கிறேன்.*

*அந்தப் பாடலை வெகு நாட்கள் பதிவே செய்யவில்லை. அது வந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து, என் நண்பர், இசையமைப்பாளர் ரெஹான் தான் இசையமைத்து ஒரு கேஸட், (அப்படியொரு பொருள் ஒரு காலத்தில் வழக்கில் இருந்தது, தம்பி!), அதாவது, இசைநாடா தயாரிக்கப் போவதாகவும், அதுவும் திருவேங்கடநாதன் பற்றிய பாடல்களாக இருக்க விரும்புவதாகவும், அதற்கு என் பாடல்களைத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நானும் சில பாடல்கள் தந்தேன். அதில் அந்தக் கனவுப் பாடல், "ஆதி சேஷன் ஆகவா" என்ற பாடலும் ஒன்று. பாடல்களைப் பதிவு செய்து கொண்டு வந்து ரெஹான் போட்டுக் காட்டியதும், பாட்டின் சொற்களுக்கும், மெட்டுக்கும் ஒரே போராட்டமாக இருந்ததை அவனிடமே சொல்லி விட்டு, அதே மெட்டுகளுக்கு ஏற்ப வேறு பாடல்களும் அப்போதே எழுதித் தந்தேன். குரல் இழை மட்டும் புதிய வரிகளோடு மாற்றிப் பதிவு செய்யப்பட்டு, "திருவேங்கடநாதன்" என்ற பெயரில் அந்த இசைநாடா வெளியானது. "ஆதி சேஷன் ஆகவா" பாடல், "ஏழு மலை ஏறவா" என்று மாறிய கதை இதுதான்.*

**ஏழு மலை ஏறவா**
**கோவிந்தன் புகழ் கூறவா**
**ஓ மாதவா ஸ்ரீராகவா**
**என்றிங்கு நான்பாடவா**

பாட்டுப்பாடி பஜனை செய்து பக்தியோடு தேடவா
பாரிஜாத மாக நெஞ்சைப் பாதங்களில் போடவா
கூட்டமாகக் கூடிவந்து சன்னிதிக்குள் சேரவா
கோடியிலே நானொருவன் குரலெடுத்துப் பாடவா

ஓ மாதவா ஸ்ரீராகவா
என்றிங்கு நான்பாடவா

நான் உருகிப் பாடுவதுன் காதில் விழவில்லையா
நான் ஒருவன் தேடுவதுன் கண்ணில் படவில்லையா
கானமழை முடிவிலுந்தன் ஞானவொளி தோன்றுமே
காண வேண்டும் என்று நெஞ்சம் மீண்டும் மீண்டும் ஏங்குமே

ஸ்ரீநிவாஸா கோவிந்தா வெங்கட ரமண கோவிந்தா
ஸ்ரீதர கேஸவ கோவிந்தா ஸ்ரீஹரி நாதா கோவிந்தா

ஓ மாதவா ஸ்ரீ ராகவா
என்றிங்கு நான்பாடவா

*புரிந்ததா? பதிந்தும் பதியாத பாடல்! பள்ளியில் படித்த பாடப் புத்தகத்தின் பக்கங்களைப் போல்...! குருநாதனால் தீட்சை பெற்ற பிறகும், மீண்டும் உலக விவகாரத்தில் உழன்று திரியும் பேய்மனம் போல்...ஞ்! ஏன், வேண்டுதல் வேண்டாமையிலாத நிலையடைந்த பிறகும், சில காலம் உடற்கூட்டில் இருந்தாக வேண்டிய ஜீவன் முக்தனைப்போல்...! அப்பப்பா, எத்தனைப் போல், போல், போல்! கவிதைக்கு அழகே உவமைதானே சாமீ! புரிந்ததா, இல்லை புரிந்தும் புரியாதது போல்..!*

# 42

இதுவரை மௌனமாக இருந்த புத்தி சிகாமணி கேட்கிறான்: "நீ என்ன சொன்னாலும் சரிப்பா, ஆனா நான் இல்லாம, அதாவது புத்தியைப் பயன்படுத்தாம, ஒரு கவிதை எழுதவே முடியாதுப்பா".

ஒப்புக் கொள்கிறேன் சிகாமணி. ஆனால் ஒரு கவிதை, வடிவம் பெறுவதற்குத்தான் உன் உதவி தேவை. அதை மறுப்பதற்கில்லை. அது ஜனிப்பதற்கு உன் உதவி தேவையில்லை.

"என்னப்பா குழப்புகிறாய்! விளக்கமாகச் சொல்லுப்பா", சிகாமணி கேட்கிறான்.

சொல்கிறேன். நான் கேட்டு நீ கதை சொன்னது போக, இப்போது நீ கேட்டு நான் கதை சொல்வது போலாகிவிட்டதே! நல்ல வேடிக்கையப்பா!

இனம்தெரியாத ஏதோ ஓர் ஈர்ப்பினால் உந்தப்பட்டு, மிக உயரத்திற்கு அல்லது ஆழத்திற்கு மனம் சிறகடித்துப் பறக்கும் போது, அது சில அனுபவக் களங்களைச் சந்திக்க நேர்கிறது. அந்தக் களங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளாக இருக்கலாம்; அல்லது, வெறும் எண்ண எழுச்சிகளாகவோ, சலனங்களாகவோ இருக்கலாம்; அல்லது, நேரில் பார்த்திராத ஒரு காட்சியாக இருக்கலாம். எந்தக் களத்துக்கு ஏற்றவாறு அந்த மனத்தின் அப்போதைய அதிர்வுகள் உள்ளனவோ, அந்தக் களம் அந்த மனத்தைத் தன்வயப் படுத்திக் கொள்கிறது. அது சில கணங்களுக்கு மட்டுமே. அந்தக் களத்தின் அதிர்வுகளும், அந்த மனத்தின் அதிர்வுகளும் கிட்டடத்தட்ட ஒரே அலைவரிசையில் சங்கமிக்கும் போது எழும் புதிய சலனங்களை மொழியாக்கம் செய்யும் திறம் அந்த மனம் சார்ந்த அறிவுக்கு இருந்தால் அந்தச் சலனங்கள் ஒரு கவிதையாக வெளிப்படலாம். அல்லது, அச்சலனங்களை வேறு விதமாக வெளிப்படுத்தும் ஆற்றல்

அந்த மனத்துக்கு இருந்தால், அச்சலனங்கள் ஓர் ஓவியமாகவோ, சிற்பமாகவோ, சங்கீதமாகவோ, வேறு கலைவடிவிலோ உருவம் பெறலாம். அந்தச் சலனங்கள் ஜனிப்பதில் அறிவின் பங்கு அதிகம் இல்லை. எந்த அனுபவக் களம் அந்த மனத்தை அந்தக் கணத்தில் வரவேற்றுத் தன்வயப் படுத்திக் கொள்கிறது என்பது வேண்டுமானால் ஓரளவு அந்த மனம்சார்ந்த அறிவைப் பொறுத்து அமையலாம். ஆனால், அந்தச் சங்கமத்தில் ஜனிக்கும் சலனங்களுக்கு அதற்கு மேல் அறிவு பொறுப்பாக முடியாது. அச்சலனங்கள் உருவம் பெற்று வெளிப்பட நிச்சயம் அறிவின் துணை வேண்டும். அப்படித் துணை செய்யும் போது அறிவு தன் அதிகப் பிரசங்கித்தனத்தை அடக்கிக் கொண்டு அந்தச் சலனங்களை அப்படியே பிரதிபலிக்கும் வடிவம் இழைப்பதில் மட்டும் உதவினால், அந்தப் படைப்பில் அந்த அனுபவக் களம் கச்சிதமாக அமர்ந்து கொள்ளும். அப்படியின்றி, அறிவு தன் மேல்பூச்சுகளை அந்த வடிவத்தில் அதிகம் இழைக்கத் தலைப்பட்டால், அந்தப் படைப்பு, ரசிகர்களின் அறிவு நிலையைக் கடந்து ஆழத்துக்குச் செல்ல முடியாமல் தடுமாற நேரிடும். அப்படிப்பட்ட படைப்பு, காலம் வென்று நிற்கும் படைப்பாக உருவாக முடியாது. ஏனென்றால், ரசிகரின் அறிவு நிலையைக் கடந்து, அவர்களுடைய அந்தரங்கத்தை ஊடுருவிச் சென்று, அவர்களுக்குள் தான் ஜனித்த அனுபவக் களத்தை மீண்டும் உருவாக்கி அவர்களை அந்தக் களத்துக்குக் கடத்திச் செல்லும் ஆற்றல் அத்தகைய படைப்புக்கு இருக்காது.

நான் இளங்கலை (பி.ஏ.) வகுப்பில் பயிலும் போது, எங்களுக்கு இந்திய மெய்யியல் பாடம் நடத்திய பேராசிரியர் ராதாகிருஷ்ணன் என்பவர் சொன்ன ஒரு கதை நினைவுக்கு வருகிறது. அதற்கு மூலம் எதுவென்று நினைவில்லை. ஓர் ஊரின் எல்லையில் ஒரு யோகி தவம் செய்து கொண்டு வாழ்ந்திருந்தார். அந்த ஊர் மக்களுக்கு அவரிடம் மிகுந்த மரியாதை இருந்தது. எல்லாரும் அந்த வழியே செல்ல நேரிடும் போது அவரை வணங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஒருநாள், ஓர் இளம் பெண் அவ்வழியே போகும் போது அவரை வணங்கினாள். திடீரென்று, அவர் அந்தப் பெண்ணிடம் வலிந்து உடலுறவு கொள்ள முயற்சி செய்தார். அந்தப் பெண் திமிறிக் கொண்டு விடுபட்டு ஓடிப்போய் நடந்ததை ஊர்மக்களிடம் சொல்லவும், அவர்கள் திரண்டு வந்து அந்த யோகியைத் தாக்க முற்பட்டனர். ஊர் பெரியவர் ஒருவர் அவர்களை அடக்கி விட்டு, “ஏன் சாமி இப்படிச் செஞ் சீங்க?” என்று கேட்டதும், சில மாதங்கள் கழித்து வந்தால் பதில் சொல்வதாகச் சொல்லி அந்த யோகி அவர்களை அனுப்பி வைத்தார். சில மாதங்கள் கழித்து ஊர் மக்கள் மீண்டும் அவரிடம் சென்று கேட்டதும், அவர்களை அருகில் ஓரிடத்துக்கு அழைத்துச்

சென்று ஒரு கழுதை சில மணித்துளிகளுக்குமுன் ஈன்ற கன்றைக் காட்டி, "இந்த ஜீவன் உடல்பெறத் துடித்துக் கொண்டிருந்ததைச் சில மாதங்களுக்கு முன் நான் பார்த்த போது, அதற்கு மனிதப் பிறவி கொடுக்கலாமே என்று நினைத்து நான் எடுத்த முயற்சிதான் அது. ஆனால் இறைவனின் சித்தம் அந்த ஜீவன் கழுதையாகப் பிறக்க வேண்டும் என்று இருக்கும் போது அதை மாற்ற நான் யார்?" என்று சொன்னாராம். இந்தக் கதை முக்கியமில்லை. இதில் வரும் யோகியின் சமாதானம் ஏற்றுக் கொள்ளத் தக்கதா என்ற விவாதத்திலும் நான் ஈடுபடப் போவதில்லை. ஆனால், கவிதையின் ஜனன ரகசியத்தை ஓரளவு புரிந்து கொள்ள இக்கதை சற்றே உதவக் கூடும் என்பதால் அதை இங்கே சொன்னேன். இந்தத் தொடரே என் கவிதையின் வரலாறுதானே!

கவிதை எப்படி ஜனிக்கிறது என்பதை விளக்க நான் ஏன் இவ்வளவு பாடுபட வேண்டும்? நல்ல கவிதைகளைப் பகிர்ந்து கொண்டாலே போதுமே!

மழை, காற்று, வானம், மின்னல் என்று பாடவந்த பாரதி எப்படி ஓர் அனுபவக் களத்திற்கு உந்தப்பட்டு, அங்கே ஒரு கவிதையின் ஜனனத்துக்குக் கருவியாகி, அந்தக் கவிதையின் மூலம், காலகாலத்துக்கும் தன் வாசகர்களை அதே அனுபவக் களத்துக்குக் கடத்திக் கொண்டிருக்கும்படி அந்தக் களத்தை நிரந்தரமாக்கி விட்டான் என்பதைப் பார்ப்போம்:

**மழைபொழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்**
**வானிருண்டு கரும்புயல் கூடியே**
**இழையும் மின்னல் சரேலெனப் பாயவும்**
**ஈர வாடை இரைந்தொலி செய்யவும்**
**உழையெலாம் இடையின்றி இவ்வானநீர்**
**ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டுங்கால்**
**மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்**
**வாழ்க தாயென்று பாடுமென் வாணியே**

வான் இருண்டு போவதும், புயல் கருப்பாக இருப்பதும் கட்புலனுக்கு. ஈரப்பதத்தோடு வீசும் வாடைக் காற்றோ நாசிப்புலனுக்கு. காற்று வீசும் ஆரவாரமோ செவிப்புலனுக்கு. வானத்திலிருந்து பொழியும் மழை நீரோ உற்றறியும் தீண்டல் புலனுக்கு. இப்படியாகத் தான் பார்த்த ஒரு காட்சிக்கு கண், காது, மூக்கெல்லாம் வைத்துப் பாடுகிறான் பாரதி. கண், மூக்கு, காது, மெய் என்று நாலு புலன்களுக்கு விருந்து தந்தவன், மிக முக்கியமாக விருந்துச் சுவைக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் நாவை மட்டும் விட்டு விட்டானோ? இல்லை. 'வாழ்க தாய்' என்பதே

நாவுக்கு விருந்து என்று முடிக்கிறான். எப்படி ஒரு சிறு பொறியைப் பெரு நெருப்பாக்கி ஐந்து புலன்களுக்கும் விருந்து படைக்கிறான் பாருங்கள், கேளுங்கள், நுகருங்கள், தீண்டுங்கள், சுவைத்து அருந்துங்கள்!

உழையெலாம் இடையின்றிப் பொழியும் வான நீரை, "இவ் வான நீர்" என்று சொல்லி, நம்மை அந்த அனுபவக் களத்துக்குள்ளேயே நிற்கச் செய்துவிடுகிறானே! 'வாழ்க தாய்' என்ற குரல் எங்கே இருந்து வருகிறது? அது "என் வாணியின் குரல்" என்கிறான். ஆங்கிலத்தில் 'மை ம்யூஸ்' (my muse) என்பார்களே, அதைத்தான் அவன் சொல்கிறான். அந்த அனுபவக் களம் அவனுடைய அகத்தின் ஆழத்தில் இருப்பதைத்தான் அவன் சுட்டிக் காட்டுகிறான். 'இவ்வான நீர்' என்ற சொற்றொடரிலுள்ள 'இவ்' என்ற சொல்லும், 'என் வாணி' என்பதில் உள்ள 'என்' என்ற சொல்லுமே இந்தக் கவிதையின் உயிர்ச் சொற்கள். இந்தக் கவிதையின் அனுபவக் களத்துக்கு வாசகனைக் கடத்திச் செல்லும் மந்திரச் சொற்கள். கவிஞன், தனக்குள் வாசகனை வரவேற்று, அழைத்துச் சென்று, அங்கே மழை பொழியும் ஓர் அனுபவக் களத்தில் அவனை நிற்கச் செய்து, அவனை மழையில் நனைய வைத்து, அவனுடைய ஐந்து புலன்களுக்கும் விருந்து படைத்து, அவனைத் திக்குமுக்காட வைக்கும் ஓர் உயர்ந்த கவிதை இது.

சமஸ்க்ருதத்தில் 'ப்ரதீபா சக்தி' என்று குறிப்பிடுவதைத்தான் நான் விளக்க முற்பட்டேன். மொழிவடிவம் பெறுவதற்கு முன்பே கவிதை ஜனித்து விடுகிறது. அது உயிருள்ளது. மொழி அதற்கு உடல் மட்டுமே வழங்குகிறது. உடலும் மிகவும் முக்கியம்தான். அந்த உடலாகிய மொழிவடிவம் ஏற்க உதவும் மகத்தான பணியைச் செய்யும் புத்தி சிகாமணியைப் புறக்கணிக்க முடியாது. ஆனால், அவன் முந்திரிக் கொட்டைபோல் ப்ரதீபா சக்திக்குள் அத்து மீறிப் பிரவேசித்து விடக் கூடாது. அங்கே அவனுக்கு வேலையில்லை. அது மனோன்மணியின் ஆட்சித்தளம்; ஆண் வாடையற்ற அல்லி அரசாங்கம்!

ப்ரதீபா சக்தி என்ற திறன்வாய்க்கப் பெற்றவர்களே மஹாகவிகள். அவர்கள் தீர்க்கதரிசிகள். வரப்போவதை முன்கூட்டியே ஞான திருஷ்டியில் கண்டு சொல்லக் கூடியவர்கள். இப்படித்தான் நான் நினைத்திருந்தேன். பாரதியே அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் தோன்றினான். அவன் சொன்ன படியே நடந்த செய்திகள் எத்தனை! நூறாண்டுகளுக்கு முன் அவன் பாடிய போது, "சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்" என்று நாம் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லையே! சந்தி தெருப்பெருக்குதல் ஒரு சாத்திரமாக, விஞ்ஞானமாக வளரும் என்று

நினைத்தோமா? அணுக்களுக்கு ஆங்கிலத்தில் 'ஸ்பின்' எனப்படும் சுழற்சி உண்டு என்பது, 1925-ஆம் ஆண்டு, இரண்டு ஜெர்மானிய விஞ்ஞானிகள் சொல்லும்வரை நமக்குத் தெரியாத போது, 1921-லேயே இறந்துவிட்ட பாரதிக்கு மட்டும் எந்த இயல்நூலார் அது பற்றிச் சொல்லி, அவனைப் பாஞ்சாலி சபதக் காவியத்தில், "இடையின்றி அணுக்களெல்லாம் சுழலுமென இயல்நூலார் இயம்பக் கேட்டோம்" என்று பாட வைத்தனர்? "இடையின்றி" என்ற சொல்லின் கனபரிமாணங்களை முழுதும் விளக்க இது இடமில்லை. வியப்பதோடு நிறுத்திக் கொள்கிறேன். அப்பப்பா, இது என்ன தீர்க்க தரிசனம்! என் வியப்புக்குச் சரியான விடை தந்தவர் ஒரு பெரிய மஹான். அந்த விடையைப் பற்றிச் சொல்வதற்கு முன், அவரோடு எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைச் சொல்ல வேண்டும்.

அந்த மஹானும், என் தாத்தா, அதாவது, என் தந்தையின் தந்தை, ம்ருத்யுஞ்ஜய தீக்ஷிதரும் கரூரில் ஒருசாலை மாணாக்கர்களாம். அதாவது, ஒரே பள்ளியில் படித்த பால்ய நண்பர்கள். என் தாத்தாவுக்குத் திருமணம் ஆன பிறகு அவர் இல்லத்தில் என் பாட்டி பாலசுந்தராம்பாள் பரிமாற, என் தாத்தாவோடு அந்த மஹான் பலமுறை உணவருந்திய செய்தியும் நான் கேள்விப்பட்டுள்ளேன். என் தாத்தா நான் பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்பே, என் தந்தை பள்ளிச் சிறுவனாக இருந்த போதே இறந்து விட்டார்.

எனக்கு வயது 7 அல்லது 8 இருக்கும், 1960-61 என்று நினைக்கிறேன். என் வீட்டுக்கு அருகில் உள்ள மண்டபத்திற்கு அந்த மஹான் விஜயம் செய்திருந்தார். அவரைப் பார்க்க என் பாட்டி என்னை அழைத்துச் சென்றிருந்தார். அவர் அந்த மண்டபத்தின் மேடையில் வீற்றிருந்தார். மேடையிலிருந்து வெகு தொலைவில் இருந்த ஒரு தூண் மறைவில் பாட்டி அமர்ந்து கொண்டு ஒரு வாழைப்பழத் தட்டை என்னிடம் தந்து, போய் அதை அந்த மஹானிடம் தந்து ம்ருத்யுஞ்ஜய தீக்ஷிதரின் பேரன் என்று சொல்லி வணங்கி வரச்சொன்னாள். அவர் இருந்த மேடைக்கும், நாங்கள் இருந்த தூணுக்கும் நடுவில் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் தரையில் அமர்ந்திருந்தனர். அவர்களை எல்லாம் தாண்டிக் கொண்டு எப்படியோ மேடையில் ஏறி அவரிடம் தட்டை வைத்து விட்டு வணங்கினேன். நான் இன்னார் பேரன் என்று சொல்ல வாயெடுத்தேன். அவரை அருகில் கண்ட மலைப்பில் வார்த்தை வரவில்லை. நான் எதுவும் சொல்வதற்கு முன்பே, அவர் முந்திக் கொண்டு, "ம்ருத்யுஞ்ஜயன் பேரனா?" என்று கேட்டு விட்டு, நான் கொடுத்த வாழைப்பழச் சீப்பிலிருந்தே ஒரு பழத்தை எடுத்து எனக்குத் தந்து ஆசி வழங்கி அனுப்பியதும், வியர்த்து,

விறுவிறுத்துப் போனேன். அவர் சொன்னதைப் பாட்டியிடம் வந்து சொல்லி வியந்ததும், பாட்டி "அவர் ஒரு தீர்க்கதரிசி" என்று சொன்ன போதுதான் அந்தச் சொல்லை நான் முதலில் கேள்விப்பட்டேன். அன்று மயிலை, சமஸ்க்ருதக் கல்லூரியில் சந்தித்த காஞ்சி மஹாபெரியவர்தான் கவிஞர்களின் ப்ரதீபா சக்தி பற்றியும், தீர்க்க தரிசனம் பற்றியும் எனக்கு ஒரு தெளிவு ஏற்படுத்தினார்.

காஞ்சி மஹாபெரியவரின், 'தெய்வத்தின் குரல்' என்ற நூலை நான் பிறகு படிக்க நேர்ந்தது. அதில் அந்த மஹானின் கருத்து நேர்மையும், நடைத் தெளிவும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவர் சொல்லியிருந்த சில கருத்துகளில் அப்படியே உடன்பட என் சிற்றறிவு தயங்கினாலும், அதன் பல செய்திகள் என்னை மிகவும் பாதித்ததை நான் மறுப்பதற்கில்லை. அதன் நான்காம் பாகத்தில், அவர் ஒரு செய்தி சொல்கிறார். காளிதாசனிடம் தனக்கு ஒரு சரமகவி பாடுமாறு போஜராஜன் கேட்டுக் கொண்டும், கட்டளையிட்டும், காளிதாசன் மறுத்து விடுவதற்கு நிறைய காரணங்களை அவர் அதில் சொல்கிறார். அப்படிப் பாடினால் நிஜமாகவே போஜன் உயிர் பிரிந்துவிடும் என்று காளிதாசனுக்குத் தெரியும் என்பதும் ஒரு காரணம் என்று சொல்கிறார். அந்தக் கருத்துச் சூழலில் மஹாபெரியவர் எழுதுகிறார்:

"இன்னொரு காரணத்தாலும் அவன் கல்பனையாகச் சரமகவி பாட முடியாமலிருந்தது. ரிஷிகளைப் பற்றி பவபூதி "உத்தரராம சரித"த்தில் ஸ்ரீ ராம சந்த்ர மூர்த்தியின் வாயிலாக ஒரு உண்மையைச் சொல்கிறார். "ஏனைய மக்கள் என்ன நடக்கிறதோ அதைச் சொல்வார்கள். ரிஷிகளோ என்ன சொல்கிறார்களோ அது நடந்துவிடுகிறது. ஒரு விஷயத்தை மற்றவர்கள் வார்த்தையாகச் சொல்கிறார்களென்றால், ரிஷிகளைப் பொறுத்தமட்டிலே அவர்கள் சொல்கிற வார்த்தையை விஷயம் ஓடிப்போய்ப் பிடித்துக்கொண்டு நிஜமாகிவிடுகிறது – வாசம் அர்த்தோ (அ) நுதாவதி" என்று ராமர் வஸிஷ்டரைக் குறித்துச் சொல்வதாக பவபூதி ஒரு General truth –ஐ (பொது உண்மையை) ச் சொல்கிறார்.

ரிஷியும், தெய்வாநுக்ரஹம் பெற்ற அருட்கவியும் ஒன்று என்பதற்கேற்ப, அம்பாளின் பரிபூர்ண க்ருபையைப் பெற்றிருந்த காளிதாஸனின் வாக்குக்கும் இப்படிப்பட்ட சக்தி இருந்தது. அதாவது அவன் வாக்கால் என்ன கவிதை வந்தாலும் அது நிஜமாகிவிடும். அவன் கல்பனையாகச் சொல்வதே ஸத்யமாகிவிடும்."

பாரதி தீர்க்கதரிசி, அவன் பின்னால் வரப்போவதைத் தன் ஞானக் கண்ணால் முன்கூட்டியே கண்டுரைத்தவன் என்று நினைத்துக் கொண்டிருந்த என்னை காஞ்சிப் பெரியவரின் கட்டுரை

*மாற்றி விட்டது. பாரதி போன்ற மஹாகவிகள் கண்டு சொன்னார்கள் என்பதை விட, அவர்களுடைய உள்ளத்தில் உண்மையொளி இருந்ததால் அவர்களுடைய வாக்கினிலும் ஒளியுண்டாகியது; அவர்கள் சொன்னதெல்லாம் அப்படியே பலித்தது, நிகழ்ந்தது என்று எனக்குப் புரிய வைத்தவர் மஹாபெரியவர்.*

*ஒரு மாஹாகவியை மஹரிஷிகளுக்கு ஈடாகக் கருதினார் மஹாபெரியவர். ஆம், உயிருள்ள கவிதைகளைப் படைப்பதால், மஹாகவிகள் கடவுளுக்கே நிகரானவர்கள். இதை எழுதும் போதே எனக்கு ஒருவர் நினைவுக்கு வருகிறார். மிகப்பெரிய கவிதை ரசிகராகவும், அதே சமயத்தில் குழந்தைகளுக்காக எழுதுவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டும் வாழ்ந்த அமரர் பூவண்ணனைத்தான் குறிப்பிடுகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கவியரங்கத்தில் முதன்முறையாக நான் அவரைச் சந்திக்க நேர்ந்தது. சென்னை, மைய நூலக வளாகத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் அவர் பேசிய போது, என்னைப் பற்றிக் குறிப்பிட்டு, என் கவிதை ஒன்றை, மனப்பாடமாகச் சொல்லிக் காட்டியதும் நான் மிகவும் வியப்படைந்தேன், மகிழ்ச்சியும் அடைந்தேன். அவர் சொன்ன என் கவிதை இதுதான்:*

**தீப்பிழம்பைக் கையில் அள்ளிச் சாறெடுக்கும் போது
தேன்வடிந்த தென்று சொல்லித் துள்ளுபவன் யாரு
தேன்வடிந்த துளிகளிலே பூவாசம் வைத்துத்
தென்றலிலே தூவியிசை கொள்ளுபவன் யாரு
கனவென்ற தேர்கொண்டவன் - ஒரு
கவிஞனெனப் பேர்கொண்டவன்**

**பெருவியப்பை ஒருசொல்லின் கூர்முனையில் வைத்துப்
பேரொளியை அதற்குள்ளே போட்டடைத்து வைத்து
மறுசொல்லுக் கிடையிலொரு மௌனத்தை வைத்து
மந்திரமாய்ச் சொல்லுகிற மானிடனும் யாரு
கடவுளையே நேர்கண்டவன் -ஒரு
கவிஞனெனப் பேர்கொண்டவன்**

**சொல்வதொரு பாதியவன் சொல்வதில்லை மீதி
சொல்லியதே சொல்லாத தையுணர்த்தும் நீதி
வெல்லுவதும் இன்பமதில் தோற்பதுவும் இன்பம்
வேற்றுமை யிலாதவனை ஏற்பதுவும் இன்பம்
காலத்தின் சீர்கொண்டவன் -ஒரு
கவிஞனெனப் பேர்கொண்டவன்**

*கடவுளையே நேர்காண்பது சாத்தியமா? இதற்கு விடை தேடித்தானே நரேந்திரன் பித்துப்பிடித்து அலைந்தான்.*

# 43

“கடவுள் உண்டா, இருந்தால் காட்டு” என்று வெறிகொண்டு அலைந்த நரேந்திரனையும் நான் பார்த்ததில்லை. அவனுக்குத் தொடுகுறி மூலமாக அநுபூதி தந்து, அவனை விவேகானந்தன் ஆக்கிய காளி கோயில் பூசாரியையும் நான் பார்த்ததில்லை. ஆனால், பராசக்தியைப் பார்ப்பதொன்றே தன் வாழ்வின் லட்சியம் என்று சொல்லி, மற்ற எல்லாவற்றையும் அலட்சியமாகப் பார்த்த ஒருவனை, ஏறக்குறைய நரேந்திரன் போலக் காட்சி தந்த ஒரு நண்பனை, நான் கண்டு வியந்தேன். அவனும் டாக்டர் நித்யானந்தத்தின் சீடனாக வந்தடைந்தான். ‘உனக்கு என்ன வேண்டும்?’ என்று டாக்டர் கேட்ட போதெல்லாம், “பராசக்தியைப் பார்க்க வேண்டும்” என்பதைத் தவிர வேறெந்த பதிலும் சொல்ல மறுத்த அவனுடைய வீராப்பில் ஒரு லட்சிய வெறி இருந்தது. பல மாதங்கள் ஆகியும், வேறேதாவது கேளப்பா என்று அவனிடம் டாக்டர் சொல்லியும் மறுத்துக் கொக்குக்கு ஒன்றே மதி என்பது போல் பராசக்தி தரிசன வேட்கை தவிர வேறெதுவும் கேட்காமல், அதிகம் பேசாமல், டாக்டரையே தினமும் பார்த்து வந்தான்.

ஒருநாள், மந்தைவெளி தெருவில் நாங்கள் வசித்த போது, வேர்க்க, விறுவிறுக்க என் வீட்டுக்கு ஓடி வந்தானாம். ஷோபனா மட்டுமே வீட்டில் இருந்தாள். அப்போது அவன் சொன்னது, நடந்தது எல்லாவற்றையும் தான் எழுதிய ‘கேடலிஸ்ட்’ (Catalyst) என்ற ஆங்கிலப் புத்தகத்தில் ஷோபனா எழுதியுள்ளாள். அந்த நண்பன், அவன்தான் இன்றைய திராவிட மாயை சுப்பு, அவனும் என் காதுபடப் பலமுறை இந்த நிகழ்ச்சியைச் சொல்லியிருக்கிறான். அந்த நிகழ்ச்சியை இங்கே விவரிக்கிறேன்:

மிகுந்த பரபரப்போடு காணப்பட்ட சுப்பு, “ஷோபனா, அந்த ஆளைப் பற்றி எச்சரிக்கவே இங்கே வந்தேன்” என்றானாம். “பராசக்தியைக் காண வேண்டும்” என்று அவன் விடாமல் செய்த

நச்சரிப்புத் தாங்காமல், அதற்கு முந்தின நாள் பகல் வேளையில், டாக்டர் அவனைத் திருவொற்றியூர் கடற்கரையில் இருந்த (இப்போது இல்லை!) ஒரு பழைய, பாதி இடிந்த, மிகச்சிறிய கோயிலுக்கு அழைத்துச் சென்றாராம். அங்கு ஒரு பராசக்தி சிலை மட்டுமே இருந்ததாம். அழுக்கான கந்தல் ஆடை அணிந்த ஒருவன் அங்கே இருந்தானாம். அவன் குடித்து விட்டு உளறிக் கொண்டிருந்தானாம். அவன் தன்னை டாக்டரின் சீடன் என்று வேறு சொல்லிக் கொண்டானாம். டாக்டருக்கும் அவனை நன்றாகத் தெரிந்திருந்தது. "அம்மாவை ஒழுங்கா பாத்துக்க மாட்டே?" என்று டாக்டர் அவனைக் கண்டித்துவிட்டுக் கொஞ்சம் எண்ணை கொண்டுவரச் சொன்னாராம். சிலைக்கு எண்ணையூற்றித் தேய்த்து விட்டுத் திரும்பி சுப்புவைப் பார்த்தாராம். அவன் குனிந்து, கண்ணை மூடிக் கொண்டிருந்தானாம். அந்தக் குடிகாரன் கெட்ட, கெட்ட வார்த்தைகளில் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தானாம். நடுநடுவே பராசக்தியை வேறு திட்டிக் கொண்டிருந்தானாம். சுப்புவுக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை. அப்போது டாக்டர் சுப்புவிடம், "ம், நிமுந்து பாரு. கண்ணத்தொற!" என்று அதட்டினாராம். சுப்பு நிமிரவும் இல்லை, கண்ணைத் திறக்கவும் இல்லை. மீண்டும் டாக்டர் அதையே சொல்ல, சுப்புவும் அப்படியே குனிந்தபடிக் கண்மூடியபடியே இருந்தானாம். குடிகாரன், உளறலின் உச்சக் கட்டத்தில் கூவிக் கொண்டிருந்தான்: "அவளப் பாக்கறது அவ்வளவு லேசுப்பட்ட காரியமா? பாத்துடுவியா? (கெட்ட வார்த்தைகள் ...) அவ அதுக்கெல்லாம் மசிய மாட்டா..."

அச்சம் என்பதையே அதுவரை அறிந்திராத சுப்புவின் மனத்தில் அச்சம் சூழ்ந்து கொண்டது. பீதி என்று கூடச் சொல்லலாம். தான் அமர்ந்திருந்த தரை அப்படியே பிளந்து, நழுவுவதைப் போல் அவன் உணர்ந்தான். இதுவரை தான் அறிந்திராத இன்னொரு பரிமாணத்துக்குள் யாரோ தன்னை இழுத்துச் செல்வது போல்......"சரி, சரி போய் வெளியே சற்றுக் காற்று வாங்க நடந்து விட்டு வந்து பார்" என்று டாக்டர் சொன்னதும் தப்பித்தேன், பிழைத்தேன் என்று அங்கிருந்து புறப்பட்டு ஓடிச் சென்று பேருந்தில் ஏறி வீட்டுக்குப் போய்விட்டான் சுப்பு.

மறுநாள் என் வீட்டுக்கு வந்து ஷோபனாவிடம் நடந்ததைச் சொல்லி டாக்டர் பற்றி அவளை எச்சரித்து விட்டுப் போய் விட்டான். பிறகு, சில நாட்கள் கழித்து எப்படியோ மீண்டும் டாக்டரின் இணைபிரியாத சீடனாக அவனே ஐக்கியமான கதையும், மேலும் சில ஆண்டுகள் கழித்து மறுபடியும் டாக்டரின் வட்டத்தில் இருந்து பிரிந்துவிட்ட கதையும் இங்கே, இந்தச் சூழலில் விவரிக்கத் தேவையில்லை.

யாரை அல்லது எதைப் பார்க்க வேண்டும் என்பதே ஒரே லட்சியமாக சுப்பு கொண்டிருந்தானோ, அவளை, அதை அவனால் பார்க்க முடியவில்லை.

பராசக்தி என்பது கோடானு கோடி அண்டங்களை உள்ளடக்கி இன்னும், இன்னும் விரிந்து கொண்டே இருக்கும் ஒட்டு மொத்த பிரபஞ்ச சக்தி. அதன் வீரியத்தை எப்படிக் கணக்கிட முடியும்? கோடானு கோடி சூரியக் கோளங்களையும் ஒளி மங்கச் செய்யும் ஜ்வாலை அது. அதை எப்படிப் புறக்கண்ணால் பார்க்க முடியும்? ஸ்ரீ கிருஷ்ணன் காட்டிய விஸ்வரூப தரிசனத்தை அர்ஜுனனால் முழுதாகப் பார்க்க முடிந்திருக்குமா? இந்தப் புவிமிசை நின்று கொண்டே பூமிப் பந்தின் முழுத் தோற்றத்தை ஒருவனால் நேரில் காண முடியுமா? பூமிப்பந்தில் இருந்து மேலெழும்பி வெகுதூரம் பறந்து சென்றால், பூமியின் முழுத்தோற்றத்தைப் பார்க்க முடியும். ஆனால் முழுமையாகப் பிரபஞ்சத்தையே காண வேண்டுமென்றால், பிரபஞ்சத்தை விட்டு வெளியே போக வேறு இடம் ஏது? 'கண்ணைத் தொறந்து நிமுந்து பாருப்பா' என்ற டாக்டர் சொன்ன போது சுப்பு நிமிர்ந்து, கண்ணைத் திறந்திருந்தால் என்ன பார்த்திருப்பான்? யாருக்குத் தெரியும்?

தர்க்க ரீதியாக மெய்யியல் பாடத்தில் படித்து நான் குழம்பிக் கொண்டிருந்த சில உண்மைகளை அனுபவ ரீதியாக விளங்கிக் கொள்ள இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எனக்கு உதவின. விட்ஜன்ஸ்டைன் என்ற ஆஸ்டிரிய நாட்டுத் தத்துவ ஆய்வாளர் பற்றி நான் முன்பே குறிப்பிட்டேன் இல்லையா? அவருடைய கருத்துப் பள்ளி 'வியன்னா வட்டம்' (the vienna circle) என்றே பிற்பாடு பெயர் பெற்றது. மோரிட்ஜ் ஷ்லிக், ருடால்ஃப் கார்னாப் போன்ற தத்துவப் பேராசிரியர்களின் குழுவால் வளர்க்கப் பட்ட வியன்னா வட்டத்தின் பாதிப்பில் "தர்க்க உடன்பாட்டியல்" (Logical Positivism) என்ற இன்னொரு கருத்துப் பள்ளி இருபதாம் நூற்றாண்டின் மையப் பகுதியில் வளர்ந்தது. அந்தப் பள்ளியைச் சார்ந்த கில்பர்ட் ரைல், ஏ.ஜே.அயர் போன்ற தர்க்க நிபுணர்கள் ஒரு கருத்தை முன்மொழிந்தனர். பராசக்தியைப் பார்க்க வேண்டும் என்ற சுப்புவின் ஆசையோடு தொடர்புடைய அந்தக் கருத்தோட்டத்தைப் பொருத்தம் கருதி நான் இங்கே விவரிக்க வேண்டியுள்ளது. முடிந்தவரை எளிமையாகச் சொல்ல முயற்சி செய்கிறேன். சற்று என்னோடு ஒரு தர்க்க ரீதியான பயணம் மேற்கொள்ள உங்கள் மனத்தைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

கில்பர்ட் ரைல் என்ற பேராசிரியர் "மனம் என்ற கருத்தீடு" (The Concept of Mind) என்ற தம்முடைய நூலில் "கேட்டகரி மிஸ்டேக்" (Category Mistake) என்ற ஒரு கருத்தீடு பற்றிக்

குறிப்பிடுகிறார். ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தைக் காண வரும் ஒரு நபர், அங்குள்ள வகுப்பறைகள் கொண்ட கட்டிடங்கள், நூலகம், விளையாட்டு மைதானம் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, "அது சரி, பல்கலைக் கழகம் எங்கே?" என்று கேட்டாராம். இதைத்தான் 'கேட்டகிரி மிஸ்டேக்' என்று ரைல் சொல்கிறார். வகுப்பறைகள், நூலகம், சோதனைக் கூடம் போலவே பல்கலைக் கழகம் என ஒன்று தனியாகக் காட்சிதர வேண்டும் என்று அந்த நபர் தப்பிதமாக நினைத்துக் கொண்டார். அதைத்தான் ரைல் 'கேட்டகிரி மிஸ்டேக்' என்று குறிப்பிடுகிறார். தமிழில் அந்தக் கருத்தை, "வகுப்புத் தப்பிதம்" அல்லது "முறைமாற்றுத் தப்பிதம்" என்று சொல்லலாமா? அந்தத் தப்பில் ஓர் கள்ளம் கபடமற்ற அறியாமை கலந்திருப்பதால், அதை இதம் செய்யவே தப்பிதம் என்ற சொல் பயன்படுகிறது.

கால்பந்தாட்டத்தில் சில விதமான ஆட்டங்கள் "ஃபவுல்" (foul) எனப்படும். அதாவது, தப்பாட்டம் எனப்படும். ஆனால் கால்பந்தாட்டமே ஃபவுலா இல்லையா, தப்பாட்டமா இல்லையா என்ற கேள்வி கேட்கலாமா? அப்படிக் கேட்பதே "வகுப்புத் தப்பிதம்". சரி, இன்னும் எளிமையாக, வாழ்க்கையிலிருந்து ஓர் உதாரணம் தருகிறேன்.

வானம் இருண்டு காணப்பட்ட ஒரு பகல் வேளையில், அன்று புயல் வரப்போகிறது என்று தன் பாட்டி சொன்னதைக் கேட்ட ஒரு நாலைந்து வயதுப் பெண் குழந்தை, மழைச் சாரலையும் பொருட்படுத்தாமல், வீதியைப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் வெளியே அமர்ந்து கொண்டிருந்தாளாம். அதைப் பார்த்துவிட்டு, அவளுடைய அம்மம்மா, (பாட்டியை அந்தக் குழந்தை அப்படித்தான் அழைப்பாள்), 'உள்ளே வா' என்று சத்தம் போட்டாளாம். குழந்தையோ, எப்படியும் புயலைப் பார்த்துவிட்டுத்தான் உள்ளே போக வேண்டும் என்று நினைத்திருந்தாளாம். "புயல் வந்து போய் விட்டது" என்று கேட்டதும் அவளுக்கு ஏமாற்றம் ஆகிவிட்டதாம். அந்தச் சின்னக் குழந்தை 'புயல்' என்பது முயல் போல ஒரு சிறிய மிருகம் என்று நினைத்து அதைப் பார்க்கக் காத்திருந்ததாம். அந்தக் குழந்தை வேறு யாருமில்லை, ஐந்தாறு வயதில் ஷோபனாதான். அவள் இந்தக் கதையைப் பலமுறை சொல்லக் கேட்டுள்ளேன். என்ன ஒரு கள்ளம் கபடமற்ற தவறு பார்த்தீர்களா? முயல் போலப் புயல் வரும் என்பது ஒரு வகுப்புத் தப்பிதம்தானே!

இந்த உலகத்தில் ஒரு ரூபாய் நோட்டைப் பார்த்து இது நிஜமா என்று கேட்டால், அந்த நோட்டு செல்லுபடியாகும் நோட்டா, இல்லை கள்ள நோட்டா என்று பொருள் படும். அதே போல்,

ஒரு பூனை வடிவைப் பார்த்து இது நிஜமான பூனையா என்று கேட்டால், அது உயிருள்ள பூனையா, இல்லை பூனை பொம்மையா என்று அர்த்தம். கண்ணுக்கு நீர்த்தடாகம் போல் தெரியும் ஒன்றை நிஜமா என்று கேட்டால், அது கானல் நீரா இல்லை குளமா என்று புரிந்து கொள்ளலாம். ஆனால், இந்த உலகமே நிஜமா என்ற கேள்வியை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? நிஜமான உலகம் எது என்பதும், அதன் பொய்த்தோற்றம் எது என்பதும், ஆகிய இரண்டும் தெரிந்திருந்தால்தான் அந்தக் கேள்விக்கு அர்த்தம் புரியும். இதுதான் "வகுப்புத் தப்பிதம்" என்பது.

ஏலகிரி மலையைக் காட்டிலும் நீலகிரி மலை உயர்ந்தது என்று சொல்லலாம். சரி, நீலகிரியைக் காட்டிலும் அடக்கம் உயர்ந்ததா என்ற கேள்விக்கு அர்த்தம் உண்டா? அது வகுப்புத் தப்பிதம் இல்லையா? அடக்கத்துக்கு உருவமே கிடையாதே, அதன் உயரத்தை எப்படி அளந்தறிவது?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சுருக்கம், சுருக்கமாக 1330 பாக்கள் எழுதி வைத்த கிழவருக்கு என்ன தெரியும்? அவர் ரைலைப் படித்திருக்க வாய்ப்பில்லையே. அதனால்தான் தப்பிதமாகச் சொல்லி வைத்தார்:

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

அடக்கம் உடையவரின் தோற்றம் திருவள்ளுவரின் மனக்கண்ணுக்குத் தெரிந்தது பற்றியும், அது மலையைக் காட்டிலும் உயரமாக அவருக்குத் தோற்றம் தந்தது பற்றியும் நாம் கில்பர்ட் ரைலிடம் விவாதிக்கத் தேவையில்லை.

இதையாவது அடக்கமுடையவனின் தோற்றம் என்று கொள்ளலாம். இன்னொன்று சொல்கிறாரே:

**காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது**

அதாவது, உதவி என்பது அகில உலகத்தையும் விட மிகப் பெரிது என்று சொல்கிறாரே! உதவிக்கு உருவம் ஏது? அப்பா, இந்தக் கவிஞர்களின் பார்வையே தனி! அவர்களை வைத்துக் கொண்டு அறிவு சார்ந்த விஷயங்களை ஆராய முடியாது. இதை நன்கறிந்த ப்லேட்டோ (Plato) என்ற க்ரேக்க தத்துவ ஞானி, தான் கனவு கண்ட இலட்சியக் குடியரசில் இருந்து கவிஞர்களை நாடு கடத்திவிட வேண்டும் என்று எழுதி விட்டான்.

பராசக்தி என்பது பிரபஞ்சத்தின் மூல சக்தி; அதன் ஒட்டு மொத்த சக்தியும் அதுவே. எப்படி வித்தே விருட்சத்தின்

*மூலமோ, வித்துக்குள் விருட்சம் அடக்கமோ அது போல. இந்த பிரபஞ்சத்தின் காரண மூலமான சக்தியே இந்த பிரபஞ் சத்தின் ஒட்டு மொத்தமான சக்தியாகவும் இருக்கிறது என்பதைப் பகுத்தறிவு ரீதியாக விளக்கிச் சொல்வதில் சிக்கல்தான் ஏற்படும். ஆனால், அதை அனுபவமாக்கப் பராசக்தியே குருநாதன் மூலம் தயாரான போது, அச்சத்தால் அந்த வாய்ப்பை ஒருவன் இழக்க நேரிட்டதைத்தான் மேலே சொன்னேன்.*

*பிறகு ஷோபனாவிடம் டாக்டர் சொன்னாராம்: "பராசக்தி தரிசனம் எல்லாருக்கும் கிடைக்காது. சுப்புவுக்கு அந்தத் தரிசனத்தைத் தரச்சொல்லி எல்லாரும் பரிந்துரைத்தார்கள். அதனால்தான் அந்த வாய்ப்பை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்தேன். அவன் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை."*

*அந்த 'எல்லாரும்' யார், யார்? மஹரிஷிகளா, தெய்வங்களா? முப்பத்து முக்கோடித் தேவர்களா? யாருக்குத் தெரியும்?*

*1990–ஆம் ஆண்டு, ஒருநாள், நண்பர்களும் நானும் டாக்டரைச் சூழ்ந்து கொண்டு அமர்ந்திருந்தோம். திடீரென்று டாக்டர் என் மடியில் தலைசாய்த்துப் படுத்துக் கொண்டு, "பாடுப்பா" என்றார். எப்படிப் பாட முடியும் என்பதையே ஒரு பாட்டாகப் பாடினேன்:*

**வான்மதியைத் தூங்க வைக்கச் சின்னமலர் பாடுவதா
சூரியனைத் தூங்க வைக்கத் தீபமெழுந் தாடுவதா
நானிசைக்கும் பாட்டினிலே நீயுறங்கப் போவதில்லை
என்னுயிரைக் கண்மணியில் வைத்திருக்கும் மன்னவனே**

**தேன்பொழியத் தேன்பொழிய வண்டுறங்கிப் போவதுண்டா
தென்றலுக்குத் தோள்கொடுத்து மாமலை துயில்வதுண்டா
என்மடியில் நீயுறங்க விண்ணுமண்ணும் சேர்ந்துறங்கும்
மண்டலங்கள் நம்மருகில் செண்டுகளைப் போலிறங்கும்
என்னுயிரைக் கண்மணியில் வைத்திருக்கும் மன்னவனே**

**வானமழை பொழிந்தவுடன் சின்னவிதை கண்விழிக்கும்
சின்னவிதை கண்விழித்தால் ஆலமரம் நிழல்விரிக்கும்
ஆலமரத் தின்நிழலில் ஆவினங்கள் படுத்திருக்கும்
ஆவினங்கள் கண்வளர நீலக்குயில் பண்ணிசைக்கும்
என்னுயிரைக் கண்மணியில் வைத்திருக்கும் மன்னவனே**

புயல் வருகிறதா என்று காத்திருந்து பார்ப்போமே!

# 44

இப்பொழுதெல்லாம் கவிஞன் என்று ஒருவன் தன்னைச் சொல்லிக் கொண்டால், மரபுக் கவிதைகள் எழுதும் கவிஞனா, இல்லை, புதுக்கவிதைகள் எழுதும் கவிஞனா என்ற கேள்வி உடனே கேட்கப்படுகிறது. பெரிய விவாதங்களைத் தவிர்த்து எளிமையாகச் சொல்வதென்றால், தமிழ் யாப்பிலக்கண நூல்களில் சொல்லப்படும் செய்யுள் வகைகளில் எழுதப்படும் கவிதைகள் மரபுக் கவிதைகள் எனவும், அப்படியின்றி எந்த யாப்பிலக்கணக் கட்டுப்பாடுகளுக்கும் அடங்காமல், கிட்டத்தட்ட உரைநடை வடிவில் எழுதப்படும் வெளிப்பாடுகள் புதுக்கவிதைகள் எனவும் பொதுவாகக் குறிக்கப் படுகின்றன.

நான், சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் சேர்ந்த போது சரியாகத் தமிழ் எழுதக் கூடத் தெரியாமல் இருந்த கதையையும், ஆனால் எட்டாம் வகுப்பில் நுழையும் போது தமிழில் கவிதை எழுதுபவனாக மாறிவிட்ட ரசவாதம் பற்றியும் முன்பே அளந்து கொட்டிவிட்டேன். ஏறக்குறைய மூன்று மாதங்களில் அப்படியொரு மாற்றம் ஏற்படும் வண்ணம் என் நாவில் தேன்பிலிற்றிய தேவதை யாரோ, தெரியவில்லை. எல்லாம் பராசக்திதானே!

எட்டாம் வகுப்பில் நுழையும் போது கவிஞனாக மட்டுமன்றித் தமிழ் இலக்கணம் ஓரளவு படித்த புலவனாகவும் மாறியிருந்தேன். திரு.கிருஷ்ணராமானுஜம் பிள்ளை என்ற ஆசிரியர் எங்களுக்குத் தமிழ் இலக்கணம் பயிற்றுவித்தார். அவரிடம் பயின்ற போது, இலக்கணத்தின் அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டேன். இலக்கணம் என்பது என்றைக்குமே மாறா விதிகளின் தொகுப்பு இல்லை, காலத்துக்கு ஏற்ப, மக்கள் பேசும் மொழிக்கு ஏற்ப, எழுதும் நடைக்கு ஏற்ப, அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும்

விதிகளின் தொகுப்பே என்பதைப் புரிந்து கொண்டேன். இலக்கண விதி ஒவ்வொன்றின் பின்னணியிலும் அந்த விதிக்கான காரணம், அல்லது, தேவை மறைந்திருப்பதை விளங்கிக் கொண்டேன். அந்த விதிகள், மக்கள் மொழியிலிருந்தும், படைப்பாளிகளின் எழுத்துகளில் இருந்தும் தேர்வு செய்யப் பட்டுத் தொகுக்கப் படும் உண்மையை அறிந்து கொண்டேன். இந்த அடிப்படைக் கருத்துகளை என் ஆசிரியர் கிருஷ்ணராமானுஜம் பிள்ளை என் நெஞ்சில் ஆழமாகப் பதித்ததால், கல்லூரி சென்ற பிறகு, தமிழ்க்கடல் என்றே போற்றப்படும் ஒரு மிகப் பெரிய தமிழ்ப் பேராசிரியரிடமே தமிழ் இலக்கணம் பற்றி விவாதிக்கும் அளவுக்குத் துணிந்தேன்.

1968–69, விவேகானந்தா கல்லூரியில், புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதெல்லாம் அப்படியோர் வகுப்பு இருந்ததாம், அதற்கு ஆங்கிலத்தில் பி.யூ.சி. என்று பெயராம்! அப்போது நான் எழுதிய இலக்கணக் குறிப்பு ஒன்றைத் தவறு என்று சொல்லி என் தமிழாசிரியர் அதற்கு மதிப்பெண் தரவில்லை. நான் அவரிடம் வாதம் செய்தும் பயனில்லை. வகுப்பு முடிந்ததும் அந்த விடைத்தாளை எடுத்துக் கொண்டு தமிழ்த்துறைத் தலைவர், தமிழ்க்கடல் என்று குறிப்பிட்டேனே, பேராசிரியர் ஜகன்னாதாச்சாரியாரிடம் சென்றேன். நான் விடுவதாக இல்லை. அது வெறும் வகுப்புத் தேர்வுதான், பொதுத் தேர்வு இல்லை. ஆனால், அந்தக் குறிப்புத் தவறென்றால் அது எனக்கு இழுக்கு இல்லை, எனக்குத் தமிழ் இலக்கணம் சொல்லித் தந்த கிருஷ்ணராமானுஜம் பிள்ளைக்கு இழுக்கு என்றுணர்ந்து விடாப்பிடியாக ஜகன்னாதாச்சாரியார் வரும் வரை காத்திருந்தேன். அவர் வந்ததும் விடைத்தாளை அவரிடம் தந்து விளக்கினேன். ” ஏந்தெழில் இராமன்” என்ற சொற்றொடரில் முதற்சொல்லுக்கு இலக்கணக் குறிப்பு வரைக என்ற கேள்விக்கு, முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என்று நான் எழுதியதை ஆசிரியர் தவறு என்று அடித்து விட்டு அது வினைத்தொகை என்று கூறி எனக்கு மதிப்பெண் தர மறுத்துவிட்ட விவரத்தை அவரிடம் சொன்னேன். “அட, விடுப்பா! பத்துக்கு இரண்டு மதிப்பெண் போனால் போகட்டும்” என்றார் அவர். நான் விடவில்லை. மதிப்பெண் முக்கியம் இல்லை சார், எனக்குத் தமிழ் சொல்லித் தந்த ஆசானின் மதிப்புப் பிரச்சினை இது என்று நான் சொன்னதும், பலே, இங்கே கொண்டா என்று என் விடைத்தாளை வாங்கிச் சற்று நேரம் பார்த்துவிட்டு, “நீ சொல்வதை ஒப்புக் கொள்ள முடியவில்லையே. ‘ஏந்தெழில்’ என்பது வினைத்தொகை தானே. அத்துடன் தமிழ் இலக்கணத்தில் முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை கிடையாதே!” என்று அவர்

சமாதானம் செய்ய முயலும் போது, கல்லூரி முதல்வரிடம் இருந்து அவசர அழைப்பு வரவே, அவர் சென்று விட்டார். நான் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டேன். அன்று மாலை வகுப்புகள் முடிந்ததும் ஒருவர் வந்து என்னை ஜகன்னாதாச்சாரியார் அழைப்பதாகத் தெரிவித்தார். விடைத்தாளுடன் ஓடினேன். மீண்டும் அதை வாங்கிப் பார்த்து விட்டு, நீ இப்படிக் குறிப்பு வரைந்ததற்குக் காரணம் சொல்லு என்றார். நான் சொன்னேன்: ஏந்திய எழில், ஏந்தும் எழில், ஏந்தப் போகும் எழில் என்று பொருள் கொண்டால் அது வினைத்தொகை. ஆனால் அதை அப்படிப் பொருள் கொள்ள என் மனம் இடம்தரவில்லை. எழிலை ஏந்துகின்ற இராமன் என்றுதான் பொருள் கொள்ளத் தோன்றுகிறது. எழிலை ஏந்துகின்ற என்பது முன்பின்னாகவும், இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ" மறைந்தும் இருப்பதால் 'ஏந்தெழில்' என்பதை முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என்று எழுதினேன், ஏந்து இராமன் என்றிருந்தால் அதை வினைத்தொகை என்று போட்டிருப்பேன் என்று நீண்ட பிரசங்கம் செய்தேன். ஒரு நிமிடம் யோசித்து விட்டு, "முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என ஒன்று இலக்கணத்தில் இல்லையே!" என்று அவர் கேட்டார். அதற்கு நான் இலக்கியத்தில் இருக்கிறதே என்றேன். சரி, இந்தத் தொடர் கம்பராமாயணத்தில் வருகிறது. இதே போல் வேறு இலக்கியத்தில் எங்காவது உண்டா என்று கேட்டார். உடனே சொன்னேன், பெரிய புராணத்தில் "ஏந்துபூம் பந்தர்" என்ற சொற்றொடர் வருகிறதே என்று. ஜகன்னாதாச்சாரியார் என் விடைத்தாளில் தம் கைப்பட என் இலக்கணக் குறிப்புக்கு முழுமதிப்பெண் போட்டுக் கொடுத்து விட்டு, மறுநாள் என் வகுப்புக்கு வந்து இது பற்றிச் சொல்லிப் பாராட்டி ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டுச் சென்ற நிகழ்ச்சியை நான் மறக்க முடியுமா?

மாணவரிஸம் பத்திரிகைக்காகக் கிட்டத்தட்ட ஜகந்நாதாச்சாரியார் சாயலில் 'தமிழ் ப்ரொபஸர் தாத்தாச்சாரியார்' என்ற தலைப்பிட்டுப் பல்லாண்டுகளுக்கு முன் நண்பன் சு.ரவி வரைந்த ஒரு கோட்டோவியம் இப்பொழுது மனக்கண்ணில் நிழலாடுகிறது.

இன்னொரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். நாலைந்து ஆண்டுகளுக்கு முன் ஏதோ ஒரு கடிதத்தில், 'மாக்கவிஞன் பாரதி' என்றுநான் எழுதியிருந்ததைப் படித்து விட்டு நான் மிகவும் மதிக்கும் ஒரு நண்பர், 'மாகவி' என்பதுதான் சரி, மாக்கவி என்று நான் எழுதியது தவறு என்று சொன்னதாக நண்பர் சுப்பு என்னிடம் சொன்னதும் அந்த நண்பரையே தொலைப்பேசியில் அழைத்து, அப்படி எழுதும் துணிவைக் கவிச்சக்கரவர்த்தியே எனக்குத்

*தந்தான் என்று சொல்லிவிட்டு, கம்பராமாயணத்தில் வரும், "தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே" என்ற வரியை நினைவு படுத்தினேன். அவரும் சமாதானம் அடைந்தார் என்று நினைக்கிறேன்.*

*ஆண்டுதோறும், பாரதி பிறந்தநாளை ஒட்டி வானவில் பண்பாட்டு மையம் நடத்தும் விழாவை, "பாரதித் திருவிழா" என்றே எழுதி வந்தேன். பெயர்ச்சொல்லுக்குப் பிறகு ஒற்று மிகாது என்று பல புலவர்கள் எடுத்துரைத்தும் நான் மாற்றிக் கொள்ளவில்லை. இலக்கணத்தை விடவும் த்வனியில் அதிக ஈடுபாடு கொண்டதாலோ என்னவோ எனக்கு பாரதித் திருவிழா என்று சொல்லும் போது கிடைக்கும் உணர்ச்சி, 'பாரதி திருவிழா' என்றால் கிடைக்கவில்லை என்று தோன்றியது. மேலும், கந்தனுடைய புராணம் கந்த புராணம் என்று இருந்தாலும், கந்தனாகிய கடவுள் என்பதைக் கந்தக் கடவுள் என்றுதானே சொல்கிறோம். அது போல், இந்த விழாவை பாரதியுடைய விழா என்பதைக் காட்டிலும், பாரதியாகிய திருவிழா, அதாவது, பாரதியையே ஒரு திருவிழாவாகக் கொண்டாடும் வைபவம் என்று கொண்டால் அதை பாரதித் திருவிழா என்றுதானே சொல்ல வேண்டும்! சிவக்கொழுந்து, ராமச்சந்திரன், கிருஷ்ணப் பிரேமி, என்ற சொற்றொடர்களை என்ன சொல்வது? ஒரு வேளை ஈறுகெட்டு, அதாவது, கடைசி எழுத்து மறைந்து வருவதால், ஒற்று மிகலாம் என்பார்களோ? அப்படியானால், 'சக்திக் கனல்' என்பதற்கு என்ன சமாதானம்? 'கண்ணகி காப்பியம்' என்பது சரி. ஆனால், 'கண்ணகித் தெய்வம்' என்பதுதானே சரி! அப்படித் தானே 'பாரதித் திருவிழா'? நானே என் மனத்துக்குள் வாதங்களை அடுக்கி வைத்திருந்தேன். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், நான் பெரிதும் மதிக்கும் ஒரு கவிஞர், சிந்தனையாளர், குலோத்துங்கன் என்ற முனைவர் வா.செ.குழந்தைசாமி, தம் உடல்நிலையையும் பொருட்படுத்தாமல், இந்தப் பிரச்சினை குறித்து இரண்டு பக்கங்களுக்கு எனக்கு ஒரு கடிதம் எழுதி மாற்றச் சொன்னதும் மறுபேச்சுப் பேசாமல், "பாரதி திருவிழா" என்று மாற்றி விட்டேன். இலக்கணத்தை விட, த்வனியை விட, நட்பும், நாகரிகமும், பெரியோரை மதித்தலும் முக்கியம் இல்லையா? 'மானுட யாத்திரை' என்ற அரிய காப்பியம் வடித்த அந்த மாபெரும் புலவர் சொல்லை என்னால் தட்ட முடியவில்லை.*

*ஒருமுறை, பகுத்தறிவுப் பாசறை நண்பர்கள் குழுமியிருந்த இடத்தில் போய், நான் கடவுள் பற்றிச் சில கருத்துகள் பேசி விட்டேன். நான் பேசிக் கொண்டிருந்த போதே ஒரு நண்பர் எழுந்து, என்னை மறுத்துக் கருத்துரைத்தார். நான் என் வாதங்களை எடுத்து வைக்க இடம்தராமல் சற்றுக் கடுமையாகப் பேசத் தொடங்கினார். உடனே நான், சரி ஐயா, கடவுள் இல்லை என்று சொன்னால்தான்*

உங்களுக்குப் பிடிக்கும் என்றால் அப்படியே சொல்லிவிட்டுப் போகிறேன், எனக்குக் கடவுள் இருக்கிறார் என்று சொல்வதை விட நம் நட்பு முக்கியம் என்று சொல்லிவிட்டு, நான் இல்லை என்று சொல்வதால் கடவுள் நிச்சயம் கோவித்துக் கொள்ள மாட்டார் என்றதும் அந்த நண்பரே சிரித்து விட்டார்.

வாதமே தொழிலாக அன்றாடம் செய்து வரும் நான் வாதத்தால் நட்பை இழக்க எப்போதும் உடன்பட்டதில்லை. எனக்குக் கருத்தை விட மனிதர்கள் முக்கியம். பாரதி ஒரு கவிதையில் சொல்கிறானே:

**அஞ்சுதலைப் பாம்பென்பான் - அப்பன்**
**ஆறு தலை என்று மகன் சொல்லிவிட்டால்**
**நெஞ்சு பிரிந்திடுவார் - பின்பு**
**நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்**

நான் இவ்வளவு பீடிகை போட்டது மரபுக் கவிதை, புதுக் கவிதைப் போராட்டத்துக்குள் செல்வதற்குத்தான். மரபுவழியில் மட்டுமே எழுத வேண்டும் என்ற பிடிவாதத்தால் எப்படி ஒரு கவிதை உயிரற்றுப் போக வாய்ப்புண்டோ, அப்படியே, மரபை மீறித்தான் எழுத வேண்டும் என்ற பிடிவாதத்தாலும் நிகழக் கூடும். கவிதை எப்படி வருகிறதோ, அது எந்த வடிவத்தை ஏற்றுக் கொண்டு வருகிறதோ அதை அப்படியே வரவேற்க முடிந்தாலே போதும். பிறக்கப் போகும் ஒரு குழந்தையின் வடிவம் இப்படியெல்லாம்தான் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்து, அப்படிக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளத் தாயால் முடியுமா? ஆனால், குழந்தை பிறந்த பிறகு அதற்குப் பெயர் சூட்டி, ஆடை, அணிகலன்கள் அணிவித்து, அழகு செய்து, பார்த்து ரசிக்க அன்னைக்கு உரிமையும் உண்டு, அது சாத்தியமும் கூட.

யாப்பிலக்கணப் படியே கவிதையொன்று எழுத வேண்டும் என்ற தீர்மானத்தோடு ஒருவன் கவிதை எழுத உட்கார்ந்தால் அந்தக் கவிதையில் உயிர் இருக்குமா?

கொஞ்சம் சந்தம், கொஞ்சம் சரித்திரம், கொஞ்சம் பாலியல் உணர்ச்சி என மூன்றும் கலந்த ஒரு கவிதை வேண்டும் என்று கேட்டதும் கணினி இரண்டு வரிகள் தந்ததாக சுஜாதா ஒரு கதையில் எழுதியிருப்பார்:

**கதவைத் திறந்து கவனித்து வந்த ராஜராஜ சோழன்**
**விதவைக்கு முத்தம் பதினெட்டுத் தந்த ராஜராஜ சோழன்**

முயன்று எழுதப்பட்ட கவிதைகள் இப்படித்தான் அமையும். கவிதை எழுதும் போது, அடுத்த வரியில் என்ன சொற்கள் வருமோ

என்று தெரியாமல் முதல் வரியில் தொடங்கி, அந்த வரிகள் எங்கே போய் முடியப் போகின்றன என்று புரியாமல் அந்தக் கவிதையின் போக்கில் சென்று, முடிந்த பிறகு அதைப் படித்துப் பார்த்துப் புரிந்து கொள்ள முயன்று, முயன்று, முழுதாகப் புரிந்து கொள்ள முடியாமல் தோற்றுப் போய்க் கொஞ்சம் புரிந்து விட்டது போல் கற்பித்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி மகிழும் கவிதைகளின் சுகமே தனி. சரிதானே மனோன்மணி! புத்தி சிகாமணியை அவன் போக்கில் விட்டால் கணினி தந்த கவிதை போலத்தான் கவிதைகள் வரும்.

பிறக்கும் குழந்தைக்கு எப்படி வடிவிலும், குணங்களிலும் பெற்றோர்களின் சாயல் இருக்குமோ, அந்த அளவுக்கு நான் எழுதும் கவிதைகளில் என் அறிவு, என் மனம் ஆகியவற்றின் சாயல் இருக்கத்தான் செய்யும். அவ்வளவே! சிகாமணி–மனோன்மணியின் கூட்டுத் தயாரிப்புத்தானே என் கவிதைகள்! அவர்களின் சாயல் என் கவிதைகளுக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால், என் கவிதைகள் அந்தச் சாயல்களைக் கடந்தவை. சாயல்கள் வெறும் சாயங்களே!

யாப்புக்கு ஒத்து வர வேண்டும் என்ற முயற்சியில் தேவையற்ற சொற்களைப் பெய்வதால்தான் மரபுக் கவிதைகளுக்கு எதிர்ப்பியக்கமாகப் புதுக்கவிதை இயக்கம் மலர்ந்தது. பாரதி வசன நடையில் நல்ல கவிதைகள் எழுதித் தொடக்கி வைத்த பாதையில் பிச்சமூர்த்தியும், சி.சு.செல்லப்பாவும் அடித்தளம் போட்டுக் கட்டடம் கட்டவும், அதில் வசிக்க குபுகுபுவென்று எத்தனைக் கவிஞர்கள் நீ, நான் என்று போட்டி போட்டுக் கொண்டு வந்து விட்டனர்! தற்போது, புதுக்கவிதை என்பது வெறும் ஒரு வடிவப் புரட்சி இல்லை, அதன் உள்ளடக்கமே தனி என்பதாக அந்தத் துறையை மேலும் வளம் செய்து கொண்டிருக்கும் பலர், கவிக்கோ அப்துல் ரஹ்மான், கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன், கல்யாண்ஜி போன்ற பல நல்ல கவிஞர்கள் இருப்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

“புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்” என்ற அருமையான நூலைப் படைத்த அமரர் வல்லிக்கண்ணனை நினைத்துக் கொள்கிறேன். எனக்குத் தெரிந்து, ஆண் புகைப்படத்தை அட்டையில் போடுவதே இல்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த குமுதம் பத்திரிகை தன் பிடிவாதத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தது வல்லிக்கண்ணனின் நூல் சாகித்ய அகதெமியின் பரிசு பெற்ற போதுதான் என்று நினைக்கிறேன். அதற்காகக் குமுதம் நிருபர் பால்யூ அரும்பாடு படவேண்டியிருந்தது. கடைசியில் அவர் முயற்சி வென்றது. குமுதம் தன் பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்திக்

கொண்டது. அதுவும் கொஞ்சம்தான் தளர்த்திக் கொண்டது. ஆம், ஒரு பெண் புகைப்படத்துடன் வல்லிக்கண்ணன் புகைப்படத்தைச் சேர்த்து அட்டையில் போடக் குமுதம் இசைந்தது. பால்யூ, ஒரு வெற்றிப் புன்னகையுடன், வல்லிக்கண்ணனை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து ஷோபனாவை விட்டு அவரைப் பேட்டி காணச் செய்து, இருவர் புகைப்படத்தையும் அடுத்த வாரக் குமுதம் அட்டைப் படத்தில் போடச் செய்தது ஒரு வரலாற்று நிகழ்ச்சி இல்லையா?

அதெல்லாம் இருக்கட்டும், வைதாரையும் வாழ வைப்பவன் என்று இறைவனைச் சொல்வது வழக்கம். எனக்கென்னவோ, கவிதையில் வைதால் மேலும் அருள் செய்வான் இறைவன் என்றே தோன்றுகிறது. இறைவனை விடுங்கள். ஒரு நல்ல கவிதை ரசிகனான மனிதன் அப்படித்தான். ஒரு தமிழாசிரியர், வகுப்புக்கு வந்ததும் நோட்ஸ் கொடுத்து எழுது என்று எங்களைத் தினமும் தொந்தரவு செய்து கொண்டிருந்தார். தாங்கவில்லை சாமீ! ஒருநாள், அவர் வகுப்புக்கு வரும் முன்பே, கரும்பலகையில் ஒரு குறட்பா எழுதி வைத்து விட்டேன்:

**தாராதீர் நோட்ஸெமக்குத் தந்தீரேல் நீரிங்கு**
**வாராதீர் வன்சொல் பட**

அந்த ஆசிரியர் வந்ததும் அதைப் படித்துவிட்டு, யார் எழுதியது என்று கேட்டார். எல்லாரும் மௌனம் சாதித்தோம். சொல்லாவிட்டால் எல்லாருக்கும் தண்டனை கிடைக்கும் என்று அவர் அச்சுறுத்தியதும், நான் எழுந்து நின்றேன். “ஓ! நான் முழுதும் சொல்லும் வரைக் காத்திருக்காமல் எழுந்து நின்று விட்டாயே. சொல்லாவிட்டால் எல்லாருக்கும் தண்டனை கிடைக்கும், சொல்லி விட்டால் எழுதிய மாணவனுக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்று சொல்ல நினைத்தேன்” என்றார், திரு. ராமமூர்த்தி என்ற அந்த ஆசிரியர். யார் ‘ஏந்தெழில்’ இலக்கணக் குறிப்புக்கு எனக்கு மதிப்பெண் தர மறுத்தாரோ, யாரை மீறிச் சென்று துறைத் தலைவரிடம் நான் மதிப்பெண் பெற்று வந்தேனோ, அதே ராமமூர்த்தி என்ற ஆசிரியர்தான், அவரை விமர்சித்து நான் எழுதிய குறட்பாவை ரசித்துப் பாராட்டினார்.

கவிதை ரசிப்பதற்கே! அதில் சோகம் விளைந்தாலும், வீரம் வெளிப்பட்டாலும், சினமே பொங்கிக் கனன்றாலும், குதூகலம் நிரம்பி வழிந்தாலும், கவிதை ரசிப்பதற்கே!

# 45

*என்னைய்யா இது, சோகத்தைக் கூட ரசிக்கணும்னு சொல்றீக!*

*ஏன் ரசிக்கக் கூடாது. இலக்கிய ரசனை என்பது சந்தோஷ சமாச்சாரம் மட்டுமே என்பது தப்புக் கணக்குத் தம்பி!*

*இலக்கிய ரசனை என்பது, தன் வாழ்வில் தன் அனுபவமாக வராத ஒரு நிகழ்வை, இன்னொருவர் அனுபவித்த ஒன்றை, அந்த இன்னொருவருக்குள் எப்படியோ நுழைந்து, ஏறக்குறைய அவர் அனுபவித்தபடியே அனுபவிப்பது.*

*அங்கே பார், அந்த மங்கை அழுது புலம்பிக் கொண்டிருக்கிறாள். அவளருகே ஒருவன் குருதி வெள்ளத்தில் இறந்து கிடக்கிறானே! யாரவன்? அவள் கணவனோ? ஆம், அதோ தொலைவில் நின்று கொண்டு இந்தக் காட்சியைப் பார்த்தபடி ஒரு மூதாட்டி ஏதோ சொல்கிறாளே அதைக் கேள்: என்னத்த சொல்ல! இன்னைக்குக் காலைலதானுங்க இந்தப் பொண்ணு தலைல பூமுடிச்சு விட்டு அவன் பிரியா விடைபெற்றுக்கிட்டுப் போனான். அப்படிப் பூமுடிச்சப்ப, அவ கூந்தல்ல வச்சு விட்ட பூச்சரத்துல வண்டு 'ஞொய்'னு ரீங்காரம் செஞ்ச சத்தம் கூட இன்னும் ஓயலீங்க! அப்ப அவனக் கட்டித் தழுவி அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினா இந்தப் பொண்ணு. இப்பப் பாருங்க, இந்த சாயரட்ச வேளைல ரத்த வெள்ளத்துல செத்துக் கெடக்குற அவனப் பாக்க வேண்டிய நெலமைக்கு ஆளாயிட்டாளே அந்த மஹாபாவி! பாக்க சகிக்கலேங்க இந்த சோகக் காட்சி!*

*எப்படி ஒரு சோகக் காட்சி நம்மை உலுக்குகிறது பார்த்தாயா! உனக்கு நேர்ந்த சோகம் இல்லை. யாருக்கோ நேர்ந்ததுதான். ஆனால் ஒரு கணம், ஒரே ஒரு கணம்தான், அந்தச் சோகத்தை நீ அனுபவிக்குமாறு அந்த மூதாட்டியின் வார்த்தைகள்*

செய்துவிட்டனவே! அந்த ஒரு கணத்தை, அதன் கனத்தை, உன் வாழ்நாளில் நீ மறக்க முடியாதவாறு, அவ்வப்போது நீ நினைத்துக் கொள்ளுமாறு ஆகிவிட்டதே!

**வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேல்**
**கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்ப்**
**புண்தாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்**
**கண்டாள் அவன்தன்னைக் காணாக் கடுந்துயரம்**

ஆம், காலையில் கோவலனிடம் பூச்சூடிக் கொண்டு அவனை வழியனுப்பி வைத்த கண்ணகி, மாலை அவனைப் பிணமாகக் கண்டு அழுத காட்சியை நாம் என்றைக்கும் மறக்க முடியாமல் செய்து விட்டாரே இந்த இளங்கோவடிகள்! அந்தச் சோக அனுபவக் களத்துக்குள் நம்மை அழைத்துச் செல்ல, வண்டுகளைப் பாட வைத்தும், குஞ்சம் துவளத்துவளத் தொங்கிய பூமாலையை அசையச் செய்தும், கணவனும் மனைவியும் ஆரத் தழுவிக் கொண்டு பிரிய முடியாமல் பிரிந்ததை "தழீஇ" என்று நீட்டி முழக்கியும், புண் தாழ்ந்து குருதி பொங்கி வழிந்ததைப் படம் பிடித்துக் காட்டியும், எப்படியெல்லாம் பாடுபடுகிறார் புலவர்!

இதென்னய்யா, மத்தவன் அவஸ்தையை வேடிக்கை பாக்க வைக்கறதுதான் புலவன் வேலையா?

இல்லை, வேடிக்கை பார்க்க வைப்பது இல்லை அவன் வேலை, அந்த வேதனையை அப்படியே, கொஞ்சமேனும் அனுபவிக்க வைப்பதுதான் அவன் வேலை. ஏன் அனுபவிக்க வேண்டும்? அறுசுவை விருந்திலே கசக்கும் பாகற்காய்ப் பொறியல் ஏன் படைக்க வேண்டும்? அட, சும்மா வசனத்துலியே பேசிக்கிட்டிருந்தா எப்படி, நாமும் பாடுவோம் அப்பு:

**சோகத்தில் கூடசுகம் உண்டு தோழி**
**சோகத்தின் சாரத்தைச் சொல்ல வந்தேன்**
**தேகத்தில் ஒளிந்திருக்கும் தினவை எல்லாம்**
**தீவைத்துக் கொளுத்துவது சோக மன்றோ**
**வேகத்தை விறுவிறுப்பைப் பிடித்தி ழுத்து**
**வெறுமையினைக் காட்டுமொரு தீப மன்றோ**
**சோகத்தைப் பயில்வதற்குத் துணிந்து விட்டால்**
**சோதனைகள் இல்லைமனம் துவள்வ தில்லை**

**இதயத்தைப் பிழிந்துவிடும் சோகத் தாலே**
**இருக்கின்ற சுமையெல்லாம் கண்ணீ ராகி**
**உதிர்ந்துவிடும் நீயாக மட்டும் உன்னை**
**உள்ளுக்குள் நீகாண முடியும் நெஞ்சின்**

அதிர்வுகளை நீவிவிடும் அனுப வத்தை
அரைநொடியில் ஏற்படுத்தும் இசையி னாலோர்
அதிசயத்தை உருவாக்கும் அதற்கும் மேலே
அமரநிலை உண்டென்று நினைவு றுத்தும்

இருட்டென்றா எண்ணுகிறாய் இல்லை இல்லை
ஏகாந்த நீழலடி நுழைந்து பாரேன்
உருண்டுவரும் மேகங்க ளூடு செல்லும்
ஒளிநிலவை நினைத்துக்கொள் ஒருக ணம்தான்
விருட்டென்று பயமெல்லாம் விலகி யோடும்
வியர்வையெல்லாம் பூப்பூக்கும் சோகம் உன்னை
அருட்கரத்தால் நெஞ்சாரத் தழுவிக் கொள்ளும்
அமைதியுடன் நீயுறங்கக் கவிதை சொல்லும்

எப்படி இருக்குத் தம்பீ!

*என்ன சொன்னாலும் சரி அப்பு, சோகத்தை ரசிக்கணும்னு சொல்றத ஒப்புக்க முடியலே!*

*தம்பி, ரெண்டு ரூவா கொடுத்து டிக்கெட் வாங்கிப் போய்ப் பாசமலர் படம் பாத்து, சிவாஜியும் சாவித்திரியும் அழுதபோதெல்லாம் கூடவே அழுதியே, மறந்துட்டியா? காசு கொடுத்து வாங்கிய கண்ணீர் தம்பி! ஏன்?*

*கப்பலோட்டிய தமிழன் படம் நான் பலமுறை பார்த்து ரசித்த படம்தான். 1986 அல்லது 87, தொலைக்காட்சியில் அந்தப் படத்தை, ஐந்தாவது முறையாக என்று நினைக்கிறேன், நான் பார்த்துக் கொண்டிருந்த போது, முழுதும் பார்க்க முடியாமல் என் கண்களை மறைத்த கண்ணீர்த் துளிகளை நான் துடைத்துக் கொண்டே இருந்தேன். தான் அமர்ந்திருந்த நாற்காலியைத் திருப்பிப் போட்டுக் கொண்டு, தொலைக்காட்சிப் பெட்டிக்கு முதுகைக் காட்டிக் கொண்டு, படத்தைப் பார்க்காமல், நான் அழுவதை என் நண்பன் முரளி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும்தான் நான் சுதாரித்துக் கொண்டேன்.*

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா - இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ!

*அடாடா, நெஞ்சைப் பிழிந்தெடுக்கும் பாடல். அந்த எட்டையபுரத்துச் சுப்பய்யாவின் பாடலை, திரையில் எஸ்.வி.சுப்பையா, பாரதியாராகத் தோன்றிப் பாடியபோது நான் எப்படி அழாமல் இருந்திருக்க முடியும்? சுதந்திரப் போராட்டத்தின் போது நான் பிறக்கவே இல்லை. ஆனாலும் அந்தக் காலத்துக்கு*

என்னை அழைத்துச் சென்று, அதன் அனுபவக் களங்களில் என்னை நனையச் செய்து, அந்த வீர சக்தியையும், தன்மான உணர்வையும் எனக்குள் ஊட்டிய மாயத்தை இதுபோன்ற படங்களும், பாடல்களும் செய்யவில்லையா?

திரைப்படம் எடுக்கும் தொழில்நுட்பம் இல்லாத காலத்திலேயே, வார்த்தைகள் மூலமாக மட்டுமே, பல காட்சிகளை நம் மனத்திரையில் கவிஞர்கள் ஓடவிட்டிருக்கிறார்கள்.

இந்தப் பகுதியின் தொடக்கத்தில் சொன்ன அமரவாக்கியத்தை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோம்:

இலக்கிய ரசனை என்பது, தன் வாழ்வில் தன் அனுபவமாக வராத ஒரு நிகழ்வை, இன்னொருவர் அனுபவித்த ஒன்றை, அந்த இன்னொருவருக்குள் எப்படியோ நுழைந்து, ஏறக்குறைய அவர் அனுபவித்தபடியே அனுபவிப்பது.

போச்சு, திரும்பவும், 'ஒருவருக்குள் இன்னொருவர் நுழைந்து'ங்கற பழைய வேதாளம் வந்து விட்டது ஓய்! அது வரத்தான் செய்யும். சபரிமலை செல்லும் போது, பேருந்தில் எனக்கும், சு.ரவிக்கும் ஏற்பட்ட அனுபவத்தை, எங்களுக்குள் நடைபெற்ற உரையாடலை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்!

இப்படி அனுபவிப்பதால் ஏதேனும் பயன் உண்டா? இதுதானே உன் கேள்வி?

அதுவும் ஒரு கேள்வி.

அப்படியானால் வேறேதோ கேள்வியும் இருக்கிறதோ?

உண்டு. நீர் என்னமோ கோத்தகிரி எஸ்டேட் என்றெல்லாம் சொல்லிவிட்டு ஒருவர் அனுபவத்தை இன்னொருவர் அனுபவிப்பதுன்னு பழைய பாடத்துக்கே வந்து விட்டீரே என்பதுதான் இன்னொரு கேள்வி.

தம்பி, அது கோத்தகிரி எஸ்டேட் இல்லை, கேட்டகிரி மிஸ்டேக், அதாவது, வகுப்புத் தப்பிதம். அதற்கும் நம்முடைய இப்பொழுதைய விஷயத்துக்கும் தொடர்பு உண்டு. சொல்கிறேன்.

நீ, கேட்கிறாயே, மேலே சொன்னவாறு இன்னொருவருடைய அனுபவக் களத்துக்குள் புகுந்து அனுபவிப்பதால் ஏதேனும் பயனுண்டா என்று, அதுவே ஒரு கோத்தகிரி எஸ்டேட். மன்னிச்சுக்க தம்பி, சகவாச தோஷம் தொத்திக் கொண்டது. கேட்டகரி மிஸ்டேக். எப்படி? ஓர் அனுபவம் பயனுள்ளதா, பயனற்றதா என்ற கேள்வியே தவறு. அனுபவம் என்பது பயன் கருதி வருவதில்லை. நாம் கண்டு,

கேட்டு, உண்டு, உயிர்த்து, நுகர்ந்து, தொட்டு அனுபவிக்க உலகமே அதன் உள்ளடக்கங்களோடு விரிந்து கிடக்கிறது. அதனால் பயன் அடைவதும், பயன் பெறாததும் அனுபவிப்பவரைப் பொறுத்தது.

நான் இந்த உடல் மட்டும் இல்லை. இந்த உடல் என் கூடுதான். பஞ்ச பூதங்கள் தைத்து வழங்கிய சட்டையாகத்தான் நான் இதை அணிந்து கொண்டிருக்கிறேன். இப்படி ஓர் ஆழமான நம்பிக்கை பலருக்கு உள்ளது. நானும் நம்புகிறேன்.

என் நம்பிக்கை மேற்சொன்ன நிலையையும் தாண்டிச் செல்கிறது. நமக்கு ஸ்தூல உடல் இருப்பது போலவே, சூக்ஷ்ம சரீரம் என்று ஒன்று உண்டு. அது திட்ப உடல் போல் சதை, எலும்பு, குருதியால் ஆன உடல் இல்லை. அதை எந்தப் புலனாலும் உய்த்துணர முடியாது. 'ஸாஃப்ட் வேர்' (software) என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போன்ற நுட்ப உடல் அது. பூதவுடல் என்பது ஹார்ட்வேர், சூக்ஷ்ம உடல் என்பது ஸாஃப்ட்வேர். பின்னது முனைப்புகளால் ஆனது. முனைப்புடல் என்றும் சொல்லலாம். ஒருவன் அல்லது ஒருயிர் இன்ன வடிவில், இன்ன உடல் எடுத்து, இன்னவாறு இயங்கப் போவதை நிர்ணயம் செய்வது இந்த நுண்ணுடல் அல்லது முனைப்புடல்தான். ஒருவன் மரணம் அடைவதற்கு முன்பே, அதாவது அவன் உயிர்நிலை திட்ப உடலைப் பிரிவதற்கு முன்பே, உடல் எடுக்கும் முனைப்பால் மட்டுமே உருவான நுட்ப உடலைக் கலைத்து விட வேண்டும். அதாவது, வடிவ மோகம் அறவே இன்றி ஆக வேண்டும். அப்படியாகித் தன் திடவுடலை முழுதுமாகக் கழற்றிப் பஞ்சபூதங்களில் கலந்துவிடச் செய்யாவிட்டால், அவனுடைய திடவுடலைப் பிரிந்த பின்னும் நுண்ணுடல் அல்லது முனைப்புடல் தன் முனைப்புக்கு ஏற்ப ஒரு திடவுடல் பெற ஏங்கித் திரியும். அப்படியோர் உடல் செய்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததும், செய்து கொண்டு அதை ஆளத் தலைப்படும். இதுவே அதன் அடுத்த பிறவி எனப்படுகிறது. இதெல்லாம், ஓரளவு அனுபவ ரீதியாக எனக்குள் மலர்ந்த நம்பிக்கை.

முன்பே நான் குறிப்பிட்டேனே, 101 பாடல்கள் அடங்கிய குருமந்திரம் என்ற படைப்பு 1986–ல் எனக்குள் மலர்ந்து வந்தது என்று. அதில் இரண்டு பாடல்கள் இங்கே நினைவு கூரத் தக்கவை:

**பூதங்களில் கலந்து போகாத சூக்குமம் தன்**
**வாதனைக் கேற்ப சாயல் வனைந்திடும் வனைந்த வண்ணம்**
**பூதங்கள் நெய்த சட்டை புனைந்திடும் புனைந்து கொண்டு**
**சாதனை போல மீண்டும் சகதியில் ஜனிக்குமாமே!**

**தூலத்தில் வைத்த பற்றே தூலத்தை விட்ட பின்னும்**
**தூலமே போல எண்ணும் சூக்கும வடிவம் பின்னும்**
**தூலத்தில் பற்றறுந்து தூலத்தின் கட்டவிழ்ந்தால்**
**மூலத்திற் கலப்ப தென்ற முக்திகை கூடுமாமேநீ**

*இதையெல்லாம் இங்கே நான் சொல்லக் காரணம் தம்பி நீ கேட்ட கேள்விதான். ஆம், ஸ்தூல உடலாகிய திட்ப உடலை நுண்ணுடல் நிரந்தரமாக நீங்கிச் சென்றுவிடும் நிகழ்ச்சியே மரணம். அது சம்பவிப்பதற்கு முன்பே, அவ்வப்போது, திட்ப உடலில் இருந்து நீங்கிச் செல்லும் பயிற்சியைத்தான் கனவு நிலை தருகிறது.*

*ஆனால், இரண்டு குறைபாடுகள் இந்தப் பயிற்சியில் உண்டு. பெரும்பாலும் கனவுகள் நினைவில் பதிவாகித் தங்குவதில்லை என்பது முதற்குறைபாடு. கனவில், அறிவின் துணை சிறிதும் இன்றி நுண்ணுடல் அலைபாய நேர்வதால், அது தான்தோன்றித் தனமாக, எந்த வழிகாட்டுதலும், நெறிமுறையும் அற்ற தாறுமாறான அனுபவமாகிறது.*

*ஆனால், இந்தக் குறைபாடுகள் இன்றி அறிவு விழித்திருக்கும் நிலையிலேயே, திட்பவுடல் நீங்கி நுண்ணுடல் பயணம் மேற்கொள்பவன் கவிஞனும், யோகியும்தான்.*

*கவிதை ஜனிக்கும் வேளையில் தானன்றிப் பிறிதான ஓர் அனுபவக் களத்தில் கவிஞன் சஞ்சரிக்கிறான். அந்த அனுபவத்தை அவனுடைய அறிவு, விழிப்பு நிலையிலேயே உள்வாங்கிக் கொண்டு, அதை வார்த்தைகளில் வடித்து, நிரந்தரமாக்குகிறது.*

*யோகியின் கதை வேறு. அவன், திட்பவுடல் நீங்கிப் பயணம் மேற்கொள்ளும் போது தன்னை வரவேற்கும் எந்த அனுபவக் களத்திலும் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துத் தான் நுண்ணிலையிலும் இல்லாமல் தானாக, எந்த முனைப்பும் அற்ற தானாக, ஆகும் ஒரே முனைப்பில் லயிக்கிறான். அவன் களம் விரிய, விரிய முக்காலங்களுக்கும், எல்லா லோகங்களுக்கும் பொதுவான எல்லா அனுபவங்களுமே தானாக உணரும் அத்வைதானந்த அனுபவமே அவனுடைய இலக்காகிறது. அதுவே கடவுள் நிலை. இதுதான் இந்தக் கணத்தில் என் நம்பிக்கை.*

*எனவே, தம்பி, இப்போது சொல்லு, ஒருவன் இன்னொருவனுடைய அனுபவக் களத்துக்குள் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து செல்வதால் ஏதேனும் பயனுண்டா, இல்லையா? உன் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.*

*சபரி மலை யாத்திரைக்குப் பெரிய பாதையில் செல்பவர்கள், மாலை அணிந்து கொண்ட நாளில் இருந்தே செருப்பில்லாமல்*

நடந்து பழகுவார்கள். அப்படிப் பழகி விட்டால், யாத்திரையின் போது, செருப்பில்லாமல் பெரிய பாதையில், கல்லும் முள்ளும், குண்டும் குழியும் கடந்து, இரண்டு நாட்கள் நடந்து செல்லும் போது அவ்வளவு சிரமம் தெரியாது. அது போலத்தான், திட்ப உடலை நீங்கிச் சில கணங்கள் விழிப்புடன் பயணம் செய்யும் பயிற்சி மேற்கொண்டால், மரணம் சம்பவித்து, அப்படிச் சிலகாலம் இருக்க நேரிடும் போது அதிக சிரமம் இருக்காதோ என்று நினைக்கிறேன். இது ஒரு பயன் இல்லையா?

அப்படிப் பயணம் செய்யத் தெரியாதவர்களும் அந்த அனுபவக் களத்தில் பங்கேற்க வாய்ப்பாகும் வண்ணம், அதைச் சொற்களில் நிரந்தரம் செய்து விடுவது ஒரு பெரிய சமூகப்பயன் இல்லையா? சரி தம்பி, நீயே முடிவு செய்துகொள்.

முன்பு நான் எழுதிய இன்னொரு கவிதை நினைவு வருகிறது. அட எல்லாவற்றையும் என் கவிதை சொல்லி விடுகிறதே!

**நிழலுக் கென்றே சோலை அமைத்து**
**நிம்மதியாக வாழ்கின்றேன்**
**பழத்துக் கென்றோ பனிமலர்க் கென்றோ**
**பயனைக் கருதாமல்**
**நிழலுக் கென்றே சோலை அமைத்து**
**நிம்மதியாக வாழ்கின்றேன்**

மீண்டும் முதலில் சொன்ன அமர வாக்கியத்தை நினைவு படுத்திக் கொள்வோம்:

இலக்கிய ரசனை என்பது, தன் வாழ்வில் தன் அனுபவமாக வராத ஒரு நிகழ்வை, இன்னொருவர் அனுபவித்த ஒன்றை, அந்த இன்னொருவருக்குள் எப்படியோ நுழைந்து, ஏறக்குறைய அவர் அனுபவித்தபடியே அனுபவிப்பது.

இதை ஏன் அடிக்கடி அமர வாக்கியம் என்கிறேன். மரணத்துக்குப் பிறகு நிகழக் கூடிய ஒன்றை மரணத்துக்கு முன்பே நிகழ்த்திக் காட்டி, மரணத்தை வெல்லும் வழியைக் காட்டுவதால் இது அமர வாக்கியம் தானே!

பாரதியுடன் நெருங்கிப் பழகி, அவனால் உள்ளூக்கம் பெற்ற வ.ராமசாமி என்ற வ.ரா., அறிஞர் அண்ணாவால், ‘அக்ரஹாரத்து அதிசய மனிதர்’ என்று போற்றப்பட்ட எழுத்தாளர், கவிஞனைப் பற்றிச் சொன்ன ஒரு குறிப்போடு இந்தப் பகுதியை நிறைவு செய்கிறேன்.

ஒரு கவிஞன் மலரைப் பாடினால் மலராகவும், கடலைப் பாடினால் கடலாகவும், புயலைப் பாடினால் புயலாகவும் தானே மாறிவிடும் ரசவாதத்தை வியந்துவிட்டு, வ.ரா. ஓர் அமர வாக்கியம் எழுதுகிறார். அதாவது நான் மிகவும் சிரமப்பட்டுச் சொல்ல முற்பட்ட கருத்து வெகு சுலபமாகவும், இயல்பாகவும் வந்து வார்த்தைகளில் அமர ஒரு வாக்கியமாக அமைந்ததால் அது அமர வாக்கியம். அந்த அமர வாக்கியம் இதுதான்:

*"கவிஞன் கட்சி பேசலாமே தவிர சாட்சி சொல்ல முடியாது".*

# 46

என்ன, வக்கீல் புத்தியைக் காட்டி விட்டேனோ? கட்சி பேசுவது, சாட்சி சொல்வது என்றெல்லாம் பழக்க தோஷத்தில் எழுதி விட்டேனோ?

சாட்சி சொல்வது என்றதும் என் நினைவில் நிழலாடும் ஒரு நண்பர், ஒரு பிரபல நடிகர். அவர் இப்பொழுது நம்மிடையே இல்லை; ஆனால், தமிழ் மக்கள் நெஞ்சங்களில் எல்லாம் நீங்கா இடம்பெற்று விட்டவர். அவர் என் கட்சிக்காரராகவும் வந்து சேர்ந்தார், 1980-களில். அவருடைய திரையரங்கம் குறித்து ஒரு வழக்கு ஏற்பட்டு, அதில் நான் அவருக்காக வாதாடும் வழக்குரைஞனாகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். நாலைந்து நாட்கள் அவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதியரசர் ஆறுமுகம் முன்னிலையில் சாட்சிக் கூண்டில் நின்று சாட்சி சொன்னார். நீதிமன்றத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. நீதியரசரும், அந்த நடிகருடைய நகைச்சுவையான பதில்களைப் பதிவு செய்துகொண்டே, நிதானமாக ரசித்துக் கொண்டிருந்தார். அதில் ஒரு பகுதி:

எதிரியின் வக்கீல்: என் கட்சிக்காரர் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் காசோலை வழங்கினாரா?

நடிகர் : வழங்கினார்.

எதிரியின் வக்கீல்: காசோலையை என்ன செய்தீர்கள்?

நடிகர்: வங்கியில் போட்டேன்.

எதிரியின் வக்கீல்: காசோலை, காசாக மாறியதா?

நடிகர்: மாறியது.

எதிரியின் வக்கீல்: பிறகு என்ன செய்தீர்கள்?

*நடிகர்: என்ன்ன்ன்ன செய்தேனா? காசைச் செலவழித்தேன்.*

*நீதிமன்றத்தில் சிரிப்பொலி அடங்கச் சில நிமிடங்கள் ஆயிற்று. நீதியரசரும், ஏன், எதிர்க்கட்சிக்காரரின் வக்கீல், என் இனிய நண்பர், மூத்த வழக்கறிஞர் திரு.ஆர்.கிருஷ்ணசாமி உட்பட எல்லாரும் சிரித்துவிட்டனர். அதுவும், "என்ன்ன்ன்ன செய்தேனா? காசைச் செலவழித்தேன்" என்று திருவிளையாடல் திரைப்படத்தில் வரும் தருமியின் பாணியில் நாகேஷ் அவர்கள் நீதிமன்றத்தில் பதில் சொன்னதும் யார்தான் சிரிக்காமல் இருந்திருக்க முடியும்?*

*நாகேஷ் போன்ற நல்ல நகைச்சுவை உணர்ச்சி மிக்க நடிகரைப் பார்ப்பது அரிது. அத்துடன் அவர் குழந்தை உள்ளம் படைத்தவர். தினமும் வழக்கு நடந்து கொண்டிருந்த காலத்தில், என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று கருதி, மாலை நேரத்தில் என் அலுவலக மேலாளர் திரு.ஹரிஹரன் அவர்கள் வீட்டுக்குச் சென்று, அன்றைய கோர்ட் நடவடிக்கை குறித்துத் தெரிந்துகொள்வதோடு, ஹரியின் அம்மா செய்து தரும் தோசையைச் சாப்பிட்டு விட்டு, மறுநாள் அதுபற்றி என்னிடம் வானளாவப் புகழ்வார். ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் தினமும் ஒரு முறையாவது என்னைப் பார்ப்பதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

*ஒருமுறை ஹைதராபாத்தில் இருந்து அவரும் நானும் விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்த போது, தனக்கு மிகவும் பிடித்த பாடல் என்று சொல்லி 'மாலைப் பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி' என்ற பாடலை விமானத்திலேயே மெல்லிய குரலில் மிக இனிமையாக அவர் பாடியதை நான் மறக்கவே முடியாது. அப்பொழுது அவர் சொன்னார், "ரவி சார்! (என்னை விட வயதில் மிகவும் மூத்த அவர், நான் எவ்வளவு சொல்லியும் அப்படித்தான் என்னை அழைத்தார்). இந்தப் பாடலைக் கேட்கும் போது பாடும் மங்கையின் கனவுக்குள்ளேயே நாம் சென்று விடுகிறோம் இல்லையா".*

*அன்று நாகேஷ் சொன்னதை இன்று நினைத்துக்கொள்கிறேன். இன்னொருவரின் கனவுக்குள், அதுவும், அனுபவக் களத்துக்குள் தன் ரசிகர்களை அழைத்துச் செல்லும் சாதனையைக் கவிஞர் கண்ணதாசன் எவ்வளவு சுலபமாகச் செய்து விட்டார்! இந்தப் பாடலாகட்டும், "கங்கைக் கரைத் தோட்டம் கன்னிப் பெண்கள் கூட்டம்" என்ற பாடலாகட்டும், அவற்றில் ஒரு மங்கையின் ஏக்கம் மட்டுமா வெளிப்படுகிறது. எந்தப் புருஷோத்தமனின் முன் ஆண்கள், பெண்கள் ஆகிய நாம் அனைவருமே கன்னிப் பெண்களோ, அந்தக் கண்ணனிடம் ஒன்றிவிட வேண்டும் என்ற உயிரின் ஜீவ தாகத்தையன்றோ இந்தப் பாடல்கள் எதிரொலிக்கின்றன!*

"எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்த என் தலைவன்" என்ற பாடலைக் கண்ணதாசன் எழுதிய காலத்தில், தமிழகத்தில் அடுக்குமாடிக் கட்டடங்களே இல்லை. அவர் பாடிய எட்டடுக்கு மாளிகை என்பது இந்த எண்சாண் உடம்புதான் சாமி! அதில் சிறைப்பட்டிருக்கும் ஜீவனின் பிரிவுத் துயரத்தையும், பரம்பொருளோடு கூடிவிடத் துடிக்கும் ஏக்கத்தையும் அந்தப் பாடலில் அவர் பிழிந்து தரவில்லையா?

வ.ரா. சொன்னது இப்பத்தான் ஜோராப் புரியுது! சாட்சி சொல்வது வேறு, கட்சி பேசுவது வேறு. நாகேஷ் சொன்னது சாட்சி. கண்ணதாசன் பேசியது கட்சி. கண்ணதாசனுக்கும் கட்சிக்கும் எப்போதுமே நெருங்கிய தொடர்பு; ஆனால் அது மாறிக்கொண்டே இருந்த அரசியல் தொடர்பு. அது வேறு கதை.

என் இசையில் எஸ்.பி.பி. பாடி, 1994இல் வெளியான 'தெய்வ கானாம்ருதம்' இசைப்பேழை (CD) வெளியீட்டு விழாவில் நாகேஷ் கலந்துகொண்டார். 'என் வக்கீல் அழைத்தால் நான் வராமல் இருக்க முடியுமா?' என்ற கேள்வியோடு பேச்சைத் தொடங்கி நகைச்சுவையோடு பேசினார். அதே விழாவில் கலந்துகொண்டு சுகி சிவம் பேசும் போது, அந்த ஒலிப்பேழையில் இருந்த "கல்மனம் உருகிக் கனிவதும் எக்காலம் அகலாதா இந்த அகலிகையின் சாபம்" என்ற பாடலைக் குறிப்பிட்டு ஒரு கருத்துச் சொன்னார்: இராமன் திருவடி பட்டுச் சாபம் நீங்கி அகலிகை மீண்டும் பெண்ணானதும், இராமன் அவளைத் தாய் என்றே குறிப்பிடுகிறான். அன்னையைப் போன்ற இந்த மங்கைக்கு எப்படி இந்த நிலை ஏற்பட்டது என்று இராமன் விஸ்வாமித்திர முனிவரிடம் வினவுவதாகக் கம்ப சித்திரம் பேசுகிறது:

**அன்னையே அனையாட்கு இங்ஙன் அடுத்தவாறு அருளுக**

கௌசல்யா, பத்து மாதம்தான் அவனைக் கருவில் சுமந்தாள். ஆனால், அகல்யா எத்தனை ஆண்டுகள் அவன் வரவுக்காக அவனை நெஞ்சில் சுமந்தாளோ! எனவே, அவளை இராம பிரான் தாயென்றது பொருத்தமே. இதுதான் சிவம் சொன்ன கருத்தின் சாரம். விழாவின் பரபரப்பில் நான் சிவம் பேச்சைச் சரிவர கவனிக்கத் தவறியிருந்தேன். ஆனால், விழா முடிந்த மறுநாள் நாகேஷ் என்னிடம் தொலைப்பேசியில் சிவம் சொன்ன இந்தக் கருத்தைச் சொல்லி வெகுவாகப் பாராட்டினார். நாகேஷுக்குள் கவிதை ரசனை ஒளிந்திருந்ததை மீண்டும் உணர்த்திய சம்பவம் இது.

அந்த விழாவில்தான் செம்மங்குடி சீனிவாச மாமா என்னைக் 'கவிரவி' என்று அழைத்தார். அன்று முதல் என்னைப் பார்க்கும் போதெல்லாம் அவர் அப்படியே அழைப்பதையே வழக்கமாகக்

கொண்டிருந்தார். தாம் அமரராகும் வரை, கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள், வானவில் பண்பாட்டு மையம் நடத்திய ஒவ்வொரு பாரதி விழாவையும் முன்னின்று நடத்தித் தந்த அந்தப் பெரியவரை என்னால் மறக்கவே முடியாது.

சாட்சி சொல்லியாகி விட்டது, கட்சி பேசியாகி விட்டது. தீர்ப்பு எப்போது சாமி? நல்ல தீர்ப்பு வருமா? இன்றைய கேள்வி இதுதானே!

சரி, நுட்ப உடலானது கனவில் கூடத் திட்ப உடலை நீங்கிப் பறக்கிறது என்று சொன்னேனே, அதில் ஒரு சிறு கவனக் குறிப்பை இணைக்க வேண்டும். கனவில் ஓரளவு ஆழம் அல்லது ஓரளவு உயரத்துக்கு மட்டுமே நுட்ப உடல் போகிறது. அதற்குமேல் தாண்டிப் போக அதனால் முடிவதில்லை. அது, முற்றிலுமாகத் திட்ப உடலை நீங்கிப் போவதில்லை. நீண்ட கயிற்றால் கட்டப்பட்ட நாய் போல் கொஞ்சம் தொலைவுதான் அதன் சுதந்திரம். இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதென்றால், என்னுடைய தனிப்பட்ட அனுபவக் களத்துக்குள்தான் கனவில் என் நுட்ப உடல் அல்லாடுகிறது. நான் அனுபவித்தே இராத எதையும் அது அங்கே எதிர்கொள்வதில்லை. என் அனுபவக் களத்தில் உள்ள, தொடர்பற்ற இரண்டு அனுபவங்களை வேண்டுமானால் தொடர்பு படுத்தி அது அனுபவிக்கலாமே தவிர, என் அனுபவக் களத்தைக் கடந்து செல்ல அதற்கு உரிமை இல்லை. அதாவது, பெரோலில் (Parole) வெளியாகும் கைதி போலத்தானே ஒழிய, பெய்லில் (Bail), அதாவது, பிணையில் வெளியாகும் கைதி போல இல்லை. மீண்டும் வக்கீல் புத்தி!

ஆனால், கவிதை உதிக்கும் கணத்தில், ஒரு கணம், அது அந்தச் சுதந்திரம் பெறுகிறது. அந்த ஒரே கணத்தில், பல யுகக் கணக்குகளைக் கடந்தும், பல அண்டத் தொலைவுகளைக் கடந்தும் சென்று மீள்கிறது. அப்பொழுதுதான், அது வேறு யுகங்களில், வேறு பரிமாணங்களில் எதிர்ப்படும் அனுபவக் களங்களில் பிரவேசிக்க முடிகிறது.

கொஞ்சம் இயல்பியல் பாடம் படிக்கலாம். அதுவும் ‘க்வாண்டம் ஃபிஸிக்ஸ்’ (quantum physics) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் துளிநிலை இயல்பியல் பாடம்! அணுக்கருவுக்குள் கருவின் ஈர்ப்புச் சக்தியை மீற முடியாமல் சிறைப்பட்டுச் சுழலும் சிற்றணுத் துகள் ஒன்று, மிகச் சிறிய, அதாவது, கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத அளவு மிகச் சிறிய கால அவகாசத்துக்குக் கடனாக அபார சக்தி பெற்று, அதன் மூலம் கருவின் ஈர்ப்புச் சக்தியில் இருந்து விடுபட்டு, வெளிச்சென்று, திரிந்து விட்டு, அந்த

*கால அவகாசம் முடிவதற்குள் கடன் வாங்கிய சக்தியைத் திருப்பிக் கொடுத்து விட்டு, கருவின் அமைப்பு வட்டத்துக்குள் வந்து ஒன்றுமே நடக்காதது போல் மீண்டும் சுழன்று கொண்டிருக்குமாம். நான் சொல்லவில்லை தம்பி, விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அது போல், நுட்ப உடல் மிகச் சிறிய கால அவகாசம் ஆன ஒரு கணத்துக்குள் அபார சக்தியைக் கடனாகப் பெற்றுத் தன் பிரக்ஞை வட்டத்தை விட்டு வெளியேகிப் பல யுகங்கள், பல அண்டத் தொலைவுகள் கடந்து சென்று அனுபவங்கள் அள்ளி வந்து மீண்டும் தன் நுட்ப உடலை ஆண்டு கொண்டு உழலும் என்பதை நான் சொல்லவில்லை தம்பி, சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்.*

**"ஆளை விடப்பா!"**
**புத்தி சிகாமணிக்கே தலை சுற்றுகிறது!**
**"ஒரு கணத்தில் பல யுகங்களா? இது சாத்தியமா?"**
**அதுதானப்பா மனோவேகம். மனோன்மணிக்குத் தெரியும்.**

*ஒருமுறை, 1978ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், ரமணன் அப்போது பங்களூரில், (அப்போது அது பங்களூர் தாங்க!) ஹிண்டு பத்திரிகையில் வேலை பார்த்து வந்தான். அவன் அடிக்கடிக் கடிதங்கள் எழுதுவான், அதுவும் நீண்ட கடிதங்கள். எனக்கென்னவோ, கடிதங்கள் எழுதுவது மட்டும் அவ்வளவாகக் கைவரவில்லை. கவிதை எழுதி விடுவேன், ஆனால் கடிதங்கள் எழுதச் சோம்பல் படுவேன். நான் பதில் கடிதம் எழுதாதது பற்றி ரமணன் சற்று வருத்தப்பட்டு எழுதியிருந்தான். பதிலுக்கு நான் எழுதினேன், கடிதம் இல்லை, கவிதை! அதைக் கூடத் தொலைப்பேசியில்தான் அவனுக்குப் பாடிக் காட்டினேன் என்று ஞாபகம்:*

**கடிதம் எழுதும் வழக்கம் இல்லை**
**கவிதை எழுத முடியும் - வெறும்**
**சேதி கேட்க ஜீவன் இல்லை**
**தேம்பி அழத் தெரியும் - மனம்**
**தேம்பி அழத் தெரியும்**

**முடிவு கூடப் புலப்படாத பாதை யிந்த வாழ்க்கை - இதில்**
**அன்பு நட்பு காதல் பாசம் அளவி லாத சேர்க்கை**
**(கடிதம் எழுதும் வழக்கம் இல்லை)**

**ஒருக ணத்தில் உருவம் எய்தி ஒரு கணத்தில் மறையும் - மனம்**
**உலகம் என்றும் யுகங்கள் என்றும் உருவகங்கள் புனையும்**
**(கடிதம் எழுதும் வழக்கம் இல்லை)**

**வான மிங்கு மழை பொழிந்து வாழ்த்துகின்ற போதும் - இருள்**
**வடிவ மொன்று மின்னலாய் ஒளி வழங்குகின்ற போதும் - இனிய**
**கானம் ஒன்று கவிதையாகக் காதில் வந்து மோதும் - உன்**
**ஞாபகத்தை உறுதி செய்யப் பாடல் ஒன்று போதும்**
**(கடிதம் எழுதும் வழக்கம் இல்லை)**

*ஒரு கணம் போதும். மனம், உருவம் எடுக்கவும், உலகம், யுகங்கள் என்று பல உருவகங்கள் புனையவும்!*

*பாரதி என்ன சொல்கிறான் கேட்கலாம். கண்ணபிரான் தன் சக்கராயுதத்தை எடுப்பது ஒரு கணம்தான்; அடுத்த கணமே, அதாவது, மறுகணமே, உலகத்தில் தர்மம் நிலைநாட்டப்படுமாம்.*

*"அப்படியா சங்கதி," சிகாமணி நீட்டி முழக்குகிறான். "ஓ, அதான், அர்ஜுனன் சுபத்திரையை, அதாவது கண்ணனின் தங்கையைக் கடத்தக் கண்ணனிடமே ஐடியா கேட்டப்ப, கன்னன் ரெண்டு நிமிடம் எடுத்துக்கிட்டாரோ?"*

*சிகாமணி சிண்டு முடியப் பார்க்கிறான். பாரதி படாரென்று அவன் முதுகில் தட்டி, " அடே, உன் நிமிடக் கணக்கைக் குப்பையில் போடு. கண்ணன் கணக்கோ கணக் கணக்கு. அதாவது கணங்களால் ஆன கணக்கு, கன ஜோரான கணக்கு. அவனுடைய ஒரு கணத்துக்கும் அடுத்த கணத்துக்கும் நடுவில் இன்னொரு கணம் கிடையாது. இரண்டு கணங்களும் ஒரே கணம்."*

**சக்கரத்தை எடுப்ப தொருகணம்**
**தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்**
**இக்கணத்தில் இடைக்கணம் ஒன்றுண்டோ**

*சிகாமணி தலையைப் பிய்த்துக் கொள்கிறான்: இதானே வேணாங்கறேன். 2 = 1. என்னப்பா தப்புக் கணக்குச் சொல்லித் தருகிறாய்!*

*"தப்புக் கணக்கில்லை தம்பி. தப்பாத கணக்கு. இன்னும் புரியவில்லை என்றால் மேலும் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டு பாரதி மடமடவென்று கவிதை பொழிகிறான்:*

**கணம்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்**
**கணம்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்**
**கணம்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்**
**கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ஆங்கே**
**கணம்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்**
**காளிபரா சக்தியவள் களிக்கும் கோலம்**

**கணம்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்**
**கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்**

*அப்பா, உண்மையிலேயே தலை சுற்றுகிறதப்பா.*

*இந்தக் கணங்கள் அடுக்குத் தொடராய் இருந்தாலும், சுபத்திரையைக் கடத்தக் கண்ணன் இரண்டு கணங்கள் எடுத்துக் கொண்டாலும், சரணம் என்று ஒருவன் அவனே கதி என்று வந்து அடைக்கலம் கேட்டுவிட்டால் ஒரே கணத்தில் அவனுக்கு அபயம் அளிப்பவன் கண்ணன். அதையும் பாரதி சொல்கிறான்:*

**பொன்னவிர் மேனி சுபத்திரை மாதைப் புறங்கொண்டு போவதற்கே - இனி**
**என்ன வழியென்று கேட்கில் உபாயம் இருகணத்தே உரைப்பான் - அந்தக்**
**கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக் காணும் வழியொன்றில்லேன் - வந்திங்கு**
**உன்னை அடைந்தனன் என்னில் உபாயம் ஒருகணத்தே உரைப்பான்**

*நான் சமீபத்தில், அதாவது இரண்டாண்டுகளுக்கு முன்னால் எழுதிய பாடல் ஒன்று இப்பொழுது நினைவுக்குள் அடியெடுத்து வைக்கிறது!*

*தோன்றிய பிறகு, வந்து சேர இரண்டு ஆண்டுகளா, எவ்வளவு மெதுவாக வருகிறது?*

*அப்படிச் சொல்லாதீர்கள். அது வந்த வேகம் அசாத்திய வேகம். தான் தோன்றிய கணத்தையும் அது முந்திக் கொண்டு வந்து விட்டதாம். நான் சொல்லவில்லை. அதுவே சொல்கிறது. பாட்டைக் கேளுங்கள்:*

**இந்தக் கணம் இன்னும் வரவில்லை - அதை**
**முந்தி வந்த திந்தப் பாடல்**

**சந்தம் எதுகை உவமை புலமை**
**எந்த நகையும் அணிந்துகொள் ளாமல்**
**முந்தி வந்த திந்தப் பாடல்**

**வந்த கணத்தை வழியனுப்பி - வர**
**விருக்கும் கணத்தை வரவேற்கச்**
**சொந்தக் கணமொன் றில்லாமல் - அதி**
**சூட்சுமமாய் ஒரு சொப்பனமாய்**
**முந்தி வந்த திந்தப் பாடல்**

அந்தரமோ நிரந்தரமோ - இந்த
அனுபவத் தையென்ன சொல்லுவது
காந்தநிலை ஏகாந்தநிலை - இது
காலத்தை யும்வெற்றி கொள்ளுவது

இந்தக் கணம் என்றும் தொடருவது - பேர்
ஒளியாய் நெஞ்சில் படருவது

*சரி தம்பி. இந்தக் கணத்துக்கு இவ்வளவுதான்! அடுத்த கணத்தில் சந்திப்போம்.*

# 47

*"அப்ப, கணம் என்பது ஒரு நிமிடத்தை விடக் குறைவான நேர அளவா?" சிகாமணி கொட்டாவி விட்டுக் கொண்டே கேட்டதும் தலையில் அடித்துக் கொள்கிறேன். தலைதானே சிகாமணியின் தலைமைச் செயலகம்!*

*கிழிஞ்சுது கிருஷ்ணாவதாரம். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு விஷயத்தைக் கோட்டை விட்டுவிட்டாயே, சிகாமணி! கணம் என்பது ஓர் அளவே இல்லை. அது ஒரு புள்ளி. கணிதத்தில் புள்ளிக்கு எப்படிச் சுற்றளவு, ஆரம் எதுவும் கிடையாதோ, அப்படித்தான் கணமும். இடத்துக்குப் புள்ளி எப்படியோ, காலத்துக்குக் கணம் அப்படி. ஆனால், சாதாரண அளவுகோல்களுக்குச் சிக்காத புள்ளியும், கணமும் 'நுட்ப உடல்' என்று மேலே நான் குறிப்பிட்ட சாதனத்துக்கு வெகு சுலபமாக அகப்பட்டு விடுகின்றன. நுட்பத்தின் பரிமாணங்களே வேறு.*

*கவிதை ஜனிக்கும் கணங்களில், நான் வேறு வேறு பரிமாணங்களில் நுட்பமாக அனுபவம் பெற நேரிடுகிறது. நுட்பமாக என்றால்...? இதை எப்படி உரைநடையில் சொல்லி விளங்க வைக்க முடியும்? அதனால்தான், கவிதையிலேயே சொல்ல முற்பட்டேன்:*

*முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது வேதாளம்*

**கருவத் திற்கோர் உருவம் அளித்துக்**
**கருவுக் குள்ளே வைத்து வளர்த்திவ்**
**வுலகுக் கென்னை அழைத்தாலும்**
**கால்கள் கைகள் விழிகள் எனக்**
**காவல் அமைத்துக் கொடுத்தாலும்**
**காதல் நட்பு சுற்றமெனப்**

பாடல் நூறு படித்தாலும்
முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது வேதாளம்

ஓலமெழுப்பும் கடலோரத்தில்
ஒற்றை மரத்தின் வெற்று நிழலில்
உடைந்த நிலவை உரசிப் போகும்
கருமேகக் காட்சிகளில்
மழை ஓய்ந்த மாலைப் பொழுதில்
மல்லாந்த படித்துடிக்கும்
பூச்சிகளின் உயிர்ப் போராட்டங்களில்
பேச்சிழக்க வைத்துவிடும்
பெருவெளியின் ஒருநினைப்பில்
அட
அனுபவத்திற் குள்ளேயும் ஓர் அதல பாதாளம் - என
மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது வேதாளம்

வானப் பரப்பை வாரிச் சுருட்டி
வார்த்தைக ளுக்குள் ளேவைத் துருட்டிக்
கணமென் றிங்கோர் அணுவைப் பிளந்து
கனவுப் பொருளாய் மாறி நுழைந்து
யார்யார் தலையோ சிதறி வெடிக்கக்
கதைகள் நூறு சொல்லி முடிக்க
மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது வேதாளம் - அட
அனுபவத்திற் குள்ளேயும் ஓர் அதல பாதாளம்

*"புரிந்து விட்டது!" குதிக்கிறான் சிகாமணி, 'யுரேகா' என்று கத்திக் கொண்டே ஓடிய ஆர்க்கிமிடீஸைப் போல, ஆனால், நல்ல வேளை, நிர்வாணமாக இல்லை.*

*அவன் சொல்கிறான்: "வாத்யாரே. புரிந்து விட்டது. கம்ப்யூட்டர், அதாம்பா, கணினி. அதற்கு ஹார்ட் வேர், ஸாஃப்ட் வேர் என்று இரண்டு உறுப்புகள் உண்டென்கிறோமே, அதாவது, புலன்களால் கண்டு, தீண்டி அறியப்படும் திண்பொருள், புலன்களுக்கு அகப்படாத மென்பொருள்! அது போல் நமக்குத் திட்ப உடல், நுட்ப உடல் என இரண்டு உடல்கள் உண்டென்கிறாய். அவ்வளவுதானே?"*

*எவ்வளவு அனாயசமாகச் சொல்லி விட்டான். இதை விளக்கத்தான் நான் இவ்வளவு நேரம் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். புத்தி சிகாமணி புத்திசாலிதான்! அவன் வேறு எப்படி இருக்க முடியும்!*

திண்பொருள், மென்பொருள். அடேடே! சரிதான் என்று தோன்றுகிறது.

கண் என்பது திண்பொருள், பார்வையோ மென்பொருள். கண்ணிருந்தும் பார்வை இல்லாதவர்கள் உண்டே.

கவிதை திண்பொருள், அதன் கற்பனை அல்லது ப்ரதீபா மென்பொருள்.

உடல், அதாவது ஸ்தூலமாகிய திட்ப உடல் திண்பொருள், அதையியக்கும் சக்தி அல்லது மனம் என்று சில சமயம் குறிக்கப்படும் சாதனமாகிய நுட்பவுடல், மென்பொருள். நுட்பவுடலும் மனமும் ஒன்றா, வேறுவேறா என்ற விவாதத்தை இங்கே ஆரம்பிக்க வேண்டாம். அதைப் பிறகு வைத்துக் கொள்வோம்.

மேலே உள்ள கவிதை என்ன சொல்கிறது?

'கணம்' என்பது காலத்தின் அணு. அதைப் பிளக்க முடியும். அதற்குள் கனவாக மாறித்தான் நுழைய முடியும். இதையெல்லாம் விளக்க முடியுமா?

அது போகட்டும். மேலே உள்ள கவிதை 1980–ல் வந்தது. அப்போது எனக்கு வயது 27. அந்த வயதில் வரவேண்டிய கவிதையா இது! எவ்வளவுதான் கை, கால் அமைத்துக் கொடுத்தாலும், உலகம் என்ற பொம்மையை, பொம்மலாட்டத்தைக் காட்டிச் சமாதானம் செய்தாலும், வேதாளம், மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்கிறதாமே! எப்படி? எது வேதாளம்? எது முருங்கை மரம்? விக்கிரமாதித்தன் உண்டா? எப்படி அலைஅலையாய்க் கேள்விகளை எழுப்புகிறது இந்தக் கவிதை!

போதும் இதற்கு மேல் நானே என் கவிதைக்கு பாஷ்யம், வியாக்யானம் எல்லாம் எழுதக் கூடாது, உஷ்!

எனக்கு மேற்சொன்ன கவிதையின் அர்த்தத்தில் உள்ள நாட்டத்தை விட, அதில் வரும் 'மழை ஓய்ந்த மாலைப் பொழுதில்' என்ற வரியை, 'மழைய்ய் ஓய்ய்ந்த மாலைப் பொழுதில்' என்று வாசகர்கள் படிக்க வேண்டுமே என்ற கவலைதான் அதிகம்!

மொத்தத்தில் அவரவர்க்கு எதில் விருப்பம் அதிகமோ அதில்தான் நாட்டம் செல்லும். இயற்கைதானே! இசைக் கச்சேரியில், தனக்குத் தெரிந்த ஒரு பாடலைப் பாடகர் பாடும் பொழுது, ரசிகரின் கவனம் அதிகம் ஈர்க்கப்படுவதை அன்றாடம் பார்க்கிறோமே.

நான் எழுதிய நூல்களை எல்லாம் எனக்குத் தெரிந்தவர்களுக்கு, அதாவது, அவர்களுக்கு என்னைத் தெரிந்திருக்கா விட்டாலும்,

நூல்கள் பயிலும் நாட்டம் உள்ளவர்கள் அவர்கள் என்று நான் தேர்வு செய்தவர்களுக்கு, அனுப்புவது வழக்கம். காசு கொடுத்துக் கடையில் என் நூல்களை யார் கேட்டு வாங்கிப் படிக்கப் போகிறார்கள் என்று என் நூல்களை எந்தக் கடையிலும் விற்பனைக்காக நான் வைத்ததே இல்லை. நம் வாசகர்கள் மீது எனக்கு அப்படியொரு நம்பிக்கை!

அப்படி நான் அனுப்பிய நூல்களை முழுதும் படித்துவிட்டு, உடல் நலமில்லாத நிலையிலும் எனக்குக் கடிதங்கள் எழுதிய சில பெரியவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். உடனே நினைவுக்கு வருபவர், இந்தப் பகுதி எழுதுவதற்குச் சில நாட்களுக்கு முன் அமரரான அருட்செல்வர், தொழிலதிபர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம். அவர் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக நடத்திவரும் வள்ளலார்–காந்தி விழாவன்று விழாமேடையிலேயே, விழா நடக்கும் போதே, காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2–ஆம் தேதி அவருடைய உயிர் பிரிந்த செய்தி, அவருக்கு அந்தப் பெரிய மஹான்கள் இருவரிடத்திலும் இருந்த பக்திக்குச் சான்றாகிறது. 1971 அல்லது 72 என்று நினைக்கிறேன், பொள்ளாச்சியில் அருட்செல்வர் ஒரு திருமண மண்டபம் திறந்த போது அவர் அழைப்பை ஏற்று நான் அந்த விழாவில் கலந்து கொள்ளப் பொள்ளாச்சி சென்றிருந்தேன். அங்கே சென்ற பிறகு எனக்கு உடல்நலக் குறைவால் காய்ச்சல் ஏற்பட்டது. அதை அறிந்த மகாலிங்கம் அவர்கள், சென்னைக்குப் புகைவண்டியில் போக வேண்டாம் என்று என்னைத் தடுத்துத் தன்னுடனே தன் காரில் சென்னைக்கு அழைத்து வந்த அன்பை என்னென்பது! அன்று ஓரிரவு முழுவதும் காரில் அவர், எழுத்தாளர் திரு.பகீரதன், நான் ஆகிய மூவரும் இலக்கியம், ஆன்மிகம் என்று ஓயாமல் பல செய்திகள் பேசிக் கொண்டே வந்ததை மறக்க முடியாது. வரும்வழியில் ஏதோ ஓர் ஊரில் சக்தி சுகர்ஸ் ஓய்வு விடுதியில் தங்கிவிட்டு, காலையில் புறப்பட்டதும், வண்டியை திசைத்திருப்பிப் பாண்டிச்சேரி நோக்கி விடச்சொன்னார். பகீரதன் ஏனென்று கேட்டதும், ரவிக்கு நான் சித்தி வளாகத்தைக் காட்ட வேண்டும் என்று சொல்லி என்னை அங்கே அழைத்துச் சென்று, வள்ளலார் ஜோதியில் கலந்து மறைந்த அறையை தரிசிக்க வைத்து, அதன்பிறகு பாண்டிச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்துக்கும் அழைத்துச் சென்று, மாலையில் சென்னைக்குக் கொண்டுவந்த சேர்த்த அவருடைய அன்புள்ளத்தை என்னென்று சொல்ல!

நான் எழுதிய சில நூல்களை 2007–ல் அருட்செல்வருக்கு அனுப்பினேன். சில நாட்களிலேயே அவரிடம் இருந்து ஒரு நீண்ட கடிதம் வந்தது. அதில் என் கட்டுரைகள் பற்றிக் குறிப்பிட்டு விட்டு,

'உன்னோடு நான்' என்ற என் கவிதைத் தொகுப்பில் இருந்து, அவர் மனத்தைத் தொட்ட ஒரு கவிதையைக் குறிப்பாகப் பாராட்டி எழுதியிருந்தார். அது எண்சீர் விருத்தங்கள் பத்து அடங்கிய நீண்ட கவிதை. அதன் முதல் விருத்தத்தை மட்டும் இங்கே தருகிறேன். அதன் முதல்வரியே அருட்செல்வரை ஈர்த்திருக்கும்:

**நாதமய மானஅருட் சோதி யேவுன்**
**நாடகத்தில் என்வேடம் என்ன அப்பா**
**போதுமினி பொய்மாயப் பூட கங்கள்**
**போட்டுடைக்க வேண்டும்நீ உண்மை யெல்லாம்**
**வேதனையின் வெறியாட்டம் ஓய்ந்து போக**
**வேதவொலி கேட்கட்டும் விரைந்து சொல்க**
**சாதகங்கள் வெற்றிபெறக் கூடு மென்றால்**
**சத்யயுகம் மலரட்டும் தேவ தேவா**

'அருட்பெரு...சோதி' என்ற மந்திரத்திலேயே சதா லயித்திருந்த அந்த நல்ல உள்ளத்தை, 'அருட்சோதியே' என்ற விளியுடன் தொடங்கிய கவிதை ஈர்த்தது இயற்கைதானே! அந்தப் பத்து விருத்தங்களில் ஒன்றைக் குறிப்பிட்டு அவர் நிறைவாக எழுதியிருந்த வரிகள் என்னை நெகிழ வைத்தன

**"அந்தத்தை எண்ணிநான் அஞ்ச வில்லை**
**அந்தாதிப் பாட்டொன்றும் புதிய தில்லை**
**வந்தவரைக் கடைசிவரை வாழ வைக்கும்**
**வையகமாய் சத்யயுகம் மலர வேண்டும்"**

எனும் கவிதை வரிகள், உங்கள் கவிதைத் தொகுப்பெனும் குன்றின் உச்சியில் படர்ந்துள்ள கதிரவனின் ஒளி போன்று அமைந்துள்ளதை அகம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

அந்தத்தை எண்ணி அஞ்சாமல், தம் இறுதி மூச்சு வரை, நல்ல விஷயங்கள் பற்றிப் பல இதழ்களில் எழுதிக் கொண்டும், பல நல்ல பணிகள் ஆற்றிக் கொண்டும், 90 வயதுக்கு மேல் வாழ்ந்த அருட்செல்வரின் நினைவைப் போற்றுகிறேன்.

என் நூல்களை அனுப்பியதுமே படித்து விட்டுத் தம் கருத்துகளைக் கடிதங்களாக எனக்கு அனுப்பிய சான்றோர் பெருமக்கள் பலரில், இன்னொரு கிழவரை நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர் சாதாரணக் கிழவர் இல்லை. சாமான்ய மக்களுக்கும் நீதிதேவதைக் கோயிலின் ஆலயக் கதவுகளைத் திறந்து விட்ட நீதிக்கிழார்; உச்சநீதிமன்ற நீதியரசராக இருந்த போது பல புரட்சித் தீர்ப்புகள் மூலம் நீதித்துறைக்கே புதுப்பொலிவும், உந்து சக்தியும் தந்தவர்; நூறு வயதை நெருங்கிய முதுமையிலும்

*கூர்மையாகச் சிந்திக்கும் ஆற்றல் சற்றும் குறைவு படாமல் இன்னும் பத்திரிகைகளில் தம் நெஞ்சுக்குச் சரியென்று படும் கருத்துகளை எழுதி வரும் மூத்த இளைஞர், நீதியரசர் திரு.வி.ஆர்.கிருஷ்ணய்யர்*.*

*நான் எழுதிய* "Law, Logic and Liberty" *என்ற சட்டத் திறனாய்வு நூலைப் படித்துவிட்டு, 2000–ஆம் ஆண்டில் அவர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார்.*

*"என் மேஜை மீது இந்த நூல் ஒரு குறிப்பு நூலாக இருக்கும்"* ("It will be a reference book on my table")

*இப்படி அவரே தீர்ப்பு வழங்கிய பிறகு வேறு யாரிடம் சென்று நான் சான்றிதழ் பெற வேண்டும்?*

*"கடிதம் எழுதும் வழக்கமில்லை கவிதை எழுத முடியும்" என்று சற்றே கர்வம் தொனிக்கப் பாடிய நான் எழுதிய நூல்களைப் படித்துவிட்டு எத்தனைப் பெருமக்கள் எனக்குக் கடிதங்கள் எழுதித் தங்கள் மேலான கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள்! இன்னும் பல பெரியவர்கள்! அவர்களைப் பற்றியும் எழுதுகிறேன்.*

# 48

என் நூல்களை அனுப்பியதுமே படித்து விட்டுத் தம் கருத்துகளைக் கடிதங்களாக எனக்கு அனுப்பிய சான்றோர் பெருமக்களில், லலிதா பாரதி அம்மையாரையும், நான் பெரிதும் மதிக்கும் இலக்கியப் படைப்பாளர்களான அமரர் தொ.மு.சி.ரகுநாதனையும், அமரர் தி.க.சிவசங்கரனையும், பாரதி கலைக் கழக நிறுவனர் பாரதி சுராஜ் அவர்களையும், முனைவர் தெ.ஞானசுந்தரம் அவர்களையும், டாக்டர் பிரேமா நந்தகுமார் அவர்களையும், குறிப்பிடாமல் இருக்க முடியாது.

லலிதா பாரதி அம்மையாரின் வாழ்த்தை அவருடைய தாத்தாவின் வாழ்த்தாகவே, அதாவது, என்றைக்குமே இளமையாகவே நம் நெஞ்செல்லாம் நிறைந்துவிட்ட பாரதியின் வாழ்த்தாகவே எண்ணிப் பரவசப் பட்டேன்.

> **பாட்டினிலே சொல்வது பராசக்தி சொல் என்றால் ஏட்டினிலே சொல்வது எழுத்தாளன் கவிஞன் ரவியின் சொல் அல்லவா? ....................... உங்கள் மனத்தில் பாரதியின் கவிதைகள் ஆழ்ந்த சிந்தனைகளைத் தோற்றுவித்து, கருத்து அலைகளோடு மோதி ஒரு வியப்பான, நயமான விமரிசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது... வாழ்க உங்கள் பாரதி பக்தி.**

தம்மால் நடமாட முடிந்த வரை வானவில் பண்பாட்டு மையம் நடத்தும் பாரதி திருவிழாவில் தவறாமல் கலந்து கொண்ட அந்த அம்மையாரின் உள்ளூக்கம் வியக்கத் தக்கது. அவர் கவிஞர் வாலிக்கு பாரதி விருது வழங்கிய புகைப்படத்தில்தான் அவர் முகத்தில் எத்தனைப் பொலிவு, கம்பீரம்!

தொ.மு.சி.ரகுநாதன் அவர்களுடைய கடிதம் படித்துக் கண்கலங்கினேன்:

நூலைப் படித்து முடித்து விட்டேன். என்றாலும் ... Arthritis நோயினால் வலது கையும், விரல்களும் பாதிக்கப்பட்டு, கடிதம் எழுதுவது கூடச் சிரமமாகி, என் எழுத்துப் பணியே முடங்கிவிட்ட நிலையில், தங்கள் நூலைப் பற்றிச் சற்று விரிவான கருத்துரை கூற இயலாமைக்கு வருந்துகிறேன்ஞ்ஞ்... தங்கள் பாரதி ஆய்வுப்பணி தொடர என் இதயம் நிறைந்த வாழ்த்துகள்.

*தி.க.சிவசங்கரன் அவர்களின் இரண்டு கடிதங்கள் என் கோப்பில் பாதுகாக்கப்பட்டுள்ள பொக்கிஷங்கள். முதல் கடிதம், "நமக்குத் தொழில் கவிதை" என்ற என் நூலைப் படித்துவிட்டு, 1997–ல் அவர் கைப்பட எழுதிய கடிதம். 73 வயதில் கண்புரை நோயின் தொல்லைக்கிடையே நூலைப் படித்து முடித்த செய்தியைச் சொல்லிவிட்டு அவர் எழுதியிருந்த வரிகள் மறக்க முடியாதவை:*

சொல்புதிது; பொருள் புதிது; சுவை புதிது என்ற பாரதியின் திறனாய்வு இலக்கணம், இந்நூலுக்குப் பொருந்துகிறது. அதுவே கருத்து வேற்றுமைக் கிடையிலும் இந்நூலின் சிறப்பு. இந்நூல் பரவலாகப் படிக்கப்பெற வேண்டும்; விவாதிக்கப் பெற வேண்டும் என்பது என் அவா. இந்த விவாதத்தில், நா.சீ.வரதராஜன், சுராஜ் போன்ற என் நண்பர்களோடு, வல்லிக்கண்ணன், ச.செந்தில்நாதன்,திருப்பூர் கிருஷ்ணன், இன்குலாப், அப்துல் ரகுமான், பழமலய், ஈரோடு தமிழன்பன் முதலிய படைப்பாளிகளும் ஆய்வாளர்களும் பங்கேற்க வேண்டும் என்பது என் விழைவு. வாஸந்தி, ராஜம் கிருஷ்ணன், ப.சிவகாமி, திலகவதி முதலியோரும் பங்கேற்றால் நல்லது. குறைந்த பட்சம், 'இலக்கியச் சிந்தனை'க் கூட்டத்திலாவது,

இந்நூல் ஆராயப்பெற வேண்டும்; முயல்க! வெல்க! ....

*இரண்டாவது கடிதம், சில ஆண்டுகள் கழித்து, 'மின்னற் சுவை' என்ற என் நூல் கிடைக்கப் பெற்றவுடன் அவர் எழுதியது. "மகாகவி பாரதி பக்தர்/பித்தர்" என்று என்னை விளித்துவிட்டுக் கண்புரை நோயின் கடுமையாலும், இதயநோயின் காரணமாகவும் தாம் உடல்நலம் குன்றியிருந்த வேதனைச் செய்தியைச் சொல்லி, "பாரதி பாதையில் புதுயுகம் படைப்போம்" என்ற நல்வாக்குடன் கடிதத்தை நிறைவு செய்திருந்தார்.*

*தி.க.சி. விழைந்த வண்ணம் என் நூல்கள் அவர் குறிப்பிட்ட பெருமக்களால் அவருடைய ஆயுட்காலத்தில் ஆய்வு செய்யப்படவில்லை. அனால், அதற்கான வாய்ப்பு இப்பொழுது, ஒரு மாமாங்கக் காலத்துக்குப் பிறகு உருவாகியிருக்கிறது. ஆம், இந்தப் பகுதி எழுதி முடிக்கப்பட்ட பிறகு, 2015, பிப்ரவரி மாதம்*

*21–ஆம் தேதியன்று சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் என் நூல்கள் குறித்த முழுநாள் கருத்தரங்கம், திரு.பி.எஸ்.ராகவன், முனைவர் ஔவை நடராஜன் போன்ற பல நல்ல பெருமக்கள் துணையுடனும், வழிகாட்டுதலோடும், பாலக்காடு பேராசிரியர் திரு.கே.ஏ.ராஜாராம், முனைவர் அ.அறிவுநம்பி, முனைவர் உலகநாயகி பழனி ஆகியோர் பெருமுயற்சியாலும் நடைபெற்றது. அதேபோல், மதுரை மன்னர் கல்லூரியில் சில நாட்களுக்குப் பிறகு, என் படைப்புகள் பற்றி இன்னோரு கருத்தரங்கம் நடைபெற்றது.*

*இந்தியாவைப் பொறுத்தவரை, இலக்கியத் திறனாய்வின் முன்னோடி என்று கருதப்படுபவர் கே.ஆர்.சீனிவாச ஐயங்கார். அவருடைய மகளும், மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளரும் ஆன முனைவர் பிரேமா நந்தகுமார் என் நூல்களைப் படித்துவிட்டு ஒரு நல்ல திறனாய்வுக் கடிதமே வரைந்திருந்தார். என் நூல்கள் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு அதில் தம்மைக் கவர்ந்த அம்சங்களையெல்லாம் எடுத்துக்காட்டும் போக்கில், என் இனிய நண்பர் கவிமாமணி மீ.விஸ்வநாதனின் அற்புதமான இரண்டு வரிகளை நான் ஒரு கட்டுரையில் எடுத்தாண்டிருந்ததை உன்னிப்பாகக் கவனித்து, அந்த வரிகளை மனம்திறந்து பாராட்டி யிருந்தார். அந்த வரிகள்:*

> குருவை எண்ணிக் கோலம் போட்டால்
> திருவே வீட்டில் திருவிளக் கேற்றுவாள்

*என் கவிதைத் தொகுப்பில் உள்ள 'குருமந்திரம்' என்ற நூறு பாடல்களை மறக்காமல் குறிப்பிட்டிருந்தார். குருபக்தி எந்த அளவு டாக்டர் பிரேமா நந்தகுமாரின் இதயத்தை ஆட்கொண்டுள்ளது என்பதை உணர முடிகிறதே!*

*கவிதை விமர்சனத்தில் மிகக் கறார் பேர்வழியான பாரதி சுராஜ், என்னுடைய கவிதைத் தொகுப்பை 'இன்னொரு கீதாஞ் சலி' என்று எழுதியிருந்ததை முன்பே சொல்லிவிட்டேன். அவர், 'முரண்பாடுகளும் முண்டாசுக் கவிஞனும்' என்ற என் கட்டுரையைப் படித்து விட்டு ஒரு நீண்ட விமர்சனக் கடிதம் எழுதியிருந்தார். நான் நல்ல நூலாசிரியனாக உருவாகி வருவது பற்றி மகிழ்ச்சி தெரிவித்து விட்டு நிறைவாக இப்படி எழுதியிருந்தார்:*

*"இந்தப் பேனா இனி ஓயாமல் எழுதிக் கொண்டேயிருக்க வாழ்த்துகிறேன்"*

*அவர் வாழ்த்துப் பாதி பலித்தது. ஆம் அதன் பிறகு நான் நிறையவே எழுதிக் கொண்டிருக்கிறேன். அதுவும் ஓயாமல். அதாவது, என் வக்கீல் பணியில் இருந்து ஓய்வு பெறாமலேயே,*

எழுதிக் கொண்டிருக்கிறேன். பாதிதான் பலித்தது என்று ஏன் சொன்னேன் தெரியுமா? இப்பொழுதெல்லாம் நான் பேனாவால் எழுதுவதே இல்லை. எல்லாவற்றையும் நேரடியாகக் கணினியில் மின்னச்சு செய்து விடுகிறேன், இதோ, இப்பொழுது இந்தக் கட்டுரை உட்பட! பாரதியின் "எழுதுகோல் தெய்வம்" இனி என்னாகும்? அந்தத் தெய்வத்தின் கல்கி அவதாரம்தான் கணினி என்று சிகாமணி முணுமுணுக்கிறான். எப்படியோ!

போற்றுதலுக்குரிய பேராசிரியர் முனைவர் தெ.ஞானசுந்தரம், 'மின்னற்சுவை' என்ற என் நூலைப் படித்துவிட்டு மிக நல்லதோர் ஆய்வுக் கடிதம் எழுதியிருந்தார். அவர் கம்பராமாயணத்தில் ஆழ்ந்த புலமையுடையவர் என்பதை நாடறியும். கம்பன் என்றதும் நீதிபதி மகராஜனும், நீதிபதி இஸ்மாயிலும் நினைவுக்கு வருவது இயல்பே. தெ.ஞா. அவர்கள் தம் கடிதத்தில், என் நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையையும் பற்றி விரிவாகத் தம்முடைய பாராட்டைச் சொல்லிவிட்டு, என் நூலைப் படித்த போது சில இடங்களில் நீதிபதி மகராஜன் பேசுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று என்று குறிப்பிட்டுவிட்டுப் பின்வருமாறு அக்கடிதத்தை முடித்திருந்தார்:

> **"நீதித்துறை தமிழுக்குக் குறிப்பிடத்தக்க தொண்டாற்றியுள்ளது. அம்மரபு தங்களால் மேலும் தொடரப் படுகிறது."**

இதையெல்லாம் நான் இங்கே குறிப்பிட மூன்று காரணங்கள் உண்டு.

எந்த நூலை யார் படித்தாலும் தமக்கென உள்ள தனிப்பார்வையோடுதான் அந்த நூலின் உள்ளடக்கத்தை அணுகுகிறார்கள் என்ற இயல்பான உண்மையையும், அதே நேரத்தில் தம் கருத்துக்கு உட்படாத அல்லது உடன்படாத கருத்தானாலும், அதைக் கருதிப் பார்த்துப் பாராட்டும் பண்பு மேலே நான் குறிப்பிட்ட பெரியவர்களிடம், அவர்களைப் போன்ற உண்மையான இலக்கிய ஆய்வாளர்களிடம் உண்டு என்பதையும் இங்கே பதிவு செய்ய விரும்பியது முதற் காரணம்.

மாங்கு மாங்கென்று கைவலிக்க நான் எழுதிய நூல்களை யாருமே படிப்பதில்லையோ என்று நான் சிலசமயம் உள்ளூக்குள் குறைபட்டுக் கொண்டது தவறு என்று, இக்கடிதங்களை இப்பொழுது மறுவாசிப்புச் செய்த போது, நான் உணர்ந்து கொண்டதைப் பதிவு செய்ய விரும்பியது இரண்டாவது காரணம்.

தெரிந்தோ, தெரியாமலோ சுயசரிதை போல நான் எழுதத் தொடங்கிவிட்ட இந்தச் சுயபுராணத் தொடரில் என்னைப் பற்றிச் சற்றேனும் புகழுரையாகச் சொல்லிக் கொள்ள என் நூல்களையும்,

*இந்தக் கடிதங்களையும் விட்டால் வேறு சான்றுகள் எதுவுமில்லை என்ற அப்பட்டமான உண்மையை ஒப்புதல் வாக்குமூலமாகப் பதிவு செய்ய நினைத்தது மூன்றாவது காரணம்.*

*ஆனாலும் எனக்கொரு குறை. 1962–63–ல், நான் சரிவரத் தமிழ் பயில்வதற்கு முன்பே, அப்போது ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளன்று ஆசிரியர் தின வாழ்த்தாக அவருக்கு எழுதி அனுப்பியிருந்த ஆங்கிலக் கவிதையும், அதைப் படித்துவிட்டுப் பாராட்டி அவரிடம் இருந்து வந்த கடிதமும் எங்கு தேடியும் கிடைக்கவில்லை, நினைவிலும் இல்லை.*

*இவ்வளவு பாராட்டுகளையும் இத்தனைப் பெரிய மனிதர்களிடம் பெற்ற பின்னும், அதை உள்வாங்கிக் கொள்ளாமல், இன்னும் நான் என்ன எழுத வேண்டுமோ அதை எழுதிவிடவில்லை என்ற தாகத்தோடு தவித்துக் கொண்டிருப்பதைத்தான் "முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது வேதாளம்" என்ற கவிதையில் சொல்ல முயல்கிறேனோ? என்ன முயலோ அது! புயல் வரும் என்பதை முயல் வரும் என்பதுபோல் புரிந்து கொண்டு, ஆறு வயதில் குழந்தை ஷோபனா காத்திருந்ததைப் போல, நான் இந்த அறுபது வயதிலும், ஏதோ முயல் வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறேனோ! புயலா, முயலா? விடிந்தால் தெரியும் கதை!*

# 49

புயல் வந்ததா, முயல் வந்ததா?

ஒன்றும் வரவில்லை தம்பி. காத்துக் கொண்டிருக்கிறேன். காலம் மட்டும் நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கிறது. நான் காத்துக் கொண்டுதான் இருக்கிறேன். எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்? தெரியாது. ஆனால், காத்துக் கொண்டே இருக்கிறேன்.

**சுருதி நாயகன் வரும் வரும் என்பதோர் துணிவால்**
**கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்**

இவ்வாறுதானே கம்பன் அசோக வனத்தில் சிறையிருந்த செல்வியின் ஏற்றம் செப்புகிறான்! பிராட்டியைப் போல், நானும் ஓர் அசோக வனத்தில்...!

என் நூல்களைப் பொதுவாக நான் விரைவில் எழுதி முடித்து விடுவேன். "நமக்குத் தொழில் கவிதை" என்ற நூலை ஒரு மாதத்துக்குள் எழுதி முடித்ததாக ஞாபகம். ஆங்கிலத்தில் எழுதிய சட்ட நூல்கள் இரண்டும் அப்படித்தான். ஆனால் "இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு" என்ற நூல் எழுதி முடிக்கச் சில ஆண்டுகள் ஆயின. காரணம், பாடமாக நான் படிக்காத அறிவியல் பற்றிய நூல் அது. பல ஆங்கில நூல்களைப் படித்துப் பயின்று நான் எழுத வேண்டியிருந்தது. அதே போல், "வெர்ஸஸ் ஆஃப் விஸ்டம்" (Verses of Wisdom) என்ற ஆங்கில நூல் எழுதவும் பல ஆண்டுகள் ஆயின. அது நான் என் போக்கில் சிந்தித்து எழுதிய நூல் இல்லை. அதன் ஒவ்வொரு பகுதியையும் எழுதும் போதும், சிந்தனை முயற்சி அதிகம் குறுக்கிடாமல், உள்ளூக்கம் என்னைத் தூண்டக் காத்திருந்து, காத்திருந்து எழுதிய நூல் அது. அப்படித்தான் "ப்ரும்ம சூத்ரா த காஸ்மிக் கோட்" (Brah-

ma Sutra, the Cosmic Code) *என்ற ஆங்கில நூலைக் கடந்த பத்து ஆண்டுகளாக மேற்சொன்னவாறு காத்திருந்து, காத்திருந்து எழுதி வருகிறேன். அதை எழுதி முடிக்கும் பணியை இறைவன் எனக்குத் தந்திருந்தால், என் உடலும், மனமும் தளர்ந்து போவதற்குள், என் உலக வாழ்க்கை ஒரு முடிவுக்கு வருவதற்குள், அந்த நூலை எழுதி முடித்து விடுவேன் என்று நம்புகிறேன்.*

*நான் எதற்காக எழுதுகிறேன்? ஒரே பதில். எதை என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லையோ அதை எழுதுகிறேன். அதை எழுதாமல் என்னால் இருக்க முடியவில்லை என்பதுதான் நான் அதை எழுத ஒரே காரணம்; நானறிந்த ஒரே காரணம்.*

*'ப்ரும்ம சூத்ரம்' என்ற மிகப் பழைய சமஸ்க்ருத நூலுக்கு ஆங்கிலத்தில் ஒரு விளக்கவுரை எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்கேன் ஏற்பட்டது? தெரியாது என்பதுதான் சரியான விடை.*

*நூல்கள் எழுதி அதன் மூலம் பேரும், புகழும் பெற்று வாழ வேண்டும் என்பது என் நோக்கம் இல்லை. என்னுடைய எந்த நூலையும் வெகுசிலருக்கு மேல் எவரும் முழுமையாகப் படித்திருக்க வாய்ப்பில்லை என்பது என் ஆழ்ந்த நம்பிக்கை. இருந்தும், நான் தொடர்ந்து எழுதுகிறேன். என் ஆயுட்காலத்துக்குள் இந்த நூல்களை நிறைய பேர் படிக்க வேண்டும் என்ற ஆசையோ, அவசரமோ எனக்கில்லை. இந்த நூல்களை ஈன்றெடுத்த காலமே அவை எங்கே, எப்போது போயடைய வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யும்.*

*ஆங்கிலத்தில் நான் எழுதிய ஒரு சட்ட நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மேடையில் பேசும் போது என் இனிய நண்பர், திரு.ப.சிதம்பரம் ஒரு கேள்வி கேட்டார். அவர் ஆங்கிலத்தில் கேட்ட அந்தக் கேள்வியை அப்படியே ஆங்கிலத்தில் இங்கே தருகிறேன்:* Ravi, how do you find time to write such books ? *என் ஏற்புரையில், ஆங்கிலத்தில் நான் சொன்ன பதில்:*

I do not find time, but, Time finds me.

*தமிழில், கிட்டத்தட்ட, இப்படிச் சொல்லிப் பார்க்கலாமோ?*

*காலத்தை நான் தேடிப் போவதில்லை. காலமே என்னை நாடி வந்து பற்றிக் கொள்கிறது.*

*எத்தனையோ அடியார்கள் இறைவனைத் தேடி அலைபாய்ந்திருக்கும் வரலாறுகளுக்கு இடையில் ஃபிரான்ஸிஸ் தாம்ஸன் என்ற ஆங்கிலக் கவிஞன் மட்டும் வேறுவிதமாகச் சொல்கிறான். அவனைத் தேடிவந்து துரத்துகிறதாம், சொர்க்கத்தின் வேட்டை நாய். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவன்*

அலைபாய்கிறான். எங்கெங்கோ ஓடுகிறான். நட்சத்திர மண்டலங்களுக்கெல்லாம் சென்று புகலிடம் கேட்கிறான். எதுவுமே அவனை ஒளித்து வைத்துக் கொள்ள முன்வராத நிலையில், "ஐயோ, நான் தோற்றேன்" என்று அவன் வீழ்கிறான்! அவனைத் துரத்தி வந்த சொர்க்கத்தின் வேட்டை நாயான இறைவனே தன் உண்மையான புகலிடம் என்பதைக் கடைசியில் உணர்கிறான். "The Hound of Heaven" என்ற அந்த அருமையான ஆங்கிலக் கவிதை என்னை மிகவும் தாக்கிய படைப்புகளில் ஒன்று. அதன் தொடக்க வரிகளே அந்தக் கவிதையின் விறுவிறுப்புக்கும், ப்ரும்மாண்டமான அரங்க அமைப்புக்கும் கட்டியம் கூறுகின்றன:

I fled Him, down the nights and down the days;
I fled Him, down the arches of the years;
I fled Him, down the labyrinthine ways
Of my own mind; and in the midst of tears
I hid from Him, and under running laughter.
Up vistaed hopes I sped;
And shot, precipitated,
Adown Titanic glooms of chasmed fears,
From those strong Feet that followed, followed after.
But with unhurrying chase,
And unperturbèd pace,
Deliberate speed, majestic instancy,
They beat - and a Voice beat
More instant than the Feet -
'All things betray thee, who betrayest Me'

இரவு பகலாக அவனிடமிருந்து தப்பிக்க நான் ஓடிக்கொண்டிருக்கிறேன். காலச் சந்திகளின் ஊடே, என் மனத்தின் நெறியற்ற குறுக்குப் பாதைகளின் ஊடே ... கண்ணீர்த் துளிகளுக்கிடையில் ஒளிந்து கொண்டேன்; ஏதோ ஒரு நம்பிக்கைத் தோற்றம் காட்டிச் சலசலக்கும் சிரிப்பலைகளினூடே விரைந்தேன். எதிர்பாராமல், திடீரென்று அச்சம் என்ற அதல பாதாளத்தில் வீழ்ந்தேன். ஆனால், நிதானமான விரட்டலில், நிலைகுலையாத கதியில், கணிக்கப்பட்ட விரைவோடு, கம்பீரமான கணலயத்தோடு

என்னைத் துரத்தித் துரத்தி வரும் அந்த வலிமையான பாதங்கள்; அவற்றைக் காட்டிலும் ஓர் அவசர அருகாமையில் ஒலிக்கிறது ஒரு குரல்: 'என்னை விட்டு ஓடும் உன்னை எல்லாமே கைவிட்டு விடும்.'

அடாடா! மலைக்க வைக்கும் சொல்லோவியம்!

அந்தக் கவிஞனைத் துரத்திய சொர்க்கத்தின் வேட்டை நாய் போல், காலம் என்னைத் துரத்தித் துரத்திப் பிடித்து எழுத வைக்கிறது என்று நான் சொன்னால் அது கொஞ்சம் அதிகப் பிரசங்கமாகத் தோன்றலாம்; ஆனால், வேறு விதமாக அதை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

தான் வாழும் காலத்திலேயே புகழ் பெற வேண்டும் என்று ஒருவன் விரும்புவதில் தவறெதுவும் இல்லை. ஆனால், புகழ் என்று நான் கருதுவதே வேறு.

பிரபலமாக இருப்பது வேறு. புகழ் என்பது வேறு.

**இருவே(று) உலகத்(து) இயற்கை திருவேறு**
**தெள்ளியர் ஆதலும் வேறு**

ஒருவருடைய பிராபல்யம் அவர் முகம் ஊடகங்களில், அல்லது வெள்ளித்திரையில் தினம் வந்து கொண்டிருக்கும் வரைதான். 1940–களில், எம்.கே.தியாகராஜ பாகவதர் புகைவண்டியில் பயணம் செய்தால், ஒவ்வொரு நிறுத்தத்திலும் பாகவதரைப் பார்க்க நூற்றுக் கணக்கான ரசிகர்கள் முண்டியடித்துக் கொண்டு அலைமோதுவார்கள்; அந்தப் புகைவண்டி, ஏழெட்டு மணிநேரம் தாமதமாகத்தான் இலக்கைச் சென்றடையும்; ஆனால், அவரே திரையில் தோன்றாமல் ஏழெட்டு ஆண்டுகள் சிறை சென்று வந்த பிறகு, அவர் ரிக்ஷாவில் சென்றால் கூடப் பார்க்க ஆளற்ற நிலையும் உருவானது. திரையுலகின் முடிசூடா மன்னனாக இருந்தே நாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொண்ட நாடோடி மன்னன் எம்.ஜி.ஆரை இப்பொழுது ஏழெட்டு வயதான தமிழ்ச் சிறுவர்களுக்குத் தெரியவில்லை.

ஒரு வேடிக்கையான சம்பவத்தை இங்கே குறிப்பிட வேண்டும். 1972–ஆம் ஆண்டு நடந்த சம்பவம் அது. அப்போது, நான் 'மாணவரிஸம்' என்ற பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தேன். அந்தப் பத்திரிகைக்குப் பல ஊர்களில் மாணவப் பிரதிநிதிகள் இருந்தார்கள். 'இதெல்லாம் ஒண்ணும் கொறச்சலில்லை' என்று யாரோ முணுமுணுப்பது கேட்கிறதே! சரி, சம்பவத்துக்கு வருகிறேன். டில்லி நகரத்துக்கான பிரதிநிதியாக இருந்த ராஜா என்ற நண்பர் அப்போது சென்னைக்கு வந்திருந்தார். அவர் சென்னையில் இருப்பதாகவும், என்னைப் பார்க்க விரும்புவதாகவும் தொலைப்பேசியில் சொன்ன

போது, நான் ஏ.வி.எம். படப்பிடிப்பு நிலையத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். மாணவரிஸத்துக்குப் பேட்டி எடுக்க வேண்டும் என்ற என் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, இயக்குநர் ஸ்ரீதர் என்னை அங்கே அழைத்திருந்தார். அப்போது அவர் “ஹீரோ 72” என்ற படம் எடுத்துக் கொண்டிருந்தார். அது சில ஆண்டுகளுக்குப் பிறகு ‘வைர நெஞ்சம்’ என்ற தலைப்போடு வெளியாகியது.

ஸ்ரீதர் சொன்னபடியே நான் அந்தப் படப்பிடிப்பு நிலையத்துக்குச் செல்லத் தயாரான போதுதான் ராஜாவின் அழைப்பு வந்தது. ராஜாவையும் அங்கேயே வரச் சொன்னேன். நான் போய்ச் சேர்ந்தபோது அங்கே ராஜா எனக்காகக் காத்திருந்தான். அவனுக்குத் தமிழ் கொஞ்சம் தடுமாற்றம்தான். ஆங்கிலம், ஹிந்தி பேசுவான். டில்லியிலேயே பிறந்து, வளர்ந்தவன். அவனும், நானும் ஸ்டூடியோவுக்குள் நுழைந்ததும் அங்கே ஒரு தளத்தின் வெளி வாயிலில் இருவர் அமர்ந்திருந்தனர். ஒருவர் இயக்குநர் ஸ்ரீதர். அவர் அருகில் அறிமுகமே தேவையில்லாத ஒரு பிரபலமான பிரமுகர் அமர்ந்திருந்தார். என்னைச் சுட்டிக் காட்டி, “தயாரிப்பாளர் கல்யாணராமனின் புதல்வர்” என்று என்னை அந்த பிரபலமானவருக்கு ஸ்ரீதர் அறிமுகம் செய்து வைத்தார். அவரும், வணக்கம் சொல்லிவிட்டு என்னைப் பார்த்து, “வாத்யார் சௌக்கியமா?” என்று என் தந்தை விஸ்வம் பற்றி விசாரித்தார். நான் அவருக்கு பதில் சொல்லிவிட்டு, அருகில் இருந்த ராஜாவிடம் ஸ்ரீதரைக் காட்டி, “இவர்தான் இயக்குநர் ஸ்ரீதர்” என்றேன். அவன் உடனே அருகில் முழு மேக் அப்பில் அமர்ந்திருந்த பிரபலமானவரைச் சுட்டிக்காட்டி அவர் யார் என்று கேட்டு விட்டான். எனக்கு பகீர் என்றது. இயக்குநர் ஸ்ரீதரோ எழுந்து நின்று கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்து விட்டார். தன்னைத் தெரியாத ஒரு தமிழன் இருப்பது அந்தப் பிரபலமானவருக்கே, அதாவது நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கே வியப்பாக இருந்தது. நான் ராஜாவிடம் மெதுவாக “டேய், இவர்தாண்டா சிவாஜி” என்றதும், அவன் இன்னும் சத்தமாக “ஓ, நான் இவர் நடித்து ஒரு படம் ரொம்ப நாட்களுக்கு முன் பார்த்திருக்கிறேனே, பாசமலர் என்று நினைக்கிறேன்” என்றதும் இயக்குநர்

ஸ்ரீதர் இன்னும் அடக்க முடியாமல் சிரித்ததை நினைத்துக் கொள்கிறேன். பிராபல்யத்தின் பலம் அவ்வளவுதான்!

அதே சமயத்தில், நாம் இன்னொன்றைக் கருதிப் பார்க்க வேண்டும். எந்தப் புலவனின் நூலைத் தமிழ்ச்சங்கம் அங்கீகரிக்கத் தயங்கியதோ, அந்தப் புலவனின் நூலை உலகப் பொதுமறை என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கொண்டாடி வருகிறோம்; எந்தக் கவிஞனின் இறுதி யாத்திரையில் இருபதுக்கும்

குறைவானவர்களே கூடச் சென்றனர் என்று நாம் இன்னும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறோமோ, அந்தக் கவிஞனின் கவிதைகளைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் லட்சக் கணக்கான மாணவர்கள் ஆண்டுதோறும் பயில்வதுடன், அவனுடைய வரிகளைச் சொல்லாமல் எந்த மேடைப் பேச்சும் நிறைவு பெறுவதில்லை என்ற நிலையும் உருவாகி விட்டது. பூமியைச் சுற்றிக் கதிரவன் வருவதாகச் சொல்லப்பட்ட புவிமையக் கருத்தோட்டத்தை மறுத்துக் கதிர்மையப் படிவத்தை முன்மொழிந்ததற்காக யார் சித்திரவதை செய்யப் பட்டானோ, அவனைத்தான் தற்கால அறிவியலின் தந்தை என்று பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு உலகம் கொண்டாடுகிறது.

பிரபலமாக இருப்பது கொஞ்ச காலத்துக்குத்தான். புகழோ காலம் கடந்தது. இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியின் இசை வாழ்ந்து கொண்டிருக்கும்; விஸ்வநாதன் ராமமூர்த்தியின் இசையும் வாழ்ந்து கொண்டிருக்கும். ரவிவர்மன், சில்பி போன்ற மேதைகளின் ஓவியங்களும், கோபுலுவின் கோட்டோவியங்களும் எத்தனை ஆண்டுகளானாலும் ரசிக்கப் படும். கல்கி, நா.பா., இந்திரா பார்த்தசாரதி போன்ற வல்லுநர்களின் எழுத்தோவியங்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கும். இசைக்கவி ரமணன், வ.வே.சு., சு.ரவி ஆகியோர் கவிதைகள் போல் என் கவிதைகளும் காலம் கடந்து நிற்கும். ஒரு நம்பிக்கைதான்!

என் மூலமாக என்னென்ன படைப்புகள் உருவாக வேண்டும் என்பது இறைவன் திட்டமோ அவை உருவாகியே தீரும். காத்திருப்பது மட்டுமே என் பணி. கொக்குத் தவத்தில் காத்திருக்கிறேன். தக்க நேரத்தில் அதன் குத்தொக்கச் செயல்படுவேன்.

போதும் நிறுத்துவே. கொஞ்சம் வுட்டா ஒரேடியா அளந்து கொட்டிடுவீகளே! சிகாமணி அதட்டுகிறான். மனோன்மணி புன்முறுவல் பூக்கிறாள்.

ஏன், நான் காத்திருப்பதில் என்ன தவறு? எத்தனையோ ஆண்டுகளுக்கு முன், மன்னிக்கவும், எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன், ஏன், பல யுகங்களுக்கு முன் நிகழ்ந்து முடிந்த பிறகும், கோடானு கோடி ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள ஆகாச கூடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் அனுபவக் களங்கள் தம்முள் பிரவேசிக்க மீண்டும் ஒரு கவிஞன் வரும்வரைக் காத்திருக்க முடியும் என்றால், நான் காத்திருக்கக் கூடாதா? மனோன்மணி முணுமுணுக்கிறாள், 36 ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய ஒரு பாடலை:

வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்
வாழ்க்கை என்றேன் அதில் மூழ்கி விட்டேன்

அந்த
உலகத்திலே நான் எனக்கொரு வடிவம்
செய்ய நினைத்தேன் செயலிழந்தேன்
நிலவொளி கொண்டு கதிரவனைத்
தேடுகின்றேன் எங்கும் ஓடுகின்றேன்
வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்

நினைவுத் திரையில் நிழல் தெரிந்ததும்
நீரில் வண்ணங்களைக் குழைத்தேன்
தூரிகையால் அதைத் தீண்டிய போது
திரையே நிழலென்று தெரிந்து கொண்டேன்
வானவில் போல நானிங்கே
வளைகின்றேன் பின்பு கலைகின்றேன்

வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்

கனவுக் கடலின் நடுவினிலே நான்
காகிதப் படகாய் மிதந்திருந்தேன் - என்
கலங்கரை விளக்கங்கள் மூழ்கியதாலே
காற்றின் கருணையைப் பார்த்திருந்தேன்
கரைவரும் என்று காத்திருந்தேன்
காத்திருந்தே மெல்லக் கரைகின்றேன்

வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்
வாழ்க்கை என்றேன் அதில் மூழ்கி விட்டேன்

*கூட்டிக் கழித்துப் பார்த்தால் வார்த்தைகள், வெறும் வார்த்தைகள்! இதைத்தானே சொன்னான் விட்ஜென்ஸ்டைன்! ஆனால் சொல் என்பது என்ன, அவ்வளவு எளிதானதா? ஆதியில் சொல் இருந்தது என்றுதானே விவிலியம் தொடங்குகிறது!*

*“தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ!” இதுதானே கம்பராமாயண சாரம்!*

*“சொல் ஒன்று வேண்டும்!” இதுதானே பாரதியின் பிரார்த்தனை!*

*“சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை!” இதுதானே நம் அருமைக் கவிஞர் கண்ணதாசனின் கணிப்பு.*

*ம்! என் சொற்களுக்குள் ஏறிக்கொள்!*

# 50

*சொற்களுக்குள் ஏறிக் கொண்டேன். என்ன செய்யப் போகிறாய்?*

*தம்பி, உனக்கும் எனக்கும் பதில் சொல்லவே வந்தது ஒரு கவிதை, 1978–ல்:*

**என்**
**சொற்களுக்குள் ஏறிக்கொள் சொர்க்கத்தைக் காட்டுகிறேன் - என்**
**கற்பனைப் புரவியையுன் கண்களில் பூட்டுகிறேன்**

**மேகங்களிலே தேகம் இழைத்து மேனி படைத்திடலாம்**
**மின்னலைப்போல் துள்ளித்துள்ளி வானில் குதித்திடலாம்**
**நிலாப்பிறையைத் துந்துபியாக்கி நாதம் எழுப்பிடலாம்**
**வானவில்லை வளைத்துக் கட்டி ஆடை நெய்திடலாம்**
**என்**
**சொற்களுக்குள் ஏறிக்கொள் சொர்க்கத்தைக் காட்டுகிறேன் - என்**
**கற்பனைப் புரவியையுன் கண்களில் பூட்டுகிறேன்**

**நீர்க்குமிழிக்குள் நினைவிழந்துபோய் நித்திரை செய்திடலாம் - அங்கு**
**நேர்ப்படுகின்ற காற்றை நமக்குக் காவல் அமர்த்திடலாம்**
**நட்சத்திரங்களை எல்லாம் நமது வார்த்தை வயிரங்களால்**
**வெட்கப்பட வைத்து நெஞ்சம் விம்மிப் புடைத்திடலாம்**
**என்**
**சொற்களுக்குள் ஏறிக்கொள் சொர்க்கத்தைக் காட்டுகிறேன் - என்**
**கற்பனைப் புரவியையுன் கண்களில் பூட்டுகிறேன்**

உயிர்க்கருவுக்குள் ஊடுருவிப்போய் உண்மை யறிந்திடலாம் -
அங்கு
வடிவம் எடுத்து வளரும் புதிய மாயம் உணர்ந்திடலாம்
உலக விளிம்புக் கோடிச்சென்றே உருண்டு விழுந்திடலாம்
விழுந்து கொண்டே வீரக் கதைகள் பேசிக் களித்திடலாம்

ஆனால் என்
சொற்களுக்குள் ஏறிக்கொண்டால் மீண்டுவர மாட்டாய்
சொற்களோடு சொற்களாகக் கரைந்துபோய் விடுவாய்
விழிதொடாத இடமெலாமென் மொழிநுழைந்து செல்லும்
அழிவிலாத அட்சரங்கள் அமரவாழ்வு நல்கும்

சொற்களுக்குள் ஏறிக்கொள் சொர்க்கத்தைக் காட்டுகிறேன் - என்
கற்பனைப் புரவியையுன் கண்களில் பூட்டுகிறேன்
அதோ அந்தக்
கானல் நீரைக் கடந்து சென்றால் கற்பகச் சோலை வரும்

*கானல் நீரை எப்படிக் கடப்பது? கானல் நீர் ஒரு தோற்ற மயக்கம்தானே. அது மெய்யில்லையே! பிறகு அதை எப்படிக் கடந்து செல்வது? இருக்கும் ஒன்றைக் கடப்பதற்கு முயற்சி செய்யலாம். இல்லாத ஒன்றைக் கடக்க என்ன செய்ய முடியும்? இல்லாத ஒன்றைக் கடப்பது வெகு சுலபம். அது இல்லை என்பதை உணரும் கணமே அதைக் கடந்து சென்று விடுகிறோம். கானல் நீரைக் கடந்து செல்கிறோமோ இல்லையோ, இப்படிப்பட்ட வியாக்யான, விளக்கங்களை எல்லாம் கடந்து சென்றால்தான் கவிதையாகிய கற்பகச் சோலை வரும்!*

*புரிகிறது. ஆனாலும் அறிவு, அதான் நம்ம புத்தி சிகாமணி, எப்பொழுதும் இப்படிப்பட்ட வியாக்யானங்களைச் செய்து கொண்டுதான் இருக்கிறான். மனம், அதாங்க நம்ம மனோன்மணி, பாவம், இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துக் கொண்டுதான் இருக்கிறாள்.*

*பதினைந்து ஆண்டுகளுக்கு முன், ஒருநாள் மாலையில், சென்னை, மெரினா கடற்கரை சாலையில் நான் காலார நடந்து சென்று கொண்டிருந்தேன். என் கூட ஒரு நங்கையும் நடந்து வந்தாள். ஔவையார் சிலையருகே வந்ததும், 'வாக்குண்டாம்' என்ற செய்யுளை உரக்கச் சொல்லிக் கொண்டே நடந்தேன். ஏன் என்று கேட்க வேண்டாம். நான் எதைப் பார்த்தாலும், எதைக் கேட்டாலும் அதை எப்படியாவது ஒரு கவிதையுடனோ, செய்யுளுடனோ தொடர்பு படுத்திவிடும் என் மனம். இந்தப்*

பைத்தியக்காரத்தனத்துக்குச் சமீப கால எடுத்துக்காட்டு ஒன்று சொல்கிறேன். எனக்கு மருத்துவர் எழுதிக் கொடுத்திருந்த மாத்திரையை என் ஓட்டுநர் சிவசங்கரன் வாங்கி வந்து கொடுத்ததும் அந்த மாத்திரையின் பெயரைப் பார்த்தேன். ரேஜோ டி (Razo D) என்று எழுதியிருந்தது. உடனே, 'ரேஜோ, ரேஜோ டி என்னோட மருந்து' என்று 'யாரோ யாரோடீ' என்ற திரைப்படப் பாடல் மெட்டில் என் மனம் முணுமுணுத்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! பைத்தியம் முற்றி விட்டது.

சரி, மீண்டும் மெரினா கடற்கரை, ஔவை சிலை, வாக்குண்டாம் என்ற சமாச்சாரத்துக்கு வருகிறேன். நான் அந்தச் செய்யுளைச் சொன்னதும் அருகில் நடந்து வந்த நங்கை அதன் அர்த்தத்தைக் கேட்டாள். அதை அப்படியே சொன்னாலே போதுமே, பொழிப்புரையே தேவையில்லையே என்று நினைத்து அர்த்தம் சொல்லத் தொடங்கியதும், என் குரலும், போக்கும் மாறி விட்டதை உணர்ந்தேன். வேறு ஏதோ ஓர் அதிர்வுக்கு ஆட்பட்டு நான் பேசுவது போல் எனக்கே தோன்றியது. பேசினேன்:

வாக்கு உண்டாகும். ஓ! வாக்கு என்பது சாதாரணச் சொல் இல்லை. 'மணிவாக்கு' என்று பாரதி குறிப்பிட்டானே அப்படிப்பட்ட வாக்கு உண்டாகும். நல்ல மனம் உண்டாகும். அந்த 'நல்ல' என்ற சொல்லுக்குப் பொருள் தெரிய வேண்டுமா:

> **ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பு இரண்டுமுடனே**
> **ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே**

இந்த வாசகத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்க்க வேண்டும். அப்போது புரியலாம், 'நல்ல' என்ற சொல்லின் அர்த்தம். அத்துடன், மாமலராள் நோக்கு உண்டாகும். அதாவது, 'மலரின் மேவு திருவே' என்று பாரதி பாடினானே, அந்தத் திருமகளின் நோக்கு உன் மேல் விழும் என்பது ஒருபுறமிருக்க, மாமலராகிய இந்தப் பிரபஞ்சத்தையே ஆள்கின்ற நோக்கு உனக்கு ஏற்படும். பூக்கொண்டு தும்பிக்கையான் பாதம் சார்வாருக்கு என்று எளிதாக முடித்து விடக் கூடாது, தோழி! "மேனி நுடங்காது" என்ற சொற்றொடரை விட்டுவிடக் கூடாது. அதாவது மேனி வளையாமல், பூக்கொண்டு தும்பிக்கையான் பாதம் சார்வாருக்கு என்று படிக்க வேண்டும். இது என்ன குழப்பம்! மேனி வளைந்துதானே இறைவனைத் தொழுவது வழக்கம். அதுதானே நமஸ்காரம் செய்யும் முறை. மேனி வளையாமல் என்றால்ஞ்? மேனி வளையாமல் த்யான நிலையில் அமர்ந்து கொண்டு வணங்க வேண்டுமோ? இல்லை மகளே. மேனி வளையாமல், பூக்கொண்டு துப்பார் திருமேனி

தும்பிக்கையான் பாதம் சார வேண்டுமாம்! அதாவது, த்யான நிலையில் அமர்ந்து கொண்டு, உன் மேனி வளையாமல் நிமிர்ந்து அமர்ந்து கொண்டு, தும்பிக்கையான் பாதத்தைச் சார வேண்டும். எது சார வேண்டும்? துப்பார் திருமேனி சார வேண்டும்! ஸ்தூல சரீரம் எனப்படும் திட்பவுடல் வளையாமல், நிமிர்ந்து த்யான நிலையில் அமர்ந்து கொண்டால், சூக்ஷ்ம சரீரம் எனப்படும் நுட்பவுடல் நீர்போல் தெளிவாக இருக்குமாம். வெறும் மேனி வளையாமல் த்யான நிலையில் உட்கார வேண்டும். மனம் அடங்கி யிருக்க வேண்டும். அப்போது திருமேனியாகவே, தூய நீர்போல், ஆசாபாசங்கள் எதுவும் இன்றி நுட்பவுடல் துலங்கும். அப்போது அதில் பூக்கின்ற ஞான மலரைக் கொண்டு தும்பிக்கையான் பாதம் சார வேண்டுமாம். தும்பிக்கையைச் சொல்லி, அப்படிப்பட்ட கையுடையவனின் திருப்பாதத்தைக் காட்டுகிறாளே இந்தப் பாட்டி! கைகாட்டிக் கால்காட்டும் வித்தை என்ன வித்தையோ! தும்பிக்கை என்பது யோக மார்க்கத்தில், பன்னிரண்டு அங்குலத் தொலைவு பாயும் ஸ்வாஸத்தை, மூச்சுக் காற்றைக் குறிக்கும் ஒரு பரிபாஷை வழக்கு. அதன் பாதம் என்பதோ மூலாதாரச் சக்கரம் என்ற நுட்ப ஸ்தானம். அந்தத் திருப்பாதத்தைச் சேர்ந்தவர்க்கு என்று சொல்லாமல் ‘சார்வார் தமக்கு’ என்று சொல்கிறாளே!

> சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றொழித்துச்
> சார்தரா சார்தரு நோய்

உலகப் பொதுமறையின் சாரத்தை அன்றோ ஔவைப் பாட்டி இங்கே குறிப்பிடுகிறாள்!

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே அருகில் நடந்து வந்து கொண்டிருந்த நங்கையின் கண்கள் பனித்தன. “சார், இப்படியெல்லாம் இந்தப் பாடல் பற்றி நான் யோசித்ததில்லையே” என்று நாத்தழுதழுக்க அவள் சொன்னதும், “யோசித்து வருவதில்லை இது. யோகத்தில் வருவது!” என்று நான் பதில் சொன்னதாக ஞாபகம்!

ஏறக்குறையப் பன்னிரண்டு ஆண்டுகள் என் செயலாளராகப் பணிபுரிந்ததோடு, எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே இருந்துவிட்டு, இப்பொழுது லண்டனில் சென்று வாழும் செல்வி ராணி ஸ்ரீநிவாசன் என்பவர்தான் அந்த நங்கை. இந்தச் சம்பவம் நடந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு லண்டனில், தான் ஒரு சொற்பொழிவு ஆற்றப் போவதாகவும், அதில் ‘வாக்குண்டாம்’ பாடலைப் பற்றிய விளக்கத்தைச் சொல்ல ஆசைப்படுவதாகவும் குறிப்பிட்டு, அந்த விளக்கத்தை மீண்டும் நினைவு படுத்தி எழுதுமாறு மின்னஞ் சல் மூலம் என்னைக் அவள் கேட்டிருந்தாள். கேட்டதும் வருமா

விளக்கம்? யோசித்து வருவதில்லை பெண்ணே, அது யோகத்தில் வருவது என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு அவள் கேட்டபடி விளக்கம் அனுப்பாமலேயே விட்டுவிட்டேன். அவள் அந்தக் கூட்டத்தில் என்ன பேசினாளோ தெரியவில்லை.

இப்படியெல்லாம் வியாக்யானம் சொல்வது சரியா என்பது மிகவும் நியாயமான கேள்வி. ஆனால், 'மறை' என்று நம்பப்படும் படைப்புகளில் படிப்பவர் நிலைக்கு ஏற்ப வெவ்வேறு அடுக்குகளாக அர்த்தங்கள் பொதிந்திருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. 'The Occult Element in Tamil speech' என்று பாரதி ஓர் ஆங்கிலக் கட்டுரை எழுதியிருந்தான். அதில் மறை வல்லுநர்கள் பொதுவான சமூக மொழியைப் பயன்படுத்தும் போது கூடத் தாங்கள் சொல்லும் சொற்றொடர்களில் மறை பொருள் இருக்கும் வண்ணமே பேசுவார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, 'அப்படிப்பட்டவர்கள், 'உட்கார்' என்று சொன்னால், அது, உட்(கு)+ ஆர் எனப் பிரிந்து, 'உள்ளமைதி பெறுக' எனப் பொருள்தரக் கூடும் என்று எழுதியுள்ளான்.

பதினைந்து அண்டுகளுக்கு முன், மெரினா கடற்கரை சாலை ஓர் ஆரண்யமாக, அதாவது, வனமாக ஆனதும், அங்கே, நெருங்கியமர்ந்து கொண்டு ஓர் உபநிடதப் போக்கில் ராணியும் நானும், கார்க்கியும் யக்ஞவால்க்யரும் போல் உரையாடியதும் இப்போது மனத்திரையில் நிழலாடுகிறது. அதெல்லாம் ஒரு கண நேர அனுபவம். யோசித்து வாராது தம்பி. வெறும் புத்தி முயற்சியில் விரித்துப் பேசும் வியாக்யானம் இல்லையது. ஆட்கொள்ளப்பட்ட நிலையில் உள்ளிருந்து ஊற்றெடுத்து வரும் உணர்வு தம்பி. ஆங்கிலத்தில் 'ஞானத் தாழிசை' விளக்க நூலாகிய 'த வெர்ஸஸ் ஆஃப் விஸ்டம்' எழுதும் போது என்னை என் குருநாதர் அப்படிப்பட்ட நிலையில்தான் வைத்திருந்தார்.

'தம்பட்டம் போதுமண்ணே' என்று இடித்துரைக்கிறான் சிகாமணி.

தம்பட்டம் இல்லை தம்பி, தத்துவம். இப்பொழுது விஷயத்துக்கு வந்து விடுகிறேன்.

நம் திட்ப உடலைக் கடந்த நிலையில் இன்னோர் அதிர்வுக்கு நாம் வசமாவதுதான் 'பரவசம்' என்ற செய்தியைச் சொல்லத்தான் இந்தக் கதை. அப்படிக் கடந்த நிலையில் வசமாவதைத்தான் 'பரவசம்' என்று குறிப்பிடுகிறோம். ஆங்கிலத்தில் இதுதான் 'எக்ஸ்டஸி' எனப்படுகிறது. இதையே தத்துவ மொழியில் சொன்னால், 'Transcendental Experience'.

*வியாக்யானமே தேவைப்படாத என் பாடல் ஒன்றின் வரிகள் இப்பொழுது மேலும் சுடர் விட்டுப் பிராகாசிப்பதைப் பார்க்க முடிகிறது. பாரதியை நினைத்து எழுதிய அந்தப் பாட்டு முழுமையும் முன்பே ஒரு பகுதியில் தந்து விட்டேன். இருந்தாலும், பரவசம் பற்றிய விளக்கத்துக்குப் பிறகு மேலும் ஒளிபெற்று விளங்கும் அந்த வரிகளை மட்டும் இங்கே மீண்டும் நினைவு கூரலாம்:*

**கானல் நீரில் காணி நிலத்தைக் காண நினைத்தானே**
**காட்டு வழியில் பாட்டுச் சுடர்கள் ஏற்றி வைத்தானே**
**தேடிச் சென்ற திசையெல்லாம் பெருந் தீ வளர்த்தானே**
**தேகம் எடுத்ததனாலே அவனும் தேய்ந்து விட்டானே**

*கானல் நீரைக் கடந்து சென்றால் கற்பகச் சோலை வருமா, வராதா?*

# 51

*கானல் நீரோ, கற்பகச் சோலையோ இந்தத் தொடரின் கருப்பொருள் இல்லை. இதன் கருப்பொருள் கவிதை. அடாடா! பெரிய தவறு. கவிதை இதன் கருப்பொருள் இல்லை; கதாநாயகி!*

*தானே வெடித்துச் சிதறிய ஒற்றைப் புள்ளியும் அவள்தான். அதிலிருந்து பொலபொலவென்று பிரிந்து பரவும், பரவிக் கொண்டே இருக்கும் பிரபஞ்ச சக்தியும் அவள்தான். "ஊடலும் கூடலும் கோவலர்க் களித்து" என்று இளங்கோ சொன்னது போல் ஊடலும், கூடலும் பாவலர்க்கு அளிக்கும் மாதவிப் பொன்மயிலாள் அவள்தான். கூடல் மாநகரையே தீக்கிரையாக்கிய கண்ணகியைப் போல், மனக்காட்டை எரிக்கும் அக்கினிக் குஞ்சும் அவள்தான். அவளை ஆராதிக்கவே இந்தத் தொடர்.*

*'அதெல்லாம் சரி, கவிதை எழுதுவதில் என் பங்கு என்ன என்று தெளிவாகச் சொல்லுவே' என்று எரிச்சலுடன் கேட்கிறான் புத்தி சிகாமணி.*

*சொல்கிறேன். எழுதும் போது அடங்கியிருக்கும் நீ, எழுதி முடித்தபின் போடும் ஆட்டம் இருக்கிறதே அது பேயாட்டம் அப்பா! கவிஞன், அவன் மனம் போன போக்கில் ஏதேதோ எழுதிவிட, அதை வைத்துக் கொண்டு நீ செய்யும் வியாக்கியானம் இருக்கிறதே, அது தலைசுற்ற வைப்பது!*

*சிகாமணி கேட்கிறான்: 'ஏம்பா, நீ கூட போன பகுதியில் கானல், கோணல் என்று என்னென்ன வியாக்கியானம் செய்தாய், இப்போது என்னைக் குறை சொல்கிறாயே!'*

*நானா செய்தேன், இல்லை. அது, கவிதை தானே தனக்குச் செய்து கொள்ளும் அலங்காரம். எந்த அனுபவக் களத்தில் அது*

ஊற்றெடுத்து வந்ததோ, அதன் ஆபரணங்களை அது அணிந்து கொண்டுதான் வரும். எழுதும் கவிஞனுக்குப் புலப்படாத அந்த நுட்பங்கள் படிக்கும் ரசிகனுக்குப் புலப்படத்தான் செய்யும்.

'நானும் அதைத்தானே செய்கிறேன்' என்று சீறுகிறான் சிகாமணி.

இல்லை, ரசிகனின் பார்வைக்கு அணிகள் புலப்படலாம். ஆனால், ரசிகனே அணிகள் செய்து அவளுக்கு மாட்டிவிடக் கூடாது. புரிகிறதா?

என்ன புரிந்ததோ போ என்று சிகாமணி அலுத்துக் கொள்கிறான்.

எப்படி ஒரு கவிதை தானே அணிகள் அணிந்து வருகிறது என்பதற்குத் தற்கால எடுத்துக் காட்டு ஒன்று சொல்கிறேன். கவிஞர் வைரமுத்து எழுதிய ஒரு பாடல் சர்ச்சைக்கு உள்ளானது. தோழன் என்ற தமிழ்ச்சொல் இருக்க அவர் ஏன் சினேகிதனே என்று எழுதினார் என்ற கேள்வி ஒரு மேடையில் எழுந்த போது, நான் பதில் சொன்னேன்: அந்தப் பாடலை முதலில் சரியாகப் படிக்க வேண்டும். அதில் "சினேகிதனே" என்று அவர் எழுதவில்லை. "ஸ்னேகிதனே" என்றுதான் எழுதியிருக்கிறார்.

"ஸ்னேகிதனே, ஸ்னேகிதனே ரகசிய ஸ்னேகிதனே"

இதுதான் அந்தப் பாட்டின் முதல் வரி. இதைத் 'தோழனே ரகசியத் தோழனே' என்று பாடிப் பாருங்கள். ஜீவனே இருக்காது. 'ஸ்' என்ற உச்சரிப்புத்தான் இந்தக் கவிதையின் உயிர்நாடி. ரகசியத்தின் குறியீடு 'உஸ்' என்ற ஒலிதானே! ரகசியத் தோழமையை ஒலிக்குறிப்பாலேயே உணர்த்தும் உச்சரிப்பு அது. ரகசியமாகக் காதுக்குள் யாரோ பாடுவது போன்ற அனுபவத்தைத் தரவல்ல உச்சரிப்பு அது. எப்படி அந்தக் கவிதை தன் அனுபவக் களத்தில் இருந்தே தன் அணிகலனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்துவிட்டது பார்த்தாயா, சிகாமணி, உன் உதவி இல்லாமலேயே!

இன்னொரு கவிதை, சற்றே பழைய கவிதை:

> **சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்**
> **தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களுமோர்**
> **கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியுமருட்**
> **கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே**

என்னய்யா இது வள்ளலாருக்குத் தமிழ் இலக்கணம் தெரியாதா என்ன? ஆறு வதனங்கள், பன்னிரு தோள்கள், இரண்டு தாள்கள், ஒரு வேல், மயில்வாகனம், கோழிக்கொடி, தணிகாசலம்,

ஆக மொத்தம் 24 விஷயங்களைச் சொல்லிவிட்டு, இவ்வளவும் தம் 'கண்ணுற்றது' என்று ஒருமையில் சொல்லி விட்டாரே! இந்தப் பாடலின் அனுபவக் களம் என்ன தெரியுமா? கண்ணாடியில் இராமலிங்கர் தம்மைப் பார்த்த போது, அதிலே மேற்சொன்னவாறு முருகப் பெருமான் காட்சி தந்தார். அப்போது வந்த பாடல் இது. மேலே சொன்ன 24 விஷயங்களும் தனித்தனியாகவா அவருக்குப் புலப்பட்டன? இல்லை. மேற்சொன்ன அனைத்துமே வடிவான ஒரே முருகப் பெருமான் அவருக்குக் காட்சியானான். இதை ஒருமையில் சொன்னது எவ்வளவு பொருத்தம்! இதை ஆங்கிலத்தில் சொல்வதென்றால், 'ஸிந்தடிக் யூனிட்டி' (Synthetic Unity) என்று சொல்ல வேண்டும். அதாவது, ஒன்றிய நிலை அல்லது ஒருமை நிலை.

நான் ஏதோ கதையளப்பதாகக் கருத வேண்டாம் தம்பி! 'இம்மானுவெல் கன்ட்' என்ற ஜெர்மானிய தத்துவ மேதையைப் பற்றி முன்பே சொன்னேன் இல்லையா? அவன் சொன்னது இதுதான். நாம் ஓர் ஆப்பிள் பழத்தைப் பார்க்கும் போது, சிவப்பு நிறம், மென்மையான தோல், குளுமையான சுவை, உருண்டையான வடிவம் என்றெல்லாம் அதன் பண்புகளைத் தனித்தனியாக நுகர்ந்து, அவற்றைப் பிறகு ஒன்றிணைத்து ஆப்பிள் என்ற ஒரு பொருளை அறிவில் உருவகப் படுத்திக் கொள்கிறோமா, இல்லை, ஆப்பிள் என்ற ஒரு பழத்தைப் புலன்களால் பலவாறு நுகர்ந்து, அதன் பண்புகள் இன்னின்னவை என்று பகுத்துத் தெளிகிறோமா என்பதுதான் அவன் கேட்ட கேள்வி.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளில் ஒரு விதமான சூனிய வாதம் எழுந்து, பரவி, ஆதிக்கம் செய்தது. அது என்ன வாதம்? நாம் புலன்களால் நுகரும் பண்புகள் தவிர்த்துப் பொருண்மை என ஒன்றுமே இல்லை, அதாவது, சிவப்பு, மென்மை, குளுமை, உருண்டை ஆகிய பண்புகளைத் தவிர ஆப்பிள் என்ற ஒரு பொருளை நாம் நேரடியாக நுகர்வதே இல்லை, எனவே பொருண்மை என்பதே இல்லை. இதுதான், பார்க்லீ, ஹ்யூம் ஆகிய பிரிட்டிஷ் சிந்தனையாளர்கள் உலவ விட்ட சூனிய வாதம். அது ஒரு பெரிய அறிவியற் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்த போதுதான் கன்ட் மேற்சொன்னவாறு கேள்வி கேட்டு அந்தச் சூனிய வாதத்தை எதிர் கொண்டான் என்பது மெய்யியல் வரலாறு.

வள்ளற் பெருமானின் கவிதையில் வந்த ஒருமை–பன்மை மயக்கம் எவ்வளவு பெரிய தத்துவக் குழப்பத்துக்கு விடையாகித் தெளிவு சேர்த்தது! ஆனால், சமீபத்தில், என் இனிய நண்பர், நல்ல கவிஞர் ஒருவர் எழுதிய பாடல் தேசிய விருது பெற்றது. அது கருத்து ரீதியாக மிக நல்ல பாடல்தான். ஆனால், அதன்

தொடக்க வரியில் உள்ள ஒருமை–பன்மைக் குழப்பத்தை யாராலும் தீர்க்க முடியாது.

**“ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே”**
**இதை அப்படியே ஆங்கிலத்தில் சொல்லிப் பார்க்கலாமே:**

EVERY FLOWERS TELLS!

என்ன சொல்லி இதை அமைதி செய்வது!

நான் அந்தக் கவிஞரின் மனத்தைப் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இதைச் சொல்லவில்லை. இதற்கு ஒரு நல்ல சமாதானம் அவரோ, வேறு யாரோ சொல்லிவிட்டால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். எனக்கு அந்தச் சமாதானம் தோன்றாமற் போனதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன். உரைநடைக்கும், செய்யுளுக்கும் வடிவ வேற்றுமை உண்டு. ஆனால் உரைநடைக்கும், கவிதைக்கும் வடிவத்தில் மட்டுமா வேற்றுமை காண்பது? உரைநடையில் சொல்ல முடிவதைக் கவிதையில் சொல்வது தேவையற்றதோ என்று தோன்றுகிறது. படிப்பவருடைய சிந்தனையை நோக்கித் தொடுக்கப்படும் வாக்கியங்கள் உரைநடையில் அமைவதே பொருத்தம் என்று நினைக்கிறேன். அதுதான் நேரடியான அறிவுத் தொடர்புச் சாதனம். ஆனால் எதை உரைநடையில் சொல்ல முடியவில்லையோ அதைச் சொல்ல முற்படுவதே கவிதை என்று ஒரு தீர்மானம் போட்டுவிடலாமா?

என்னப்பா சட்டசபையா நடத்துகிறோம், தீர்மானம் போடுவதற்கு? நம் சங்கை நாம் ஊதுவோம். அவரவர் பங்குக்கு அவரவர் சங்கை ஊதிக் கொள்ளட்டுமே. கவிதை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்ய நாம் யார்? அப்படிச் செய்ய வேண்டியது என்ன அத்தனை அவசியமா? இல்லை அது சாத்தியமா? எதை உரைநடையில் சொல்ல முடியாது? “மின்னல் உறங்கியது” என்று சொல்லி என்ன புரிய வைக்க முடியும்? அதைப் புரிந்து கொள்ளத் தேவையே இல்லை; உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அதனால்தான் தன் நூலுக்கே, “மின்னல் உறங்கும் போது” என்ற அருமையான ஒரு கவிதைத் தலைப்பைத் தந்தார் கவிஞர் ஈரோடு தமிழன்பன். அது புரிந்து கொள்வதற்காக இல்லை, ரசிப்பதற்காக.

கவிஞர் மருதகாசியின் பழைய திரைப்பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது:

**தென்றல் உறங்கிய போதும் திங்கள் உறங்கிய போதும் கண்கள்**
**உறங்கிடுமா காதல் கண்கள் உறங்கிடுமா**

*பாரதியின் குயில் பாட்டில் வரும் அமர வரிகள்:*

**மின்னற் சுவைதான் மெலிதாய் மிக இனிதாய் வந்து பரவுதல் போல் ....**

*இதை உரை நடையில் எழுதி யாருக்கு என்ன புரிய வைக்க முடியும்! கவிதையின் சமாச்சாரமே வேறு சாமி!*

*மேலே சொல்லப்பட்ட வள்ளலார் பாட்டில் ஒன்றை நாம் சரியாகக் கவனிக்கத் தவறிவிட்டோம். "அருள் கார்கொண்ட தணிகாசலமும்" என்று சொல்கிறாரே! அருளாகிய கார்மேகங்கள் சூழ்ந்த தணிகை மலை. புறக் கண்களுக்குப் புலனாகும் தணிகை மலை கார்மேகங்கள் சூழ்ந்த மலைதான். ஆனால் அருளாகிய கார்மேகங்கள் சூழ்ந்த தணிகை மலையாக, தணிகாசலமாக, முருகப் பெருமானே இருப்பது புறக் கண்களுக்குப் புலப்படாது. கவிஞன் எந்தக் கண்களால் தரிசனம் பெறுகிறான் என்பதை இந்தப் பாடல் எப்படித் தெளிவாக்குகிறது பார்த்தாயா தம்பி!*

*"என்கவிதை எந்நாளும் பயன்படாது" என்ற என் கவிதையை முன்பே முழுசாகத் தந்து விட்டேன். அதில் வரும் ஒரு புலம்பல் வரி இப்போது கொஞ்சம் புரியத் தொடங்குகிறதோ?*

**தரிசனக் கடலாடி விட்டு வார்த்தைத் தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை*30***

*ஆனால் அந்தத் தறியில் தான் எத்தனை வண்ண வண்ண ஆடைகள் நெய்து கொள்கிறோம்!*

# 52

என்னப்பா 'ஸிந்தடிக் விஷன்' என்றெல்லாம் சொல்லி மிரட்டுகிறாய்?

பொறு தம்பி, இன்னும் பெரிய, பெரிய வார்த்தைகள் இருக்கின்றன. ஆனால் சுலபமாகப் புரிந்து கொள்ளும்படிச் சொல்கிறேன். ஒருங்கிணைந்த பார்வை என்பதைப் புரிந்து கொள்ள நாம் வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை. நம் புலப்பாட்டு இயக்கமே போதும்.

உளவியல் துறையில் பயிலும் மாணவர்கள் புலன் நுகர்ச்சி எப்படி உண்டாகிறது என்பது பற்றிப் பல்வேறு கொள்கைகளைப் படிப்பார்கள். புலனுகர்ச்சிக் கொள்கைத் திரட்டு, ஆங்கிலத்தில், "தியரீஸ் ஆஃப் பெர்ஸெப்ஷன்" (Theories of Perception) என்று அழைக்கப் படுகிறது.

நமக்கு வெளியுலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் எல்லாமே ஐந்து புலன்கள் மூலமாகத்தான் கிடைக்கின்றன என்று பொதுவாக நம்பப் படுகிறது. திருவள்ளுவர் மிக அழகாக, அதுவும் காமத்துப் பாலில் உள்ள ஒரு குறட்பாவில், ஐந்து புலன்களையும் ஒரே வரியில் குறிப்பிட்டு விடுகிறார்:

> **கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்**
> **ஒண்டொடி கண்ணே உள**

ஐந்து விதமான புலப்பாடுகள் ஏற்பட உதவும் சாதனங்களே கண், காது, நாக்கு, மூக்கு, சருமம் எனப்படும் தோல் ஆகிய ஐந்து பொறிகள். பொதுவாகப் புலனுகர்ச்சிக் கொள்கை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல், காட்சிப் புலன் என்பது பற்றி மட்டும் குறிப்பாக இங்கே நோக்குவோம்.

‘காண்பது’ என்பதே காட்சிப் புலன். இந்தப் புலப்பாட்டை உண்டாக்கும் சாதனமே ‘கண்’ என்ற பொறி.

காட்சிப் புலப்பாடு எப்படி உண்டாகிறது? வெளியில் உள்ள ஒரு பொருள் மீது (அது நம் உடலாகவோ அதன் ஒரு பகுதியாகவோ கூட இருக்கலாம்), ஒளிக்கற்றைகள் விழுந்ததும், அந்தப் பொருளால் தடுக்கப்பட்டு மீளும் ஒளிக்கற்றைகள் நம் விழி வழியாக நுழைந்து, விழிக்குள் உள்ள ‘ரெட்டினா’ என்ற விழித்திரையில் விழுந்து, தம்மைத் தடுத்தனுப்பிய பொருளின் பிரதிபிம்பத்தை அந்தத் திரையில் ஏற்படுத்துகின்றனவாம்; அந்தப் பிரதிபிம்பத்தை இன்ன பொருளின் பிம்பம் என்று அறிவு நமக்கு அறிவுறுத்துமாம். இப்படித்தான் காட்சிப் புலப்பாட்டில் நாம் பொருள்களைப் பார்க்கிறோம் என்று அறிவியல் விளக்குகிறது!

எல்லாம் சரி, ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கத் தவறி விட்டோமே! நாம் ஒற்றைக் கண்ணால் பார்ப்பதில்லையே! இரண்டு கண்களால் காண்கிறோம். ஆங்கிலத்தில் இதை பைனாகுலர் விஷன் (Binocular Vision) என்கிறார்கள். நாம் காணும் ஒவ்வொரு காட்சியும் இரண்டு விழித்திரைகளில் பதிவாகின்றன. ஆனால் ஒரு காட்சியைத்தானே பார்க்கிறோம்! நாம் ஒரு மாம்பழத்தைப் பார்க்கிறோம் என்றால், நம் இரண்டு விழிகளுக்கும் உள்ளே உள்ள ரெட்டினா என்ற இரண்டு திரைகளில் அந்த மாம்பழத்தின் இரண்டு பிரதிபிம்பங்கள் பதிவாகி, அந்த இரண்டு பிம்பங்களை நம் அறிவாகிய சாதனம் ஒரே மாம்பழமாக மீண்டும் ஒருமைப் படுத்தி நமக்குக் காட்சிப் படுத்துகிறது. வள்ளலார் கண்ணாடியில் முருகப் பெருமானைப் பல அம்சங்களும் ஒருங்கிணைந்த தணிகாசலமாகக் கண்ட ‘சிந்தடிக் விஷன்’, அதாவது, ஒருங்கிணைக்கப்பட்ட பார்வை பற்றி முன் பகுதியில் சொன்னதை நினைவு கூர வேண்டும். இரண்டு விழித்திரைகளில் தோன்றும் பிம்பங்களை ஒருங்கிணைத்து, ஒரே காட்சியாக்கி அதற்கு இடம், காலம் ஆகிய முத்திரைகள் குத்தி அறிவு நமக்கு அதை விளங்கத் தருகிறது. அப்படியென்றால், இடமும், காலமும் புறவுலகில் உள்ள பொருட்களைப் போல வேறு பொருட்களா, இல்லை அவை இரண்டுமே அகச்சாதனங்களா? இந்தக் கேள்வியைக் கொஞ்சம் ஒத்தி வைப்போம். இப்பொழுது விவாதம் இடம், காலம் பற்றியில்லை. அது, இரண்டு கண்களில் உள்ள திரைகளில் விழும் பிம்பங்களை ஒருமைப்படுத்தும் அகச்சாதனம் பற்றியது.

எவ்வளவு அழகாக, எளிமையாக நம் அருமைக் கவிஞர் கண்ணதாசன் பாடிவிட்டார்:

**இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா**

## இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா

*சாதாரணத் திரைப்படப் பாடல்தானே என்று எதையும் நினைத்துவிடக் கூடாது தம்பி. பாட வேண்டும் என்ற உந்துதல் மட்டுமே கவிஞனுடையது. அவனை ஆட்கொண்டு பாடுவதோ ஆகாச சக்தி! அது வேறு கதை.*

*சாதாரண விஷயங்களுக்குள் இருக்கும் அசாதாரணங்களைக் காண்பதே தரிசனம் எனப்படுகிறது.*

*மீண்டும் இம்மானுவெல் கன்ட் என்ற தத்துவ ஞானியைக் கூப்பிட வேண்டும். அவன் கேட்கிறான், ஐந்து புலன்கள் வழியாகத்தான் நீ எல்லா வெளி விவகாரங்களையும் நுகர்கிறாயா? நீ பார்க்கும் மாம்பழத்தின் மஞ்சள் நிறம், அதன் உருண்டை வடிவம், அதன் மணம், சுவை, மென்மை இவையெல்லாம் உன் ஐந்து புலப்பாட்டுச் சாதனங்கள் மூலமாகத்தான் வருகின்றன. ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அந்த மாம்பழம் ஓரிடத்தில் உள்ளதாக, ஒரு காலக்கட்டத்தில் உள்ளதாக, அதாவது இடம், காலம் என்ற இரண்டு குறியீடுகளோடுதானே உனக்குப் புலப்படுகிறது? எந்த இடத்திலுமே இல்லாத, எந்தக் காலப் பரிமாணத்துக்கும் உட்படாத எதையும் நீ புலனுகர்ச்சி செய்வதில்லையே. இடத்தையும், காலத்தையும் நீ எந்தப் பொறி மூலம், எந்தப் புலனாக அறிகிறாய்? இதுதான் அவன் கேட்ட கேள்வியின் சாரம்.*

*இன்னும் சற்று வேறு விதமாக நினைத்துப் பார்க்கலாம். நம் ஐந்து பொறிகளின் மூலம் ஐந்து வகைப்பட்ட புலப்பாடுகளாக நம் அகத்துக்குள் நுழைய வெளியுலகப் பொருட்களும், காட்சிகளும் முண்டியடித்துக் கொண்டு வருகின்றன. அவற்றை நம் அறிவு புரிந்து கொள்ளும் முன்பு, அவை இன்னின்ன பொருட்கள், காட்சிகள் என்று நம் அறிவு வகைதொகை செய்து உணர்ந்து கொள்ளும் முன்பு, ஒவ்வொரு பொருள், அல்லது காட்சியின் மீதும், அது புலன் நுகர்வு செய்யப்பட்ட இடம், காலம் என்ற இரண்டு ரப்பர் ஸ்டாம்ப் முத்திரைகள் குத்தப் படுகின்றன. பிறகுதான் அறிவின் சேமிப்புக் கிடங்குக்குள் அவை அனுமதிக்கப் படுகின்றன. இந்த இடமும், காலமும் எந்தப் பொறி வழியாகவும் நுகரப் படுவதில்லை. இடமும், காலமும் பொறிகளின் மூலம் நுகரப்படும் எந்தப் புலப்பாடும் இல்லை. அப்படியென்றால் அவை என்ன? இடம், காலம் ஆகிய இரண்டு முத்திரைச் சாதனங்கள் அறிவின் கட்டுமானத்திலேயே உள்ளடங்கியவை. அந்தச் சாதனங்களோடுதான் அறிவே உருவாகிறது. இடம் என்பதையோ, காலம் என்பதையோ நாம் ஒரு புலன் நுகர்ச்சியாக, அதாவது, ஒரு நிறம், வடிவம், சுவை, வாசனை போன்ற ஒரு புலன் நுகர்ச்சியாக அறிவதே இல்லையே!*

இவ்வாறு, புறத்தில் இருந்து, புலன் வழியாகப் பெறாத சில உள்ளீடுகள் அறிவின் கட்டுமானத்திலேயே உள்ளன, எனவே, புலன் நுகர்ச்சியைச் சாராமலேயே, பொறிகளின் வழியே பெறாத உள்ளீடுகள் அறிவின் அகத்தே உண்டு என்று சுட்டிக் காட்டிச் சூனிய வாதத்தை இம்மானுவெல் கன்ட் எதிர்கொண்டான்.

இவ்வளவு கனமான, கடினமான ஒரு தத்துவப் பிரச்சினையை இங்கே நான் குறிப்பிடக் காரணம் உண்டு. அதை விளக்குவதற்கு அந்த ஜெர்மானிய தத்துவ மேதை பயன்படுத்திய இரண்டு கலைச் சொற்களை இங்கே பரிச்சயம் செய்து கொள்ள வேண்டும். அவை ஆங்கிலத்தில், "ஆ ப்ரையாரி" (a priori) என்றும், "ஆ பாஸ்டீரியோரி" (a posteriori) என்றும் குறிக்கப் படுகின்றன. முதலில், இந்தக் கலைச்சொற்கள் எந்தக் கருத்துச் சூழலில், என்ன பொருளில், எதை விளக்கப் பயன்பட்டன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

'நேற்று காலை 7 மணிக்கு நான் மக்கள் தொலைக்காட்சியில் பேசினேன்' என்று ஒருவர் சொன்னதும் அதை இன்னொருவர் நம்ப மறுத்தால், அந்தத் தொலைக்காட்சியின் பதிவுகளைப் பார்த்து அக்கூற்று மெய்யா, பொய்யா என்பதை அறிந்து கொள்ள முடியும். நயாகரா நீர்வீழ்ச்சி கானடா, அமெரிக்க எல்லையில் உள்ளது என்ற கூற்றை யாரேனும் சந்தேகப் பட்டால், அதை நேரில் கண்டு தெளிய முடியும். ஐந்து புலன்களில் ஏதேனும் ஒன்றின் அல்லது சிலவற்றின் மூலமாக மட்டுமே நிறுவக் கூடிய கூற்றுகளை 'ஆ பாஸ்டீரியோரி கூற்றுகள்' என்றும், அப்படியன்றி, எந்தப் புலச்சான்றும் தேவைப்படாமலேயே ஏற்றுக் கொள்ளக் கூடிய கூற்றுகளை 'ஆ ப்ரையாரி கூற்றுகள்' என்றும் கன்ட் குறிப்பிட்டான். ஒரு பிரும்மச்சாரி திருமணம் செய்து கொள்ளாதவன் என்பதற்குப் புலச்சான்று எதுவும் தேவை இல்லை. காரணம், திருமணம் செய்து கொண்டிருந்தால் அவனை பிரும்மச்சாரி என்று சொல்ல முடியாதே. அதே போல், ஒருவன் இறந்து விட்டான் என்றால் அவன் இதயத்துடிப்பு நின்றிருக்கும் என்பதற்கு எந்தப் புலச்சான்றும் தேவையில்லை. இதயத் துடிப்பு நின்றால்தான் ஒருவன் இறந்து விட்டதாகச் சொல்ல முடியும். இதயத் துடிப்போடு, கிட்டத்தட்ட இறந்து விட்ட நிலையில் இருப்பதை மூளைச்சாவு (Brain Death) என்று குறிப்பிடும் வழக்கம் உண்டே தவிர அது மரணம் ஆகாது.

இன்னொரு உதாரணம் எடுத்துக் கொள்ளலாம். ஒரு சென்டி மீட்டர் விட்டம் உள்ள ஓட்டை போட்ட ஒரு தட்டில் நிறைய நாணயங்களைக் கொட்டினால் அந்த ஓட்டை வழியாகக் கீழே விழுந்துவிடும் நாணயங்களைப் பற்றி ஒரு செய்தி நிச்சயம் சொல்லி

விடலாம். கீழே விழுந்த நாணயங்கள் ஒவ்வொன்றும் ஒரு சென்டி மீட்டருக்கும் குறைவான விட்டம் உள்ளவையாகத்தான் இருக்க முடியும். இதை அளந்து, புலப்பாட்டுக்கு உட்படுத்திப் பிறகுதான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. புலப்பாடே தேவையில்லாமல் இந்தச் செய்தியை நிறுவ முடிவதற்குக் காரணம், தட்டின் கட்டுமானம், அதில் ஒரு சென்டி மீட்டர் விட்டமுள்ள ஓட்டை இருப்பது நமக்கு முன்கூட்டியே தெரிந்திருப்பதுதான்.

இவையெல்லாம் புலச்சான்று தேவைப்படாமலேயே நாம் ஒப்புக் கொள்ளும் 'ஆ ப்ரையாரி' கூற்றுகள். இடமும், காலமும் புலச்சார்பு இல்லாத 'ஆ ப்ரையாரி' கருத்தீடுகள் என்பதுதான் கன்டின் வாதம். இவ்வளவு சிரமமான, தர்க்க ரீதியான பாடத்தை எங்களுக்கு நடத்தி விட்டு, எங்கள் தத்துவப் பேராசான் முனைவர் டி.என்.கணபதி வகுப்பில் சொன்னதை நான் மறக்கவே முடியாது. வகுப்பில் அவர் நாற்பது ஆண்டுகளுக்கு முன் சொன்னது இதுதான்:

'ஆ ப்ரையாரி' என்றால் என்னவென்று புரிய வேண்டுமா. ஔவையாரிடம் கேளுங்கள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" அதாவது, ஆங்கிலத்தில் சொன்னால், Mother and Father are a priori gods. எந்தப் புலன்விசாரணையும் இல்லாமல் நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தெய்வம் அன்னையும் பிதாவும். அவர்களே முன்னறி தெய்வம். அதாவது, புலன் விசாரணை மேற்கொள்ளும் முன்பே, நாம் முந்தி அறிந்து கொள்ளும், முன்னதாக அறிந்து கொள்ளும் தெய்வம்; a priori gods; முன்னறி தெய்வம்.

அடாடா! பதினெட்டாம் நூற்றாண்டில் ஜெர்மன் மொழியில் இம்மானுவெல் கன்டும், இருபதாம் நூற்றாண்டில் அவனுடைய நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நார்மென் கெம்ப் ஸ்மித்தும் சிரமப்பட்டுப் பக்கம் பக்கமாக விளக்க முற்பட்டதை இரண்டாயிரம் அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் ஔவைப் பாட்டி எவ்வளவு அநாயசமாக, ஒரு முன்னறிவிப்பாகச் சொல்லிவிட்டார் என்பதை என் பேராசான் சொல்லச் சொல்ல மலைத்துப் போனேன்.

இதுதான் மறைமொழி என்பது. இங்கே திருவள்ளுவர் வாக்கை நினைவு படுத்திக் கொள்வோம்:

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

மிகச் சுருக்கமாகச் சொல்லப் படும் மறைமொழி, அறிஞர் பெருமக்கள் நிறையச் சொல்லி அறிவுறுத்தும் உண்மைகளை எல்லாம் எளிதில் காட்டி விடும். இப்படித்தான் இந்தக் குறள் பொருள்படும் என்று நான் சொல்லவில்லை. இப்படியும் பொருள்படலாம். நிறைவாழ்வு வாழ்ந்து நீத்தாரின், அதாவது, வாழ்வாங்கு வாழ்ந்து உடல்நீத்த அருளாளர்களின் பெருமையை மறைமொழி காட்டிவிடும் என்றும் பொருள் கொள்ளலாம். திருக்குறளே மறைநூல் ஆயிற்றே!

சித்தர் இலக்கியங்களில் தோய்ந்து, போகர் பற்றியும், திருமூலர் பற்றியும், சிவவாக்கியர் பற்றியும் அற்புதமான பலநூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் 80 வயது கடந்த இளைஞர் த.நா. கணபதி என் தத்துவப் பேராசான் என்பதை நான் பெருமையாகக் குறிப்பிடாமல் இருக்க முடியுமா?* அந்தப் பெருமையை, அவர் பாடம் நடத்தும் போது சுட்டிக் காட்டிய ஔவையாரின் மறைமொழியே காட்டிவிடும். சரிதானே!

இந்த இடத்திலே ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அன்னையும் தந்தையும் நமக்கு முன்னறி தெய்வங்கள், அதாவது நாம் எந்த விசாரணையும் மேற்கொள்ளத் தேவையில்லாமல் முந்தி அறியும் தெய்வங்கள். இது எவ்வளவு உண்மையோ, அதே போல, நம் ஒவ்வொருவரையும் தக்க தருணத்தில் ஏதேனும் ஒரு குருவின் வடிவில் பரம்பொருளே வந்து ஆட்கொண்டு வழிசெலுத்துவதால், குருவே நம்மை நமக்கு முன்பாகவே அறிந்த தெய்வம் என்பது மறுக்க முடியாத உண்மை. அன்னையும், தந்தையும் நாம் முன்னறிந்து கொள்ளும் தெய்வங்கள். குருவோ நம்மை முன்னறிந்து கொள்ளும் தெய்வம்.

'தமிழன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த என் நண்பர் அமரர் சிவகுமார் எழுதிய ஒரு பாடல் கனமாக நெஞ்சில் வந்து அமர்கிறது :

**எங்கிருந்தாலும் என்னை அறிபவன் ஒருவன்**
**எண்ணத்தினால் வளர்ப்பான் என்குல இறைவன்**

**சங்கல்பம் ஓய்ந்துவிடச் சரண்புகுந் திருந்தாலும்**
**சஞ்சித சாகசத்தால் புறம்புறம் திரிந்தாலும்**
**தன்கையில் பிள்ளையெனத் தாங்கும் அவன்பரிவு**
**தடம் மறந்தாலுமங்கே தேடிவரும் உறவு**

என்னப்பா, காட்சிப் புலன் என்று தொடங்கி, தரிசனம் என்று பேசிவிட்டுக் கடைசியில் குருவிடம் அடைக்கலம்

*கொண்டுவிட்டாய் என்ற கேள்வி ஒலிக்கிறது. சித்தன் போக்கு சிவன் போக்கு!*

*என் குருநாதர், டாக்டரிடம் நான் ஒரு கேள்வி கேட்டேன்: சீடன் குருவைத் தேட வேண்டுமா, குரு சீடனைத் தேடி வருவாரா?*

*அவர் சொன்ன பதில்: யார் தன் குரு என்று தேர்ந்தெடுக்கும் அறிவு சீடனிடம் இருக்கக் கூடுமோ? அந்த அறிவு அவனுக்கு இருந்து விட்டால் அவனுக்குப் பாடமே தேவையில்லையே. குருதான் சீடனைத் தக்க தருணத்தில் அடையாளம் கண்டு வரவேண்டும்.*

*நான் மேலும் கேட்டேன்: இராமபிரானுக்கு வசிஷ்ட முனிவரும், அகத்திய முனிவரும் குருநாதர்களாக உபதேசம் செய்திருக்கிறார்கள் என்றால், அவர்களைக் காட்டிலும், பரம்பொருளாகிய இராமபிரான் அறிவில் குறைந்தவனா?*

*டாக்டர் கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அப்போது நாங்கள் இருவரும், சென்னை சென்ட்ரல் ரயில்நிலயம் அருகில் இருந்த 'த சௌத் இண்டியா அத்லெடிக் அஸோஸியேஷன்'* (SIAA) *என்ற சங்கத்தின் வளாகத்தில் ஓர் அறையில் தனியாக அமர்ந்திருந்தோம். 1986–ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். சிறிது நேர மௌனத்துக்குப் பின் அவர் கண் திறந்தார். அப்பப்பா, அதில் தெரிந்த ஒரு கோபச் சிவப்பை நான் மறக்கவே முடியாது. பயந்து விட்டேன்.*

*அவர் பேசினார்: பெரியவன், சிறியவன் என்றெல்லாம் பேசக் கூடாது. தக்க தருணத்தில் பிரசவம் பார்த்துக் குழந்தையை வெளியே கொண்டுவரும் மிட் வைஃப் மாதிரி, ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் இருக்கும் மகத்துவத்தை வெளிக்கொண்டு வரத் தக்க தருணத்தில் குருநாதன் வருவான். அது கடவுளின் ஆக்ஞை. கடவுளே அவதாரம் எடுத்து வந்தாலும் அவருக்குள் இருக்கும் மகத்துவம் வெளிப்பட ஒரு குருநாதன் கண்டிப்பாகத் தேவை.*

*நான் மௌனமானேன். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவர் என்னைப் பாடச் சொன்னார். மனத்தில் இருந்து பொங்கி வந்த சொற்களைச் சிந்து பைரவி ராகத்தில் பாடினேன்:*

**நினைத்தேனா இங்கு வருவேன் என்று**
**ஜென்மங்கள் ஆயிரம் எடுப்பேன் என்று**
**நினைத்தேனா இங்கு வருவேன் என்று**

# 53

கேரளாவில், ஆதி சங்கரர் பிறந்த ஊரான காலடியில் எனக்கு ஏற்பட்ட இரண்டு அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

*1985 அல்லது 86 என்று நினைக்கிறேன். காலடிக்குச் சென்று அங்கிருந்த பூர்ணா நதியில் நீராடி விட்டுச் சிருங்கேரி சங்கர மடத்தாரால் பராமரிக்கப்படும் மண்டபத்தில், சங்கரரின் தாயார் ஆர்யாம்பாள் சன்னிதிக்கு எதிரில், வாராஹி, வைஷ்ணவி, கௌமாரி, ப்ராஹ்மி, இந்திராணி, சாமுண்டி, மாஹேஸ்வரி என்ற ஏழு சக்தி வடிவங்களும் செதுக்கப்பட்ட ஒரு தூணுக்கு முன்பாக அமர்ந்து கொண்டு த்யானத்தில் ஆழ்ந்திருந்தேன். சுமார் பதினைந்து நிமிடங்கள் கழித்து நான் கண்மலர்ந்தேன். தியான நிலையில் நான் இரண்டு கைகளிலும் சின்முத்திரையோடு உள்ளங்கைகளை மேற்காட்டி அமர்ந்திருந்த போது என் வலது உள்ளங்கையில் ஒரு வண்ணத்துப் பூச்சி, அதாவது, பட்டாம் பூச்சி வந்து சில நிமிடங்கள் அமர்ந்திருந்த காட்சியை என்னிடம் ஷோபனா விவரித்த போது என்னையறியாமல் எனக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது.*

*மீண்டும் ஒருமுறை சபரிமலை யாத்திரை முடித்து வரும் வழியில் நண்பர்களோடு காலடி சென்றேன். நான் பூர்ணா நதியில் குளிக்க இறங்கிக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நதியிலேயே பத்மாசனம் இட்டுத் தியான நிலையில் அமர்ந்து விட்டதாகப் பிறகு நண்பர்கள் சொன்னார்கள். எனக்கு ஒன்று மட்டும் நினைவுக்கு வந்தது. அப்போது நான் தியானத்தில் இருந்த சிறிது நேரத்துக்குள், துத்த நாகம் போன்ற நீல நிறத்தில் இருந்த ஒரு பெரிய தடாகத்தில் மூழ்கி உள்ளே சென்றதும், அங்கே நீருக்கடியில் ஒரு குகை தெரிந்ததும், குகைக்குள் வரச் சொல்லி*

ஒரு குரல் என்னை அழைத்ததும், நான் குகைக்குள் நுழைந்ததும், அங்கே ஒரு பீடத்தில் ஒளிமயமாக ஆதி சங்கரர் போல ஒருவர் தியானம் செய்து கொண்டிருந்ததும், என்னை வா என்று அழைத்தவரோ, பார்த்ததும் அச்சம் உண்டாக்கும் ரத்தச் சிவப்பான கண்களுடன் தலையிலிருந்து தரையில் புரளும் ஜடாமுடியுடன் வீற்றிருந்ததையும், அவர் சொல்லாமலேயே எப்படியோ அவர்தாம் மார்க்கண்டேய மஹரிஷி என்று நான் தெரிந்து கொண்டதையும் என் நண்பர்களுக்குச் சொன்னேன்; சென்னை வந்த பிறகு டாக்டர் நித்யானந்தம் அவர்களிடமும் சொன்னேன். அவர் கண்களை மூடிக் கொண்டு "கைலாசத்தில் உள்ள மானசரோவர் ஏரி" என்று மெதுவாகச் சொன்னர்.

பிறகு, இப்போது நாலைந்து ஆண்டுகளுக்கு முன் நானும் ஷோபனாவும் பத்ரிநாத் சென்றிருந்தோம். பத்ரிநாத் செல்லும் வழியில் ஜோஷிமடம் என்ற இடத்தில் உள்ள சங்கரர் ஆசிரமத்திற்குச் சென்றோம். அங்கே ஒரு மரத்தடியில் ஒரு குகை இருந்தது. ஆனால் அது பூட்டியிருந்தது. அங்கிருந்த மேற்பார்வையாளரிடம் சொல்லித் திறக்கச் செய்து, உள்ளே சென்று சிறிது நேரம் தியானம் செய்தோம். தியானம் முடிந்ததும், "இந்த இடத்துக்கும் மானசரோவருக்கும் ஏதோ தொடர்புள்ளது போலத் தெரிகிறது" என்று ஷோபனாவிடம் குறிப்பிட்டேன். அதன் காரணம் எனக்கு அப்போது விளங்கவில்லை.

அங்கிருந்து பத்ரிநாத் சென்று கண்ணபிரானைக் கண்குளிரக் கண்டுவிட்டு, அருகில் இந்தியா, திபெட் எல்லையில் இருந்த கடைசி இந்திய கிராமமான மன்னாவுக்குச் சென்றோம். அது, அலகாநந்தா நதியுடன் சரஸ்வதி நதி கலக்கும் இடம். அதன் மேல் பீமன் கட்டியதாக நம்பப்படும் ஒரு பெரிய கல்பாலம் இருந்தது. அதைக் கடந்து சென்றால் ஸ்வர்க்க ஆரோகணி வருமாம். அதாவது, பாரதப் போர் முடிந்த பிறகு, பாண்டவர்கள் அங்கேதான் ஸ்வர்கத்துக்கு ஏறிச் சென்றார்களாம்! எங்குமே பிரஸ்ஸன்னம் ஆகாமல் நிலத்துக்கு அடியில் ஒளிந்து கொண்டே இருக்கும் சரஸ்வதி நதி அங்கே மட்டும் வெளியில் வந்து காட்சி தருகிறது. கிட்டத்தட்ட பச்சை கலந்த நீல நிறத்தில் அந்த நதி இருந்தது. அங்கேயும் ஒரு குகையிருந்தது. அதன் சுவரில் இருந்து துளித்துளியாக ஈரம் கசிந்து கொண்டிருந்தது, நீல நிறத்தில்! அதுதான் அந்த நதியின் ஊற்றுக்கண் என்பது புரிந்தது. அந்தச் சுவரில் எழுதப்பட்டிருந்த செய்தி என்னை வியப்பில் ஆழ்த்தியது. 'இங்கே வருகின்ற நீர்த்துளிகள் மானசரோவரில் இருந்து வருகின்றன!'

என் பழைய கவிதையொன்றை என் மனம் எதிரொலிக்கிறது:

யார் கொடுத்த ஞாபகத்தை யார் சுமக்க வேண்டுமோ

எப்படியோ, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு வரலாற்றைக் காலத்தில் முன்னும், பின்னுமாகப் போய், அலைபாய்ந்து, எழுத்தில் படம்பிடித்துத் தந்துவிட்டேன். அடுத்த பத்துப் பதினைந்து ஆண்டுகளின் சம்பவங்களை இப்போது சொல்வதைக் காட்டிலும், இன்னும் எனக்கு ஆயுள் மீதம் இருந்தால், சில ஆண்டுகளுக்குப் பிறகு அசை போட்டுப் பார்த்துச் சொல்வதே பொருத்தமாக இருக்கும். அதை இரண்டாவது பாகமாக நான் எழுதக் கூடிய வாய்ப்பை எதிர்நோக்குகிறேன்.

இதுவரை நான் உங்களுடன் பகிர்ந்து கொண்டவை மிகவும் விறுவிறுப்பான சம்பவங்களாக இல்லாவிட்டாலும், மற்ற சுயசரிதைகளைப் போல வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இல்லாவிட்டாலும், இந்தப் பிரபஞ்சத்துக்கும் எனக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்தும் கவிதை வரலாறாகக் கொஞ் சமேனும் அமைந்திருக்கக் கூடுமானால் அதுவே இதை ஓரளவு பயனுடைய முயற்சியாக உயர்த்த வல்லது என்ற மனநிறைவோடு இந்தத் தொடரை, அல்லது இதன் முதல் பாகத்தை, இப்போது நிறைவு செய்கிறேன்.

தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன், குப்புசாமி வாத்தியார், கிருஷ்ணராமானுஜம் பிள்ளை போன்ற ஆசிரியப் பெருமக்களும், ஜகன்னாதாச்சாரியார், டாக்டர் டி.என்.கணபதி போன்ற பேராசிரியப் பெருந்தகைகளும், சுகி சிவம், சு.ரவி, சசி, சீனி சுந்தரராஜன், வ.வே.சு., ரமணன், சுப்பு போன்ற நண்பர்களும், அமரர் நா.பா., ஔவை நடராஜன், பாரதி சுராஜ் போன்ற வழிகாட்டிகளும், டாக்டர் நித்யானந்தம் என்ற குருநாதரும், என் சிந்தனையின் போக்குக்குத் தடம் அமைத்துக் கொடுத்த தத்துவ மேதைகளும், இறுதியாக, ஆனால் உறுதியாக, என் இல்லத்திலும் உள்ளத்திலும் ஒரே தீபமாகச் சுடர்விடும் ஒளிவிளக்காகவும், என் கவிதை யாவும் தனக்கெனக் கேட்கும் பராசக்தியாகவும், என் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட ஷோபனாவும், இப்படிப்பட்ட சுடர்ப்பொறிகளும், தாரகைகளும் கதாபாத்திரங்களாக வந்து கௌரவப் படுத்திய இந்தக் கவிதை வரலாற்றில் நானும் இடம்பெற்றேன் என்பதே என் பிறவிப் பயன் என்று நான் கருதுகிறேன்.

எஞ்சியுள்ள நாட்களில், பாதி முடிந்த நிலையில் இருக்கும் பிரும்ம சூத்திரத்துக்கான ஆங்கில விரிவுரையை எப்படியாவது நிறைவு செய்து வெளியிடப் பராசக்தி அருள்செய்வாள் என்று நம்புகிறேன்.

பொறுமையுடன் என் ஞாபகப் பயணத்தில் என்னோடு வந்த வாசகர்களுக்கும், இந்தப் பயணத்துக்கு வாகனம் அமைத்துத் தந்த வல்லமை இதழின் பொறுப்பாளர்களுக்கும் நன்றி.

*2001–ஆம் ஆண்டு எழுதிய ஒரு கவிதையுடன், "காற்று வாங்கப் போனேன்" முதல் பாகத்தை நிறைவு செய்கிறேன்:*

*அணையாத சுடரேற்றுவேன் - நெஞ்சில்*
*அலைமோதும் சொற்களை அக்கினியில் தோய்த்துத் தீக்*
*கணையாக உருமாற்றுவேன் - இமைக்கும்*
*கணத்திலிப் பேரண்டம் உருவான மையத்தில்*
*அணையாத சுடரேற்றுவேன்!*

*விண்மீன்கள் சிறுதுளிகளாய் - வான*
*விளிம்புக்கு விரைந்தோடிப் போய்விழுந் தேசிதற*
*எண்ணற்ற உயிர்க்குலங்கள் - வாழும்*
*விண்மீன்களாய் என்றும் ஒளிசிந்திக் களிகொள்ள*
*அணையாத சுடரேற்றுவேன்!*

*பொய்சூழும் நெஞ்சங்களைத் - துளைத்துப்*
*போகின்ற ஒளியுலகில் இல்லையே என்றமொழி*
*பொய்யாகிப் போய்மறைய - எந்தப்*
*பொல்லாங்கும் இல்லாமல் எல்லாரு மேமகிழ*
*அணையாத சுடரேற்றுவேன்!*

*மாயை விரித்த வலையோ - ஜனன*
*மரணத்தி லேசுழலும் புரியாத மர்மமோ*
*தீயை உமிழும் சொற்கள் - பட்டுத்*
*தீப்பற்றி எரியட்டும் சூழ்ச்சிகள் முறியட்டும்*
*அணையாத சுடரேற்றுவேன்!*

*சொற்களைத் தோய்தெடுக்கக் - கோடி*
*சூரியப் பிழம்பொன்று தேடிச் சென்றேன் - அன்று*
*கற்பிலே கனல்விளைத்த - தெய்வக்*
*கண்ணகித் தாயிடம் வேண்டி நின்றேன் - இருட்*
*பட்டினிப் பாழ்க்குகையில் - கிடந்து*
*பதறுமோர் ஏழையின் கண்ணீர்த் துளியில் - ஒரு*
*சிட்டிகை எடுத்து வைத்தாள் - அதில்*
*சீறிப் புறப்படும் தீயில்சொல் தோய்த்தெடுத்(து)*
*அணையாத சுடரேற்றுவேன் - இந்த*
*அகிலமெல்லாம் உண்மை ஒளிகூட்டுவேன்!*
*அனைவர்க்கும் ஒருநீதியே - என்ற*
*அருளாட்சி மலரநான் அறைகூவியே*
*அணையாத சுடரேற்றுவேன்!*

*நன்றி.*



அமரர் திரு. சிவகுமார்
மேனாள் ஆசிரியர்
தமிழன் எக்ஸ்பிரஸ்



திரு. ஆர். கல்யாணராமன்
(நூலசிரியரின் வளப்புத்
தந்தை)



வசனகர்த்தா
திரு. ஏ.எல். நாராயணனோடு
நூலாசிரியர்



திரு. எம். விஸ்வம்
நூலாசிரியரின் தந்தை



திரு சு.ரவி (புனே)



டாக்டர்
ஏ. நித்தியானநதம்,
ஆன்மிக குருநாதர்



திரு. ஆர். ஸ்ரீதர்
நூலாசிரியரின் அண்ணா



"லேடி விஸ்வம்"
(பெண் வேடத்தில்
நூலாசிரியரின் தந்தை)




"ஜதி பல்லக்கு" ஊர்வலம்



"ஸ்பரிசம்" திரைப்படத்தின் பாடல் பதிவின் போது
எடுத்த புகைப்படம்



"கார்கில்" போர்முனைக்குக் கவிதை முழக்க ஒலிப்பதிவுகளை வானவில் பண்பாட்டு மையம் சார்பில் கவியரசி செளந்தரா கைலாசம் அவர்கள், தமிழ்நாட்டு முப்படைத் தலைமை அதிகாரியிடம் வழங்கிய போது எடுத்த புகைப்படம்.



திரைப்பட இயக்குநர் திரு. சக்தியுடன், நூலாசிரியர்



சிந்தனைக் கோட்ட நிர்வாகிகள் - 1968 - 69



‘ராஜா நீ வாழ்க’ - திரைப்படத்
தொடக்கவிழாப் புகைப்படம்



அமரர் திரு. பாரதி சுராஜ், மேனாள்
தலைவர் பாரதி கலைக் கழகம்



வானவில் பண்பாட்டு மையம் நடத்திய பாரதி விழாவில்
திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவகளுக்கு ‘பாரதி விருது’
வழங்கப் பட்ட போது எடுத்த புகைப்படம்



லலிதாங்கி - திரைப்படத்தின் படப்பிடிப்பில் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடன் இயக்குநர் டி.ஆர். ரகுநாத், கவிஞர் தஞ்சை ராமையாதாஸ், ராஜசுலோசனா



நூலாசிரியரின் திருமண வரவேற்பில் மேதகு ஆளுநர் திரு. கே.கே. ஷா தம் துணைவியாருடன் கலந்துகொண்ட புகைப்படம்



“குமுதம்” அட்டைப்படத்தில்
திரு. வல்லிகண்ணனோடு,
திருமதி ஷோபனா ரவி



டாக்டர் S. சுந்தரராஜன்
(சீனி சுந்தரராஜன்)



கவிமாமணி பா.வீரராகவன்



திரு. சுப்பு
(எழுத்தாளர்)

## நூலாசிரியரின் ‘உன்னோடு நான்’ என்ற கவிதைத் தொகுப்பைப் படித்துவிட்டு அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் எழுதிய கடிதம்


**நா. மகாலிங்கம்,** பி.எஸ்.சி., எப்.ஐ.இ.
தலைவர்
சக்தி நிறுவனங்கள்

74, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032.
(அ) 22350814 (வீ) 24996898
ஃபாக்ஸ் : 42254575


**உரையாடும் பாணியில், நாடு நடப்புகளையும், வாழ்வின் இனிப்பு கசப்பு இரண்டும் நிறைந்த அனுபவங்களையும், யாரையும் எதற்கும் சாடாமல் எளிய நடையில் வழங்கியிருப்பதால், ஏற்றம் மிகுந்த படைப்பு என்ற தகுதியினை எட்டியுள்ளது என்றே எண்ணுகிறேன்.**

*அந்தத்தை எண்ணிநான் அஞ்ச வில்லை*
*அந்தாதிப் பாட்டொன்றும் புதியதில்லை*
*வந்தவரைக் கடைசிவரை வாழ வைக்கும்*
*வையகமாய் சத்யயுகம் மலர வேண்டும்*

**எனும் கவிதை வரிகள், உங்கள் கவிதைத் தொகுப்பெனும் குன்றின் உச்சியில் படர்ந்துள்ள கதிரவனின் ஒளி போன்று அமைந்துள்ளதை அகம் நிறைந்து வாழ்த்துகிறேன்.**

**அன்புள்ள,**

**(நா. மகாலிங்கம்)**

**திரு கே. ரவி அவர்கள்**
**வழக்கறிஞர்**
**1ஏ, ஸ்டோன் லிங்க் அவென்யூ**
**கேனால் பேங்க் ரோடு)**
**ஆர்.ஏ. புரம்**
**சென்னை 600 028**


மின் அஞ்சல் : nmahalingam@sakthisugars.com

## நூலாசிரியரின் சட்டநூலைப் படித்துவிட்டு நீதியரசர் திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் எழுதிய கடிதம்


*V. R. Krishna Iyer*
(Former Judge, Supreme Court)

Phone: 0484 - 370088
"SATGAMAYA"
M. G. ROAD, ERNAKULAM
KOCHI - 682 011
E mail : krisna@md3.vsnl.net.in


August 25, 2000

Dear Sri. Ravi,

I am grateful to you for the copy of the book. A fine book is a cherished asset. Your book falls within this category and I treasure it because of the valuable thoughts you have incorporated. It will be a reference book on my table. I thank you once again.

Yours sincerely,

V R Krishna Iyer

(V.R. KRISHNA IYER)

To,

Sri. K. Ravi,
Advocate,
III Floor, YMCA Buildings
No.223, NSC Bose Road
Chennai-600 001